# அழகப்பா பல்கலைக்கழகம்




தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

# ONLINE PROGRAMMES

## முதுகலை தமிழ் (எம்.ஏ.)

### இரண்டாமாண்டு - நான்காம் பருவம்

**தாள்:** 205142

# பண்பாட்டு மானிடவியல்

**Author:**

**Dr. K. MURUGESAN,** *Assistant Professor and Head, Department of Tamil (Aided), Kongunadu Arts and Science College, Coimbatore - 641 029.*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

**Reviewer : Dr. V. THIRUVENI,** *Assistant Professor of Tamil, Directorate of Distance Education, Alagappa University, Karaikudi.630003.*

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: 7361, Ravindra Mansion, Ram Nagar, New Delhi 110 055
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No. AU/DDE/DE12-02/Printing of Course Materials/2020 Dated 30.01.2020 Copies 1000**

# தாள் 31942 – பண்பாட்டு மானிடவியல்
## பாடத்திட்டம்

**பிரிவு – 1 மானிடவியல்**

கூறு-1 : மானிடவியலின் தோற்றமும் வளர்ச்சியும்

கூறு-2 : சாக்ரட்டிஸ் - பிளேட்டோ – அரிஸ்டாட்டில்

கூறு-3 : புத்தாய்வுக் காலம் - அறிவொளிக் காலம்

கூறு-4 : இந்தியாவில் மானிடவியல் வளர்ச்சி

**பிரிவு – 2 மானிடவியல் வகைகள்**

கூறு-5 : உடல்சார் மானிடவியல் - இனவியல் - மானிட உடல் அளவையியல்

கூறு-6 : மனிதச் சூழலியல் - உளவியல்சார் மானிடவியல்

கூறு-7 : மொழியியல் பண்பாட்டு மானிடவியல்

கூறு-8 : மானிடவியலும் களப்பணியும் - களப்பணியில் தரவுகளைப் பெறுதல்

**பிரிவு – 3 உட்கூறுகள் - பொதுமை**

கூறு-9 : தரவுகளைப் பகுத்து ஆய்தல் - ஒப்பீட்டு முறை

கூறு-10: பண்பாட்டின் உட்கூறுகள் - உட்கூறுகளின் தன்மைகள்

கூறு-11: பண்பாட்டின் அமைப்பு – பண்பாட்டுப் பொதுமை

**பிரிவு – 4 சாதி – நவீனக் கோட்பாடுகள்**

கூறு-12: பண்பாடு ஒரு நடத்தைசார் முறை

கூறு-13: தமிழகப்பழங்குடியின் பண்பாட்டு மாற்றம் - இனக்குழு-
சாதிகள் -சாதிக்கொள்கைகள்

கூறு-14: சாதி பற்றிய நவீனக் கோட்பாடுகள்

# தாள் 31942 – பண்பாட்டு மானிடவியல்

## பொருளடக்கம்

### பிரிவு – 1 மானிடவியல்

**கூறு-1 :**

**மானிடவியலின் தோற்றமும் வளர்ச்சியும்**

1.1. மானிடவியல் - அறிமுகம்

1.2. குறிக்கோள்கள்

1.3. மானிடவியல் - ஒரு அறிவியல்

1.4. மானிடவியலின் தோற்றம்

1.5. புத்தாய்வுக் காலத்திற்கு முந்தைய காலம்

1.5.1. செனோபேன்ஸ்

1.5.2. ஹெரோடாட்டஸ்

1.5.3. டெமோகிரிட்டஸ்

1.5.4. புரோட்டோகோரஸ்

1.6. தொகுத்துக் காண்போம்

1.7. சோதித்தறியும் வினாக்கள்

1.8. பயிற்சி வினா:

1.9. மேலும் பயில்வதற்கான நூல்

**கூறு- 2 :**

**சாக்ரட்டீஸ் - பிளெட்டோ – அரிஸ்டாட்டில்**

2.1. மானிடவியல் அறிஞர்கள் - அறிமுகம்

2.2. குறிக்கோள்கள்

2.3 மானிடவியலாளர்கள்

2.4. சாக்ரட்டீஸ்

2.5. பிளேட்டோ

2.6. அரிஸ்டாட்டில்

2.7. எப்பிக்கூரஸ்

2.8. பிற சிந்தனையாளர்கள்

2.9. தொகுத்துக் காண்போம்

2.10. சோதித்தறியும் வினாக்கள்

2.11. பயிற்சி வினா
2.12. மேலும் பயில்வதற்கான நூல்

**கூறு-3 :**

**புத்தாய்வுக் காலம் - அறிவொளிக் காலம்**

3.1.1.புத்தாய்வுக்காலம் - அறிவொளிக் காலம் - அறிமுகம்
3.1.2.குறிக்கோள்கள்
3.1.3.இரண்டு காலகட்டங்கள்
3.1.4.புத்தாய்வுகளும் ஐரோப்பியர்களின் இனஉணர்வுக் கொள்கையும்
3.1.5. புத்தாய்விற்கு அறிவார்ந்த கருத்தியக்கம்
3.2.அறிவொளிக் காலம்
3.2.1.பிரஞ்சுக்குழு
3.2.2.டுர்காட்
3.2.3.கண்டார்சே
3.2.4.ஸ்காட்லாந்துக் குழு - டேவிட் ஹியூம்
3.2.5.வில்லியம் ராபர்ட்சன்
3.2.6.ஆடம்.ஃ.பெர்கூஷன்
3.2.7.மானிடவியலின் வளர்ச்சிக்கு அறிவொளிக் காலச் சிந்தனையின் பங்கு
3.2.8.ஐரோப்பியர்களின் பேரரசுக் கொள்கையும் மானிடவியலும்
3.2.9.கிறித்தவச் சமயத்தினரும் மானிடவியலும்
3.2.10.மானிடவியலின் தந்தை
3.2.11.தொகுத்துக் காண்போம்
3.2.12.சோதித்தறியும் வினாக்கள்
3.2.13.பயிற்சி வினாக்கள்
3.2.14.மேலும் பயில்வதற்கான நூல்

**கூறு- 4 :**

**இந்தியாவில் மானிடவியலின் வளர்ச்சி**

4.1. அறிமுகம்
4.2. குறிக்கோள்கள்
4.3. ஆசியக் கழகம்

4.4.கருவுற்ற நிலை:

4.5.உருவாக்க நிலை

4.6.பகுத்தாய்வு நிலை

4.7. மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய நூல்கள்

4.8.தொகுத்துக் காண்போம்

4.9.சோதித்தறியும் வினாக்கள்

4.10.பயிற்சி வினா

4.11. மேலும் பயில்வதற்கான நூல்

## பிரிவு-2 : மானிடவியல் வகைகள்

**கூறு-5 :**

**உடல்சார் மானிடவியல் - இனவியல் - மானிட உடல் அளவையியல்**

5.1.1. அறிமுகம்

5.2.1. குறிக்கோள்கள்

5.1.3. உடல்சார் மானிடவியல்

5.1.3.1. முழுதளாவிய அணுகுமுறை

5.1.3.2. மானிடவியலின் உட்பிரிவுகள்

5.1.3.3. உடல்சார் கருத்துக்கள்

5.1.3.4. படிமலர்ச்சியியல்

5.1.3.5. படிமலர்ச்சியின் படிமலர்ச்சி

5.1.3.6. தார்வினியம்

5.1.3.7. உயர்பாலூட்டியியல்

5.1.3.8. தொல்லுயிரியல்

5.1.3.9.ஒப்பியல் உடற்கூற்றியல்

5.1.3.10.எலும்பியலும் பல்லியலும்

5.1.3.11.விலங்கின நடத்தையியல்

5.2.இனவியல்

5.3.மானிட உடலளவையியல்

5.3.1.தோற்கூற்றியல்

5.4.தொகுத்துக் காண்போம்

5.5.சோதித்தறியும் வினாக்கள்

5.6.பயிற்சி வினாக்கள்:

5.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

**கூறு-6 :**

**மனிதச் சூழலியல் - உளவியல்சார் மானிடவியல்**

6.1. அறிமுகம்

6.2. குறிக்கோள்கள்

6.3. மனிதச் சூழலியலும் உளவியல்சார் மானிடவியலும்

6.4.கருவியலும் உடலியங்கியலும்

6.5.உணவியல்சார் மானிடவியல்

6.6.மூலக்கூற்று உயிரியல்

6.7.இனமேம்பாட்டியல்

6.8.மருத்துவ மானிடவியல்

6.9.உடல்சார் கருத்துக்கள்

6.10.தொல்லியல்

6.11. தொகுத்துக் காண்போம் :

6.12.சோதித்தறியும் வினாக்கள்

6.13.பயிற்சி வினாக்கள்:

6.14.மேலும் பயில்வதற்கான நூல்

**கூறு-7**

**மொழியியல் - பண்பாட்டு மானிடவியல்**

7.1. அறிமுகம்

7.2. குறிக்கோள்கள்

7.3. பண்பாட்டு மானிடவியல்

7.4.பண்பாட்டு (அமெரிக்க), சமுதாய (ஆங்கிலேய) மானிடவியல்

7.5.அமெரிக்க மானிடவியல்

7.6. ஆங்கிலேய மானிடவியல்

7.7. இனக்குழுவியல்

7.8. இனக்குழு ஒப்பாய்வியல்

7.9. சிறிய அளவு ஆய்வுகள்

7.10. பரந்த அளவு ஆய்வுகள்

7.11. மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டிய நூல்கள்
7.12. தொகுத்துக் காண்போம்
7.13. சோதித்தறியும் வினாக்கள்
7.14. பயிற்சி வினாக்கள்:
7.15. மேலும் பயில்வதற்கான நூல்

**கூறு- 8 :**

**மானிடவியலும் களப்பணியும்- களப்பணியில் தரவுகளைப் பெறுதலும்**

8.1. அறிமுகம்
8.2. குறிக்கோள்கள்:
8.3. மானிடவில் ஆய்வு முறைகள்
8.4. மானிடவியலும் களப்பணியும்
8.5. இக்காலக் களப்பணி முறை
8.6. பொதுப்படையான தரவுகளைப் பெறுதல்
8.7. தொகுத்துக் காண்போம்:
8.8. சோதித்தறியும் வினாக்கள்
8.9. பயிற்சி வினா
8.10. மேலும் பயில்வதற்கான நூல்

**பிரிவு – 3 : உட்கூறுகள் - பொதுமை**

**கூறு- 9 :**

**தரவுகளைப் பகுத்து ஆய்தல் - ஒப்பீடு முறை**

9.1. அறிமுகம்
9.2. குறிக்கோள்கள்
9.3. தரவுகளும் பகுப்புமு
9.4. தரவுகளைப் பகுப்பது எப்படி
9.5. ஒப்பீட்டு முறை
9.6. தொகுத்துக் காண்போம்
9.7. சோதித்தறியும் வினாக்கள்
9.8.. பயிற்சி வினா
9.9. மேலும் பயில்வதற்கான நூல்

**கூறு-10 :**

**பண்பாட்டின் உட்கூறுகள் - உட்கூறுகளின் தன்மைகள்**

10.1. அறிமுகம்

10.2. குறிக்கோள்கள்

10.3. பண்பாடு சில வரையறைகள்

10.4.உட்கூறுகள் எவையெவை

10.5.பண்பாட்டுக் கூறு

10.6. பண்பாட்டுக் கலவை

10.7. நிறுவனம்

10.8. உட்கூறுகளின் தன்மைகள்

10.8.1. பொருள்சார் கூறுகள்

10.8.2.அறிதல்சார் கூறுகள்

10.8.3.நெறியியல் கூறுகள்

10.9.விழுமியங்கள்

10.10.நெறிமுறைகள்

10.11. குடிவழக்கு

10.12. வழக்கடிபாடுகள்

10.13. சட்டம்

10.14. அளிப்புகள்

10.15. தொகுத்துக் காண்போம்

10.16. சோதித்தறியும் வினாக்கள்

10.17. பயிற்சி வினா

10.18. மேலும் பயில்வதற்கான நூல்

**கூறு-11 :**

**பண்பாட்டின் அமைப்பு – பண்பாட்டுப் பொதுமை**

11.1. அறிமுகம்

11.2. குறிக்கோள்கள்

11.3. பொருள்சார் பண்பாடும் பொருள் சாராப் பண்பாடும்

11.4. உகந்தநிலைப் பண்பாடும் உண்மைப் பண்பாடும்

11.5. உள்ளார்ந்த பண்பாடும் வெளிப்படைப் பண்பாடும்

11.6. உட்பண்பாடும் எதிர்ப்பண்பாடும்
11.7. பண்பாட்டுப் பொதுமைகள்
11.8. பண்பாட்டு ஒன்றியம்
11.9. தொகுத்துக் காண்போம்:
11.10. சோதித்தறியும் வினாக்கள்
11.11. பயிற்சி வினாக்கள்
11.12. மேலும் பயில்வதற்கான நூல்

## பிரிவு-4 : சாதி – நவீனக் கோட்பாடுகள்

**கூறு-12 :**

**பண்பாடு ஒரு நடத்தைசார் முறை**

12.1. அறிமுகம்
12.2. குறிக்கோள்கள்
12.3. நடத்தையும் மானிடவியலும்
12.4.பண்பாடும் ஆளுமையும்
12.5.உண்மைப் பண்பாடும் போலிப் பண்பாடும்
12.6.ஆளுமை வகைகள்
12.7.தேசியப் பண்பு ஆய்வுகள்
12.8. பிராய்டின் அணுகுமுறைகள்
12.9. தொகுத்துக் காண்போம்
12.10. சோதித்தறியும் வினாக்கள்
12.11. பயிற்சி வினாக்கள்
12.12. மேலும் பயில்வதற்கான நூல்

**கூறு-13**

**தமிழகப் பழங்குடியின் பண்பாட்டு மாற்றம் - இனக்குழு – சாதிகள் - சாதிக்கொள்கைகள்**

13.1. அறிமுகம்
13.2. குறிக்கோள்கள்
13.3. பழங்குடி அமைப்பு
13.4.'பழங்குடி'– விளக்கங்கள்

13.5. சொல் வழக்கில் உள்ள சிக்கல்கள் :
13.6. தமிழகப் பழங்குடியின் பண்பாட்டு மாற்றம்
13.7. சாதிமுறையின் வகைகள்
13.8. தீண்டாமைச் சாதிகள்
13.9. இனக்குழுவும் - இனக்குழுச் சாதிகளும்
13.10. சாதிக்கொள்கைகள்
13.11. மரபுக் கொள்கை
13.12. தொழிற் கொள்கை
13.13. சமயக் கொள்கை
13.14. அரசியற் கொள்கை
13.15. இனக் கொள்கை
13.16. படிமலர்ச்சிக் கொள்கை
13.17. தொகுத்துக் காண்போம்:
13.18. சோதித்தறியும் வினாக்கள்
13.19. பயிற்சி வினாக்கள்
13.20. மேலும் பயில்வதற்கான நூல்கள்

**கூறு- 14 :**

**சாதியம் பற்றிய நவீன கோட்பாடுகள்**

14.1. அறிமுகம்
14.2. குறிக்கோள்கள்
14.3. சாதியம்
14.4. துய்மோனின் கோட்பாடுகள்
14.5. பொருள் முதல் வாதத்தினரின் அணுகுமுறை
14.6. ஹோகார்ட் கோட்பாடு
14.7. பிற அறிஞர்களின் நிலைப்பாடுகள்
14.8. தமிழகப் பழங்குடிகளின் நிலை
14.9. தொகுத்துக் காண்போம்
14.10. சோதித்தறியும் வினாக்கள்
14.11. பயிற்சி வினாக்கள்
14.12. மேலும் பயில்வதற்கான நூல்கள்

# தாள் 31942 – பண்பாட்டு மானிடவியல்

# பிரிவு – 1 மானிடவியல்

## கூறு-1 : மானிடவியலின் தோற்றமும் வளர்ச்சியும்

குறிப்பு

### 1.1. ‘மானிடவியல் - அறிமுகம்

மானிடவியல் என்பது மனிதனைப் பற்றிய அறியக்கூடிய அறிவியல் துறையாகும். உலகளாவிய நிலையில் இதனுடைய தோற்றத்தையும் வளர்ச்சியையும் பற்றி இப்பகுதியில் அறிந்து கொள்ளலாம்.

### 1.2. குறிக்கோள்கள்

மானிடவியலின் வளர்ச்சியில் பல காரணிகள் இருப்பதை அறிந்து கொள்வீர்கள்.

மானிடவியலின் வளர்ச்சிக் காலகட்டங்களில் முக்கியமானவற்றை மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

### 1.3. மானிடவியல் - ஒரு அறிவியல்

மானிடவியல் ஒரு முறையான அறிவியல் என்ற நிலையில் ஓர் இளம் துறையாகும். கல்விசார் நிலையில் இத்துறை தோன்றி ஏறக்குறைய 115 ஆண்டுகள்தாம் ஆகின்றன. அதாவது சர் எட்வர்ட் பர்னட் டைலர் கி.பி.1884-ஆம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் மானிடவியல் துறைக்குப் பொறுப்பேற்ற ஆண்டுதான் இத்துறை முறைப்படியான தோற்றத்தைப் பெற்றது. இப்பல்கலைக் கழகத்தில் டைலர் பெற்ற நியமனமே கல்விசார் நிலையில் மானிடவியலார் பெற்ற முதல் பதவியாகும். இதன் பின்னரே உலகெங்கும் மானிடவியல் துறை வேரூன்றத் தொடங்கியது. இருப்பினும் மானிடவியல் துறையானது பல்வேறு துறை அறிஞர்களின் அறிவு வேட்கையினாலும் உழைப்பினாலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோற்றம் பெற்றுவிட்டது. அவ்வாறு கூறுவதே அவ்வறிஞர்களின் உழைப்புக்கு நாம் செலுத்தும் மிகப்பெரும் நன்றியாகும்.

தொடக்கக் காலத்திலிருந்தே ஐரோப்பியர்கள் உலகின் எந்தெந்தப் பகுதிகளுக்குச் சென்று வாழ்ந்தனரோ அங்கெல்லாம் சமகாலத்திய மேற்கத்தியத் தத்துவ மரபுகளின் எச்சங்கள் பரவியிருந்தன. இத்தத்துவ மரபுகளின் அடிப்படையில் பல சமுதாய அறிவியல்கள் தோன்றின. மானிடவியலும் பல மேற்கத்தியத் தத்துவக் கூறுகளின் தொகுப்பாகக் காலத்தினூடே வளர்ந்து வந்துள்ளது.

தொடக்கக்காலத் தத்துவவியலார் மனிதனையும், அவனது சமுதாய அமைப்புகளையும், பண்பாட்டுக் கோலங்களையும் கண்ணுற்று அவற்றை உய்த்துணரும் போக்கில் பலவாறு சிந்தனை செய்தனர். அச்சிந்தனைகளின் வெளிப்பாடே இன்றைய சமுதாய அறிவியல்களின் வளர்ச்சியாகும்.

மானிடவியலின் இன்றைய நிலையை அறிய அது எந்தெந்த ஆதாரங்களைக் கொண்டு வளர்ந்தது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்குப் பல்வேறு கால மக்களின் மரபுகள், வாழ்க்கை முறைகள், நம்பிக்கைகள் முதலானவற்றைத் தொடக்கத்திலிருந்து எந்தெந்தமுறைகளில் ஆராய்ந்தனர் என்பதை அறிய வேண்டும் இதற்கடுத்து மனிதனைப் பண்பாட்டு நிலையிலும், உயிரியல் நிலையிலும் ஆராயும் இக்கால மானிடவியல் முறை எவ்வாறு வளர்ச்சி பெற்றது என்பதையும் அறிய வேண்டும். இவற்றைத் தொகுத்துக் காண்பது மானிடவியலின் தொடர்ச்சியான வரலாற்றைக் காண்பதற்கு உதவும். இவையனைத்தும் முழுமையாக இல்லாவிடினுங்கூட பெருமளவு புரிந்து கொள்ள இந்நூல் உதவும்.

இக்கால மானிடவியல் கடலென விரிந்த துறையாதலால் அதை உடல்சார் மானிடவியல் (Physical anthropology), பண்பாட்டு மானிடவியல் (Cultural anthropology) என்னும் இருபெரும் பிரிவுகளில் நின்று அறிவதே சாலப் பொருந்தும். இவ்விரு பெரும் பிரிவுகளுள் ஒன்றான பண்பாட்டு மானிடவியலைப் பற்றியதே இந்நூல். இருப்பினும், உடல்சார் மானிடவியலைப் பற்றியும் அதன் உட்பிரிவுகளைப் பற்றியும் சுருக்கமாக இந்நூல் விவரிக்கும்.

பண்பாட்டு மானிடவியல் பிரிவில் எளிதில் கையாள முடியாத அளவிற்கு மிகப்பெருமளவில் செய்திகளை மானிடவியலார் சேகரித்துள்ளனர். இச்செய்திகளை முறைப்படுத்திப் பொருளுள்ளவையாகவும், பயனுள்ளவையாகவும் அளிக்க இந்நூல் உதவும். மானிடவியலின் நீண்ட வரலாற்றினையும், அதனின்று இக்கால மானிடவியல் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதையும் அறிய விழைவோருக்கு இந்நூல் அரிய கருத்துகளை ஒழுங்குபடுத்தித் தரும். நம் மூதாதையர்களின் வாழ்க்கை முறைகளையும், சிந்தனைப் போக்குகளையும் இந்நூல் விவரிக்கின்றது. மானிடவியலறிஞர்களையும் அவர்களின் கொள்கைகளையும் பற்றிய முதன்மையான செய்திகளைத் தருவதோடு அவர்களின் மூல நூல் கருத்துக்களைத் தாங்கி இருக்கின்றது. மானிடவியலறிவு மூலம் தமிழ்ப் பண்பாட்டையும் இந்திய மக்களின் பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு இந்நூல் துணைசெய்யும்.

## 1.4. மானிடவியலின் தோற்றம்

மானிடவியலின் வளர்ச்சியில் பல காரணிகள் பங்கு பெற்றுள்ளன. இருப்பினும், மேற்கத்தியத் தத்துவமும், மேற்கத்திய வரலாற்று

நிகழ்ச்சிகளுமே அடித்தளமாய் அமைந்துள்ளன. மனிதனின் தோற்றம், தன்மை, அவர்களுக்குள் உள்ள வேறுபாடுகள் முதலானவை குறித்துப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுப்பப்பட்ட வினாக்களே இன்றைய மானிடவியலின் வளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்துள்ளன. மனிதனைப் பற்றிய அக்காலத்தவர்களின் ஊகங்களும் ஆர்வமும் நீண்ட வரலாறு கொண்டவை. பல்வேறுபட்ட மக்களின் வழக்கங்களை அறிவதில் பழம்பொருள் ஆய்வாளர்கள் (antiquarians) மிகுந்த ஆர்வங்காட்டினர்.

குறிப்பு

அவர்களுள் ஹெரோடாட்டஸ், ஸ்ட்ராபோ ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பரந்து விரிந்த பண்டைய பிரான்ஸ் நாட்டில் (Gaul) பலவகையான மக்கள் வாழும் முறையை அறியும் பொருட்டு, சீசர் என்பார் அந் நிலப்பரப்பினை மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஆராய்ந்தார். இன்று பண்பாட்டு வகைகளையும், பண்பாட்டுப் பரவலையும் ஆராய்வதில் முதன்மையாக விளங்கும் பண்பாட்டுப் பரப்புக் (culture area) கோட்பாட்டை அன்றே சீசர் பயன்படுத்தியுள்ளார் என்பது குறிக்கத்தகும். இதுபோன்ற பலசெய்திகளைத் தொகுத்துக் காணும்போது மட்டுமே தொன்மைக் காலத்தின் மனிதர்களைப் பற்றி செய்திகளை அறிவதில் அன்று எத்தகைய சிந்தனைகள், செயற்பாடுகள் நிலவின எனபதை அறிய முடியும். இதற்கு மானிடவியலின் வரலாற்றினைப் பல நிலைகளாகப் பகுத்து அறிய வேண்டியது அவசியமாகிறது. மானிடவியல் தோன்றியது முதல் இன்றைய நிலை வரை அது நான்கு காலகட்டங்களாக வளர்ச்சியடைந்துள்ளது என்பார் பென்னிமேன் T.K.Penniman, A.Hundred years of Anthropology (London : General Duckworth, 1965) அவை :

1. புத்தாய்வுக் காலத்திற்கு முந்தைய காலம் (period before age of exploration)
2. புத்தாய்வுக் காலம் (age of exploration)
3. அறிவொளிக் காலம் (the enlightenment period)

## 1.5. புத்தாய்வுக் காலத்திற்கு முந்தைய காலம்

இக்காலகட்டத்தை அறிய முற்படும்போது கிறித்து பிறப்பதற்கு முன்னர் வாழ்ந்த சிந்தனையாளர்கள் தொடங்கி புத்தாய்வுக் கால அறிஞர்கள் வரை அனைவரின் கருத்துக்களையும் தொகுத்துக் காண வேண்டும். மானிடவியல் சார்ந்த சிந்தனை எந்தக் கால கட்டத்தில் தோன்றியது என்று மிகவும் துல்லியமாகக் கூறமுடியாது. அவ்வாறு ஒருவர் அறிய முயன்றால் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் காலம் வரை செல்ல வேண்டும் அல்லது அவர்களுக்கு முந்தையவர்கள் காலத்திலிருந்தே தேட வேண்டும். (2.E.E.Evans-Pritchard, A History of Anthropological Thought (London : Faber and Faber, 1981) P.3

குறிப்பு

இக்காலத்தைச் சேர்ந்த சிந்தனையாளர்களுள் செனோபேன்ஸ் (கி.மு.570-475) ஹெரோடாட்டஸ் (கி.மு.484-425), டெமோகிரிட்டஸ் (கி.மு.460-370), புரோட்டோகோரஸ் (கி.மு.480-410), சாக்ரட்டீஸ் (கி.மு.470-399), பிளேட்டோ (கி.மு.427-347), அரிஸ்டாட்டில் (கி.மு.384-322), எப்பிக்கூரஸ் (கி.மு.341-270) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் அனைவருமே மானிடவியலோடு தொடர்புடைய பல கருத்துகளை வெவ்வேறு நிலைகளில் சிந்தித்தவர்கள். இக்கால மானிடவியலில் மேற்கூறிய அறிஞர்களின் கருத்துகள் ஆராயப்பட்டும் மறுக்கப்பட்டும் உள்ள நிலையில், சில கருத்துக்கள் மாற்றங்கள் பெற்றும், ஒரு சில அப்படியே ஏற்கப்பட்டும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## 1.5.1. செனோபேன்ஸ் (ஏறக்குறைய கி.மு.570 – 475)

மானிடவியல் சார்ந்த கருத்துகளை முதன் முதலில் சிந்தித்தவர் செனோபேன்ஸ். இவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர். பல இடங்களுக்குப் பயணம் செய்தவர். பல்வேறு வகையான மக்களை நேரில் கண்டவர். பல இடங்களுக்குப் பயணம் செய்து புதிய புதிய மக்களினத்தவர்களை நேரில் கண்டதால் அன்றைய கால மனித சமுதாயத்தைப் பற்றிப் பல நிலைகளில் சிந்தித்தார். மனித சமுதாயம் என்பது மக்களால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட அமைப்பே என்பார் செனோபேன்ஸ். அதோடு கடவுளர்கள் மனிதர்களாகப் பூமியில் படைக்கப்பட்டனர் என்றும், சமயம் என்பது ஒரு சமுதாயப் படைப்பே என்றும் இவர் உறுதியாக நம்பினார். David E.Hunter and Phillip Whitten, Encyclopaedia of Anthropolgy (New York : Harper & Row, 1976) P.13 இவ்வகைக் கருத்துகளைத் தெரிவித்த முதல் சிந்தனையாளர் என்னும் சிறப்பு இவருக்கு உண்டு.

## 1.5.2. ஹெரோடாட்டஸ் (ஏறக்குறைய கி.மு.484 – 425)

தொடக்கக் காலத்தில் உலகின் பல பகுதிகளுக்கும் அரிய பயணங்களை மேற்கொண்டவர் ஹெரோடாட்டஸ். போக்குவரத்து வளர்ச்சியுறாத அக்காலத்தில் இவர் இருந்த இடத்திலிருந்து கிழக்கு மேற்காக 1700 மைல்களும் தெற்கு வடக்காக 1600 மைல்களும் சென்று வந்தவர் என்பர் வரலாற்றியலார். இவர் மேற்கொண்ட பயணங்கள் மூலம் 50-க்கும் மேற்பட்ட மக்களினத்தவர்களைக் கண்டு அவர்களின் வாழ்க்கை முறைகளை விரிவாக எழுதினார். அதோடு இவர் சென்றுவந்த பகுதிகளைப் பற்றியும், அவற்றின் புவியியல், இயற்கைக் கூறுகளைப் பற்றியும் விரிவாக எழுதினார். இதனாலேயே கிரேக்க இலக்கியவியலார் முதற்கொண்டு அனைவரும் இவரை ‘வரலாற்றியலின் தந்தை’ எனப் போற்றுகின்றனர்.

ஹெரோட்டசின் சமகாலத்தவர்கள் பல்வேறு இனமக்களையும், அவர்களின் மாறுபட்ட வாழ்க்கை முறைகளையும் ஆராய முற்பட்டனர்

என்றாலும் இவர் அளவிற்குப் பரந்த நிலையில் அவர்களால் ஆராய இயலவில்லை. இவர் மக்கள் வழங்கிய மொழிகள், மக்களின் உருவ வகைகள், பொருள்சார் பண்பாடு (material culture), திருமணம், மணவிலக்கு (divorce), சமுதாயச் சட்டமுறைகள். அரசு, நீதிமுறைகள், போர், சமயம் போன்ற பல கூறுகளை விரிவாக ஆராய்ந்து எழுதினார். அதோடு, குழந்தையைப் பெற்றெடுக்கும் பேறுகாலத்தின்போது மனைவி பெறும் துன்பங்களுக்கும் விலக்குகளுக்கும் ஈடாகக் கணவனும் அவ்வகையான சிரமங்களை ஏற்கும் முறையை (couvade) முதன்முதலில் கண்டறிந்து எழுதினார். (Makkan Jha, An Introduction to Anthroplogical Thought (Delhi : Vikas Publishing House Pvt. Ltd., 1983) P2) இத்தகைய முறை பண்பாட்டு மானிடவியலில் சிறப்பிடம் பெற்றுள்ளதால் ஹெரோடாட்டஸ் பெயர் இன்றும் மானிடவியலில் இடம் பெற்றுள்ளது. எண்ணற்ற மனித இனத்தவர்களை அவர்களின் சூழலிலேயே ஆராய்ந்து எழுதிய மிகத் தொடக்கக் கால அறிஞர் ஹெரோடாட்டஸ் என்பதால் இவரை வரலாற்றியலின் தந்தை என்பதோடு ‘கிரேக்க இனக்குழுவியலின் தந்தை’ என்று கூறுவதும் மிகப் பொருத்தமே.

ஹெரோடாட்டஸ் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வெவ்வேறு வகையான இனத்தவர்களை அறிந்த பின் கிரேக்கர்களின் பண்பாடே உயர்ந்தது என மதிப்பிட்டார். இருப்பினும் இவர் அனைத்து மக்களின் பண்பாட்டையும் ஒருமுகக் கண்கொண்டு பார்க்க விரும்பினார். ஒரு பண்பாட்டைச் சேர்ந்த எந்த ஒரு பழக்க வழக்கமும் பொருளற்ற தன்மையில் அவர்களின் பண்பாட்டில் இடம்பெறவில்லை என்பதை நன்கு உணர்ந்தார். இக்கருத்தே இன்றைய மானிடவியலின் மையக் கருத்தாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று இனக்குழுவியலின் தனிப் பரப்பாகத் திகழ்வது போன்று ஹெரோடாட்டஸ் காலத்தில் இல்லை என்றாலும் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுச் செய்திகளைச் சேகரித்ததே மானிடவியலுக்கு அவர் ஆற்றிய மிகப்பெரும் பங்களிப்பாகும்.

## 1.5.3. டெமோகிரிட்டஸ் (ஏறக்குறைய கி.மு.460-370)

ஹெரோடாட்டசுக்குப் பின்னர்க் கிரேக்கச் சிந்தனையாளர்கள் பலர் மனித சமுதாயத்தின் தன்மைகளை ஆராயத் தொடங்கினர். குறிப்பாக, சமுதாயத்தின் படிமலர்ச்சியையும் பண்பாட்டின் தோற்றத்தையும் அறிய விழைந்தனர். இவர்களுள் டெமோகிரிட்டஸ் குறிப்பிடத்தக்கவர். இவர் தொன்மை மக்களிடம் காணப்பட்ட வழக்கங்களை ஒருமுகப்படுத்தி அதன் மூலம் பொதுவான கொள்கைகளை வகுக்க முயன்றார். தொன்மை மக்கள் காட்டுப்பகுதிகளில் வாழ்ந்த காலத்தில் தன்னந்தனியாக உணவு ஈட்டவோ கொடிய விலங்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளவோ இயலவில்லை. ஆகவே அவர்கள் மற்றவர்களுடன் ஒன்றுசேர்ந்து அவர்களின் உதவியுடன் வாழ முற்பட்டனர். இதனால் தோன்றியதே சமுதாய வாழ்க்கை, இவ்வமைப்பு

தேவையின் அடிப்படையிலேயே தோன்றியது டொமோகிரிட்டசின் இக்கருத்துகள் அனைத்தும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

குறிப்பு

இவர் மனித சமுதாயத்தின் படிமலர்ச்சி குறித்தும் விவாதித்தார் மனித சமுதாயம் தொன்மை நிலையிலிருந்து நாகரிக நிலை வரை படிப்படியாக வளர்ச்சியுற்று வந்துள்ளது என்றும் இவ்வளர்ச்சி அந்தந்தக் காலத்தில் ஏற்பட்ட வாழ்க்கைப் போராட்டங்களிலிருந்து மீளுவதற்கு மக்கள் மேற்கொண்ட முயற்சிகளின் மறுவடிவமே என்றும் கூறினார். படிமலர்ச்சிக் கருத்துக்களுக்கடுத்து இவர் பண்பாட்டுக் கூறுகள் (culture traits) தோன்றிய முறை குறித்தும் சிந்தனை செய்தார். இதற்கு மனிதனை விலங்கினங்களோடு ஒப்புமைப் படுத்தினார். மனிதன் விலங்குகளிடமிருந்து கற்ற பல்வேறு உத்திகளின் அடிப்படையிலேயே பல பண்பாட்டுக் கூறுகள் தோன்றின என்று இவர் நம்பினார். இதனால் இவர் மனிதனை முதன்முதலில் பறவைகளோடும் விலங்குகளோடும் ஒப்புமைப் படுத்தி ஆராய்ந்தவர் என்னும் பெயரைப் பெற்றாா

மனிதன் சிலந்தியிடமிருந்து நெசவு நெய்தலையும், தூக்கணாங் குருவியிடமிருந்து வீடுகட்டும் முறையையும், நைட்டிங்கேல் பறவையிடமிருந்து இசையையும், அன்னத்திடமிருந்து பாடுவதையும் கற்றுக் கொண்டான் என்பார் இவா. இதைப் போன்றே வேறு சில பண்பாட்டுக் கூறுகளின் தோற்றத்தினையும் விவரிப்பார். இன்றைய அறிதல்சார் மானிடவியலாரின் (cognitive anthropologists) கருத்துகளுடன் ஓரளவு தொடர்புடையனவாக இவர்தம் சிந்தனைகள் அமைந்திருந்தன என்று கருதலாம்.

## 1.5.4. புரோட்டோகோரஸ் (ஏறக்குறைய கி.மு.480-410)

இவர் தம் சீரிய சிந்தனைகள் மூலம் பண்டைய கிரேக்க இலக்கியத்தில் ஒரு நிலையான இடத்தைப் பெற்றவர். ‘உண்மை அல்லது ஒதுக்குதல்’(truth or the rejection) என்ற இவரது புகழ்மிக்க நூலில் மனிதன் அனைத்தையும் கணிக்கக் கூடியவன் என்றும் இறைவன் இவ்வுலகில் நிலைபெற்றுள்ளானா இல்லையா என்பதைக் கூறவியலாது என்றும், பிரபஞ்சம் முழுவதிலும் மனிதனே முதற்பொருளாக உள்ளான் என்றும், மனிதர்களின் செயல்களில் கடவுளின் பங்கு ஏதுமில்லை என்றும், தொடக்கக் காலச் சமுதாயம் ஏற்றத்தாழ்வுகளின்றி ஒரு படித்தானதாக (homogeneous) இருந்தது என்றும், மனித சமுதாயத்தில் குடும்பச் சிக்கல்களைத் தீர்க்கும் நீதிமுறை, ஒழுக்கமுறை, மொழி போன்ற சில கூறுகள் தொடக்கத்திலேயே தோன்றி விட்டன என்றும் கூறினார்.

## 1.6. தொகுத்துக் காண்போம்

மானிடவியலின் வளர்ச்சியில் பல காரணிகள் இருப்பதை மாணவர்கள் இப்பகுதியில் அறிந்து கொண்டீர்கள்.

மானிடவியலின் வளர்ச்சிக் காலகட்டங்களில் முக்கியமானவற்றை மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

குறிப்பு

## 1.7. சோதித்தறியும் வினாக்கள்

மானிடவியலின் தோற்றத்தைப் பற்றிச் சுருக்கி வரைக.

மானிடவியல் அறிஞர் செனோபென்ஸ் இத்துறைக்கு ஆற்றிய பணிகள் யாவை?

வரலாற்றியலின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்? அவருடைய பணிகள் யாவை?

ஹெரோடாட்டஸ் இத்துறையில் செய்த குறிப்பிடத்தக்க செயல்கள் யாவை?

புத்தாய்வுக் காலத்திற்கு முந்தைய காலகட்டத்தில் புரோட்டோகோரஸ் மானிடவியல் துறையின் ஆணிவேராகச் செயல்பட்ட தன்மையை விளக்குக.

## 1.8. பயிற்சி வினா:

மானிடவியலின் வளர்ச்சிக் காலகட்டங்களில் முக்கியமான நான்கு நிலைகளைப் பற்றிக் கட்டுரை வரைக.

## 1.9. மேலும் பயில்வதற்கான நூல்

பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990.

# கூறு- 2 : சாக்ரட்டீஸ் - பிளேட்டோ – அரிஸ்டாட்டில்

குறிப்பு

## 2.1. மானிடவியல் அறிஞர்கள் - அறிமுகம்

மானிடவியல் துறையில் தடம்பதித்துள்ள மூன்று பெரும் அறிஞர்களைப் பற்றியும் அவர்கள் செய்துள்ள இன்றியமையாத பணிகளைப் பற்றியும் மாணவர்களுக்கு எடுத்துரைப்பது இப்பகுதியின் நோக்கமாகும்.

## 2.2. குறிக்கோள்கள்

பண்டைய கிரேக்க இலக்கியங்கள் செல்வாக்குப் பெறக் காரணமாக இருந்த சாக்ரட்டீசு பற்றி மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்

சாக்ரடீசுவின் மாணவராகிய பிளோட்டோ சிந்தனைகளைப் பற்றியும், அரிஸ்டாட்டிலின் கருத்துகள் இன்றும் மானிடவியலில் சிறப்பிடம் பெற்றுள்ள தன்மை பற்றியும் மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

## 2.3 மானிடவியலாளர்கள்

பண்டைய கிரேக்க இலக்கியங்கள் பெரும் செல்வாக்குப் பெறுவதற்கு மூலகாரணமாகத் திகழ்ந்தவர்களுள் சாக்ரட்டீசும் ஒருவர். இவர் மானிடவியல்சார் போக்கில் பெருமளவு சிந்தித்தவர். இவரின் சிந்தனைகள் பெரும்பாலும் மனித சமுதாயத்தைப் பற்றியனவாக இருந்தன. ஒவ்வொரு சமுதாயமும் சில உலகளாவிய விழுமியங்களால் (universal values) நெறிப்படுத்தப்படுகின்றது. சமுதாயத்தில் நிலவும் ஒழுக்க முறைகளுக்குப் பின்னால் அறவியல் (ethics) கூறுகள் இருப்பதைக் காணமுடியும்; உலகளாவிய நீதிமுறை ஒன்றின் அடிப்படையிலேயே ஒவ்வொரு சமுதாயத்தின் சட்டதிட்டங்கள் ஏற்பட்டுள்ளன. உலகில் உள்ள எவ்வகையான சமுதாய வாழ்விலும் உலகளாவிய விதிமுறைகள் இடம் பெற்றிருப்பதைக் காண முடியும் எனத் திட்டவட்டமாகக் கூறினார்.

## 2.4. சாக்ரட்டீஸ் (ஏறக்குறைய கி.மு.470-399)

மனித சமுதாயத்தில் இடம்பெற்றுள்ள உலகளாவியக் (universal) கூறுகளைச் சாக்ரட்டீஸ் விவரிக்கும்போது, இவை கண்ணுக்குப் புலப்படாதவை; ஒரு சில சூழல்களில் இவற்றைப் பற்றிச் சொற்களால்கூட விவரிக்கவியலாத் தன்மையைப் பெற்றவை எனக் கூறுவார். இவரது கருத்துப்படி சமுதாயத்தின் அனைத்துக் கூறுகளையும் அறிந்து, அதன்படி ஒருவர் வாழவேண்டுமானால் அவருக்கு முறைப்படியான கல்வி இன்றியமையாததல்ல; பள்ளிக்குச் சென்று ஆசிரியரிடம் கற்க வேண்டிய தேவையுமல்ல; வகுப்புகளுக்குச் செல்லாமலேயே சமுதாய வாழ்க்கையைக் கற்க இயலும். ஆனால் மனிதன் செய்யும் மிகப்பெரும்

குறிப்பு

தவறு அவன் அறியாமையில் வாழ்வதேயாகும். ஒவ்வொரு தனிமனிதனும் சமுதாயத்தின் இயல் நிகழ்ச்சிகளையும் (phenomena) நடைமுறைகளையும் முறைப்படியான பயிற்சி மூலம் (பள்ளிக் கல்வி) கற்றுச் கொள்ளாமல் இயல்பான மனநிலையில் அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால் மட்டுமே அவனது சொந்த சமுதாயத்தின் நெறிமுறைகளை (norms) முழுமையாக அறிய முடியும். (Ibid., P.4)

சாக்ரட்டீசின் இவ்வகைக் கருத்துகளனைத்தும் சமுதாயத்தைப் பற்றிய தத்துவமாகவே அமைந்தன. இவர் கருத்துகள் பண்டைய அறிவார்ந்த கிரேக்க அறிஞர்களால் மிகவும் விரும்பி விவாதிக்கப்பட்டன. இன்றைய சமுதாய அறிவியல்களில் விவாதிக்கப்படும் பல கோட்பாடுகளிலும்கூட அவர்தம் கருத்துகள் குறிப்பிடத்தக்க பங்கினைப் பெற்றுள்ளன.

## 2.5. பிளேட்டோ (ஏறக்குறைய கி.மு.427-347)

இவர் சாக்ரட்டீசின் மாணவர்; கிரேக்கச் சிந்தனையாளர் குழுவில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றவர். இவர் சாக்ரட்டீசின் சில கருத்துகளை மறுத்துப் பேசியதும், அவரால் எழுப்பப்பட்ட சில விடை காணப்படாத கேள்விகளுக்கு முடிவு காண்பதில் ஈடுபட்டதும் இவரது குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும் என்பர் இவரைப் பற்றிய திறனாய்வாளர்கள்.

மனித சமுதாயம் என்பது மக்களின் தேவைகளுக்காகத் தோன்றியது மிகத் தொடக்கக் காலத்தில் மக்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒன்றுகூடி வாழமுற்பட்டபோது அவர்களின் தேவையை ஈடுசெய்ய ஒவ்வொருவரும் அவரவருக்குத் தெரிந்த வேலையைச் செய்து தேவைகளை நிறைவேற்றிக் கொண்டனர். இதனடிப்படையிலேயே உழவர்கள், நெசவாளர்கள், கருமார்கள், தச்சர்கள், வணிகர்கள், தொழிலாளர்கள், படைவீரர்கள், ஆட்சியாளர்கள் போன்ற பல்வேறு வகுப்பினர் தோன்றினர் என்பார் பிளேட்டோ. (A.C.Das, An Introduction to the Study of Society (Delhi : Motilal Banarsidass, 1972, P.65) இக்கருத்தை இவர் வேறுவகையிலும் கூறுவார். ‘மனித சமுதாயம்’ என்னும் அமைப்பு, தொன்மை மனிதனின் (primitive man) நுண்ணறிவிலிருந்து தோன்றியதாகும். இம்மக்கள் அவர்களின் தேவைகளைப் பற்றியும், சுற்றுப் புறச் சூழலைப் பற்றியும், அங்கு எவ்வாறு வாழவேண்டும் என்பதைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தனர். பிளேட்டோவின் இவ்வகைக் கருத்துகளில் ஹெர்பர்ட் ஸ்பென்சரும் பிற சிந்தனையாளர்களும் பெருமளவு தாக்கம் பெற்றிருந்தனர். (F.H.Collins, The Synthetic Philosophy of Herbert Spencer (London : Williams and Norgate, 1901, Page. 399-408)

குறிப்பு

பிளேட்டோ மனித சமுதாயத்தின் தோற்றம் குறித்துச் சிந்திப்பதில் மிகுதியாகக் கவனம் செலுத்தவில்லை என்றும் அதைக்கொள்கை ரீதியில் விவரிக்க முனையவில்லை என்றும் சில திறனாய்வாளர்கள் கருதுவர். இவரின் சிந்தனை முழுவதும் ஒரு விரும்பத்தக்க சமுதாயம் அல்லது மாதிரி சமுதாயம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதாகவே இருந்தது. இதற்கடுத்துப் பிளேட்டோவின் சிந்தனை சமுதாயத்தின் படி மலர்ச்சி பக்கம் திரும்பியது. இவரின் படி மலர்ச்சிக் கருத்துகள் ஒருவழிப் படிமலர்ச்சிக் கொள்கையை ஒத்துள்ளது. சமுதாயம் ஒரே வழியில் மட்டுமே வளர்ச்சி பெற்று வந்துள்ளது எனக் கருதினார். சமுதாயத்தின் படிமலர்ச்சி பற்றி ஆராய்வது இவரது முதன்மையான ஆய்வாக இல்லை என்பதை இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இவர் சிந்தனைகள் அனைத்தும் பல கால கட்டங்களைக் கடந்து வந்துள்ள மனித சமுதாயத்தில் அனைத்துக் காலங்களிலும் நிலைபெற்றிருக்க கூறுகள் என்னென்ன என்பதைப் பற்றியதாகவே இருந்தன.

விரும்பத்தக்க சமுதாயம் அல்லது மாதிரி சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது பண்டைய கிரேக்க மக்கள் தொகைக் கொள்கையை ஒத்துப்போகிறார் பிளேட்டோ. நகரங்களிலோ நகர அரசுகளின் பரப்பிலோ மக்கள்தொகை மிகுதியாக இருக்கக்கூடாது என்பதே இக்கொள்கையின் கருத்தாகும். பிளேட்டோ மக்கள் தொகைப் பெருக்கத்தை விரும்பாதவர். அதே நேரத்தில நகர அரசுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில இனத்தவர்களின் இனப்பெருக்கம் மூலம் மக்கள்தொகை கட்டுக்குள் இருக்க வேண்டும் என்ற கருத்தினை முன்மொழிந்த முதல் சிந்தனையாளர் என்ற பெயரையும் பெற்றவர். (Makhan, Jha, An Introduction to Anthropological Thought, op. cit., P.4) பிளேட்டோவின் கருத்துகள் இக்கால மானிடவியலில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை எனினும் 19-ஆம் நூற்றாண்டுப் படிமலர்ச்சிக் கொள்கையாளர்களின் சில கருத்துகளோடு ஒத்திருந்தன. குறிப்பாக, தொடக்கக்காலச் சமுதாயம் தந்தை வழித் தலைமையைப் (patriarchy) பெற்றிருந்தது என்ற ஹென்றி மெய்னியின் கருத்தோடு இவர்தம் கருத்துகள் தொடர்பு கொண்டிருந்தன.

## 2.6. அரிஸ்டாட்டில் (ஏறக்குறைய கி.மு.384 – 322)

கிரேக்கச் சிந்தனையாளர்கள் அனைவரையும் கடந்து உயர்ந்து நிற்பவர் அரிஸ்டாட்டில். இவரே முதன்முதலில் ‘Anthropologist’ (மானிடவியலார்) என்னும் சொல்லைப் பயன்படுத்தியவர். எவனொருவன் அவனைப்பற்றி விவாதிக்கிறானோ அவனே ‘மானிடவியலார்’ என்னும் கருத்தில் இச் சொல்லைப் பயன்படுத்தினார்.

மனிதனையும் அவனது சமுதாயத்தையும் பற்றிய அரிஸ்டாட்டிலின் கருத்துகள் இன்றும் மானிடவியலில் சிறப்பிடம் பெற்றுள்ளன. இவரது புலமைத்துவம் பல பரிமாணங்களைக்

குறிப்பு

கொண்டது. பல பொருள்கள் பற்றியது. இயற்கையிலேயே மனிதன் சமுதாய இயல்புடையவனாக (social being) உள்ளான் என முதன்முதலில் வாதிட்டவர் இவரே எனலாம். பிறக்கும்போதே மனிதனின் இயல்புகள் சமுதாயத்தோடு ஒன்றுபடும் தன்மைகளைப் பெற்றுள்ளன என்றும், இத்தன்மைகள் மொழி, பழக்கங்கள், வழக்கங்கள், அறிவார்ந்த முறையில் சிந்தித்தல் போன்றவற்றில் புதைந்து கிடக்கின்றன என்றும் இவர் கருதினார். (James P. Leichtenberger, Development of Social Theory, London : George Allen and Unwin, 1924, Page.45-80)

சமுதாயம், பண்பாடு ஆகியவற்றை அறிவதில் அரிஸ்டாட்டில் கொண்டிருந்த அணுகுமுறை இக்கால முறையைப் பெரிதும் ஒத்திருப்பதால் இவர் மானிடவியல் கண் கொண்டு ஆராய்ந்த முன்னோடிகளுள் மூத்தவர் எனக் கருதப்படுகிறார். பண்பாடு என்பது சமுதாயத்தினர் அனைவரும் கற்ற ஒன்று என்பது இவரது கருத்து. சமுதாயத்தின் பல்வேறு தன்மைகளை நன்கு ஆராய வேண்டுமானால் இயல்நிகழ்ச்சிகளைக் கண்ணுற்று ஆராயும் செயலறிவு முறை (empirical method) மூலம் காணவேண்டியது அவசியமென்றார். இதில் சமுதாயத்தின் பல்வேறு உறவுகளை உற்றுநோக்கி அவற்றைப் பகுத்தாய்தல் அவசியமெனக் கருதினார். இன்றைய அமைப்பியற் கொள்கையினர் (structuralists) பாணியில் அன்றே சிந்தித்தவர் அரிஸ்டாட்டில் என்பது இதன்மூலம் அறியப்பெறும்.

பண்பாட்டையும் சமுதாயத்தையும் பற்றிய கருத்துகளைத் தவிர உயிரியல்சார் பண்புகள் குறித்தும் அரிஸ்டாட்டில் சிந்தித்தார். 'விலங்குகளின் வம்சாவளி', 'விலங்குகளின் வரலாறு', 'விலங்குகளின் இடம்பெயரும் முறை' முதலியவை குறித்துப்பல கட்டுரைகள் எழுதினார். இவர்தம் கருத்துகள் இன்றைய உடல்சார் மானிடவியலோடு ஒத்திருக்கவில்லை என்றாலும் விலங்கினங்களின் பண்புகளைக் கொண்டு மனித சமுதாயத்தை அறிய விழைத்த முன்னோடி அரிஸ்டாட்டில். இவரது இந்த அணுகுமுறை இன்று மானிடவியலில் உயிர்மூச்சாக உள்ள முழுதளாவிய அணுகுமுறையைச் (holistic approach) சார்ந்தது எனவும் கூறலாம். (Makhan Jha, An Introduction to Anthropological Thought, op. cit., P.5)

## 2.7. எப்பிக்கூரஸ் (ஏறக்குறைய கி.மு.341 – 270)

அரிஸ்டாட்டிலுக்குப்பின் அங்கிருந்த அரசியல் நிலை மிகவும் சீர்கெடத் தொடங்கியதால் இயல்பான வாழ்க்கையில் பெரும் குழப்பங்களும் மாறுதல்களும் ஏற்பட்டன. இதனால் அறிஞர்களின் மனப்போக்குகளும் சமுதாயத்தைப் பற்றிய எண்ணங்களும் மாற்றம்பெறத் தொடங்கின. இம்மாற்றங்களைப் பற்றி விளக்க முற்பட்ட சிந்தனையாளர்கள் பல்வேறு கருத்துடையவர்களாக இருந்ததால் இவர்கள் பல கொள்கைக் குழுவினராகக் (Schools) காணப்பட்டனர். அவற்றுள் ஒன்றே எப்பிக் கூரசைத் தலைவராகக் கொண்ட

குறிப்பு

சிந்தனைக்குழு, டெமோகிரிட்டஸ் கொள்கையில் பெருமளவு பற்றுடையவராய் எப்பிக்கூரஸ் இருந்தார். இவர் சமுதாயம் என்பது முற்றிலும் மனிதனோடு மட்டும் தொடர்புடையது; கடவுளுடனோ பிற ஆற்றல்களுடனோ தொடர்பற்றது எனக் கூறினார். அதோடு கடவுளைப் பற்றிய நம்பிக்கையும், அதிர்ஷ்டம், தலைவிதி, ஊழ்ப்பயன் போன்றவற்றில் கொண்டுள்ள நம்பிக்கையும் தவறானது மட்டுமல்லாமல் ஆபத்தானதுமாகும் என வாதிட்டார். (A.C.Das, An introduction to the Study of Society. op. cit., P.66)

இவர் மனிதனையும் சமுதாயத்தையும் பற்றி மேலும் பல கருத்துகளைத் தெரிவித்தார். சமுதாய வாழ்வை ஏற்படுத்திக் கொண்டவன் மனிதனே. ஆகவே அவனால் மட்டுமே அதை மாற்றியமைக்க இயலும். சமுதாயத்திற்கேற்ப மனிதன் தகவமைய வேண்டும். ஏனெனில், மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்யும் கருவியாகவே சமுதாயத்தை ஏற்படுத்தினான். அதோடு மனிதன் இறந்த பிறகு அவனது உடலும் ஆவியும் உடனடியாக இயற்கையோடு மறைந்து விடுகின்றன. ஆவி மட்டும் பலகாலம் வாழ்வதில்லை என்றார். எப்பிக்கூரசின் சில கருத்துகளைப் பண்டைய கிரேக்க அறிஞர்கள் பெரும் சர்ச்சைக்குரியதாக்கினர். (J.P.Leichtenberger, Development of Social Theory, op. cit., Page.60-68) இருப்பினும், இவர் கருத்துகளில் சமுதாயமும் மனிதனும் பெரும்பங்கு இடம் பெற்றுள்ளன என்பதை எவராலும் மறுக்க இயலாது.

## 2.8. பிற சிந்தனையாளர்கள்

கிரேக்க, உரோமப் பேரரசுகளின் வீழ்ச்சிக்குப்பின் மனிதனையும் சமுதாயத்தையும் பற்றிய அறிஞர்களின் சிந்தனை பெரும் மாற்றத்திற்கு உள்ளானது. இதற்குக் காரணமாக அமைந்தது கிறித்துவ சமயத்தின் தோற்றமும் வளர்ச்சியுமாகும். கிறித்தவத்தின் வளர்ச்சி சமுதாயத் தத்துவவியலாரை அவர்களின் பழைய பிடியிலிருந்து விலக்கி, சமய நெறிமுறைகளுக்குட்பட்ட முறையில் சிந்திக்கும் நிலைக்குக் கொண்டு வந்தது. கிறித்தவத்தின் தோற்றத்தினால் ஏற்பட்ட இம்மாற்றம் உடனடியாகப் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை. பிரபஞ்சத்தைப் பற்றிக் கிறித்தவத்தில் கூறப்பட்டுள்ள அனைத்துக் கருத்துகளும் மக்களிடையே வேதக் கருத்துகளாக நிலைபெற, பல நூற்றாண்டுகளாயின எளிய நிலையில் தோற்றம் பெற்ற கிறித்தவம் பேரரசர் மகா கான்ஸ்டாண்டைன் (கி.பி.280-337) காலத்தில் நன்கு வேரூன்றத் தொடங்கியது. கிறித்தவம் 4-ஆம் நூற்றாண்டில் வேரூன்றத் தொடங்கினாலும் இதன் மரபாண்மைகள் (Christian orthodoxy) அந்த நூற்றாண்டில் முழுமையடையவில்லை.

கிறித்தவச் சமய குருக்கள் அப்போது நிலவிய கிரேக்கச் சிந்தனையாளர்களின் கொள்கைகளையும் கருத்துகளையும் ஏற்க மறுத்தனர். இவர்கள் மனிதனுக்கும் கடவுளுக்குமுள்ள தொடர்பை

விளக்க முற்பட்டனர். கடவுளே அனைத்திற்கும் மூலமானவன். அவனால் மட்டுமே மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நல்லூழினை வழங்க இயலும். ஆகவே அவனை வணங்கி நல்லூழினைப் பெறுதல் மனிதனுக்குக் கிடைத்த பெரும் சிறப்பு என விளக்கினர்.

இக்கருத்துக்களைத் தொடர்ந்து பல அறிஞர்கள் வெவ்வேறு நிலையில் விளக்கமளித்தனர். இவர்களுள் அகஸ்டின் (கி.பி.354-430) குறிப்பிடத்தக்கவர். இவர் மண்ணுலகம், விண்ணுலகம், வளிமண்டலம் உட்பட பிரபஞ்சம் அனைத்தும் மனித ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட ஓர் உயர்ந்த ஆற்றலால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்று கருதினார். இக்கருத்தை மையமாகக் கொண்டே மனிதனையும் சமுதாய முறைகளையும் இவர் விளக்கினார். இவர்தம் கருத்துகள் பெரும்பாலும் வரலாற்று நிகழ்ச்சிகளையும், கிறித்துவ மக்களையும் பற்றியதாக அமைந்தன. இவரது புகழ்மிக்க நூல் 'கடவுளின் நகரம்'(The City of God) ஆகும்.

அகஸ்டினுக்கடுத்து அவர் மாணவர் ஓரோசியஸ் (கி.பி.385 – 420) வரலாற்று நிகழ்வுகளை ஆதாரமாகக் கொண்டு சமுதாயத்தைப் பற்றி எழுத முனைந்தார். இவர் எழுதிய ஏழுதொகுதிகளில் கிறித்தவ மக்களின் வரலாற்றையும், புறச்சமயச் சமுதாயத்தினரின் (pagan society) வரலாற்றையும் விரிவாக எழுதினார். இந்நூற்றொகுதி கி.பி.494-இல் போப் அவர்களால் சட்ட முறைப்படி அங்கீகரிக்கப்பட்டது. கிறித்தவர்களால் புறச் சயமத்தவர் எனக் கருதப்பட்ட தொன்மை மக்களைப் பற்றி இந்நூலில் ஓரோசியஸ் விரிவாக எழுதியிருந்ததால் இடைக்காலம் (middle age) முழுவதும் இவ்வகை மக்களைப் பற்றிய முதன்மையான நூலாக இது திகழ்ந்தது.

## 2.9. தொகுத்துக் காண்போம்

பண்டைய கிரேக்க இலக்கியங்கள் செல்வாக்குப் பெறக் காரணமாக இருந்த சாக்ரட்டீசு பற்றி மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

சாக்ரடீசுவின் மாணவராகிய பிளேட்டோ சிந்தனைகளைப் பற்றியும், அரிஸ்டாட்டிலின் கருத்துகள் இன்றும் மானிடவியலில் சிறப்பிடம் பெற்றுள்ள தன்மை பற்றியும் மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

## 2.10. சோதித்தறியும் வினாக்கள்

மானிடவியலின் தொக்க காலம் பற்றி நீவீர் அறிவன யாவை?

மானிடவியல் அறிஞர் சாக்ரட்டீஸ் இத்துறைக்கு ஆற்றிய பணிகள் யாவை?

பிளேட்டோவின் குறிப்பிடத்தக்க ஆய்வுகளைப் பற்றி எழுதுக.

ஆரிஸ்டாட்டில் பற்றிக் குறிப்பு வரைக

குறிப்பு

## 2.11. பயிற்சி வினா:

மானிடவியலின் துறையின் வளர்ச்சிக்குப் பல்வேறு காலகட்டங்களில் பாடுபட்ட மானிடவியலாளர்களைப் பற்றிக் கட்டுரை வரைக

## 2.12. மேலும் பயில்வதற்கான நூல்

பக்தவத்சலபாரதி, தமிழர் மானிடவியல், அடையாளம், குத்நத்தம் திருச்சி.

# கூறு-3 : புத்தாய்வுக் காலம் - அறிவொளிக் காலம்

குறிப்பு

## 3.1. புத்தாய்வுக்காலம் - அறிவொளிக் காலம் - அறிமுகம்

மானிடவியல் வளர்ச்சியில் புத்தாய்வுக் காலட்டத்தின் மேற்கொள்ளப்பட்ட பணிகளைப் பற்றியும், அறிவொளிக்காலத்தில் இத்துறையின் நடைபெற்ற புதிய கண்டுபிடிப்புகளைப் பற்றியும் இப்பகுதியில் அறியலாம்.

## 3.1.2.குறிக்கோள்கள்

புத்தாய்வுக் காலகட்டத்தில் ஐரோப்பியர்களின் இனஉணர்வுக் கொள்கைகள் ஏற்படுத்திய தாக்கத்தைத் தெரிந்து கொள்வீர்கள்.

மானிடவியலின் வளர்ச்சிக்கு அறிவொளிக் காலச் சிந்தனையின் பங்குகளை மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்

## 3.1.3.இரண்டு காலகட்டங்கள்

புத்தாய்வுக் காலத்திற்கு முந்தைய கால அறிஞர்களின் கருத்துகள் ஆணித்தரமாக அமையவில்லை. ஆயினும், அவை பிற்கால வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் அமைந்தன என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. எனினும், புத்தாய்வுக் காலத்தின் போது பெரும் எண்ணிக்கையிலான ஆய்வாளர்கள் உலகம் முழுவதும் சுற்றி வரும் வாய்ப்பினைப் பெற்றிருந்ததால் மனிதனைப் பற்றி அறிந்து கொள்வதில் புதிய புதிய திருப்பங்களும் விளக்கங்களும் ஏற்பட்டன. இப்புத்தாய்வுக் காலத்தில் (age of exploration) விளைந்த நிகழ்வுகளே மானிடவியலின் தோற்றத்திற்கு வழிகோலின.

புதிய புதிய நிலப்பகுதிகளும் மக்களும் கண்டறியப்பட்ட நூற்றாண்டாக கி.பி.13-ஆம் நூற்றாண்டு போற்றப்படுகிறது. தொடக்கக்காலம் முதலே ஐரோப்பியர்கள் புத்தாய்வுகளை மேற்கொள்வதில் கோலோச்சத் தொடங்கினர். இந்நூற்றாண்டின் தலைசிறந்த புத்தாய்வாளராக மார்க்கோபோலோ (கி.பி.1254 – 1313) திகழ்ந்தார். இவர் மேற்கொண்ட புத்தாய்வுகள் மூலம் அதுவரை எவரும் அறியாத இனத்தவர்களைப் பற்றிய உண்மைச் செய்திகளை அறிய முடிந்தது. இருப்பினும் இவருக்கு முன்னரே ஆசியப் பகுதி மக்களைப் பற்றிய செய்திகள் கிடைக்கப் பெற்றன. 13ஆம் நூற்றாண்டில் மன்னராக இருந்த போப் (Pope) மங்கோலியப் பேரரசுடன் அரசுமுறையிலான தொடர்பு வைத்துக் கொள்ள கார்ப்பினி (கி.பி.1182 – 1252) என்பவரை அனுப்பி வைத்தார். இவர் மங்கோலியப் பேரரசில் சிலகாலம் தங்கி பின் தாய்நாடு வந்ததும் 'மங்கோலியர்களின் வரலாறு'(History of the

Mongols) என்னும் நூலை எழுதினார். இந்நூலில் அம்மக்கள் குறித்து விரிவாக எழுதினார்.

குறிப்பு

வில்லியம் ரூப்ருகுயிஸ் 13-ஆம் நூற்றாண்டில் (கி.பி.1215 – 1270) ஆசியப் பகுதிகளுக்குப் பயணம் செய்து அம்மக்களின் பொருள்சார் பண்பாடு, உணவுப் பழக்கங்கள். பெண்களின் தொழிற் பகுப்பு, இறந்தவர்களைப் புதைக்கும் முறைகள் ஆகியவற்றைத் தொகுத்து எழுதினார். இதற்கடுத்து சர் ஜான் மாண்டிவில்லி மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று அம் மக்களின் விசித்திரமான பழக்க வழக்கங்களை 'The Travels of Sir John Mandeville' என்னும் நூலாக எழுதினார்.

புத்தாய்வுக் கால வரலாற்றில் பெரும் மைல் கல்லாகத் திகழ்வது 15-ஆம் நூற்றாண்டாகும். இந்நூற்றாண்டில் ஆப்பிரிக்கக் கண்டத்தை அறிய மேற்கொண்ட பயணம் குறிப்பிடத்தக்கது. ஐரோப்பியரின் இப்புத்தாய்வுப் பயணத்திற்குப் போர்ச்சுகல் இளவரசர் ஹென்றி (கி.பி.1394-1460) உதவி செய்தார். முதலில் டாங்கியர் (Tangier) என்னும் பகுதிக்குக் கடல் பயணம் மேற்கொள்வதற்கும், பின்னர்ப் பல்வேறு பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்வதற்கும் இவர் ஊக்கமளித்தார். இதன் பயனாய்க் காம்பியா, செனகல் பகுதிகளைக் கண்டறிய முடிந்தது. இவ்வகைப் பயணங்களின் எழுச்சியால் அதற்கடுத்தடுத்த நூற்றாண்டுகளில் கீழ்த்திசை நாடுகள், வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா, பசிபிக் தீவுகள் முதலான பகுதிகள் கண்டறியப்பட்டன. பல ஆய்வாளர்கள் மேற்கொண்ட இவ்வகைப் பயணங்களால் புதிய புதிய நிலப் பரப்புகளும், உருவத் தோற்றத்தில் மாறுபட்ட இனத்தவர்களும், அவர்களின் வியத்தகுப் பழக்க வழக்கங்களும், வாழ்க்கை முறைகளும் தெரிய வந்தன.

புத்தாய்வுச் செய்திகளைக் கல்விசார் துறையினர் ஓரளவு பயன்படுத்துமளவிற்குத் தொகுத்தவர் வாஸ்கோடகாமா (கி.பி.1397 – 1499) ஆவார். இவரது பயணங்களின் போது, அவர் கண்ட மக்களின் ஆடை அணிகலன்கள், உணவுப் பழக்கங்கள், பிற பழக்க வழக்கங்கள். அடுத்தடுத்த இன மக்கள் கொண்டிருந்த பரிமாற்ற முறைகள், மொழி முதலான அனைத்தையும் விரிவாகத் தொகுத்து எழுதினார்.

கிரிஸ்டோ∴பர் கொலம்பஸ் (கி.பி.1451 – 1506) அமெரிக்க நிலப்பகுதியைக் கண்டு பிடித்தவர் என்ற செய்தி மட்டுமே பலருக்குத் தெரியும். இவரது பயணத்தின்போது இவர் தொகுத்த இனக்குழுவியல் செய்திகளும் பிற நிகழ்ச்சிகளும் பலருக்குப் புதுமையான செய்திகளாக இருக்கும். கி.பி.1492-இல் இவரது புகழ்மிக்க கப்பல்களில் (இவரது புத்தாய்விற்குச் சென்ற கப்பல்களின் பெயர்கள் Nina, Printa, Santa, Marga ஆகும்) உலகின் புதிய புதிய பகுதிகளைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தில் பயணம் தொடங்கினார். பிற புத்தாய்வாளர்ளைப் போன்றே இவரும் அவர் சென்ற இடங்களில் வாழ்ந்த மக்களைப் பற்றிப்

குறிப்பு

பெருமளவு செய்திகளைச் சேகரித்தார். அதோடு பயணம் முடியும் தறுவாயில் ஏழு பழங்குடி இந்தியர்களைக் கடத்திக் கொண்டு ஸ்பெயின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார். பின்னர் அவர்களிடம் மேற்கொண்ட உரையாடல்கள் மூலம் அவர்களின் மொழியைப் பதிவு செய்தார். அதன்மூலம் புத்துலக மக்களின் மொழியைப் பற்றிய முதல் ஐரோப்பிய ஆவணத்தைத் தயார் செய்ய முடிந்தது.

கொலம்பசுக்குப் பின் வாஸ்கோ முன்னஸ் டி.பால்போல் (கி.பி.1475-1570) என்பவர் பசிபிக் கடற் பகுதிகளுக்குச் சென்று சேகரித்த செய்திகளே அமெரிக்க இந்தியர்களை (அமெரிக்க இந்தியர் என்பது அமெரிக்காவின் தொல் குடியினரான செவ்விந்தியர்களைக் குறிக்கும்) பற்றிய முதல் விவரமாக அமைந்தன. பிரெஞ்சு நாட்டு எழுத்தாளர் மிசல் டி.மாண்டெய்ன் மேற்கொண்ட பயணம் மூலம் அமெரிக்க இந்தியர்களின் தன்னின உண்ணுந் தன்மையை (தன்னின உண்ணுந்தன்மை என்பது மனிதர்கள் மனிதர்களையே கொன்று அவர்களின் இறைச்சியை உண்ணும் வழக்கத்தைக் குறிக்கும்) (cannibalism) அறிய முடிந்தது.

எண்ணற்ற புத்தாய்வாளர்கள் பல இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்ததால் அம்மக்களைப் பற்றி அவர்கள் சேகரித்த செய்திகளும், அவற்றை எழுதிய முறையும் அவரவருக்கே உரியபாணியில் இருந்தன. ஒரு முறைப்படியான முறையில் எவரும் எழுதவில்லை. சில செய்திகளை மிக விரிவாகவும், சில செய்திகளைச் சுருக்கமாகவும், சில செய்திகளை அறவே விடத்தும் எழுதிய முறைகளே காணப்பட்டன. இருப்பினும், வெனடிய (Venetian) வணிகரான மார்க்கோபோலோ எழுதிய உரை அக்காலத்தில் எழுதப்பட்ட ஒரு தலைசிறந்த இனக்குழுவியல் வகையிலான விவரமாகும். அவர் பீக்கிங்கில் குப்லய்கான் அரண்மனையில் 17 ஆண்டுக்காலம் தங்கியிருந்தபோது அம்மக்களின் வணிக உறவுகள், அங்காடி முறை, பணத்தின் மதிப்பு, குடியிருப்பு முறைகள், ஆண், பெண் தொழிற் பகுப்பு, திருமண முறைகள், சமயம்,ஈமச்சடங்குகள் முதலானவை பற்றி நன்கு உற்றுநோக்கினார். அவற்றைக் ‘கண்டுபிடிப்புகளைப் பற்றிய நூல்’ (The Book of Discoveries) என்னும் தலைப்பில் எழுதினார். மார்க்கோபோலோவும் பிற புத்தாய்வாளர்களும் கையாண்ட பல்வேறு அணுகுமுறைகளே இனக்குழுவியலின் தோற்றத்திற்கு வித்திட்டன.

### 3.1.4.புத்தாய்வுகளும் ஐரோப்பியர்களின் இனஉணர்வுக் கொள்கையும்

ஐரோப்பியர்கள் உலகின் பிற பகுதிகளில் மேற்கொண்ட புத்தாய்வுகளாலும், அந்நிலங்களைக் கைப்பற்றி அங்குக் குடியேற்ற அரசுகளை அமைத்ததாலும் அவர்கள் தொழில்நுட்பத்தில் மேம்பட்டவர்களாயினர். கடல்வழி மூலம் பிற பகுதிகளைக் கண்டறிந்ததால் கப்பல் கட்டுவதிலும் சிறந்த தொழில் நுட்பம்

குறிப்பு

பெற்றவர்களாயினர். அதனால் கடற்பகுதியில் அவர்களை வெல்வது இயலாததாகிவிட்டது. நிலப்பகுதிகளிலும் ஐரோப்பிய வீரர்களை விரட்டுமளவிற்குக் குடியேற்றப் பகுதிகளில் வாழ்ந்த மக்களால் இயலவில்லை. அரசியல் அதிகாரத்தை நேரடியாகத் திணிக்காத வேறு சில நிலப்பகுதிகளிலும் ஐரோப்பியர்கள் பொருளாதாரம், வாணிகம் ஆகியவற்றில் ஆதிக்கம் பெற்றனர். தொழில் நுட்பத்தில் உயர்ந்து காணப்பட்ட ஐரோப்பியர்கள் தங்களை உயர்ந்தவர்கள் என்றனர். ஐரோப்பியரல்லாத மக்களைத் தாழ்ந்தவர்கள் என்றனர். உயர்வு, தாழ்வு வரிசையில் ஐரோப்பியர்கள் மேல் வகுப்பினர் என்றும், ஐரோப்பிய உழவர்கள் அவர்களுக்கடுத்த நிலையினர் என்றும், திணைக்குடியினர் கீழ்நிலையினர் என்றும் கூறினர். அதற்குக் காரணம் அவர்களின் போர்க்கருவிகள் சிறந்தவையாக இருந்தமையாகும். அதனால் அவர்கள் தங்களை உயர்ந்தவர்கள் எனக்கருதினர். இந்த உயர்வெண்ணம் புவியியல், அரசியல் வெற்றிகளோடு நிற்காமல் இனஉயர்வுக்கொள்கை (racism) வரை சென்றுவிட்டது. அன்று தோன்றிய இக்கருத்து மானிடவியல் வளர்ச்சிபெறும் வரை நிலவி வந்தது. (merwyn s.Garbarino, Sociocultural Theory in Anthropology, New York : Holt, Rinchart and Winston, 1977, Page 10-11)

19-ஆம் நூற்றாண்டில் இனஉயர்வுக் கொள்கையினை எதிர்த்த சிலருக்கு ஐரோப்பியரின் பதில் "வெள்ளையர்களின் பொறுப்பு" என்றே அமைந்தது. அதாவது, அவர்கள் கைப்பற்றிய நிலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் தாழ்ந்தவர்களாக இருந்தனர் என்றும், அவர்களுக்குச் சிறந்த வாழ்க்கை முறையையும், பொருளாதார வளத்தையும் ஏற்படுத்தித் தருபவர்கள் ஐரோப்பியர்களே என்றும் கூறிக் கொண்டனர். அம்மக்களின் வாழ்க்கை வளத்திற்கு அவர்களே "பொறுப்பு" என்றனர். ஆனால் அவர்களின் குறிக்கோள்கள் அனைத்தும், புதிய நிலப்பகுதிகளைக் கைப்பற்றி அங்கு அதிகார உரிமையை ஏற்படுத்துதல், அங்குள்ள வளங்களைச் சுரண்டுதல், அங்குள்ளவர்களைக் கிறித்தவர்களாக மாற்றுதல், அவர்களுக்கு ஐரோப்பிய முறையிலான கல்வியைக் கொடுத்தல் ஆகியவையே. (Ibid., P.10)

## 3.1.5. புத்தாய்விற்கு அறிவார்ந்த கருத்தியக்கம்

புத்தாய்வுகள் மூலம் ஐரோப்பியர்கள் புதிய புதிய இனத்தவர்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றனர். அப்புதிய நிலப்பகுதிகளைச் சேர்ந்த விலங்குகள். தாவரங்கள் ஆகியவற்றின் புதுமையான பண்புகளும், அங்கு வாழும் மக்களின் புதுமையான வழக்கங்களும் புத்தாய்வுகள் மூலம் அறிய முடிந்ததால் ஐரோப்பியர்கள் பல நிலைகளில் சிந்திக்கத் தொடங்கினர். புத்தாய்வில் கலந்து கொள்ளாத அறிஞர்களிடமும், ஐரோப்பியப் பொதுமக்களிடமும் புதுநில மக்களை அறிந்துகொள்வதில் பேரார்வம் காணப்பட்டது. அதனால் அப்பகுதிகளுக்குச் சென்ற புத்தாய்வாளர்கள் எழுதிய நூல்களுக்கும், அப்பகுதிகளுக்கான வழிகாட்டி நூல்களுக்கும் மிகுந்த

குறிப்பு

வரவேற்பு இருந்தது. குறிப்பாக, ஆப்பிரிக்கர்கள் கீழ்த்திசை நாட்டினர். அமெரிக்க இந்தியர், பசிபிக் கடற்பகுதி மக்கள் ஆகியோரை அறிந்து கொள்வதில் மிகுந்த விருப்பமுடையவர்களாய் இருந்தனர்.

பெரும்பாலான நூல்கள் நுட்பமாக எழுதப்பட்டவையல்ல. மனித வேறுபாடுகளை விளக்குவதையும் அவர்களின் வாழ்க்கை முறையை முழுமையாகக் கூறுவதையும் தவிர்த்து அவர்கள் தொடர்புகொண்ட மக்களின் விந்தைகளையும் வேடிக்கைகளையும் விவரிப்பதாக அந்நூல்கள் அமைந்தன. இனக்குழுவியல் அடிப்படையில் எழுதப்பட்ட நூல்கள் மிகக் குறைவானவை. ஐரோப்பியரல்லாத மக்களின் புதுமையான வாழ்க்கையினை எழுதும்போது "அது அம்மக்களின் தன்மை" என்னும் போக்கில் மட்டுமே எழுதினர். அனைத்து மக்களும் சில வகைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றனர். சில வகைகளில் வேறுபடுகின்றனர். அவ் வேறுபாடுகள் பெரும்பாலாகப் பண்பாட்டளவில் மட்டுமே உள்ளது எனக்கருதினர். இக்கருத்தினை மானிடவியல் பிற்காலத்தில் உணர்த்தியதற்கு முன்னரே அவர்கள் அவ்வாறு சிந்தித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பல புத்தாய்வுகளுக்குப் பின்னர் ஐரோப்பியர்களிடம் அறிவுத் திறனும், தத்துவச் சிந்தனைகளும் மிகுதியாயின. அதனால் மனித வேறுபாடுகள் பற்றிய அவர்கள் கருத்துகள் இரண்டு வகையாக அமைந்தன. முதல் குழுவினர் ஒருவழித் தோற்றக் கொள்கையில் (monogenesis) பற்றுடையவராய் இருந்தனர். இரண்டாவது குழுவினர் பலவழித் தோற்றக் கொள்கையில் பற்றுடையவராய் இருந்தனர். ஒருவழித் தோற்றக் கொள்கையினரின் கருத்துப்படி, மனிதர்கள் அனைவரும் ஒரு தாய், தந்தையிடமிருந்து தோன்றியவர்கள். அனைவரும் கருணையின் இடத்திலிருந்து வந்தவர்கள். சமகாலத்திய மக்களிடம் உள்ள வேறுபாடுகளுக்கு அவரவர் சுற்றுப்புறச் சூழ்நிலையின் இயல்புகள் ஒரு காரணம். மூதாதையர்களிடமிருந்து பெற்ற மரபுப் பண்புகளைச் (genetic characters) சந்ததியினருக்குக் கொடுக்கும் தன்மை இரண்டாவது காரணம் என ஒரு வழித் தோற்றக் கொள்கையினர் சுட்டிக்காட்டினர். ஐரோப்பியர்கள் ஒருவழித் தோற்றக் கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்தாலும் ஐரோப்பியரல்லாதாரை அவர்களோடு தொடர்ப்படுத்தும்போது உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்னும் அடிப்படையிலேயே பாகுபடுத்தினர். இருப்பினும், பொதுவான தோற்றத்தைக் கூறும்போது அனைவரும் ஒத்த திறனையுடையவர்கள்; எவரும் காட்டுமிராண்டிகளில்லை; அவ்வாறு கீழ் நிலையிலும் காட்டுமிராண்டிகளாகவும் உள்ளவர்கள் முன்னேற்றப்பட வேண்டியவர்கள் என்று கூறினர்.

ஐரோப்பியர்கள் கொண்டிருந்த இக்கருத்துகளுள் ஒருபகுதி சார்பற்றதாகவும் மறுபகுதி சார்புடையதாகவும் இருந்தன. அனைவரும் சமமாகப் படைக்கப்பட்டனர். மனித வேறுபாடுகளுக்கு மரபுவழியில் சமமின்மையாகப் பெறப்பட்ட மரபுப் பண்புகளும், படைக்கப்பட்டபின்

குறிப்பு

அவரவா் ஏற்றுக்கொண்ட நிலையும் காரணம் என்ற கூற்று இன உயா்வுக் கொள்கை சாா்ந்ததன்று. அந்த வகையில் அது சாா்பற்ற கருத்து. ஆனால் ஐரோப்பியா்கள் அவா்கள் தரத்தையும் மதிப்புகளையும் கொண்டு ஐரோப்பியரல்லாதாரைத் தாழ்ந்தவா்கள் என்னும் கருத்து 'தன்னின உயா்வுக் கொள்கை'(ethnocentrism) சாா்ந்ததாகும். இரண்டாம் வகைக் கருத்து சாா்புடைய கருத்தாக அமைகிறது.

பலவழித் தோற்றக் கொள்கையினா் இன வேறுபாடுகளுக்குப் புதுவிளக்கம் கொடுப்பதில் பங்கேற்றனா். இக்கொள்கையினா் கருத்துப்படி, தனித்தனியான பல படைப்புகளின்மூலம் மனிதா்கள் தோன்றினா். அதனால் பல சிறப்பினங்கள் தோன்றின. அச் சிறப்பினங்கள் (species) தோன்றியதிலிருந்தே அறிவுத் திறனில் வேறுபாட்டுத் தன்மையைப் பெற்றுவிட்டன. அவற்றுள் ஒரு பிரிவினரே உயா்ந்த சிறப்பினமான ஐரோப்பியா் பலவழிக் கொள்கையினரின் இவ்வகைக் கருத்துகளையடுத்து மனிதகுலத்தின் தன்மைகளை ஆராய்வதில் பெரும் திருப்புமுனை ஏற்பட்டது. இக்காலத்தில் அறிவாா்ந்த இயக்கம் பெருகியதால் இது "அறிவொளிக் காலம்" (enlightenment period) எனப் போற்றப்படுகிறது.

## 3.2.அறிவொளிக் காலம்

17-ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் முதல் 18ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலம் வரை அறிவாற்றல் சாா்ந்த சிந்தனைகளுக்கு எப்போதும் இல்லாத அளவிற்குப் பெரும் விறுவிறுப்பு ஏற்பட்டதால் இக்காலம் 'அறிவொளிக் காலம்' எனச் சிறப்பிக்கப்படுகிறது. இக்காலத்தைச் சோ்ந்த சிந்தனையாளா்கள் பல துறைகளைச் சோ்ந்தவா்களாக இருந்தனா். கணக்கியல். இயற்பியல் துறைகளைச் சோ்ந்த காட்ஃபிரீடு லீப்னிட்ஸ் (Gottfied Leibneitz), ஐசக் நியூட்டன் ஆகியோரும் உயிரியல் துறையைச் சோ்ந்த ஜாா்ஜ் டி பஃபன், கால் வான் லின்னே ஆகியோரும் வேதியியல் துறையைச் சோ்ந்த ஜோசப் பிரீஸ்ட்லி, அண்டாய்னி லவாய்சியா் முதலானோரும் சமுதாயத் தத்துவவியல் துறையைச் சோ்ந்த வால்டெய்ா், ஜான் லாக், ஜீன் ழாக் ரூசோ ஆகியோரும் குறிப்பிடத் தக்கவா்களுள் சிலா். நியூட்டனின் 'கணக்கியல் விதிகள்'(Principia Mathematica) என்ற நூலும், லாக் எழுதிய 'மனிதனைப் புரிந்து கொள்வதற்கான கட்டுரை'(Eassy Concerning Human Understanding) என்ற நூலும் முறையே இயற்கைத் தத்துவவியல், சமுதாயத் தத்துவவியல் ஆகிய துறைகளில் அறிவொளிக் காலத்தவரின் நிலையினை வெளிப்படுத்துகின்றன. இவா்களது கருத்தின் சுருக்கம் பின்வருமாறு : இந்த உலகம் (பிரபஞ்சம்) காரண காரியத் தொடா்புகளைப் பெற்று ஒரு முறைமை நிலையில் உள்ளது. இதை அறிந்து கொள்வதன் மூலம் கோள்களின் (கிரகங்கள்) இயக்கங்கள் பற்றியும், மனிதனின் நடத்தை முறைகள் பற்றியும் சில விதிகளைக் கண்டறிய முடியும்.

குறிப்பு

அறிவொளிக் காலச் சிந்தனையார்கள் மிகுந்த மனவளத்தைப் பெற்று ஆழ்நிலையில் ஆராயும் தன்மையைக் கொண்டிருந்தனர். அவர்கள் பல துறைகளில் ஆர்வம் கொண்டிருந்தனர். ஒரு துறையைச் சேர்ந்தோரின் ஆய்வுகளும் கருத்துகளும் மற்ற துறையினருக்கு ஊக்கமளிக்கும் வகையில் உள்ளதென எண்ணினர். கல்வியறிவுடைய ஐரோப்பியர்களின் சிந்தனைகளுக்குப் பலவாறு இவர்கள் ஊக்கமளித்தனர். புதிய கொள்கைகளையும். சமுதாய, பொருளாதார, அறிவியல் கருத்துகளையும் மக்களிடையே பெருமளவு பரவச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர். இவர்களின் சில கொள்கைகள் அமெரிக்க, பிரெஞ்சுப் புரட்சிகளுக்கும் அடித்தளமாக அமைந்தன. ரஷ்யாவின் கேத்தரையன் (Catherine) புருசியாவின் மகா பிரடரிக் ஆகிய ஏகாதிபத்தியர்களும்கூட, அறிவொளிக் காலத் தத்துவ அறிஞர்களுடன் தொடர்பு கொண்டு தாமும் ‘அறிவொளிக் காலக் கருத்துகளால் உந்தப்பட்டுள்ளோம்’ எனத் தெரிவித்தனர்.

அத்தத்துவ அறிஞர்கள் தத்தம் சிந்தனைத் திறனால் அவரவர் துறையில் பல எல்லைகளைக் கடந்து உயர்ந்திருந்தனர். இருப்பினும், அனைவருமே சமுதாயத்தைப் பற்றிய பொதுவான சிக்கல்களை ஆராய்வதில் ஆர்வம் கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரின் விவாதங்கள் பெரும்பாலும் மனிதனின் தன்மைகள் என்ன? மனிதச் சமுதாயத்தின் தன்மைகள் யாவை? பல்வேறு மனித நடத்தைகளுக்கான காரணங்கள் என்ன? போன்ற கருத்துகளை ஒட்டியே அமைந்தன. இருப்பினும் அவர்களின் ஆய்வுப் பரப்பு விரிந்து கொண்டேயிருந்தது. குறிப்பாக, மனிதர்களின் இயல்போடு ஒன்றிய கற்றல் திறன் மூலம் வெளிப்படும் ஆர்வங்கள், மனப்போக்குகள் ஆகியவற்றிற்கு அடிப்படையாக உள்ள ஒருவரின் தன்மைக்கும் அவரின் வளர்ப்புமுறைக்கும் இடையேயுள்ள தனித்தன்மையைப் பெருமளவு விவாதித்தனர். அவர்களின் முடிவு அப்போதைக்கு எளிமையாக இருந்தாலும் வருங்காலங்களில் விரிவாக அறியப்பட வேண்டியவற்றிற்கு அது வழிகோலியது. பல நிலைகளில் பார்த்தால் அச்சமுதாயத் தத்துவவியல் அறிஞர்களை ‘மானிடவியலின் முன்னோடிகள்’ (precursors of anthropology) என்றோ ‘தொன்மை மானிடவியலார்’(proto – anthropologists) என்றோ குறிப்பிடலாம்.

மனிதனின் தன்மை பற்றிய 18ஆம் நூற்றாண்டு அறிஞர்களின் கருத்துகள். புனைவியல் கருத்து மிகுந்த தொன்மைத் தன்மை (romantic primitivism) முதல் இயற்கையிலேயே தன்னல நாட்டம் கொண்ட மக்களைக் கட்டுப்படுத்த வலுவான முடியாட்சி தேவை என்னும் நம்பிக்கை வரை பரந்து நிற்பவையாகும். பரந்த பரப்புடைய அக்கருத்துகளை தாமஸ் ஹாப்ஸ் (1588 – 1679), ஜான் லாக் (1632 – 1704), ஜீன் ழாக் ரூசோ (1712 – 1778) ஆகிய மூவரின் சிந்தனைகளைக் கொண்டு அறியலாம்.

குறிப்பு

தாமஸ் ஹாப்ஸ் கருத்துப்படி மனிதர்கள் இயற்கையிலேயே கொடுமையானவர்களாகவும் தன்னல நாட்டமுடையவர்களாகவும் இருப்பதால் அவர்களைக் கட்டப்படுத்த வலுவான, அடக்கும் திறனுடைய அரசு தேவை என்பதாகும். (J.P.Leichtenberger, Development of Social Theory, op. cit., Page 82 – 86) ஆனால் ரூசோ முற்றிலும் மாறுபட்ட கருத்தினைக் கூறினார். இவரது கருத்துப்படி அடிப்படையில் மனிதர்கள் கூடிவாழும் இயல்புடையவர்கள் அல்லர். அவர்கள் 'இயற்கை நிலை' யில் (natural state) தனித்தனியாக வாழ்ந்தபோது சுதந்திரமாக இருந்தனர்; ஒருவருக்கொருவர் தீங்கு செய்யாமல் வாழ்ந்தனர். அதன் பின்னர் ஒருவருடன் ஒருவர் கூட்டாகச் சேர்ந்து வாழ முற்பட்டதாலும், சமுதாய வளர்ச்சி ஏற்பட்டதாலும், நாகரிகம் தோன்றியதாலும் அழிக்கப் பட்டனர். அதனால் 'இயற்கை நிலை' மீண்டும் திரும்ப வேண்டுமென வலியுறுத்தினார். இயற்கை நிலையில் மக்கள் சுதந்திரமாக வாழ்ந்தபோது அவர்களின் தேவைகளைச் (உணவு, உடை, உறைவிடம்) சுற்றுப்புறத்திலிருந்து எவ்விதத் தடையுமின்றி பெற்றுக் கொண்டனர். ஆனால் சமுதாயம் என்னும் அமைப்பிற்குள் வாழமுற்பட்ட போது செயற்கை வகையிலான தேவைகளை நிறைவு செய்து கொள்வதில் பல சிக்கல்கள் தோன்றின. அதனால் 'இயற்கை நிலையில்' வாழ்வதே மனிதனுக்கு உகந்தது. சமுதாய அமைப்பில் வாழ்வது ஏற்றதல்ல என்பர் ரூசோ. (M.S.Garbarino, Sociocultural Theroy in Anthropology, op. cit., P.13)

ஹாப்ஸ், ரூசோ ஆகிய இருவரின் கருத்துகளை ஒன்றிணைக்கும் வகையில் ஜான் லாக்கின் கருத்து அமைந்தது. மனிதர்கள் பிறப்பின்போது நல்லவர்களாகவோ தீயவர்களாகவோ பிறக்கவில்லை என்றும் அனைவரும் 'வெறுமையானவர்' களாகப் (blanks) பிறந்து அவர்கள் அனுபவங்களின் அடிப்படையிலேயே உருவாகுகின்றனர் என்றும் லாக் கருதினார். அனுபவம் என்பது ஒருவர் அவரது சமுதாயத்தில் பெற்ற பயிற்றுவித்தல் மூலம் செய்யும் செயல்களினால் விளைவது. ஆகவே நன்மை விளைந்தாலும் சரி, தீமை விளைந்தாலும் சரி ஒவ்வொருவரையும் அவரது சமுதாயச் சூழலிற்கேற்பவும், கால இடச் சூழலிற்கேற்பவும் கற்பித்தல் இன்றியமையாதது என்றார் ஜான் லாக். (John Locke, The Second Treatise of Government Oxford: Basic Blackwell, 1956, P.5)

அறிவொளிக் காலச் சிந்தகைளின் பெரும்பகுதி சமகால மானிடவியல் கோட்பாடுகளில் இடம் பெற்றுள்ளது. இவற்றுள் காலத்தால் அழியாத பங்களிப்பு மனிதநேயம் (Humanism) என்னும் கோட்பாடாகும். இக்கோட்பாடு இனம், சாதி, வகுப்பு, சமயம் போன்ற அனைத்துப் பிரிவுகளையும் கடந்து மனிதர்கள் அனைவரின் பெருமானத்தையும் மதிப்பையும் வலியுறுத்துகிறது. அறிவொளிக் காலத்திய பங்களிப்பில் இரண்டாவதாகக் குறிப்பிட வேண்டியது கல்வி. சமுதாயச் சுற்றுச்சூழல் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றியது.

குறிப்பு

குறிப்பாக, இளம் வயதினரைச் சமுதாயவயமாக்கும் (socialization) முறை பற்றியது. நடத்தைசார் கொள்கையில் இன்றளவும் ஒன்றியமாகிக் காணப்படும் கருத்துகள் மூன்றாவது பங்களிப்பாகும். இக்கருத்துப்படி, இயற்கை உலகத்தின் ஒருபகுதியாக மனிதன் திகழ்கின்றான்; இதிலிருந்து அவன் தனித்தோ ஒதுங்கியோ வாழவில்லை; இயற்கையின் விதிக்குட்பட்டே இயங்குகின்றான். ஆகையால், இப்போக்கின் அடிப்படையில் மட்டுமே மனிதனை அறிய வேண்டும். மேற்கூறிய கருத்துகளின்படி (அறிவொளிக் காலச் சமுதாயத் தத்துவவியல் மனிதனைத் தெய்வீகப் பிறப்பு என்ற நிலையிலிருந்து விடுவித்து அவனைச் செயலறிவு ஆய்விற்கு ஈடுபடுத்தும் நிலைக்குக் கொண்டு வந்தது.) மானிடவியலின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு எழுதும்போது இறுதியாகக் கூறப்பட்ட கருத்திற்கு மேலும் மேலும் முக்கியத்துவம் கொடுப்பது இச் சுருக்க நூலில் இயலாததாகிறது.

மனிதர்களுக்குக் கற்பித்தல் முதன்மையானது என்று கூறிய சமுதாயத் தத்துவவியல் அறிஞர் பெரும்பாலோர் மனிதர்களின் நிறைவுடைய பண்புகளை மதிப்பிடுவதில் ஐரோப்பியர்களின் தரத்தை அளவு கோலாகக் கொண்டனர். வரலாற்று மாற்றத்தை அவர்கள் விளக்கிப் பொருள்கூறும்போது கூட இம்மாற்றம் ஐரோப்பியரின் நிலையை நோக்கிச் செல்கிறது என்பர். அதாவது, ஐரோப்பியரல்லாதார், அறிவு, பகுத்தறிவுத் தன்மை, ஒழுக்கம், தகுதியுடைமை, அறிவியல் தன்மை முதலானவற்றை மேலும் மேலும் பெற்று ஐரோப்பியர்கள் எட்டியுள்ள நிலையை நோக்கி வளர்ச்சி பெறுகின்றனர் என்ற கருத்தைக் கொண்டவர்களாய் அவர்கள் திகழ்ந்தனர். அதனால் அவர்களின் அறிவியல் நோக்குடைய சிந்தனைகள் இனச்சார்புடையனவாக அமைந்தன.

தத்துவியலார் சிலர் மனிதனின் இயல்பான நடத்தை முறைகளைக் கொள்கை அளவில் நிலைப்படுத்த முயன்றனர். அத்தத்துவவியலார் தம் சொந்த சமுதாயத்தினர் மட்டும் பகுத்தறிவு நிலையோடும், இயற்கை விதியின் (natural law) நெறிமுறைகளுக்கேற்பவும் சிந்திக்கும் திறன் பெற்றிருப்பதாகக் கருதினர். அதனால் அவர்களது சமுதாயமும் வாழ்க்கை முறையும் மேம்பட்டது என எண்ணினர். அதனடிப்படையில் ஐரோப்பியர்கள் தங்களை அனைத்துச் சமுதாயத்தினரைக் காட்டிலும் முன்னேற்றமடைந்தவர்கள் எனக் கூறிக்கொண்டனர்.

'வளர்ச்சி' ('அறிவொளிக் காலச் சமுதாயத் தத்துவலியலார், படிமலர்ச்சி (evolution) என்பதற்கு பதிலாக 'வளர்ச்சி'(progress) என்னும் சொல்லைப் பயன்படுத்தினர் என்பது கவனத்திற்குரியது.)(progress) என்னும் கருத்து அண்மைக் காலத்தியதாகும். பண்டைய உரோமானிய, கிரேக்கக் காலத்திலும் இடைக் காலத்திலும் மனித வரலாறு குறித்து ஒருமித்த கருத்து நிலவவில்லை. ஒவ்வொரு சிந்தனையாளரும் அவர்களின் கருத்துகளை வெவ்வேறு வகையில் கூறிவந்தனர்.

குறிப்பு

அவர்கள், மனிதன் பொற்காலத்திலிருந்து அல்லது கருணையின் இடத்திலிருந்து தோன்றியவன் என்று கூறினர். மறுமலர்ச்சிக் காலத்தவர்கள் (renaissance prople - கி.பி.16வது நூற்றாண்டகளில் வாழ்ந்த கலை, இலக்கிய மறுமலர்ச்சியாளர்கள்) இப்போதுள்ள காலத்தைக் காட்டிலும் கடந்த காலமே பொன்னானதும் சிறப்பானதும் என்று எண்ணினர். அக்கருத்துகளைக் கொண்டு மனித சமுதாயத்தின் வரலாறு தொன்மையான பொற்காலத்தில் தொடங்கி, வெள்ளி. செப்புக் காலங்களைக் கடந்து இறுதியில் இரும்புக் காலத்தை (சமகாலம்) அடைந்துள்ளது என அவர்கள் சுட்டிக் காட்டினர். பொற் காலத்தில் தொடங்கி இரும்புக் காலத்தில் முடியும் இவ்வரலாறு தேய்வுப் போக்கையே காட்டுகிறதென மேலும் விளக்கிக் கூறினர். 18-ஆம் நூற்றாண்டிலும் ‘உலகம் சீரழிந்து வருகிறது’(decay of the world) என்ற கருத்தே பரவலாக இருந்தது. ஆனால் அக்கருத்தை இயற்கை அறிவியலின் வளர்ச்சி மாற்றியது. இயற்கை அறிவியல் துறையைச் (natural science) சேர்ந்தோர் மனிதனின் திறமைகளுக்கு ஓர் எல்லையில்லை என அறிவுறுத்தினர். அதோடு மனிதர்கள் அனைவரும் வளர்ச்சியடைந்துள்ளனர். எதிர்காலத்திலும் வளர்ச்சியடைவர்; அந்த வளர்ச்சி பற்றி விளக்க வேண்டியதில்லை; அவரவரே காணக் கூடியதாக உள்ளது என்றனர். இயற்கை அறிவியலாரின் இக் கருத்துகள் மறுமலர்ச்சியியலாருக்குப் பெரும் சவாலாக அமைந்தன.

அதன்பின்னர், சமுதாயத் தத்துவவியலார் அனைவரும் இயற்கை அறிவியலின் உயிரோட்டத்தினாலும் ‘அறிவியல் முறை’ யின் வளர்ச்சியினாலும் மிகுந்த தாக்கம் பெற்றனர். கணக்கியலாரும்; இயற்பியலாரும் கொண்டுள்ள கோட்பாடுகளைப் போன்றே சமுதாயச் சிந்தனையாளர்களும் மனித நடத்தை முறைகளைப் பற்றி உலகளாவிய விதிகளையும் முறைமைகளையும் உருவாக்க விழைந்தனர். அவ்வாறான விதிகளும் முறைமைகளும் நிலைபெற்றுள்ளன எனத் திட்டவட்டமாக நம்பினர். நியூட்டனின் இயக்கவியல் விதி, உலகளாவிய ஈர்ப்புத் தன்மை விதி ஆகியவற்றைப் போன்ற ஓர் இயக்கவியல் விதியே உலகத்தை இயக்குகிறது என்று இயற்கை அறிவியலார் உறுதிப்படுத்தினர். அக்கருத்தை சமுதாயத் தத்துவவியலார் பயன்படுத்த விரும்பினர். அதன்மூலம், மனித நடத்தை முறைகளைப் பற்றி ஒரு முறைப்படியான நடத்தையியல் விதியை உருவாக்க முடியும் என நம்பினர். இயற்கைவியலாரின் கொள்கைப் போக்கினை அடிப்படையாகக் கொண்டு மனித நடத்தை முறைகளுக்கான கொள்கையை உருவாக்குவதில் சோதனை முறையைப் (experimental method) பயன்படுத்தலாம் என்று எண்ணினர். இயற்கைவியலில் உள்ளதைப் போன்றே சமுதாயத்தின் இயல்நிகழ்ச்சிகளை (phenomena) உற்றுநோக்க முடியும் என்றும், அதனைக் கொண்டு எடுகோள்களை (hypotheses) உருவாக்கி. மேலும் தொடர்ச்சியான உற்றுநோக்கல் மூலமும் சோதனைகள் மூலமும்

எடுகோள்களைச் சோதித்துக் கொள்கையை உருவாக்க முடியும் என்றும் நம்பினர்.

அறிவொளிக் காலச் சிந்தனைகள் விளைந்த இடங்களுள் ஸ்காட்லாந்தும் பிரான்சும் அடங்கும். அந்நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் பல்வேறு பரப்புகளில் சிறந்த பங்களிப்பினையும் செய்துள்ளதால் அவர்களின் கருத்துகள் இன்றளவும் சிறப்பிடம் பெற்றுள்ளன. அவர்களின் சிந்தனையில் விளைந்த கருத்துகள் மனிதனைப் பற்றிய ஆய்வில் மேலும் பல புதிய பரிமாணங்களைத் தோற்றுவித்தன. பிரஞ்சுக் குழுவைச் சேர்ந்த மூன்று சிந்தனையாளர்களின் கருத்துகளையும், ஸ்காட்லாந்து குழுவைச் சேர்ந்த மூன்று அறிஞர்களின் கருத்துகளையும், சுருக்கமாக அறிவதன் மூலம் அதனை அறியலாம்.

## 3.2.1.பிரஞ்சுக்குழு

சார்லஸ் மாண்டஸ்கு (முழுப் பெயர் : Charles Lousis de Secondat, Baron de la Brede and de Montesquieu) (கி.பி.1689 – 1755)

மாண்டஸ்கு தொடக்கக் காலத்தில் மனித வேறுபாடுகளை அறிவதில் ஆர்வங்கொண்டு பல ஆய்வுகளை மேற்கொண்டவர். பின்னர்ச் சமுதாயங்களுக்கிடையே காணப்படும் மாறுபாடுகளை அறிவதிலும் ஆர்வங் கொண்டார். இவ்வகை ஆய்வுகளில் இவர் பண்பாட்டிடை அணுகுமுறையைப் (cross – cultural approach) பயன்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகளுக்குப் பயணம் செய்தமையாலும், பலபொருள் குறித்து மிகுதியான அளவில் படித்தமையாலும் மனித சமுதாயம் என்பது பல வகையான இயல் நிகழ்ச்சிகளைக் கொண்ட ஒரு கலப்புத் தொகுதி என உணர்ந்தார்.

ஏறக்குறைய இருபது ஆண்டுகள் வரை மனித நடத்தைகளை ஆழ்ந்து உற்றுநோக்கிப் பதிவுசெய்த தரவுகளைக் கொண்டு இவர் ‘விதிகளின் மெய்க்கருத்து’(Spirit of the Laws, 1748) என்னும் நூலினை எழுதினார். அந்நூலில் அரசியல் சட்டம் குறித்து இவர் தம் கருத்தாக்கங்களை விளக்குகிறார். குறிப்பாக, சமுதாயச் செயல்களையும், பல்வேறு நிறுவனங்களுக்கிடையே நிகழும் இடைவினைகளையும் பகுத்தாய்ந்தார். விதியைப் (law) பற்றிய தோற்றத்தையும் (origin) தன்மையையும் கூறும் நவீன விளக்கவுரையாக அந்நூல் அமைந்தது. அதில் சமுதாய ஒருமைப்பாட்டிற்குச் சமுதாயக் கட்டுப்பாடு ஒரு வழியாகும் என்ற கருத்தைப் பொதுநோக்கில் சுட்டிக் காட்டுகிறார். சமுதாயங்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளுக்குக் காரணம் அச்சமுதாயங்களின் கடந்த கால வரலாறும், சமுதாயப் பண்பாட்டுக் கட்டமைப்பும் பல்வேறுபட்ட சுற்றுச் சூழல்களுமே (environment) என முடிவு செய்தார். அவற்றுள் சுற்றுச் சூழல்களுமே வேறுபாடுகள் முதன்மையானவை எனக் கருதினார். (E.S.Bogardus, A.History of Social

குறிப்பு

Thought (Los Angels : J.R.Miler, 1928, Page.182-191) சமுதாயங்களின் வேறுபாட்டுத் தன்மைக்குச் சுற்றுச்சூழல் அறுதிப்பாட்டியும் (environmental determinism) காரணம் என்று சிலர் உய்த்துணரும் முறையிலேயே இவரும் வலியுறுத்திக் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்டஸ்கு அவரது சமகாலத்தவர்கள் கொண்டிருந்த இனச் சார்புடைய கருத்துகளை முழுவதுமாகக் கைவிட்டார். ஒரு சமுதாயத்தின் தரங்களைக் கொண்டு மற்றொரு சமுதாயத்தை மதிப்பிடக்கூடாது. அந்தந்தச் சமுதாயத்தின் முறைகளைக் கொண்டே மதிப்பிட வேண்டும். மாண்டஸ்கின் இக்கருத்து 19-ஆம் நூற்றாண்டு மானிடவியலில் உருவாக்கப்பட்ட பண்பாட்டுச் சார்புடைமைக் கொள்கையின் (cultural relativism) உட்கருத்து என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாண்டஸ்கு அவருடைய முதன்மையான ஆய்வில் மனித வரலாறு மூன்று வளர்ச்சி நிலைகளைக் கொண்டுள்ளதாகக் கூறுவார். அவை : வேட்டை நிலை அல்லது விலங்காண்டி நிலை (hunting or savagery), ஆயர் நிலை அல்லது காட்டாண்டி நிலை (herding or bardarism), நாகரிகம் (civilization) இவரது வகைப்பாடு 19ஆம் நூற்றாண்டில் பெரும் சிறப்புப் பெற்றது.

## 3.2.2. டுர்காட் Anne Robert Jacques Turgot (கி.பி.1727 – 1781)

'மனித மனத்தின் வரலாற்றுக் கால வளர்ச்சி' (The Historical Progress of the Human Mind, 1750) என்னும் நூல் டுர்காட்டின் சிந்தனையில் உருவானதாகும். வரலாற்றுக் காலத்திலிருந்து இக்காலம் வரை மனிதனது அனைத்துப் போக்கிலும் அவனது செயல் முறைகள் நாளுக்கு நாள் மிகுதியாகிக் கொண்டே வருகிறது என இவர் எண்ணினார். இதை மனிதனின் உணவு ஈட்டும் திறனில் ஏற்பட்ட மாறுதல்களைக் கொண்டு அறிய முடியும் என இந்நூலில் விளக்குகிறார். மனிதனின் வாழ்க்கைப் பொருளாதாரம் (subsistence economy) வேட்டுவ வாழ்க்கை, ஆயர் வாழ்க்கை, வேளாண் வாழ்க்கை ஆகிய மூன்று நிலைகளில் வளர்ச்சியடைந்துள்ளது என விவரிக்கிறார். இது மாண்டஸ்கு வகைப்பாட்டினை ஓரளவு ஒத்துள்ளது. வேட்டுவத் தொழிலையும் ஆயர்தொழிலையும் மேற்கொண்டிருந்தபோது மனிதன் ஒரே தன்மையான வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தான். வேளாண் தொழிலை மேற்கொண்ட பின்பே நிலையான வாழ்க்கை, தொழிலின் வேறுபாடு, மக்கள் தொகைப் பெருக்கம், ஓய்வு நேரம் முதலானவை ஏற்பட்டது என நம்பினார்.

மனிதர்களுக்கிடையில் உள்ள வேறுபாடுகள் உலகளாவிய நிலையில் உள்ளதற்கு உயிரியல்சார் வேறுபாடுகள் (biological differences) காரணமல்ல; பண்பாட்டு வேறுபாடுகளே காரணம் என்பார்

குறிப்பு

டுர்காட். இப்பண்பாட்டு வேறுபாடுகள், கற்றல் முறையிலுள்ள (சமுதாயவயமாக்கம்) வேறுபாடாகவும், சுற்றுச் சூழலிலுள்ள வேறுபாடாகவும், ஒருவரிடமிருந்து மற்றொருவர் தனித்திருக்குமளவில் உள்ள வேறுபாடாகவும் அல்லது இது போன்ற பிற வேறுபாடாகவும் இருக்கும் தன்மையன எனக் கூறினார் டுர்காட்.

நாகரிகத்தின் உரிமையைக் குறிப்பிட்ட சில குழுவினர் மட்டும் சொந்தம் கொண்டாடிய முறைக்கு டுர்காட் கூறிய கருத்துச் சுவையானது. உலகின் பல்வேறு அரசுகளின் வளர்ச்சியும் தோல்வியும் மாறி மாறித் தொடர்ந்து ஏற்பட்டுள்ளதால் மனிதனின் வளர்ச்சி நிலையில் இடத்திற்கிடம் வேறுபாடுகள் உள்ளன. ஆகவே நாகரிகத்தின் முற்றுரிமையை (monocopoly) எந்தவொரு தனித்தக் குழுவோ ஒரு குறிப்பிட்ட பகுதியோ பெற்றிருக்கவில்லை. (M.S.Garbarino, Sociocultural Theory in Anthropology, op. cit., P.15) டுர்காட்டின் இவ்வகைக் கருத்துகள் பிற சமுதாயத் தத்துவவியலாரிடமிருந்து மாறுபட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

## 3.2.3.கண்டார்சே Marie Jean Antoine, Marquis de Condorcet (கி.பி.1743 – 1794)

அறிவொளிக் காலத்தவரின் ‘வளர்ச்சி’(progress) பற்றிய கருத்தினை மேலும் விளக்குவதாக கண்டார்சேயின் கருத்துகள் அமைந்தன. மனிதர்கள் தொடர்ந்து எல்லையற்ற முன்னேற்றத்தைப் பெற்று வருகிறார்கள் என்ற கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர் கண்டார்சே. (E.E.Evans – Pritchard, A History of Anthropological Thought, op. cit., Page 36-38) மனிதனைப் பற்றிய ஆய்வில் மனிதனின் முன்னேற்றத்தையும். வெற்றிகளையும் வரலாற்றுக் காலந்தொடங்கி மிகவும் உச்சகட்டமான பிரஞ்சுப் புரட்சிக் காலம் வரை விளக்கலாம் என்பார். இவர் எழுதிய ‘மனித மனத்தின் வளர்ச்சி பற்றிய சுருக்கம்’ (The Outline of the Progress of the Human Mind, 1795) என்னும் நூலில் மனித அறிவின் வரலாற்றினைச் சுருக்கமாக விவரித்திருந்தாலும் இதனை ஏதோ ஒரு நாளில் உறுதியாக எழுத முடியும் என நம்பினார். இவர் வரலாற்றைப் பத்து நிலைகளாகப் பிரித்து இறுதி நிலையில் நம்பிக்கையுடைய எதிர்காலத்தைப் பற்றி விவரிக்கிறார். இவர் தம் கருத்துகள் பொதுப்படையானதாக அல்லாமல் குறிப்பிட்ட இனத்தவரைப் பற்றியனவாக இருந்தன. உலக மக்கள் அனைவரின் அறிவு எவ்வாறு வளர்ச்சியடைந்தது என்று எழுதாமல் ஐரோப்பியரின் வரலாறாக எழுதினார். இவர் எண்ணிய இப்பெரும் படைப்பை எழுதி முடிக்கும் முன்பே காலமானார்.

குறிப்பு

## 3.2.4.ஸ்காட்லாந்துக் குழு - டேவிட் ஹியூம் (கி.பி.1711 – 1776)

நியூட்டன் எவ்வாறு இயற்பியலை உருவாக்கினாரோ அவ்வாறே ஒழுக்கம் சார் அறிவியல்களையும் (Moral sciences-சமுதாய அறிவியல்களைச் சுட்டிக்காட்ட ஹியூம் பயன்படுத்திய மொழித்தொடர்) வளப்படுத்த முடியும் என ஸ்காட்லாந்தின் தத்துவவியலாரும், வரலாற்றியலாரும், பொருளியலாருமான டேவிட் ஹியூம் நம்பினார். ஒன்றைப் பற்றிய நுண்ணிய அறிவு உற்றுநோக்கல் மூலம் மட்டுமே கிடைக்குமேயன்றி ஊகத்தினால் கிடைக்காது என உறுதியாகக் குறிப்பிட்டார். அதில் இயற்கை மீறிய செயல்களை ஏற்றுக் கொள்ளக்கூடாது என வாதிட்டார். பரவல் நிகழ்ச்சி அல்லது பண்பாட்டுக் கடன் (cultural borrowing) ஆகியவற்றின் விளைவாகவே பண்பாடுகளுக்கிடையில் ஒற்றுமை நிலவுகிறதென விளக்கினார். (M.S.Garbarino, Sociocultural Theory in Anthropology, op.cit., Page 15-16) சமுதாயத்தை உளவியல் அடிப்படையில் ஆராய வேண்டியதன் அவசியத்தையும் ஹியூம் வலியுறுத்தினார். மனிதனின் பாலுணர்வுத் தன்மைகள், மனித மனத்தின் இயக்கத்தன்மைகள். ஆளுமையின் மீது பண்பாட்டில் தாக்கம் ஆகியன சமுதாயத்தின் வடிவமைப்பில் பங்கு பெற்றுள்ளதால் இவை பற்றிய ஆய்வையும் ஹியூம் வலியுறுத்தினார். அதன் மூலமே மனிதனைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளவியலும் என நம்பினார்.

## 3.2.5.வில்லியம் ராபர்ட்சன் (கி.பி.1721 – 1793)

ராபர்ட்சன் எடின்பர்கு பல்கலைக்கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியராக இருந்தவர். சிறந்த வரலாற்றறிஞரும் ஆவார். மாண்டஸ்கு வகைப்படுத்தியவாறே இவரும் மனித சமுதாயத்தின் வளர்ச்சியை விலங்காண்டி நிலை, காட்டாண்டி நிலை, நாகரிகம் என மூன்று நிலைகளாகப் பகுத்தார். மனிதர்கள் உலோகங்களைக் கண்டெடுத்து அதை உருக்கும் திறன் பெறுவதற்கு முன் கற்கருவிகளைப் பயன்படுத்தினர். இது படிமலர்ச்சியில் முதன்மையாகப் பங்கு வகிக்கிறது. படிமலர்ச்சியில் முதன்மையாகப் பங்கு வகிக்கிறது. படிமலர்ச்சிக் கருத்துகளுக்கடுத்து ராபர்ட்சன் மக்களிடையே காணப்படும் வேறுபாடுகளுக்கான காரணத்தையும் ஆராய்ந்தார். மனிதர்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளுக்கும் பண்பாட்டு வயமாதல் (enculturation) முறையும், சுற்றுப்புற உலகத்தின் தாக்கமும் காரணம் எனக் கருதினார். இன்று பண்பாட்டு மானிடவியலில் சிறப்பிடம் பெற்று விளங்கும் பண்பாட்டுவயமாதல் பற்றிய சிந்தனை ராபர்ட்சன் காலத்திலேயே வேரூன்றிவிட்டது என்பது இதன் மூலம் புலனாகிறது.

அமெரிக்க இந்தியர்கள் ஆசியாவிலிருந்து வந்தவர்கள் என்னும் கருத்தை முதன்முதலில் தெரிவித்தவர்களுள் இவர்

ஒருவராயிராவிட்டாலும் அம் மக்களின் தோற்றத்திற்கும் (origin), அவர்கள் ஆசியாவிலிருந்து பெரிங் கடற்கால வழியாக வட அமெரிக்காவினுள் நுழைந்தனர் என்பதற்கும் தாவரங்கள், இனக்குழுவியல் அடிப்படையில் தகுந்த சான்றுகளைக் காட்டினார். மனித சமுதாயத்தின் 'எளிய நிலையிலான சமுதாய வாழ்க்கை' யை எடுத்துக் காட்டுபவர்களாகப் புத்துலகத் திணைக்குடியினர் உள்ளனர் எனக் கூறினார்.

குறிப்பு

## 3.2.6.ஆடம் ஃபெர்கூஷன் (கி.பி.1723 – 1816)

ஸ்காட்லாந்து அறிஞரான இவர் மனிதனின் தன்மைகள் குறித்த அறிவொளிக்காலச் சிந்தனைகளுக்கு மேலுமோர் உருவம் கொடுக்க முற்பட்டார். 'குடிமைச் சமுதாயத்தின் வரலாறு பற்றிய கட்டுரை'யில் (An Essay on the History of the Civil Society, 1767) சமுதாயத்தின் வளர்ச்சி தொடர்ச்சியான பல படிநிலைகளைக் கடந்து வந்துள்ளது என்கிறார். (E.E.Evans – Pritchand, A Histroy of Anthropological Thought, op. cit., P.19) விளக்கமாகக் கூறும் இவ்வுரை 19ஆம் நூற்றாண்டினரின் முழுமை பெற்ற சமுதாயப் படிமலர்ச்சிக் கொள்கைகளை முன்னுணர்ந்து கூறியதாக அமைந்தது. சமுதாயம் நிலைபேறுடையதாகவும் இயக்கத் தன்மைகளைக் கொண்டதாகவும் விளங்குகிறது என்பதை வலியுறுத்திக் கூறியதோடு, பல நாட்டினங்களின் வளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் உரிய காரணங்களையும் இந்நூலில் அறுதியிட்டுக் கூறியுள்ளார்.

பண்பாட்டு என்னும் சொல்லை பெர்கூஷன் நேரடியாகப் பயன்படுத்தவில்லையாயினும் இச்சொல்லிற்கான கருத்தினைத் தெளிவாகக் கையாண்டுள்ளார். பண்பாட்டின் பல்வேறு வகைகளுக்குச் சுற்றுச்சூழலின் வேறுபாடுகளும் காரணமாகின்றன என மாண்டஸ்கு எண்ணியதைப் போன்றே பெர்கூஷனும் கருதினார். மனிதன் கூட்டமாகச் சேர்ந்து வாழும் முறை, அவன் ஒருவரோடு ஒருவர் உதவிபெறா நிலையில் வாழ்ந்த குழந்தைப் பருவத்தை எண்ணியதிலிருந்து தோன்றியதாகும். அதன் பின்னர்ச் சமுதாயவயமாக்கத்தின் (socialization) மூலம் ஒருவரையொருவர் ஏற்றுக்கொண்டும் புரிந்துகொண்டும் தம் சமுதாய அமைப்பிற்கேற்ற பெரியவர்களாக வளர்கின்றனர். பலர் குழுவாகச் சேர்ந்து சமுதாயவயமாக்கப்படும் போது ஒவ்வொருவரும் தத்தம் சமுதாயத்தின் சிறப்புகளை உயர்வாகப் பேசி அவற்றை மற்றவர்கள் மீது சுமத்தும் போக்கு (தன்னின உயர்வுக் கொள்கை) காணப்படுகிறது என்பார். (M.S.Garbarino, Sociocultural Theory in Anthropology, op, cit., P.16) பெர்கூஷனின் பெரும்பாலான கருத்துகள் 19-ஆம் நூற்றாண்டில் சமுதாய அறிவியல் வளர்ச்சியுற்றபோது ஏற்றுக்கொள்ளப்பட்டன.

## 3.2.7.மானிடவியலின் வளர்ச்சிக்கு அறிவொளிக் காலச் சிந்தனையின் பங்கு

குறிப்பு

18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமுதாயத் தத்துவவியலார் மனித சமுதாயத்தின் மிகப் பெருமளவிலான வேறுபாடுகளை எண்ணிப் பாராட்டத் தொடங்கினர். ஆனால் அவர்கள் இயற்கைச் சூழலில் நாகரிகமற்ற நிலையில் வாழ்ந்த மேற்கத்தியரல்லாத மக்களை மட்டுமே இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிட்டு வந்தனர். எவ்வாறிருப்பினும் அதன் மூலம் அடுத்த நூற்றாண்டில் மிகச் சரியான இனக்குழுவியல் தரவுகளைப் பெருமளவு சேகரித்து அதனடிப்படையில் அறிவார்ந்த பண்பாட்டிடை ஆய்வுகள் மேற்கொள்வதற்கு வழிகோலினர். இது அவர்களின் முதல் பங்களிப்பாகும்.

மனிதத் தோற்றத்தை அறிவதில் ஆர்வம் கொண்ட 18-ஆம் நூற்றாண்டுத் தத்துவவியலார் சமுதாயப் படிமலர்ச்சியில் இடைவிடாத ஒரு தொடர்ச்சி உள்ளது என்ற கரத்தை வலியுறுத்தினர். (படிமலர்ச்சி என்ற சொல்லிற்குப் பதில் அறிவொளிக் காலச் சிந்தனையாளர்கள் ‘வளர்ச்சி’(progress) என்று குறிப்பிட்டதை இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும். அக்கருத்தை விளக்கும் பொருட்டு வரலாற்று வளர்ச்சி அடிப்படையிலான விளக்க முறைகளைச் சுட்டிக் காட்டினர். அதன்படி ஐரோப்பியர்களுக்கு முந்தைய நிலையிலிருந்த கிரேக்க, ரோமானியர்களிடமிருந்து மனித சமுதாயம் வளர்ச்சி பெற்றதாகக் கூறினரே தவிர மனிதத் தோற்றத்தையோ வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாற்றையோ (pre-history) குறிப்பிட்ட முயலவில்லை. ஏனெனில் அவர்களின் கருத்துகள் மண்ணியல், தொல்லியல் ஆகிய துறைகளின் வளர்ச்சியை எதிர்பார்த்திருந்தன. பின்னர் அத்துறைகளின் வளர்ச்சிப் போக்கினால் மனிதனின் தோற்றம் பற்றிய அவர்களின் கருத்துகள் மாற்றம் பெற்றன. இது அவர்களின் இரண்டாவது பங்களிப்பாகும்.

அறிவொளிக் காலத் தத்துவவியலார் கற்றுணர்ந்த நடத்தை (learned behaviour) முறைகளிலிருந்து உயிரியல் சார் நடத்தை முறைகளைப் (biological bevaiour) பிரித்துக் காண முயன்றாலும் அவற்றிற்கிடையே அவ்வளவு வேறுபாடுகள் ஏன் உள்ளன என்பதை விளக்க இயலாதவர்களாய் இருந்தனர். அதனாலேயே அவர்கள் கூறிய பல விளக்கங்கள் மிகவும் சுருக்கமானவையாகவும் அளவில் நிறைவற்றவையாகவும் இருந்தன. அவ்வாறான விளக்கங்களுள் இனவியல் கருத்துகள், சூழ்நிலை அறுதிப்பாட்டியம் (environmental determinism) முதலானவற்றைக் குறிப்பிடலாம். இவ்விளக்கங்கள் இந்நாள் வரை பலவகையான சச்சரவுகளுக்குக் காரணமாயிருந்தன. இவைதவிர அச்சிந்தனையாளர்கள் மனித நடத்தை முறைகளுக்கான விதிமுறைகளைக் காண முற்பட்டபோது மனிதனின் பேணிப்பயிற்றுவிக்கும் நிலையிலிருந்து (nurure) இயற்கையைத் (nature) தனியே பிரிக்க வியலாதவராயினர். அவர்களுக்கடுத்து வந்த பிற்காலத் தலைமுறையினரே (மானிடவியலர்) உயிரியல் சார் செயல்களையும்,

தகவமைப்பின் செயற்பாடுகளையும் புரிந்துகொண்டனர். ஆகவே, பிற்காலத் தலைமுறையினருக்கு ஊன்றுகோலாய் அமைந்த கருத்துகள் அவர்களின் மூன்றாவது பங்களிப்பாகும்.

அறிவொளிக் காலச் சிந்தனையாளர்கள் சமுதாய நிறுவனங்களை அறிய முற்பட்டபோது அரசு, சமயம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே ஆராயத் தொடங்கினர். இவ்வாறான முறை மானிடவியலிலும் சமுதாயவியலிலும் இன்றும் கடைப்பிடிக்கப் படுகிறது. சமுதாயத்தை இயற்கையிலேயே ஒருங்கிணைந்த அமைப்பு என்று அவர்கள் எண்ணினர். சமுதாயத்தில் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு செயல்புரியும் பல உட்பிரிவுகள் உள்ளன என்ற அவர்களின் கருத்து பிற்காலச் செயற்பாட்டியற் கொள்கையின் (functionalism) சாயலாக அமைந்தது. இது அவர்களின் நான்காவது பங்களிப்பாகும்.

மனித நடத்தை முறைகளை அறிவதில் இயற்கை அறிவியலின் முறையினைப் (methodology) பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தே. அறிவொளிக்காலம் முதல் இன்றைய அறிவியல் காலம் வரை தொடரும் அவர்களின் பங்களிப்பாகும். இதுவே அவர்களின் தலையாய பங்களிப்புமாகும். இயற்கை ஒழுங்கானது (natural order) கண்டுபிடிக்கவியலா விதிகளின் அடிப்படையில் இயங்குகிறது என அத்தத்துவவியலார் நம்பினர். அதே நேரத்தில் ஆராய்ந்தறியாமலே ஊகிக்கும் போக்கைப் புறக்கணித்து, தரவுகளையும் முடிவுகளையும் சோதித்துக் காணும் வழிமுறைகளை மேற்கொண்டனர். ஆகவே சமுதாய முறைமைகளையும், சமகாலத்தியச் சமுதாய, அரசியல் அமைப்புகளையும் குறித்த பகுத்தறிவுவாத அணுகுமுறையுடன் ஆராயும் இன்றைய கோட்பாடானது 18-ஆம் நூற்றாண்டினரிடமிருந்து பெறப்பட்டது என்பது தெளிவாகிறது. இது அவர்களின் ஐந்தாவது பங்களிப்பாகும்.

அமெரிக்க அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ள விடுதலை பற்றிய கோட்பாடுகளும். அமெரிக்காவின் விடுதலை அறிவிப்பு (Declaration of Independence), மனித உரிமைகள் பற்றிய பிரஞ்சு அறிவிப்பு முதலானவையும் அறிவொளிக்காலத் தத்துவவியலிலிருந்து பெறப்பட்டதாகத் தொடர்புபடுத்திக் காட்டலாம். இக்கருத்து அனைவருக்கும் ஏற்புடையதாயின் இதனை அவர்களின் ஆறாவது பங்களிப்பாகக் கொள்ளலாம்.

## 3.2.8. ஐரோப்பியர்களின் பேரரசுக் கொள்கையும் மானிடவியலும்

மனிதனைப் பற்றிய அறிவொளிக் காலத்தவர்களின் கருத்துகள் மானிடவியலின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தவை போன்றே ஐரோப்பியர்களின் அரசியல் நடவடிக்கைகளும் மானிடவியலின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. ஐரோப்பியரின் பேரரசுக் கொள்கை (imperialism) தொடக்கக்கால மானிடவியல் வரலாற்றில் பெரும் பங்கு

குறிப்பு

பெற்றது. புத்தாய்வுகள் மூலம் கண்டறியப்பட்ட நிலப்பகுதிகளின் வளங்களைக் கண்டு ஐரோப்பியர்கள் மலைத்துப்போயினா். அங்கிருந்த கச்சாப் பொருள்கள், நறுமணப் பொருள்கள், தங்கம் கனிம வகைகள் முதலானவற்றைக் குவித்துச் சொந்தம் கொண்டாட விரும்பினா். அவ்விருப்பத்தை ஈடேற்ற அப்பகுதிகளில் நிலையாகத் தங்க முற்பட்டனா். அங்குக் குடியேறவும் செய்தனா். அம்முயற்சியில் போர்ச்சுகல், ஸ்பெயின். இங்கிலாந்து. நெதர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் பல்வேறு நிலப்பகுதிகளில் குடியேற்ற அரசுகளை (colonial government) அமைப்பதில் முன்னணி நாடுகளாய் விளங்கின. அவர்கள், நிலப்பகுதிகளைக் குடியேறிய பின்னர் அப்பகுதிகளில் வாழ்ந்த மக்களின் விழிப்புணர்வையும் எதிர்ப்பையும் கட்டுப்படுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது. அதனால் அம்மக்கள் மீது அதிகாரம் செலுத்தத் தொடங்கினா்.

குடியேற்ற அரசுகளை அமைத்த ஐரோப்பியர்களும் பிற வணிக நிறுவனத்தினரும் அந்தந்தப் பகுதிகளில் வாழ்ந்த திணைக்குடியினரைக் (native people) கட்டி ஆளுவதில் பல சிக்கல்களை எதிர்நோக்கினா். அதனால் அந்தந்த நிலப்பகுதிகளில் வாழ்ந்த திணைக்குடியினரை நன்கு அறிய வேண்டியவர்களாய் இருந்தனர். அக்கட்டாயத்தின்பேரில் திணைக்குடியினர் பற்றிய இனக்குழுவியல் செய்திகளைச் சேகரிப்பதற்கு ஊக்கமளித்தனா். அவ்வகைச் செய்திகள் மூலம் அம்மக்களின் அரசியல், பொருளாதார முறைகளை நன்கு அறிய முடிந்தது. அதனால் அப்பகுதிகளில் உறுதியுடன் நிலைபெற முடிந்தது. இருப்பினும், அவர்களின் அணுகுமுறை சிறந்த இனக்குழுவியல் ஆய்வுகளுக்கு வழிகோலவில்லை. குறிப்பாக, ஸ்பெயின். போர்ச்சுகல் போன்ற பெரும் பேரரசுகளின் போக்கு மானிடவியலை வளர்ப்பதற்குப் போதுமான வாய்ப்பினைக் கொடுக்கவில்லை. எவ்வாறிருப்பினும் முறைப்படியான இனக்குழுவியல் வளர்ச்சிக்குப் பேரரசுக் கொள்கை மிகந்த பயனளிக்கவில்லை என்றாலும் அதன் தேவை உணரப்பட்டது.

குடியேற்ற அரசுகளின் தேவைக்காகச் சேகரிக்கப்பட்ட இனக்குழுவியல் தரவுகள் பலவகையானவை. அத் தரவுகள் சிறிய அளவில் துண்டு துண்டாக இருந்தன என்றும், அவை இரண்டாம் தரமென்றும் ஒரு கருத்து நிலவியது. குடியேற்ற அரசுகளின் தேவைகளுக்கேற்ப அமைந்த ஆய்வுகள் என்பதால் அக்கருத்து உண்மை என நம்பப்பட்டது. பெரும்பாலானவை அவ்வாறு இருப்பினும் விதிவிலக்காகச் சில ஆய்வுகள் சிறப்பாக இருந்தன. சகாகுன் (Frya Bernadino de Sahagun) என்பவர் அஸ்பெத் (Aztec) பழங்குடிகளிடையே கி.பி.1529 முதல் 1590 வரை வாழ்ந்து அவர்களின் மொழியையும் வாழ்க்கை முறைகளையும் பதிவு செய்தார். அது அம்மக்களைப் பற்றித் தொகுக்கப்பெற்ற மிகச்சிறந்த இனக் குழுவியல் தரவாக விளங்குகிறது.

பிரஞ்சு நாட்டவரான ல.்.பிட்டாவ் (Joseph Francois Lafitau) (1681 – 1746) 17-ஆம் நூற்றாண்டில் வடகிழக்கு அமெரிக்க இந்தியர்களிடம்

ஆய்வுசெய்து மதிப்பிடமுடியாத அளவிற்குச் செய்திகளைச் சேகரித்தார். ஸ்கூல்கிரா.்.ப்ட் (Henry Schooleraft) என்ற அமெரிக்க அரசின் முகவர் சிப்பிவா (Chippewa) இந்தியப் பெண்ணை மணந்து கொண்டு அமெரிக்க இந்தியர்களிடம் விரிவான அளவில் செய்திகள் சேகரித்து ஆறு தொகுதிகள் வெளியிட்டார். இப்பெரும் நூல்வரிசை அவரது களப்பணி நிபுணத்துவத்தைக் காட்டுவதாகவும் எவ்வாறு இனக்குழுவியல் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு முன் மாதிரியாகவும் அமைந்தது. அமெரிக்க இந்தியர்களின் தொன்மக் கதைகளையும், மரபுகளையும் வெளி உலகிற்குக் கொண்டு வந்தவர்களுள் அவரும் குறிப்பிடத்தக்கவர்.

**குறிப்பு**

குடியேற்ற அரசுகளின் உதவியால் விளைந்த இனக்குழுவியல் தொகுப்புகள் பற்றி இங்குக் கூறப்பட்டுள்ளவை மிகச் சில மட்டுமே எண்ணற்றோர் இப்பணியில் ஈடுபட்டனர். ஆங்கிலேயர் காலத்தில் இந்தியப் பழங்குடிகள் பற்றியும் இவ்வகைச் செய்திகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இது பற்றி இதே அத்தியாயத்தில் இந்தியாவில் மானிடவியலின் வளர்ச்சி என்னும் உட்தலைப்பில் சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் 1901 – 11 ஆண்டுகளை ஒட்டி அமைதி குன்றத் தொடங்கியது. உலகம் எப்போதும் கண்டிராத அளவிற்கு ஐரோப்பிய நாடுகள் அழிவை நோக்கி தங்களுக்கிடையே முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டன. அம்முரண்பாடுகள் முதல் உலகப் போரில் முடிந்தன. இப்பெரும் போரில் 9 மில்லியன் மக்கள் இறந்தனர். ஆனால் ஆங்கிலேயப் பேரரசு முன் எப்போதும் இல்லாத அளவிற்கு விரிவடைந்தது. ஆப்பிரிக்காவில் முன்னாளைய ஜெருமானியப் பகுதிகள், ஜெருமானிய நியூகினி, 100 பசிபிக் தீவுகள். மெசபடோமியா, பாலத்தீனம் முதலான பகுதிகளை ஆங்கிலேயப் பேரரசு அதன் ஆட்சிக்குள் சேர்த்துக்கொண்டு 450 மில்லியன் மக்கள் தொகை அளவிற்குப்பெருகிற்று. அந்த மக்கள் தொகையானது ஏறக்குறைய உலகின் அனைத்து இனத்தவரையும் சமயத்தவரையும் உள்ளடக்கியது எனலாம். அந்த அனைத்து வகையான இனத்தவர்களையும் அடக்கி ஆள வேண்டியவர்களாய் ஆங்கிலேயர்கள் இருந்தனர்.

அந்நிலையில் மானிடவியலுக்கும் குடியேற்றக் கொள்கைக்கும் (colonialism) இடையேயுள்ள உண்மையான தொடர்புகள் குறித்து மிகுந்த ஈடுபாட்டுடன் விவாதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அப்போதிருந்த அரசியல், பொருளாதார நிலைமைகளையும் சிக்கல்களையும் ஆராயும் போக்கை இனக் குழுவியல் ஏற்படுத்திக் கொண்டது. இனக்குழுவியல் ஆய்வுகளுக்கான நிதி பெரும்பாலும் அரசுத் துறையினரிடமிருந்தும் குடியேற்றப் பகுதிகளில் பொருளாதார வளத்தைக் கண்டறிவதில் ஆர்வமுடைய நிறுவனங்களிடமிருந்தும் கிடைத்தது. அமெரிக்காவில் மானிடவியலின் முழுக்கவனம் அமெரிக்க இந்தியர்களைப் பற்றியதாக இருந்தது. சுமித்சோனியன் நிறுவனம் (Sumithsonian Institute) பல்கலைக் கழகத் துறைகள் உள்பட பல

நிறுவனங்களைச் சேர்ந்தோர் விரைந்து மாறிவரும் அல்லது மறைந்து வரும் சமுதாயங்களையும், திணைக்குடிகளையும் பற்றி எவ்வளவு செய்திகள் சேகரிக்கமுடியுமோ அந்த அளவிற்குச் சேகரித்தனர்.

குறிப்பு

### 3.2.9. கிறித்தவச் சமயத்தினரும் மானிடவியலும்

ஐரோப்பியர்கள் குடியேற்ற நாடுகளில் ஆட்சி செலுத்த முற்பட்ட அதே நேரத்தில் கிறித்தவச் சமய நெறிகளைப் பரப்புவதில் குறியாயிருந்தனர். இச்சமய மரபுகளைப் பரப்புவதற்குமுன் பழங்குடிகளின் சமய நம்பிக்கைகளைப் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என உணர்ந்தனர். அம்மக்களை சமயமாற்றம் செய்ய விழைந்தால் அவர்களின் மொழிகளைக் கற்க வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்தனர்.

திருச்சபையினரைப் போன்று பிற சமயத்தினரும் இதே குறிக்கோளைக் கொண்டிருந்ததால் திணைக்குடியினரின் வரிவடிவமற்ற மொழிகளை அறிவதில் புதிய வேகம் உண்டானது. ஆனால் பல வரிவடிவமற்ற மொழிகள் பிற மொழிகளின் எழுத்துவடிவத்தில் பதிவுசெய்யப்பட்டன. திணைக்குடியினரை சமயமாற்றம் செய்ய வேண்டுமென்ற குறிக்கோளுடன் பலகாலம் அவர்களோடு ஒன்றி வாழ்ந்த சமயப்பரப்பிகள் அவர்களின் வாழ்க்கை முறைகள், தத்துவங்கள், நெறிமுறைகள் முதலானவற்றை நன்கு அறிந்து கொண்டனர். அவர்களின் நெடுநாளையத் தொடர்பு மூலம் அவர்களை ஆழ்ந்து அறிந்து கொள்ளவும் அவர்களின் காட்டுமிராண்டித் தன்மையின் (heathenism) பாங்கினை வெளிப்படுத்தவும் முடிந்தது. அதனால் மேற்கத்தியரல்லாதாரின் தத்துவங்களும் வெளி உலகத்தவரிடம் பரவின. சில ஐரோப்பியர்கள் திணைக்குடியினரின் நம்பிக்கைகளும் விழுமியங்களும் (values) அவரவர்களின் பண்பாட்டளவில் மிகவும் சார்புடையவை என்று நன்கு அறிந்திருந்தனர். அவ்வகைக் கருத்துகள் ஐரோப்பியர்களின் பண்பாடு மட்டுமே உயர்ந்தது என்ற கருத்தை வலுவிழக்கச் செய்ய உதவின.

கிறித்தவச் சமயத்தினர் திணைக்குடிகளிடம் கிறித்தவத்தைப் பரப்புவதில் நாட்டங்கொண்டிருந்த அதேவேளையில் அவர்களின் வாழ்வு மேம்பட வேண்டுமென்ற உயரிய நோக்கத்தையும் கொண்டிருந்தனர். அதற்காக எண்ணற்றோர் அவர்களின் உழைப்பால் இனக் குழுவியல் துறையும் மேம்பட்டது. கிறித்தவச்சமயப் பரப்பிகளால் சேகரிக்கப்பட்ட இனக்குழுவியல் செய்திகளின் அளவு மிகப் பெருமளவாகும்.

### 3.2.10.மானிடவியலின் தந்தை

ஹெரோடாட்டஸ் வாழ்ந்த கி.மு.4-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.18-ஆம் நூற்றாண்டின் அறிவொளிக் காலம் வரை மனிதனின் தன்மைகளையும் சமுதாயத்தின் அமைப்புகளையும் அறிஞர்கள் பல நிலைகளில் சிந்தனை செய்துள்ளனர். அச்சிந்தனைகளின்

அடிப்படையிலேயே மனிதனைப் பற்றியும் மனித சமுதாயத்தைப் பற்றியும் இன்று நாம் தெளிவான கருத்துகளை வளர்த்துக் கொண்டுள்ளோம். அக்கருத்துக்களை நுணுகிப் பார்க்கும்போது மானிடவியல் எந்தக் காலகட்டத்தில் தோற்றம் பெற்றது என்று அறுதியிட்டுக் கூறவியலா நிலையே ஏற்படுகிறது. ஆகையால் மானிடவியல்சார் கருத்துகள் ஹெரோடாட்டஸ் காலத்திலிருந்து மெதுவாக வளர்ச்சி பெற்றுக் காலத்தினூடே முழுமை பெற்றுள்ளது என்று கூறுவதே பொருத்தமாக அமையும்.

குறிப்பு

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் 18ஆம் நூற்றாண்டை மானிடவியலின் தொடக்கக் காலம் என்று கூறலாம். இந் நூற்றாண்டில் ஜெருமானியத் தத்துவவியலார் ஜே.ஜி.ஹெர்டர்.

‘மனித வரலாற்றைப் பற்றிய தத்துவத்தின் கருத்துகள்’(Ideas for the Philosophy of Human History, 1784-1791) என்ற தலைப்பில் நான்கு தொகுதிகளை வெளியிட்டார். அந்நூல் வரிசையில் ஹெர்டர் உலகத்தின் தோற்றம் குறித்தும், மனிதனின் தோற்றம் குறித்தும், வரலாற்றுக் காலத்தினூடே மனிதனின் தொடர்புடைய பிற கருத்துகள் குறித்தும் விவரிக்கிறார் ஒரு குறிப்பிட்ட மக்களின் வரலாறு என்பது அம்மக்களுக்கே உரிய தனித்தன்மைகளால் உருவாக்கப்படுவது என்றும், ஒவ்வொரு குறிப்பிட்ட மக்களினத்தவரும் மனஅளவில் தனிப்பட்டவர்களாக உள்ளனர் என்றும், அப்பண்புகள் மரபுவழியில் செல்லக்கூடியவை என்றும், அவ்வினத்தவர்களின் தனிப்பட்ட பண்புகள் அவர்களின் வரலாற்றுக்கால நிகழ்ச்சிகளில் காணக்கூடியவையாக உள்ளன என்றும் ஹெர்டர் நம்பினார். இவ்வகையான முறையில் சிந்தித்த முதல் அறிஞர் தாம்தான் என்றும் ஹெர்டர் கருதினார்.

ஆர்ஜி காலிங்வுட் எழுதிய ‘வரலாற்றின் கருத்துகள்’ (Ideas of History, 1946) என்னும்நூலில், மானிடவியல் என்பது தனிப்பட்ட உடலமைப்பையும், உளப்பாங்கினையும் கொண்ட ஒவ்வோர் இனத்தவரின் பண்பாட்டை அறியும் அறிவியல் என்று கூறப்படுமானால், இத்துறையின் தந்தையாகப் போற்றப்பட வேண்டியவர் ஹெர்டரே என்பார். இக்கால மானிடவியல், மனித வேறுபாடுகளுக்கான காரணங்கள் உயிரியல் சார்ந்தவையாக மட்டுமே உள்ளன என்று முடிவு செய்துள்ளது உள அடிப்படையில் அன்று. ஆகவே அவ்வகைக் கருத்துகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்த ஹெர்டரை மானிடவியலின் தந்தை எனக் கொள்ளலாம் என்பர் சிலர்.

மனிதனின் ‘வளர்ச்சி’ (அறிவொளிக் காலத்தில் ‘படிமலர்ச்சி’ என்பதற்கு ஈடாகப் பயன்படுத்தப்பட்ட சொல்) குறித்து நிலவி வந்த ஊகக் கருத்துகளுக்கு உயிரியல் அடிப்படையில் தார்வின் ஏற்படுத்திய படிமலர்ச்சிக் கொள்கையானது மனித அறிவியலில் என்றும் அழியாத,

உண்மையான திறவுகோலாய் அமைந்ததால் தார்வினை மானிடவியலின் தந்தை எனக் கொள்ளலாம் என்பர் வேறு சிலர்.

குறிப்பு

அமைப்பியலின் (structuralism) தந்தையான லெவிஸ்ட்ராஸ் 1963-ல் எழுதிய 'ரூசோ :மானிடவியலின் தந்தை'(Rousseau : Father of Anthropology) என்னும் கட்டுரையில் ரூசோவை மிக உயரிய நிலையில் வைத்துப் போற்றுகிறார். இயற்கையையும், பண்பாட்டையும் இரட்டை எதிர்வு நிலைக்குக் கொண்டு வந்து அறிய வேண்டியதை முதன்முதலில் கட்டிக் காட்டியவா் ரூசோ அதோடு, "மனிதன் தன்னைப் பற்றி, தன்நிலையில் அறிந்து கொள்வதற்கு முன்னர்த் தன்னையே ஓர் 'அயலார்' என்ற நிலையில் முதலில் ஆராய வேண்டுமெனக் கூறியவரும் ரூசோ. ஆகவே ரூசோவை மானிடவியலின் தநதை எனக் கூறுவதே சிறப்பானது என்பார் லெவிஸ்ட்ராஸ் (Claude Lvei – Strauss, "Rousseau : Father of Anthropology" UNESCO Courier, 1963, No.3 (16), P.13).

## 3.2.11.தொகுத்துக் காண்போம்

புத்தாய்வுக் காலகட்டத்தில் ஐரோப்பியர்களின் இனஉணர்வுக் கொள்கைகள் ஏற்படுத்திய தாக்கத்தைத் தெரிந்து கொண்டீர்கள்.

மானிடவியலின் வளர்ச்சிக்கு அறிவொளிக் காலச் சிந்தனையின் பங்குகளை மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

## 3.2.12.சோதித்தறியும் வினாக்கள்

மானிடவியலின் தொக்க காலம் பற்றி நீவீர் அறிவன யாவை?

மானிடவியல் அறிஞர் சாக்ரட்டீஸ் இத்துறைக்கு ஆற்றிய பணிகள் யாவை?

பிளேட்டோவின் குறிப்பிடத்தக்க ஆய்வுகளைப் பற்றி எழுதுக.

அரிஸ்டாட்டில் பற்றிக் குறிப்பு வரைக

## 3.2.13.பயிற்சி வினாக்கள்:

ஐரோப்பியர்களின் இனஉணர்வுக் கொள்கைகளும் மானிடவியலும் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

மானிடவியல் வளர்ச்சியில் அறிவொளிக்காலச் சிந்தனைகளின் பங்கினை விவரி.

## 3.2.14.மேலும் பயில்வதற்கான நூல்

பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

# கூறு- 4 : இந்தியாவில் மானிடவியலின் வளர்ச்சி

குறிப்பு

## 4.1. அறிமுகம்

இந்தியாவில் மானிடவியல் தோற்றம் பெற்ற வரலாற்றையும், ஆசியக்கழகத்தின் பணிகளையும் இப்பகுதியில் அறிந்து கொள்ளலாம்.

## 4.2. குறிக்கோள்கள்

ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னர் இந்தியாவில் மானிடவியல் தோற்றம் பெற்றதை மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

இந்தியாவில் மூன்று நிலைகளில் மானிடவியல் வளர்ந்த தன்மைகளைப் புரிந்து கொள்வீர்கள்.

## 4.3. ஆசியக் கழகம்

ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னரே இந்தியாவில் மானிடவியல் தோற்றம் பெற்றது. இந்திய மானிடவியல் இனக்குழுவியல் (ethnography), இனக்குழு ஒப்பாய்வியல் (ethnology) ஆகியவற்றின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றியவர்கள் அவர்களே. குடியேற்ற அரசின் அதிகாரிகளாகவும், சமயப்பரப்பிகளாகவும், கல்விசார் பணியாளர்களாகவும் வந்த ஐரோப்பியர்களின் எண்ணிக்கை மிகுதியானது. அவர்களின் பெரும் உழைப்பினாலேயே இந்திய மானிடவியல் பெரும் வளர்ச்சி கண்டது.

இந்தியாவில் மானிடவியலின் தோற்றம் வங்க ஆசியக் கழகத்தோடு (Asiatic Society of Bengal) தொடர்புடையது. இக்கழகம் கி.பி.1774-இல் சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. மனிதனையும் இயற்கையையும் அறிவியல் கண்கொண்டு அறிவதே இக்கழகத்தின் நோக்கமாக இருந்தது. அன்று தொடங்கிய மானிடவியல்சார் ஆய்வு 200 ஆண்டுக் காலத்தில் மானிடவியல் பெற்ற வளர்ச்சியை இந்திய மானிடவியலின் தந்தையான சரத் சந்திர ராய் முதற்கொண்டு பல அறிஞர்கள் (எஸ்.சி.ராய் (1921), குர்ரே (1956), மஜூம்தார் (1959), எஸ்.சி.தூபே (1956, 1962), நிர்மல் குமார் போஸ் (1963), சுர்ஜித் சின்கா (1968) ஒழுங்குபடுத்திக் கூறியுள்ளனர். மஜூம்தார் உள்பட பெரும்பாலோர் இந்திய மானிடவியலின் வளர்ச்சியை மூன்று நிலைகளாகப் பகுத்துக் கூறுவர். இப்பொருள் குறித்துப் பலமுறை எழுதிய வித்தியார்த்தி அண்மைக் கால கட்டுரையில் (L.P.Vidyarthi, "The Rise of Social Anthrophology in India (1774-1972) : A Historical Appraisal" in Toward a Science of Man : Esaays in the History of Anthropology; Timothy H.H.Thoresen (Hauge : Mouton

குறிப்பு

Publishers, 1975), Page 159-182) பின்வரும் மூன்று நிலைகளைக் குறிப்பிடுகிறார்.

1. கருவுற்ற நிலை (formative phase : 1774 – 1920)
2. உருவாக்க நிலை (constructive phase : 1920 – 1950)
3. பகுத்தாய்வு நிலை (analytical phase : 1950 முதல் இன்று வரை)

இம்மூன்று நிலைகளையும் மிகச் சுருக்கமாக இங்குக் காணலாம்.

## 4.4.கருவுற்ற நிலை:

1770-களில் தொடங்கிய இந்திய இனக்குழுவியல், முதல் 50 ஆண்டுகள் வரை குறைவான வேகத்தில் வளர்ந்தது. தொடக்கக் காலத்தில் பழங்குடி மக்களின் பண்பாட்டையும், ஊரக மக்களின் வாழ்க்கை முறைகளையும் பற்றிய தரவுகளே சேகரிக்கப்பட்டன. இவ்வகைப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் பெரும்பான்மையோர் ஆங்கிலேய நிருவாகத்தினராகவும், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சமயப் பரப்பிகளாகவும், பயணியர்களாகவும், மானிடவியலில் ஆர்வங்கொண்டிருந்த தனிமனிதர்களாகவும் இருந்தனர். இக்கால கட்டத்தைச் சேர்ந்தவர்களுள் பலர், அவர்கள் தொகுத்த செய்திகளைத் தனி நூல்களாக வெளியிட்டனர். மற்றவர்கள் 'வங்க ஆசியக் கழகத்தின் ஆய்விதழ்'(Journal of the Asiatic Society of Bengal), 'இந்தியப் பழம்பொருள்' (Indian Antiquary) ஆகிய ஆய்விதழ்களில் கட்டுரைகளாக வெளியிட்டனர். இந்நிலையில் இந்திய இனக்குழுவியல் வளர்ந்தது.

1850களுக்குப் பின்னர் இத்துறையில் ஒருபடி முன்னேற்றம் ஏற்பட்டது. இக்கால கட்டத்தில் பெரும்பாலோர் சிறந்த முறையில் இனக்குழுவியல் செய்திகளைச் சேகரித்தனர். குறிப்பாக, கேம்ப்பெல் (1856) தொகுத்த செய்திகைளயும், லத்தும் (1859) சேகரித்தவைகளையும், ரைஸ்லி (1891) எழுதியவற்றையும் இந்திய மானிடவியல் மதிப்பாய்வகம் (Anthropological Survey of India) இன்று சில மாற்றங்களுடன் மீண்டும் பதிப்பிக்க முடிவு செய்துள்ளது இதற்குத் தக்க சான்றாகும்.

அவர்களைத் தொடர்ந்து ஆங்கிலேய நிருவாகத்தில் பணியமர்த்தப் பட்டவர்கள் பெரும்பான்மையோர் கல்விசார் நிலையில் மிகுந்த பற்றுடையவர்களாய் இருந்தனர். அவர்கள் ஏராளமான இனக்குழுவியல் செய்திகளை முறைப்படி சேகரித்தனர். அவ்வாறு சேகரித்தவர்களுள் கிழக்கிந்தியப் பகுதியில் ரைஸ்லி, தால்டன் ஆகியோரும், நடு இந்தியப் பகுதியில் வெர்ரியர் எல்வின், ரஸ்ஸல், குரூக் ஆகியோரும், வட இந்தியப் பகுதியில் மில்ஸ், ஹட்டன், எல்வின் ஆகியோரும், தென்னிந்தியப் பகுதியில் அனந்த கிருஷ்ண ஐயர், தர்ஸ்டன், எரன்பெ.ஃல்ஸ் ஆகியோரும் விரல் விட்டுக்

குறிப்பிடத்தக்கவர்கள், மேற்கூறியவர்களைப் போன்று பலர் இப்பணியில் ஈடுபட்டிருந்தனர். அனைவரையும் இங்குக் குறிப்பிட முடியாததால் மிகச் சிலர் மட்டும் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் தொகுத்து வெளியிட்ட செய்திகள் அந்தந்தப் பகுதி மக்களின் பண்பாட்டை விளக்கும் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன.

குறிப்பு

## 4.5.உருவாக்க நிலை

தர்ஸ்டன் பிறந்து வளர்ந்தது இங்கிலாந்தில், ஆங்கிலேய ஆட்சியின்போது சென்னை அருங்காட்சியகத்தைக் கவனிக்கும் பொருட்டு இங்கு வந்தவர் கால் நூற்றாண்டுக்காலம் (1885 – 1908) சிறப்பாகப் பணியாற்றி, தென்னிந்திய இனக்குழுவியலை வளம்பெறச் செய்தார். அவர் 7 தொகுதிகளாகத் தொகுத்த 'தென்னிந்தியச் சாதிகளும் பழங்குடிகளும்' (Castes and Tribes of Southern India) என்னும் நூல்வரிசை தென்னிந்திய இனக் குழுவியலில் என்றும் அழியாச் சின்னமாகத் திகழும். அந்நூலில் தர்ஸ்டன் தென்னிந்தியாவின் வடகோடிப் பகுதியில் வாழும் கோண்டுப் பழங்குடி தொடங்கி தமிழ்நாட்டைச் சேர்ந்த கோட்டை வேளாளர் வரை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பிரிவினரை ஆராய்ந்து அவர்களின் சமூகப் பொருளாதார முறைகள், பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகள் போன்ற எண்ணற்ற பண்பாட்டுக் கூறுகளைத் தொகுத்து எழுதியுள்ளார். அந்நூல்வரிசை தஞ்சை சரபோஜிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் சு.இரத்தினம் அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

எரன்.ஃ.பெல்ஸ் எழுதிய 'கொச்சின் காடர்கள்' (Kadars of Cochin) என்னும் நூல் எவ்வாறு ஓர் இனக்குழுவைப் பற்றித் தனிவரைவு நூல் (monograph) எழுத வேண்டும் என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். அந்நூல் சென்னைப் பல்கலைக்கழக மானிடவியல் மாணவர்களுக்குப் பாடமாகவும் வைக்கப்பட்டது. தென்னிந்திய இனக்குழுவியல் வளர்ச்சிக்கு அனந்த கிருஷ்ண ஐயரின் பங்கும் மிகவும் குறிப்பிடத்தக்கது. அரசு அலுவலராகப் பணியாற்றத் தொடங்கிய காலம் முதல் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிப் பின்னர் சொந்த மாநிலத்தில் தங்கியிருந்த காலம் வரை ஏராளமான இனக்குழுவியல் செய்திகளைத் தொகுத்தார். அவற்றுள் 'மைசூர்ப் பழங்குடிகளும் சாதிகளும்'(The Mysore Tribes and Castes), 'கொச்சின் பழங்குடிகளும் சாதிகளும், 'திருவாங்கூர் பழங்குடிகளும் சாதிகளும்' குறிப்பிடத்தக்கவை.

இந்தியாவின் பிற பகுதிகளைச் சேர்ந்த பழங்குடிகளின் இனக்குழுவியலைப் பலர் ஆராய்ந்தனர். மிகுந்த உடல் உழைப்புடன் அவர்கள் ஈடுபட்டதையும் அவர்கள் சேகரித்த செய்திகளின் தரத்தையும் பற்றி சிலரைக் கொண்டு அறிவதன் மூலம் அவ்வகை ஆய்வில் ஈடுபட்ட மற்றவர்களின் பங்களிப்பினை மதிப்பிடமுடியும்.

குறிப்பு

ரசல் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்திய ஆட்சிப் பணியில் (இ.ஆ.ப.) பணியாற்றியவர். அவரின் இனக்குழுவியல் பணி போற்றத்தக்கது. குறிப்பாக 4 தொகுதிகளாகத் தொகுத்த ‘இந்திய நடுமகாகாணங்களின் பழங்குடிகளும் சாதிகளும்’(The Tribes and Castes of the Central Provinces of India) என்னும் நூல் வரிசை இரு நிலைகளில் பயனுடையதாக உள்ளது. முதல் தொகுதி, அப்பகுதியில் இனக்குழுவியல் செய்திகளை ஒப்பீட்டு நிலையில் விவரிக்கிறது. பிற தொகுதிகள் ஒவ்வொரு குடியினரின் இனக்குழுவியல் செய்திகளை விரிவாக விவரிக்கின்றன.

போடிங் என்பவர் நார்வே நாட்டிலிருந்து வந்த ஒரு கிறித்தவச் சமயக்குரு. கிறித்தவப் பணியிலும் பழங்குடிகளின் மேம்பாட்டிலும் ஈடுபாடு கொண்ட அவர் சந்தால் பழங்குடிகளுடன் நெடுங்காலம் வாழ்ந்தார். அப்பழங்குடி குறித்து எண்ணற்றோர் ஆராய்ந்திருந்தாலும் இன்று வரை போடிங்குடைய வெளியீடுகளின் எண்ணிக்கையே மிகுதியாகும். அந்த அளவிற்கு உழைத்தவர் அவர். அண்மையில் அப்பழங்குடியைப் பற்றி ஆர்ச்சர் (1907 – 1979) எழுதிய ‘பழங்குடியினரின் சட்டமும் நீதியும் : சந்தால்களைப் பற்றிய ஓர் அறிக்கை’ (Tribal Law and Justice : A Report on the Santal, 1984)என்னும் நூல்வரிசை அவர் மறைவுக்குப் பின் 3 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது. மானிடவியலில் ஆர்வங்கொண்ட ஒரு தனி மனிதரின் பெரும் உழைப்பினைப் பறைசாற்றுவதாக உள்ளது அந்நூல் வரிசை.

ஆர்ச்சர் ஆங்கிலேய ஆட்சியின்போது பீகார் மாநில அதிகாரியாக 1931 முதல் 1946 வரை பணியாற்றியவர். கவிதை, கலை முதலானவற்றில் மிக்க ஈடுபாடுடையவர் அவர் பணியாற்றிய இடங்களில் வாழ்ந்த பழங்குடிகளில் வழக்காறுகளையும் (folklore) கலைகளையும், வாழ்க்கை முறைகளையும் பற்றி ஏராளமான செய்திகளைத் தொகுத்து வந்தார். குறிப்பாக, சந்தால் பழங்குடிகளிடையே பணியாற்றியகாலத்தில் (1942 – 1946) சந்தாலி மொழியை முழுவதுமாகக் கற்றுக்கொண்டு அவர்களின் அன்றாட வாழ்வில் எழுந்த முரண்பாடுகளும் சச்சரவுகளும் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன என்பது குறித்துத் தினமும் செய்திகள் சேகரித்தார். அவ்வகைச் செய்திகள் ஆங்கிலேய அரசின் நிருவாகத்திற்கு நேரடியாகத் தொடர்புடையவை என்றாலும் அவர்களுக்குத் தேவைப்படாத செய்திகளையும் கொண்டதாகும். பீகார் அரசின் அனுமதியுடன் வெளியிடப்பட்டுள்ள அந்நூலைப் பற்றி பி.கே.மிஸ்ரா ‘இந்தியாவில் மனிதன்’(Man In India) என்னும் ஆய்விதழில் மதிப்புரை வழங்குகையில் ஆர்ச்சரின் உழைப்பினைச் சுட்டிக் காட்டுகிறார். சந்தால்களின் உழைப்பினைச் சட்டத்தின் (customary law) நுட்பத்தை அதற்கான வழக்குகள் எழுந்த போது ஏற்பட்ட உண்மைச் சூழலுடன் ஆர்ச்சர் விளக்குவதால் அவரின் உழைப்பு இமயமென

உயர்ந்து நிற்கிறது என்கிறார். (P.K.Misra, “Tribal law” Man in India, 1987, Vol. 67, No.1, Page 81-86)

குறிப்பு

இந்திய இனக்குழுவியலில் மிகப்பெரும் மனிதராகத் திகழ்பவர் வெர்ரியர் எல்லின். இவர் ஆங்கிலேயர்; ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியம் பயின்று பட்டம் பெற்றவர். தொடக்கத்தில் பழங்குடிகளின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு புதினங்களையும் கதைகளையும் எழுதி வந்தவர். பின்னர்க் கிறித்தவச் சமயப்பரப்பாளராகப் பணிபுரிய விழைந்து இந்தியாவிற்கு 1936-ஆம் ஆண்டு வந்தார். இங்கு வந்தவுடன் ஆங்கிலேய அரசின் நிருவாகத்தில் பெரும் பொறுப்பு ஏற்றார். குறிப்பாகப் பழங்குடிகளின் விவகாரங்களுக்கான பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். அவரது சிறப்பான பணியை அறிந்ததனாலேயே விடுதலை பெற்ற பின்னரும் நேரு அவரைப் பழங்குடி நலத்திட்டங்களுக்கு அரசின் ஆலோசகராக அமர்த்தி அவரின் பட்டறிவினைப் பயன்படுத்திக் கொண்டார்.

எல்வின் நடு இந்தியா, மேற்கு இந்தியா, கிழக்கிந்தியா. வடகிழக்கு எல்லைப்புற மாகாணங்கள் (NEFA) முதலான பரந்த நிலப் பகுதிகளைச் சேர்ந்த பழங்குடிகளைப் பற்றி ஏராளமான இனக்குழுவியல் செய்திகளைச் சேகரித்து அவற்றைக் கட்டுரைகளாகவும் தனிவரைவு நூல்களாகவும் வெளியிட்டார். இந்தியப் பழங்குடிகளைப் பற்றி அவரைப் போல் எழுதியவர்கள் மிகச் சிலரே. கோண்டி மொழி முதற்கொண்டு பல பழங்குடி மொழிகளைக் கற்றதுடன் பழங்குடிப் பெண்ணையும் மணந்து விரிவாக எழுதிப் பெயர் பெற்றார். இவர் எழுதிய ‘மரியரும் அவர்களின் கோட்டுலும்’(Maria and their Ghotul) என்னும் நூல் பெரும் புகழ் பெற்றது. இவர் எழுதிய நூல்களுள் ‘நடு இந்தியத் தொன்மங்கள்’ (The Myths of Middle India) ‘இந்தியாவின் வடகிழக்கு எல்லைப்புற மாகாணங்களின் தொன்மங்கள்’ (The Myths of North – East Frontier of India), ‘வடகிழக்கு எல்லைப்புற மாகாணங்களின் தத்துவம்’ (The Philosophy of NEFA) ‘அகாரியா’ (The Agaria), ‘பெய்கர்’ (The Baiga) முதலானவை குறிப்பிடத் தக்கவை. அவை தவிர மேலும் பல நூல்களையும் எண்ணற்ற கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இந்திய மானிடவியலில் ஐரோப்பியர்களின் பங்களிப்பினைத் தொகுத்துப் பட்டியலிட்டால் அது பல நூல்களாக விரியும். இங்குச் சிலரைப் பற்றியே விவரிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் பற்றி விரிவாக அறிய விரும்புவோர் வித்தயார்த்தி இரண்டு தொகுதிகளாக எழுதியுள்ள ‘இந்தியாவில் மானிடவியலின் வளர்ச்சி’(Rise of Anthropology in India) என்னும் நூல் வரிசையைக் காண்க.

இந்தியாவின் ஒவ்வொரு பகுதியைச் சேர்ந்த இனக்குழுவியல் விவரங்கள் தனித்தனியானவர்களால் எழுதப்பட்ட நிலையிலேயே உள்ளதால் அதனை ஒருமுகப்படுத்தி இன்றைய நிலையில் பதிவு செய்யும் மாபெரும் திட்டத்தை இந்திய மானிடவியல் மதிப்பாய்வகம்

குறிப்பு

மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் 'இந்தியாவின் மக்கள்'(People of India) என்று பெயரிடப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இந்தியாவின் அனைத்துப்பகுதி மக்களின் இன்றைய நிலையை இது படம்பிடித்துக் காட்டும்.

இந்திய மானிடவியலை வளர்க்க முற்பட்ட இந்திய மானிடவியல் அறிஞர்களுள் முன்னோடிகளாய்த் திகழ்ந்தவர்கள் சரத் சந்திர ராயும், எல்.கே.அனந்த கிருஷ்ண ஐயருமாவார். முன்னவர் வடஇந்திய மானிடவியலை வளர்த்த பெருமைக்கும் பின்னவர் தென்னிந்திய மானவிடயலை வளர்த்த பெருமைக்கும் உரியவர்கள். இந்திய மானிடவியலில் தனிப் புகழுடன் விளங்கும் 'இந்தியாவின் மனிதன்'(Man in India) என்னும் முத்திங்கள் ஆய்விதழை 1921-இல் நிறுவிய பெருமையும் சந்திர இராய் அவர்களையே சாரும்.

இந்தியாவில் மானிடவியல் 1920-ஆம் ஆண்டுதான் முறைப்படியான தோற்றத்தைப் பெற்றது. இவ்வாண்டில் தான் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் முதல் மானிடவியல் துறை ஏற்படுத்தப்பட்டது. அதற்குப் பின்னரே பல்வேறு பல்கலைக் கழகங்களில் மானிடவியல் துறைகள் தொடங்கப்பட்டன. அண்மையில் கோழிக்கோடு பல்கலைக் கழகத்தில் இத்துறை தொடங்கப்பட்டுள்ளது. இன்று ஏறக்குறைய 18 துறைகள் மானிடவியலைக் கற்பித்து வருகின்றன.

## 4.6.பகுத்தாய்வு நிலை

இந்தியாவில் இன்று மானிடவியலுக்கென்று ஏற்படுத்தப் பட்டுள்ள நிறுவனங்களுள் மிகப் பெரியது இந்திய மானிடவியல் மதிப்பாய்வகமேயாகும் (Antrhoropological) இது முதலில் இந்திய விலங்கியல் மதிப்பாய்வகத்தில் ஒரு பிரிவாக 1916இல் ஏற்படுத்தப்பட்டுப் பின்னர் 1945-ஆம் ஆண்டு 'மானிடவியல் துறை' (Department of Anthropology) எனப் பிரிக்கப்பட்டு, பின்னர்த் தனி நிறுவனமாக உருவெடுத்தது.

பல்கலைக் கழங்களில் மானிடவியல் துறைகள் ஏற்பட்ட பின்னரும், இந்திய மானிடவியல் மதிப்பாய்வகம் நிறுவிய பின்னரும் கொள்கைசார் நிலையில் பெருமளவு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தொடக்கத்திலிருந்தே இந்திய மானிடவியல் ஆங்கிலேயச் சமுதாய மானிடவியலின் சாயலில் வளர்ச்சி பெற்று வந்தது. அதற்குக் காரணம் ஆங்கிலேய ஆட்சி ஏற்பட்டத்திலிருந்தே மிகுந்த எண்ணிக்கையில் ஆங்கிலேய மானிடவியலார் இங்கு வந்து ஆய்வுகள் நடத்தியதும், அவர்களிடம் இந்தியர்கள் பயிற்சி பெற்றதுமாகும். இந்திய மானிடவியலின் மூத்த அறிஞரான மஜூம்தாரால் உருவாக்கப்பட்டவர்களே, அதோடு அய்யப்பன், குர்ரே போன்ற எண்ணற்ற தொடக்கக்கால அறிஞர்கள் ஆங்கிலேய அறிஞர்களின்கீழ் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர்கள்.

இந்திய மானிடவியலின் ஆய்வு முறையினைப் (methodology) பெருமளவு மேம்படுத்தியவர்கள் ஆங்கிலேயர்களே. குறிப்பிட்டுச் சொல்வதானால் தோடர்கள், தென்னிந்திய உறவு முறை முதலானவை பற்றி ரிவர்ஸ் செய்த ஆய்வுகளும், அந்தமான் தீவினரைப் பற்றி ராட்கிளி.ஃ.ப் பிரரௌன் செய்த ஆய்வுகளும், இந்தியாவின் பல்வேறு பழங்குடிகளைப் பற்றி ஹெய்மாண்டார்.ஃ.ப் மேற்கொண்ட ஆய்வுகளும் பெரும் வழிகாட்டிகளாய் அமைந்தன. அவர்களின் ஆய்வுகள் அனைத்தும் கொள்கைசார் நிலையில் ஆராயப்பட்டவை. அவர்களைத் தொடர்ந்து பலர் அதே வகையில் ஆய்வுகளை மேற்கொண்டு இந்திய அறிஞர்களுக்கு வழிகாட்டினர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், குறிப்பாக இந்தியா விடுதலை பெற்ற பின் அமெரிக்க மானிடவியலாருடன் தொடர்புகள் பெருகின. அவர்களின் வருகையால் புதிய அணுகு முறைகளும் ஆய்வு நெறிகளும் வளர்ந்தன. அமெரிக்க அறிஞர்கள் பலா இங்குவந்து நெடுங்காலம் தங்கி ஆய்வுகள் செய்ததன் வாயிலாக இப்பயன் ஏற்பட்டது. இந்தியாவில் தங்கி ஆய்வு செய்தவர்களுள் கார்னல் பல்லைகக் கழகத்தைச் சேர்ந்த மோரிஸ் ஆப்லர், இல்லினாய்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆஸ்கார் லூவி, கலிபோர்னியப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டேவிட் மேண்டல்பாம், சிக்காகோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ராபர்ட் ரெட்பீல்டு, மில்டன் சிங்கர், மக்கிம் மாரியட் முதலான அறிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அனைவரும் இந்திய அறிஞர்களோடு கிராமங்களில் தங்கி ஆய்வு செய்தனர். இந்தியச் சமுதாயத்தில் சிறப்புக் கூறாகத் திகழும் சாதி அமைப்புடைய சமூகங்கள் சிற்றூர்களில் வாழ்வதால் இந்தியச் சிற்றூர்களைப் பற்றிய ஆய்வுகளை (village studies) தொடக்கத்தில் பெரும் ஆய்வுப் பரப்பாகக் கருதப்பட்டது. இவ்வகை ஆய்வுகளை வளப்படுத்திய அமெரிக்க அறிஞர்கள் இந்திய மானிடவியலுக்குப் பின்வரும் மூன்று நிலைகளில் பங்களிப்புச் செய்துள்ளனர்.

1. இந்தியச் சிற்றூர்களை முறைப்படி ஆராய்ந்து அதன்மூலம் நடைமுறையிலுள்ள சில எடுகோள்களைச் (hypotheses) சோதித்தல்.
2. இதுவரை மானிடவியலில் ஏற்படுத்தப்பட்ட முறையியலை இந்தியச் சூழலிற்கேற்ப நெறிப்படுத்துதல்.
3. இந்தியச் சிற்றூர்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய சமூக ஆங்கிலேய மானிடவியலையும் அமெரிக்க மானிடவியலையும் தொகுத்துப் பகுத்தாயும் நிலையை ஏற்படுத்திக் கொண்டது.

அமெரிக்காவின் வருகைக்குப் பின் இந்திய மானிடவியலானது ஆங்கிலேய மானிடவியலையும் அமெரிக்க மானிடவியலையும் தொகுத்துப் பகுத்தாயும் நிலையை ஏற்படுத்திக்கொண்டது.

குறிப்பு

## 4.7. மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய நூல்கள்

Evans – Pritchard, E.E. 1981. A History of Anthropological Thought. London : Faber and

Faber.

மாண்டெஸ்கு தொடங்கி தர்க்கைம் வரை 15 அறிஞர்களின் சிந்தனைகள் பற்றி

விரிவாகவும், 10 மானிடவியலாரைப் பற்றிச் சுருக்கமாகவும் இந்நூல் விவரிக்கின்றது.

Garbarino, Marwyn S. 1977, Sociocultural Theory in Anthropology, New York, Holt, Rinchart and Winston.

கல்லூரி மாணவர்களுக்காக எழுதப்பட்ட அறிமுக நூல். மானிடவியல் கொள்கைகளின் வாழ்வும் வரலாறும் பற்றி 114 பக்கங்களில் சிறப்பாக விவரிக்கிறார் இவ்வம்மையார்.

Harris, Marvin 1968, The Rise of Anthropolgical Theroy: A History of Theories of Culture.

New York: Thomas Y. Crowell Company.

மானிடவியற் கொள்கைகளின் வளர்ச்சியைப் பற்றி சமகால மானிடவியலாரால் எழுதப்பெற்ற மிகச் சிறந்த நூல். இப்பொருள் குறித்து வெளிவந்துள்ள நூல்களுள் இதுவே சிறப்பிடம் வகிக்கிறது எனப் பலரால் பாராட்டப் பெற்றது.

Honigmann, John.J.1976. The Development of Anthropological Ideas. Homewood, Illionis :

The Dorsey Press.

மானிடவியலின் வளர்ச்சியைப் பலநிலைகளாகப் பகுத்து அரிய கருத்துகளை எளிய முறையில் இந்நூல் விளக்குகிறது.

Lowie, Robert H. 1937. The History of Ethnological Theory, New York : Farrar and

Rinehart.

மானிடவியலின் தொடக்கக்கால வளர்ச்சியில் நேரடியாகப் பங்கு பெற்றவரால் எழுதப்பெற்ற நூல். இவ்வகைப் பொருள் குறித்து எழுதப்பட்ட நூல்களுள் இது மிகவும் குறிப்பிடத்தக்கது.

Makhan Jha 1983. An Introduction to Anthropological Thought, New Delhi : Vikas

Publishing House Pvt. Ltd.,

குறிப்பு

ராஞ்சிப் பல்கலைக் கழக இணைப் பேராசிரியர் எழுதியது. பெரும்பாலான கொள்கைக் குழுக்களைப் பற்றியும், குறிப்பிட்ட சில அறிஞர்களைப் பற்றியும் எளிய ஆங்கிலத்தில் சுருக்கமாக எழுதியுள்ளார்.

## 4.8.தொகுத்துக் காண்போம்

ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னர் இந்தியாவில் மானிடவியல் தோற்றம் பெற்றதை மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

இந்தியாவில் மூன்று நிலைகளில் மானிடவியல் வளர்ந்த தன்மைகளைப் புரிந்து கொண்டீர்கள்.

## 4.9.சோதித்தறியும் வினாக்கள்

ஆசியக்கழகம் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

மானிடவியல் வளர்ச்சியில் கருவுற்ற நிலை பற்றி எழுதுக.

பகுத்தாய்வு நிலையின் தன்மைகளை விவரி.

## 4.10.பயிற்சி வினா

இந்தியாவில் மானிடவியல் வளர்ச்சி கண்ட வரலாற்றில் மூன்று நிலைகளை விவரி.

## 4.11. மேலும் பயில்வதற்கான நூல்

பக்தவத்சலபாரதி, மானிடவியல் கோட்பாடுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

# பிரிவு-2 : மானிடவியல் வகைகள்

குறிப்பு

## கூறு-5 : உடல்சார் மானிடவியல் - இனவியல் - மானிட உடல் அளவையியல்

### 5.1.1. அறிமுகம்

இப்பகுதியில் மானிடவியல் சொல்விளக்கம், உடல்சார் மானிடவியல் கூறுகள், இன்வியல் தொடர்பான கருத்துக்கள், மானிட உடல் அளவையியில் சிந்தனைகள் ஆகியவை பற்றிய கருத்துரைகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

### 5.2.1. குறிக்கோள்கள்

உடல்சார் மானிடவியலின் சிறப்புக் கூறுகளைப் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

மானிடவியலின் உட்கூறுகள் பற்றியும், படிமலர்ச்சியியல் பற்றியும், இனவியல் பற்றியும், மானிட உடல் அளவையியல் பற்றியும் மாணவர்களுக்கு அறிவுத்தப்படுகிறது.

### 5.1.3. உடல்சார் மானிடவியல்

மானிடவியல் எதைப் பற்றியது என்பதை மிகச் சுருக்கமாகக் கூறவேண்டுமானால் 'மனிதனைப் பற்றிய அறிவியல்' என்று கூறுவதே மிகவும் பொருத்தம். 'மானிடவியல்' என்ற சொல்லாக்கம் ஆங்கிலத்தில் வழங்கப்பெறும் 'antghropology' என்னும் சொல்லுக்கு நேரானது இச்சொல் 'anthropos' , 'logos' ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெற்றது. கிரேக்கத்தில் இச்சொற்கள் முறையே 'மனிதன்', 'அறிவியல்' என்னும் பொருளைச் சுட்டுகின்றன.

மானிடவியல் பற்றிய சிந்தனை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றிவிட்டது. 'மானிடவியலார்' என்னும் பொருளுடைய 'anthropologist' என்ற சொல்லை முதன்முதலில் அரிஸ்டாட்டில் பயன்படுத்தினார். எவனொருவன் அவனைப் பற்றிப் பேசுகிறானோ அவனே மானிடவியலார் என்ற பொருளில் இச்சொல்லை அவர் பயன்படுத்தினார். ஜெருமானியத் தத்துவவியல் அறிஞர் இமானுவல் காண்ட் கி.பி.1789-இல் 'anthropology' என்னம் தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டார். அந்நூலில் மனிதனின் தோற்றத்தைப்பற்றி காண்ட் விளக்குகிறார். ஆனால் அவருக்கு முன்னரே கி.பி.1655-இல் ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படாமல் 'Anthropologic-Abstracted' என்னும் தலைப்பில் ஒரு நூல் வெளியாகியுள்ளது. அந்நூல் மானிடவியலை

மனித ஆன்மாவின் வரலாற்றை அறியும் துறை என்றும் மனித உடற்கூற்றியவை (anatomy) அறியும் துறை என்றும் கூறுகிறது.

குறிப்பு

மானிடவியல் அது தோன்றிய காலந்தொட்டு வளர்ந்து வருகிறது. ஆகவே மானிடவியலைப் பற்றிய வரையறைகளும் அதன் பரப்பும் காலத்தோடு மாறி வந்துள்ளன. இன்றைய மானிடவியல் மனிதனைப்பற்றிய ஒரு முழுமையான அறிவியலாகத் திகழ்கிறது. இது மனிதனை உயிரியல் நிலையிலும், சமுதாய நிலையிலும், பண்பாட்டு நிலையிலும், வரலாற்று நிலையிலும் அறிய முயலுகிறது. இதன் ஆய்வுப் பரப்பானது இடம் காலம் அனைத்தையும் கடந்து நிற்கிறது. ஒரு குறிப்பிட்ட இடம், காலம் என்ற குறுகிய நோக்கமில்லாமல் அனைத்து இடங்களைச் சேர்ந்த மக்களையும், அனைத்துக் காலத்தைச் சேர்ந்த மக்களையும் ஆராயும் துறையாக உள்ளது. இதனடிப் படையிலேயே குளுக்கான் மனிதனைப் பற்றி அறியும் பல துறைகளுள் மானிடவியல் ஒரு 'முழுமையான அறிவியல்' என்பார். (Clyde Kluckhohn, *Mirror for Man* (NewYork : McGraw Hill, 1949), P.2-3) மானிடவியல் பல்வேறு துறைகளின் அறிவை ஒருங்கிணைத்து மனிதனை ஆராய்வதால் இதனை 'ஒன்றிணைக்கும் அறிவியல்' (coordinating science) என்பார் குரோபர். (Alfred L.Kroeber, *Anthropology* (New York : Harcourt Brace, 1948) Chapter I) மானிடவியல் இந்த இந்த பரப்புகளில் மட்டும் தான் மனிதனை அறிய முற்படுகிறது என்ற ஒரு வரையறை இல்லாமல் இதன் பரப்பு விரிந்து கிடக்கிறது என்பர் மானிடவியலறிஞர்கள் சிலர். மானிடவியலின் பரப்பு எவ்வாறு விரிந்து நிற்கிறதோ அவ்வாறே அதன் அணுகுமுறையும் தனித்தன்மையானது. இது மானிடவியல் வழக்கில் முழுதளாவியம் (holism) என்று சிறப்பாக வழங்கப்பெறும்.

### 5.1.3.1. முழுதளாவிய அணுகுமுறை

மனிதனைப் பற்றிய அறிவியலே மானிடவியல் எனக் கூறுவது ஒருவகையில் சரியாகவும் வேறொரு வகையில் குழப்பமாகவும் இருப்பதாகச் சிலருக்குத் தோன்றும். இவ்வகைக் குழப்பத்திற்குக் காரணம் உண்டு. மனிதனைப் பற்றி ஆராயும் துறை மானிடவியல் எனப்பொருள் கொள்ளும் போது இதனை 'மனித அறிவியல்' என்று கூறுவது சரியாகத் தோன்றுகிறது. ஆனால், வேறு சில துறைகளும் மனிதனைப் பற்றி அறிவதால் இக்கூற்று குழப்பமாக உள்ளது. சமுதாய அல்லது நடத்தைசார் அறிவியல்களும் (social or behavioural sciences) சில இயற்கை அறிவியல்களும் (natural sciences) மனிதனைப் பற்றி ஆராய்கின்றன. எடுத்துக்காட்டாக, சமுதாயவியல் மனிதன சமுதாயத்தைப் பற்றி அறிகிறது. உளவியல் மக்களின் நடத்தை முறைகளை அறிகிறது. ஆரசியல் மக்களின் ஆட்சிமுறை, அதிகார முறை, சட்டம், ஒழுங்கு முறைகள் முதலானவற்றை ஆராய்கிறது. பொருளியல் மக்களின் உற்பத்திமுறை, பங்கீட்டு முறை, விற்பனை முறை, நுகர்வு முறை, தொழிற் பகுப்பு (division of labour) போன்றவற்றை ஆராய்கிறது. தொல்லியல் முன் வரலாற்றுக் கால

குறிப்பு

மனிதனின் வரலாற்றை ஆராய்கிறது. மருத்துவவியல், விலங்கியல் ஆகிய துறைகள் மனிதனின் உடற்கூறுகளையும் உடலியக்கத்தையும் ஆராய்கின்றன. மேற்கூறிய பல துறைகள் மனிதனைப்பற்றி அறிவதால் மானிடவியலை மட்டும் 'மனித அறிவியல்' எனக் கூறுவது ஏன்? என்ற குழப்பம் எழுகிறது. அதனால் நடத்தை சார் அறிவியல் துறைகளிடமிருந்தும், மருத்துவம் போன்ற அறிவியல் துறைகளிடமிருந்தும் மானிடவியல் எவ்வாறு 'மனித அறிவியல்' என்னும் தனித்துவத்தைப் பெற்று விளங்குகிறது என்பதும், இதன் அணுகுமுறை எவ்வாறு முழுதளாவிய அணுகுமுறையாக (holistic approach) உள்ளது என்பதும் ஒருவரது முறைப்படியான வினாக்களாகும்.

மானிடவியல் மேற்கூறிய அனைத்துத் துறைகளையும் கடந்து நிற்கிறது. அதற்குக் காரணம் அவ்வனைத்துத் துறைகளின் ஆய்வுப் பரப்பையும் ஒருங்கிணைந்த நிலையில் இது கொண்டுள்ளதேயாகும். இத்துறை இடம், காலம் அனைத்தையும் கடந்து மனிதனை விலங்காகவும், சமுதாயத்தினராகவும் (social being) ஆராய்கிறது. அதாவது, மானிடவியலின் ஒரு பிரிவு ஒருமனிதனை உயிரியல்சார் (biological) நிலையில் ஆராய்கிறது. மனிதனின் மூதாதையர்களான உயர்பாலூட்டிகளின் படிமலர்ச்சி (primate evolution) நிலைகள் என்னென்ன? மனிதன் முதன் முதலில் எங்கு, எப்போது, எவ்வாறு தோன்றினான்? அவன் எவ்வாறெல்லாம் வளர்ச்சி பெற்று வந்துள்ளான்? அவனது படிமலர்ச்சி நிலைகள் என்னென்ன? மனிதர்களுக்குள் நிறத்தாலும் உடற் பண்புகளாலும் ஏன் ஏராளமான வேறுபாடுகள் உள்ளன? இவ்வகை மரபுப் பண்புகளை எவை அறுதியிடுகின்றன? பல்வேறு இனங்களாக (races) வேறுபட்டுள்ளதால் அவர்களுக்கிடையே உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற பாகுபாடு உள்ளதா? போன்ற பல நிலைகளில் இப்பிரிவு ஆராய்கிறது.

மானிடவியலின் மற்றொரு பகுதி மனிதனைச் சமுதாய விலங்காக எடுத்துக்கொண்டு அவனைப் பண்பாட்டு (cultural) நிலையில் ஆராய்கிறது. இப்பிரிவு உலகின் மூலை முடுக்குகளிலும் வெளி உலகத்திலிருந்து அறவே துண்டிக்கப்பட்ட தனித்த பகுதிகளிலும் வாழும் பழங்குடிகளின் பண்பாட்டையும், காலங்காலமாகச் சிற்றூர்களில் வாழ்ந்து வரும் ஊரக மக்களின் பண்பாட்டையும் ஆராயும் பெரும் பரப்பினைக் கொண்டுள்ளது. இவை தவிர, இப்பிரிவின் ஆய்வுப் பரப்பு மேலும் விரிந்து நிற்கிறது. எண்ணற்ற நூற்றாண்டுகளுக்கு முன்னர் தோன்றிய மனிதனின் பண்பாடு எங்கெங்கு எவ்வாறெல்லாம் மலர்ச்சியடைந்து வந்துள்ளது? இன்று நூற்றுக்கும் மேற்பட்ட வகைகளில் சமுதாயங்கள் வேறுபட்டிருக்கக் காரணம் என்ன? அவற்றிற்குள் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன? அவற்றின் முறைகள் என்ன? சமுதாயப் பண்பாட்டு முறைகளில் பழக்க வழக்கங்கள் ஒருவருக்கொருவர் ஒத்தில்லாதது ஏன்? மக்களின் சமய நம்பிக்கைகள், கலைகள், குடும்பம், திருமணம், அரசியல் முதலானவை பல்வேறு வகைகளில் ஏன் மாறுபட்டுக்

கிடக்கின்றன? அவற்றின் செயற்பாடுகள் என்ன? போன்ற பல நிலைகளில் இப்பிரிவு ஆராய்கிறது.

குறிப்பு

மானிடவியலின் அடுத்த நிலை வரலாற்றுக்கும் முற்பட்ட காலத்தில் (prehistoric period) வாழ்ந்த மக்களின் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வதாகும். கற்காலங்களிலும் அதற்கு முன்னரும் மக்கள் வாழ்ந்த இடங்களைக் கண்டெடுத்து அங்கு அகழாய்வு செய்து அம்மக்களின் புதைபடிவங்களையும் பிற பண்பாட்டு எச்சங்களையும் கொண்டு அம்மக்களின் பண்பாட்டை ஆராய்வது இதிலடங்கும்.

மனிதனின் பண்பாட்டை ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டு ஆராய்ந்தாலும் மொழியியல் கூறுகள் பண்பாட்டில் சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பதால் இது பற்றிய அறிவினைத் தனி நிலையில் நின்று ஆராய்வதிலும் மானிடவியல் கவனம் செலுத்துகிறது.

மேற்கூறிய நான்கு நிலைகளின் வாயிலாகப் பெறப்படும் அறிவு மானிடவியலுக்கு நான்கு வலுவான பரிமாணங்களை ஏற்படுத்திக் கொடுக்கிறது. அதாவது, மனிதனைப் பற்றி அறியும் பிற துறைகளிடமிருந்து மானிடவியல் எவ்வாறு தனித்துவம் பெறுகிறது என்பது அதன் நான்கு பரிமாணங்களில் அடங்கியுள்ளது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் வெளி உலகத்தைப்பற்றி ஒருவர் முழுமையாக அறிய வேண்டுமாயின் அவர் நான்கு திசைகளிலும் சென்று சுற்றி வருவது எவ்வளவு முக்கியமனதோ, அவ்வாறே மனிதனைப் பற்றி

முழுமையாக அறிய வேண்டுமாயின் அவனை நான்கு பரிமாணங்களில் அறிய வேண்டியது அவசியம். அவை :

1. கடந்த கால மனிதனை அறிவது.
2. நிகழ்கால மனிதனையும் வருங்கால மனிதனையும் அறிவது.
3. மனிதனை உயிரியல்சார் நிலையில் அறிவது.
4. மனிதனைப் பண்பாட்டு நிலையில் அறிவது.

இந்நான்கு வகையான பரிமாணங்களில் மனிதனை ஆராயும் ஒரே துறையாக மானிடவியல் விளங்குகிறது. வேறு எந்தத் துறையும் இந்நான்கு நிலைகளில் ஆராய்வதில்லை. தொல்லியலார் கடந்த கால மனிதனை ஆராய்வதில் மட்டுமே ஆர்வங்கொண்டுள்ளனர். சமுதாயவியலார், உளவியலார், பொருளியலார், அரசியலார் போன்றோர் நிகழ்கால மனிதனை அவரவர் ஆய்வுப் பரப்பிற்கேற்ப மட்டுமே ஆராய்கின்றனர். உடற்கூற்றியலாரும் (anatomists), உடலிங்கியலாரும் (physiologists) மனிதனின் உயிரியல் கூறுகளை அவரவர் தேவைக்கேற்ப மட்டுமே ஆராய்கின்றனர். மனிதனின் பண்பாட்டுக் கூறுகளையும் வருங்காலத்தைப் பற்றியும் முழுமையாக அறிவதில் பிற துறையினர் ஆர்வங்காட்டவில்லை. இந்நான்கு பிரிவுகளையும் ஒருங்கிணைந்த நிலையில் ஆராயும், போக்கை மானிடவியல் பெற்றுள்ளது. இதற்காக

குறிப்பு

இத்துறையானது படிமலர்ச்சியில், உயர்பாலூட்டியியல், மரபியல், இனவியல் தொல்லியல், புதைபடிவவியல், மொழியியல், சமயம், கலை, பொருளியல், அரசியல் போன்ற எண்ணற்ற உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

மானிடவியலார் மேற்கூறிய அனைத்துப் பிரிவுகளின் செய்திகளையும் ஒன்றாகத் தொகுத்து அவற்றை முறைப்படியாக உய்த்துணர்ந்து மனிதனைப் பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ள முயலுகின்றனர். எடுத்துக்காட்டாக, பழங்காலத்தில் வாழ்ந்த மக்களைப் பற்றி அறிவதற்கு இன்று மிகவும் தனித்த பகுதிகளில் வாழும் தொன்மைக் குடியினரை (primitive people) ஆதாரமாகக் கொள்கின்றனர். அதன்பின் அம்மக்களிடமிருந்து இக்கால நகர மக்கள் எந்த அளவு வளர்ச்சியடைந்துள்ளனர் என்பதையறிய இவ்விருவரையும் ஒப்பிட்டு இவர்களுக்கிடையே உள்ள வளர்ச்சி நிலைகளைக் காண்கின்றனர். அதனாலேயே மானிடவியல் இடம், காலம் அனைத்தையும் கடந்ததாக விளங்குகிறது. இது ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்த மக்களை மட்டும் ஆராயும் பிரிவு என்றில்லாமல் தனித்த பகுதிகளில் வாழும் பழங்குடி மக்கள் முதல் தொழில் மயமான பகுதிகளில் வாழும் நரக மக்கள் வரை ஆராய்கின்றது. அதே போன்று, ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த மனிதனை மட்டும் ஆராயாமல், பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனித மூதாதையர்களின் புதைபடிவங்கள் முதல் இன்றைய மனிதன் வரை ஆராய்கிறது. மேற்கூறிய அனைத்துக் கருத்துகளையும் ஒன்றுபடுத்திப் பார்க்கும்போது மானிடவியல் மனிதனைப் பற்றிய ஒரு முழுமையான அறிவியல் என்பதும், இதன் அணுகுமுறையானது முழுதளாவிய அணுகுமுறை என்பதும் தெளிவாகும்.

### 5.1.3.2. மானிடவியலின் உட்பிரிவுகள்

மானிடவியலின் பரப்பு கடலென விரிந்ததாகையால் அதில் ஈடுபடும் மானிடவியலார் அவரவர் விருப்பத்திற்கேற்ப ஒரு குறிப்பிட்ட பரப்பை மட்டும் முதன்மையாக எடுத்துக் கொள்கின்றனர். சிலர் மனிதனின் உயிரியலை அறிவதில் ஈடுபடுகின்றனர். சிலர் மனிதனின் பண்பாட்டை அறிவதில் ஈடுபடுகின்றனர். வேறு சிலர் மனிதனின் முன்வரலாற்றுக் காலத்தை அறிவதில் ஈடுபடுகின்றனர். மேலும் சிலர் மனிதனின் மொழிகளை அறிவில் ஈடுபடுகின்றனர். இதனடிப்படையில் மானிடவியலானது பின்வரும் நான்கு முதன்மையான பிரிவகளாகப் பாகுபடுத்தப் படுகிறது.

1. உடல்சார் மானிடவியல் (physical anthropology)
2. பண்பாட்டு மானிடவியல் (cultural anthropology)
3. தொல்லியல் (archacology)
4. மொழியியல் (linguistics)

இந்நான்கு பிரிவுகளும் பின்னிரண்டு பிரிவுகள் மானிடவியலோடு தொடர்புடையவை ஆயினும் இப்பிரிவுகள் இன்று தனிப்பெருந்துறைகளாக மாறியுள்ளன. இந்நூலில் நாம் பண்பாட்டு மானிடவியலைப் பற்றி அறிய முற்பட்டிருந்தாலும் மானிடவியலின் ஏனைய உட்பிரிவுகளையும் பற்றி இங்குச் சுருக்கமாகக் காண்பது பல நிலைகளில் உதவியாக அமையும்.

### 5.1.3.3. உடல்சார் கருத்துக்கள்

உடல்சார் மானிடவியல் முற்றிலும் ஓர் அறிவியல் பிரிவாகும். இப்பிரிவு மனிதனை முழுக்க முழுக்க உயிரியல்சார் நிலையில் ஆராய்கிறது. அதனாலேயே இப்பிரிவு உயிரியல்சார் மானிடவியல் (biological anthropology) என்றும் கூறப்பெறும். இன்றைய உடல்சார் மானிடவியல் பரந்து விரிந்த அறிவியல் துறையாக விளங்குகிறது. பல்துறை அறிவினை ஏற்று மனிதனை ஆராய்கிறது. காலந்தோறும் வளர்ந்து வருகிறது. இப்பிரிவின் ஆய்வுப் பரப்புகள் விரிந்துகொண்டே இருந்தாலும், பல்துறை அறிவினைத் தேடுவதாக இருந்தாலும் பின்வரும் மூன்று வினாக்களுக்கு விடைகாண்பதை மையமாகக் கொண்டே அனைத்துப் பரப்புகளும் விளங்குகின்றன. அவை :

1. மனிதன் எப்போது தோன்றி எந்தெந்த நிலைகளில் மலர்ச்சியடைந்து இன்றுள்ள நிலையினை அடைந்துள்ளான்?
2. மனிதன் இன்றைய நிலையை அடைவதற்கு எந்தெந்த நிகழ்ச்சிகள் காரணமாய் இருந்தன? அவை எவ்வாறு நிகழ்ந்தன?
3. இக்கால மக்கள் வெள்ளையர்கள், கருப்பர்கள், நெட்டையானவர்கள், குட்டையானவர்கள், தடித்த உதட்டினர், மெலிந்த உதட்டினர், சுருள் மயிரினர், சுருளற்ற மயிரினர் போன்ற எண்ணற்ற உயிரியல் கூறுகளில் வேறுபட்டுப் பல்வேறு இனங்களாக இருப்பதற்குக் காரணமென்ன? வருங்காலத்தில் இவர்களிடையே எவ்வகையான மாற்றங்கள் நிகழும்?

இம்மூன்று வகையான வினாக்களுக்கு விடைகாணும் பொருட்டு உடல்சார் மானிடவியலானது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் புவிப்பரப்பு முழுவதும் பனியாறுகளால் (Glaciers) சூழப்பட்டிருந்த காலத்திற்கு முன்னர் வாழ்ந்த விலங்குகள் தொடங்கி இன்றைய மனிதன் வரை ஆராய்கிறது. இந்நீண்ட வரலாற்றைக் கொண்ட விலங்கினங்களையும் மனிதனையும் ஆராய வேண்டியுள்ளதால் உடல்சார் மானிடவியல் பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. குறிப்பாக, பணியாற்றுக் காலத்திற்கு முற்பட்ட விலங்கினங்களின் உடலமைப்பு, அவற்றின் வளர்ச்சி நிலைகள், உயிரியல் மாற்றங்கள், இவ்விலங்கினங்களோடு தொடர்புடைய புதைபடிவங்கள் (fossils), அவற்றின் காலக்கணிப்பு முதலானவை பற்றியும், இக்கால மனிதனின் மூதாதையர்கள், அவர்களின் சமுதாய வாழ்க்கை, நடத்தை முறைகள் முதலானவை பற்றியும் பல நிலைகளில் இதன் உட்பிரிவுகள் ஆராய்கின்றன. உடல்சார்

மானிடவியலின் முதன்மையான உட்பிரிவுகளை வரிசைப்படுத்தி அவற்றைச் சுருக்கமாகக் காண்பது நலம் பயக்கும்.

குறிப்பு

1. படிமலர்ச்சியியல் (study of evolution)
2. உயர்பாலூட்டியியல் (primatology)
3. தொல்லுயிரியல் (palacontology)
4. ஒப்பியல் உடற்கூற்றியல் (palacontology)
5. எலும்பியலும் பல்லியலும் (oxteology and odontology)
6. விலங்கின நடத்தையியல் (ethology)
7. இனவியல் (raciology)
8. மானிட உடலளவையில் (anthropometry)
9. தோற்கூற்றியல் (dermatoglyphics)
10. மனிதச் சூழலியல் (human ecology)
11. குடித்தொகை மரபியல் (population genetics)
12. குடித்தொகையியல் (demography)
13. கருவியலும் உடலியங்கியலும் (embryology and physiology)
14. உணவியலர்சார் மானிடவியல் (nutritional anthropology)
15. மூலக்கூற்று உயிரியல் (molecular biology)
16. இனமேம்பாட்டியல் (eugenics)
17. மருத்துவ மானிடவியல் (medical anthropology)
18. பயன்முறை உடல்சார் மானிடவியல் (applied physical anthropology)

### 5.1.3.4. படிமலர்ச்சியியல்

நாம் வாழும் உலகம் உட்பட இப்பிரபஞ்சம் (universal) தோன்றி இன்றுவரை 15 பில்லியன் (ஒரு பில்லியன் என்பது ஆயிரம் கோடி ஆண்டுகளாகும்) ஆண்டுகளாகின்றன. என வானியலார் மதிப்பிட்டுள்ளனர். பலகோடி ஆண்டுகளாக நிலைத்திருக்கும் இப்பிரபஞ்சத்தின் வரலாற்றைச் சுருக்கமாக அறியும் பொருட்டு கார்ல் சாகன் ஓர் ஆண்டுக் குறியீட்டு முறையை (calendar system) வகுத்தார். இம்முறையில் 15 பில்லியன் ஆண்டுகளை ஓர் ஆண்டாகச்

சுருக்கிவிட்டார். இவர் பயன்படுத்திய அளவுகோலின் படி 24 நாட்கள் ஒரு பில்லியன் ஆண்டையும், ஒரு வினாடி 475 ஆண்டுகளையும் குறிக்கின்றன.

குறிப்பு

பிரபஞ்சத்தின் வரலாற்றை ஓர் ஆண்டுக்குள் சுருக்கிய இத்திட்டத்தில் ஜனவரி 1-ஆம் நாள் பிரபஞ்சம் தோன்றியதாகவும் (big bang), மே 1-ஆம் நாள் வான் கங்கை (வான் கங்கையை 'வான் ஒளித்தடம்', 'பால் வீதி' என்றும் குறிப்பிடலாம். milky way) தோன்றியதாகவும், செப்டம்பர் 25-ஆம் நாள் முதல் உயிரினம் பூமியில் தோன்றியதாகவும், டிசம்பர் 31-ஆம் நாள் இரவு 10.30 மணிக்கு முதல் மனிதன் தோன்றியதாகவும் சாகன் குறிப்பிடுகிறார். (Carl Sagan, "A Cosmic Calender" *Natural History*, December 1975, pp.70-73) இவர் எழுதிய நூலில் நமக்குத் தேவைப்படுவது அந்த ஆண்டின் இறுதி ஒன்றரை மணி நேர நிகழ்ச்சி மட்டுமே.

பிரபஞ்சத்தின் வரலாற்றை ஓராண்டுக்குள் சுருக்கிய சாகனின் திட்டம் மூலம் பிரபஞ்சத்தின் மொத்தக் காலத்தில் மனிதன் தோன்றி வாழ்ந்து வரும்காலம் எவ்வளவு குறைவானது என்பதை ஒப்பிட்டு அறிய முடிகிறது. ஆண்டு முழுவதற்குமான 12 மாத காலத்தில் இறுதி 90 நிமிடங்களில் மட்டுமே மனிதன் வாழ்ந்து வருகிறான். மனிதனோடு நெருங்கிய தொடர்புடைய உயர்பாலூட்டிகள் தோன்றிய காலத்தையும் இங்குக் காண்பது நன்று.

225 மில்லியன் (ஒரு மில்லியன் என்பது பத்து இலட்சம் ஆண்டுகளைக் குறிக்கும்) ஆண்டுகளுக்கு முன்னர்ப் பாலூட்டிகள் (mammals) தோன்றின. பிரபஞ்சம் தோன்றிய காலத்தை நோக்கும் போது பாலூட்டிகள் அண்மைக் காலத்தில்தான் தோன்றியுள்ளன. ஊர்வன இனங்களும் மிகப்பெரும் டைனோசார்களும் ஆதிக்கம் செலுத்திய அக்காலத்தில் அவற்றிடமிருந்து தப்பி வாழும்பொருட்டு பாலூட்டிகள் பூச்சிகளை இரவில் உண்டு பகற்பொழுதில் ஒளிந்து வாழ்ந்திருந்தன. (John E. Pfeiffer, *The Emergnece of Man* (New York : Harper and Row, 1972,pp.21-23)

90 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்தான் உயர் பாலூட்டிகள் (primates) தோன்றின. அவையே இன்று உயிர் வாழும் குரங்குகள், வாலில்லாக் குரங்குகள் (apes), மனிதர்கள் ஆகியோரின் மூதாதையர்கள். (Carol R. Ember and Melvin Ember, *Anthropology*, (Englewood Cliffs, New Jersy : Prentice – Hall, 1977,p.22) காடுகளின் செழுப்பினால் உயர் பாலூட்டிகள் மரங்களில் வாழ முற்பட்டன. அதனால் விரல்களும் பற்றும் தன்மையுடைய (prehensile) கைகளும் தோன்றின. (John E. Pfeiffer, op. cit., pp.29-30) குரங்குகளும், வாலில்லாத குரங்குகளும் தோன்றிய அடுத்த 20 மில்லியன் ஆண்டுகளில் மனிதனின் நேர் மூதாதையர்கள் தோன்றினர். இக்கால மனிதனை ஒத்த மூதாதையர்கள்

40,000 ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றினர். (Carol R. Ember and Melvin Ember, *Anthropology*, op. cit., p.22)

குறிப்பு

முதல் உயிரினம் தோன்றியது முதல் இக்கால மனிதன் வரை உயிரினங்களிடையே ஏற்பட்ட வளர்ச்சிக்குக் காரணம் ஒரு தொடர்ச்சியான மாற்றமேயாகும். அம்மாற்றம், தான் தோன்றித் தனமாகவோ முறையற்ற நிலையிலோ ஏற்படவில்லை. ஒரு முறையான அமைப்பிலேயே நிகழ்ந்துள்ளது. அவ்வாறே அம்மாற்றத்தின் இயக்கமும் செயல்பாடுகளும் ஒரு வரையறைக்குள் நின்று செயல்பட்டுள்ளன. உயிரினங்களிடம் தொடர்ச்சியான மாற்றத்தை ஏற்படுத்திய அந்நிகழ்வைப் படிமலர்ச்சி (evolution) என அறிஞர்கள் கூறுவர். ('படிமலர்ச்சி' என்னும் கருத்தை அறிவொளிக் காலத்தவர்கள் 'வளர்ச்சி' progress எனக் கூறி வந்ததை இங்குக் கவனத்தில் கொள்க. இதைப் பற்றிய முழுமையான அறிவிற்கு 18, 19ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த இயற்கைவியலார் காரணமாவர். அவ்வறிஞர்கள் அனைவரையும் கடந்து உயர்ந்து நிற்பவர் சார்லஸ் தார்வின் ஆவார்.

### 5.1.3.5. படிமலர்ச்சியின் படிமலர்ச்சி

சார்லஸ் தார்வின் கி.பி.1859-ல் சிறப்பினங்களின் தோற்றம் (On the Origin of Species) என்னும் நூலை வெளியிடுவதற்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னரே படிமலர்ச்சி பற்றிய சிந்தனை தோன்றிவிட்டது. கிரேக்கத் தத்துவவியல் அறிஞர் அரிஸ்டாட்டில் (கி.மு.384 – 322) படிமலர்ச்சிக் கருத்துகளுக்கு வித்திட்டவர் எனலாம். பழைய உயிரினங்களிடமிருந்து உயிரினங்கள் படிமலர்ச்சி அடைந்து வந்துள்ளன என்பதை முதன்முதலில் கிரேக்கத் தத்துவவியல் அறிஞர்களே உணர்ந்தனர். அவர்களுள் தேல்ஸ், அனெக்சிமாண்டர் (கி.மு.611-547) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். தண்ணீர்தான் மூலப்பொருள் அதிலிருந்துதான் அனைத்து உயிரினங்களும் தோன்றின என தேல்ஸ் கூறினார். வெப்ப ஆற்றலின் மூலமே முதல் உயிர் (life) தோன்றியது என்பார் அனெக்சிமாண்டர்.

படிமலர்ச்சிக் கருத்துக்களை ஆழ்ந்து சிந்தித்த முதல் அறிஞர் அரிஸ்டாட்டில் (கி.மு.384 – 322) என்று கூறலாம். பழைய உயிரினங்களிடமிருந்து புதிய உயிரினங்கள் தோன்றுகின்றன. அவை அனைத்தும் அறிவு வளர்ச்சியில் ஏதோ ஒரு வகையான மாற்றத்தைப் பெற்று உகந்த நிலையை (ideal) அடையும் இலக்கில் ஈடுபடுகின்றன. அந்த உகந்த நிலையை அடையும் பொருட்டு உயிரினங்கள் பெற்ற மாறுபாட்டைக் கொண்டு அவை அனைத்தையும் வரிசைப்படுத்திக் காணமுடியும். அவ்வாறு வரிசைப்படுத்திப் பார்க்கும்போது உகந்த நிலைக்கு மிக அருகில் உள்ளவர்கள் மனிதர்களே. மிகவும் கீழ்நிலையில் உள்ளவை கனிமப் பொருள்களே (inorganic matter) அப்பொருள்களிலிருந்தே முதல் உயிர் தோன்றியது. இக்கொள்கையைக் கொண்டிருந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் அனெக்சிமாண்டர்,

செனோபேன்ஸ், ஐசக் நியூட்டன் ஆகியயோராவர். உயிரற்ற கனிமப் பொருள்களிலிருந்து உயிர் தோன்றியது என்பதால் அவர்களின் கொள்கை உயிரிலிப் பிறப்புக் கொள்கை (theory of a biogenesis) எனப்படும்.

உலகத்தின் தோற்றம் பற்றிய தொடக்கக் கால விவிலியத்தின் கருத்துகள் அரிஸ்டாட்டிலின் கருத்துகளை மிகவம் ஒத்திருந்தன. பழைய உயிரிலிருந்து புதிய உயிர் தோன்றுகிறது என்பதையே 'தோற்றம் பற்றிய நூல்' (Book of Genesis) குறிப்பிடுகிறது. ஆனால் பிற்கால விவிலியக் கருத்துகள் உயிரினம் தோன்றியது முதல் இன்று வரை மாறாமல் இருக்கின்றன என்று கூறுகின்றன.

பண்டைக் காலத்தில் வாழ்ந்த எபிரேயர்கள் சிறப்புப் படைப்புக் கொள்கையில் (Theory of Spiecial Creation) நம்பிக்கை கொண்டிருந்தனர். பின்னர் அக்கொள்கை கிறித்தவர்களிடமும் வேரூன்றியது. அக்கொள்கையை விளக்கிக் கூறியவர் ஸ்பெயின் நாட்டுத் திருச்சபைத் தலைவர் கவாரஸ் (கி.பி.1548-1617) ஆவார். இவ்வுலகத்தையும் உயிரினங்களையும் இறைவன் 6 நாட்களில் படைத்தான். முதல் நாள் ஒளியையும் (light) இரண்டாம் நாள் ஆகாயத்தையும் (sky), மூன்றாம் நாள் மண்ணுலகம், கடல், தாவரங்களையும், நான்காம் நாள் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றையும், ஐந்தாம் நாளில் நீரில் வாழும் விலங்குகளையும் பறவைகளையும் ஆறாம் நாளில் தரை வாழ் விலங்குகளையும் மனிதனையும் படைத்தான். சிறப்புப் படைப்புக் கொள்கையின் இக்கருத்து மக்களிடம் சிலகாலம் நிலவியிருந்தது.

ஜூடியோ கிறித்தவத்தின்படி (Judaeo–Christianity) இவ்வுலகம் சில ஆயிரமாண்டுகளுக்கு முன்னர்த்தான் தோன்றியது. விவிலிய நிகழ்ச்சிகளை அறுதியிட்டுக் கூறுவதில் சிறப்புப்பெற்ற பேராயர் (Archbishop) ஜேம்ஸ் உஷர் ஆதாமும் ஏவாளும் கி.மு.4004இல் தோன்றினர் எனக் கூறுகிறார். (Victor Barnouw, *Anthropology* Homewood, Illonis : The Dorsey press, 1978, p.6) இவர் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து உயிரினங்களும் ஒரு படிநிலையில் அடுக்கப்பட்டுள்ளன என்ற கருத்தே 17,18ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த மேற்கத்தியர்களிடம் மேலோங்கியிருந்தது. உயிரினங்களின் இந்தப் படிநிலை (hierarchy) இயற்கையின் வரிசை (scala naturae) என இறையியல் நூல்களில் குறிப்பிடப் பெறுகின்றது. இது 'உயிரினங்களின் தொடர்ச்சி' (chain of being) என்றும் கூறப்பெறும். (See Loren C. Eiseley, "The dawn of Evolutionary Theory", in *Darwin's Century : Evolution and the Men Who Discovered* It (Garden City, N.Y. : Doubleday, 1958), as reprinted in Evolution of Man, ed. Lousie B. Young, New York : Oxford University Press, 1970, p.10) இந்த

குறிப்பு

உயிரினத்தின் வரிசையில் மனிதன் மேல்நிலையிலும், விலங்குகள், தாவரங்கள், பாறைகள் முதலானவை மனிதனுக்குக் கீழும் உள்ளன. ‘இயற்கையின் வரிசை’ யில் மனிதனுக்கு மிக அருகில் உயர்பாலூட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. எனினும், ஒவ்வோர் உயிரினமும் இறைவனால் தனித்தனியாகப் படைக்கப்பட்டன. மனிதனுக்கும் உயர்பாலூட்டிகளுக்கும் உள்ள உருவத்தோற்ற ஒற்றுமை இறைவனின் தெய்விகப் படைப்பின் தனித்தனி செயல்களால் உண்டானதாகும் என நம்பினர்.

இடைக்காலத்தைச் (middle ages) சேர்ந்த அறிஞர்களிடையே இயற்கையை நேரடியாக உற்றுநோக்க (observation) வேண்டும் என்ற ஆர்வம் தோன்றியது. இருப்பினும், அறிவியல் முறைப்படி ஆராய முற்பட்ட ஆய்வாளர்கள்கூட, சமயச்சார்புடைய பழம்பெரும் ஆசிரியர்களைப் (classical authorities) பின்பற்றி எழுதினர். அதன்பின் 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் உற்றுநோக்கும் முறையில் பெரும் திருப்பம் ஏற்பட்டது. அம்முறைக்கு உருவம் கொடுத்தவர் ஆங்கிலேயத் தத்துவவியல் அறிஞர் பிரான்சிஸ் பேக்கன். அவர் 1620-இல் எழுதிய ‘novam Organum’ என்னும் நூலில் ‘உய்த்துணரும் முறை’ (inductive method) அறிவியல் நோக்குடைய ஆய்வுகளுக்கு மிகவும் முக்கியமானது என்று வலியுறுத்தினார். உய்த்துணரும் பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டது. உற்று நோக்குவனவற்றின் காரண காரியங்களைப் பொதுமைப்படுத்தி பின்னர்ப் பொதுமைப்படுத்தியவற்றை பின்னர்ப் பொதுமைப் படுத்தியவற்றை எடுகோளாகக் (hypothesis) கொண்டு அவற்றைச் சோதனைகள் மூலம் சோதித்துப் பார்த்து, அதன்பின் அவற்றை இயற்கை விதிகளாக (natural laws) மாற்றுவதைக் குறிக்கும்.

பிரான்சிஸ் பேக்கனின் சிந்தனையைப் பெற்று உயர்த்துணரும் முறையில் ஆழ்ந்து செயல்பட்டவர் சுவீடன் நாட்டைச் சேர்ந்த லின்னேயஸ் (1707 – 1778) ஆவார். இன்று லின்னேயஸ் உயிரின வகைப்பாட்டியலின் தந்தை எனப் போற்றப்படுகிறார். இவர் உலகின் பல பகுதிகளில் புத்தாய்வுகள் மேற்கொண்டு அங்குக் கண்ட ஆயிரமாயிரம் தாவரங்களையும் விலங்குகளையும் தொகுத்து வகைப்படுத்தினார். அவ்வாய்வுகளால் விளைந்ததே உயிரின வகைப்பாட்டியல் (taxonomy) ஆகும். இம்முறையில் ஒத்த உயிரினங்களைத் தொகுதி (phylum) என்றும் அதனுள் சில வேறுபாடுகள் உள்ளனவற்றைப் பிரித்து அதனை வகுப்பு (Class) என்றும், அதனுள் சிற்சில மாற்றங்களுடன் வேறுபட்டுக் காணப்படுவனவற்றை இனம் (genus) என்றும், அதனுள் மேலும் சில வேறுபாடுகளைக் கொண்டுள்ளவற்றைச் சிறப்பினம் (Species) என்றும் வகைப்படுத்தினார். லின்னேயஸ் வகுத்த வகைப்பாட்டியலில் இங்குக் குறிப்பிடப்பெற்றவை ஒருபகுதியே. இவ்வகைப் பாட்டில் லின்னேயஸ் பொதுப்பண்புகள் கொண்ட உயிரினங்களைப் பருநிலையில் ஒரு தொகுதியாக வகைப்படுத்தி, பின் அவற்றுக்குள் நிலவும் நுண்ணிய

வேறுபாடுகள் அடிப்படையில் படிப்படியாகப் பிரிக்கின்றார். இறுதியில் ஒவ்வொரு உயிரியையும் அதன் இனப் (genus) பெயரோடும் சிறப்பினப் (species) பெயரோடும் குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக, மனிதனும் அவனின் தொலை மூதாதையரும் 'homo' என்ற இனப் பெயரைக் கொண்டவர்கள். ஆனால் இக்கால மனிதன் 'sapien' என்ற சிறப்பினப் பெயரோடும், தொலை மூதாதையர்கள் அப்போதுதான் நிமிர்ந்து நடக்கும் முறையை ஏற்படுத்திக் கொண்டதால் அவன் 'erectus' என்ற சிறப்பினப் பெயரோடும் குறிக்கப்படுகின்றனர். இதனால் லின்னேயஸ் வகைப்பாடு இருவழிப் பெயரிடல் (binominal nomenclature) முறை எனக் கூறப்படும்.

லின்னேயஸ்தான் முதன் முதலில் மனிதனையும், வாலில்லாக் குரங்குகளையும், குரங்குகளையும் ஒரே இனமாகச் சேர்த்தார். இம்மூவகை இனமும் ஒத்த உடலமைப்பைப் பெற்றுள்ளன என்பதை இவர் ஊகித்தார் என எண்ணவேண்டியுள்ளது. இருப்பினும். இம்மூவகை இனத்திற்கும் பொதுவான மூதாதையர் உண்டு என்பதை லின்னேயஸ் உறுதிப்படுத்தவில்லை. உயிரினங்கள் மாறாத உடலமைப்பைப் பெற்றுள்ளன என்ற கருத்தை முதலில் லின்னேயஸ் ஒப்புக் கொண்டாலும் உயிரினங்களுக்கிடையே சிறிய சிறிய வேறுபாடுகள் தோன்றுமென்றும், அப்பண்புகள் பின்னர் அவ்வுயிரினத்தைத் தனி இனமாக மாற்றுமென்றும் கூறத்தலைப்பட்டார். லின்னேயஸ் முதலில் விவிலியக் கருத்துக்களைப் பற்றி நின்றதும் பின்னர் அவற்றை மாற்றிக் கொண்டதும் இதன் மூலம் தெளிவாகிறது. இவரது வகைப்பாட்டியலானது உயிரினங்களுக்கிடையே உள்ள உறவுகள் என்னென்ன, அவற்றின் வளர்ச்சி நிலைகள் என்னென்ன என்ற பிற்கால படிமலர்ச்சியியல் ஆய்வுகளுக்கு அடித்தளமாக விளங்கியது.

லின்னேயசின் வகைப்பாட்டியல் முறை 18ஆம் நூற்றாண்டில் மண்ணியல், தொல்லுயிரியல் (பதைபடிவங்களை ஆராயும் இயல்), தாவரவியல், விலங்கியல் ஆகிய துறைகளில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. இக்காலக் கட்டத்தில் கூறப்பட்ட கருத்துகள் தார்வின் படிமலர்ச்சிக் கருத்துகளைப் பெரிதும் ஒத்திருந்தன. குறிப்பாக, கோம்ட் டி ப.்.பன் கூறிய கருத்துகள் இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். அவை 1.ஒரு சிறப்பினத்திற்குள் வேறுபாடுகள் தோன்றுகின்றன. 2. சூழ்நிலையோடு நன்கு தகவமைந்த உயிரினங்கள் மட்டுமே வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற்று வாழ்கின்றன. 3. ஓர் உயிரினத்திலிருந்தே மற்றோர் இனம் தோன்றுகிறது. ப.்.பன் தன் கருத்துகளை உறுதிப் படுத்துவதும் பின்னர் அவற்றைப் பின்வாங்குவதுமாக இருந்ததால் அவர்தம் கருத்துகள் செல்வாக்கு பெறவில்லை.

18ஆம் நூற்றாண்டில் படிமலர்ச்சி பற்றி ஆழ்ந்து சிந்தித்தவர்களுள் லெமார்க் (முழுப்பெயர்: Jean – Baptiste Pierre Antoine de Monet Chevalier de Lamarkck) (1744 – 1829), சார்லஸ் தார்வின் பாட்டன் எராஸ்மஸ் தார்வின் (1731 – 1802) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். உயிரற்ற பொருளிலிருந்து பல சிக்கலான

குறிப்பு

வேதியியல் மாற்றங்களால் தோன்றிய உயிர் எந்த நிழ்வினால் காலப்போக்கில் ஆயிரக்கணக்கான சிறப்பினங்களாக மாறின என்பது பற்றி லெமார்க் ஆராய்ந்தார். சூழ்நிலையின் தன்மைக்கேற்ப புதிய புதிய சிறப்பினங்கள் தோன்றக் காரணமென்றார் லெமார்க். இதனை விளக்க பயனுண்மை பயின்மை விதியையும் (law of use and disuse), முயன்று பெற்ற பண்புகள் மரபு வழியில் வரும் (inheristance of acquired characters) என்னும் கொள்கைகளையும் வகுத்தார்.

விலங்குகளும் தாவரங்களும் அவை வாழும் சூழ்நிலை மாற்றம் பெறும்போது புதிய சூழலிற்கேற்ப மாறிக் கொள்கின்றன என லெமார்க் உறுதியாக நம்பினார். அதனால் விளைந்ததே பயனுண்மை பயனின்மை விதியாகும். அவ்விதியை லெமார்க் உறுதியாக நம்பினார். அவ்விதியை லெமார்க் பல எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கினார். அவற்றுள் ஒன்று ஒட்டகச்சிவிங்கி பற்றியது. ஓட்டகச் சிவிங்கிகள் முதலில் நீண்ட கழுத்தையோ கால்களையோ பெற்றிருக்கவில்லை. ஏனெனில், அவை வாழ்ந்த சுற்றுச்சூழலில் மேய்வதற்குத் தேவையான அளவு புல்வெளிகள் இருந்தன. பின்னர்ச் சூழ்நிலை காரணமாகப் புல்வெளிகளும் தரையில் படரும் செடி கொடிகளும் குறைந்துவிட்டன. அதனால் அவ்விலங்கினம் மரக்கிளைகள், உயரத்தில் தொங்கிய புற்பூண்டுகள் போன்றவற்றைக் கால்களைத் தூக்கியும் கழுத்தை நீட்டியும் மேயவேண்டியிருந்தது. ஆதலின் காலப்போக்கில் நீண்ட கால்களையும், கழுத்தையும் பெற்றன. இதனை எடுத்துக்காட்டாகக் கொண்டு பயன்படும் உறுப்புகள் மேன்மேலும் வளருமென்றும், பயன்படா உறுப்புகள் காலப்போக்கில் குறைந்துவிடுமென்றும், புதிய சூழலில் ஏற்படும் புதிய புதிய பண்புகள் சிறப்பினங்களின் தோற்றத்திற்குக் காரணமாகின்றன என்றும் லெமார்க் கூறினார்.

லெமார்க்கின் இரண்டாம் கொள்கை ‘முயன்று பெற்ற பண்புகள் மரபுவழியில் வரும்’ என்பதாகும். இக்கொள்கையை விளக்க முன்னர்க் கூறிய எடுத:துக்காட்டையே பயன்படுத்தலாம். நீண்ட கால்களையும் கழுத்தையும் ஒட்டகச்சிவிங்கி அது உணவு தேடும் முயற்சியில் முயன்று பெற்றவை. இப்பண்புகள் அதன் அடுத்தடுத்த தலைமுறைகளிலும் தொடர்ந்துவரும். பயனற்ற பண்புகள் அதன் அடுத்தடுத்த தலைமுறைகளில் தேய்ந்து கொண்டே செல்லும். குரங்கிலிருந்து தோன்றிய வாலில்லாக் குரங்களிடம் (apes) வாலின் அளவு பெருமளவு குறைந்துவிட்டது. வாலில்லாக் குரங்கிலிருந்து தோன்றிய மனிதனிடம் வால் அறவே இல்லாமல் அவ்வுறுப்பு ஓர் எச்ச உறுப்பாகக் (vestigial organ) காணப்படுகிறது. ஏனெனில், குரங்குகள் பயன்படுத்திய அளவிற்கு அதற்கடுத்தடுத்த இனங்கள் வாலினைப் பயன்படுத்தாமையால் அவ்வுறுப்பு காலப்போக்கில் தேய்ந்துவிட்டது. முயன்று பெறும் பண்புகளும், பயன்பாடு மிக்க உறுப்புகளும் வரும் தலைமுறைகளில் நிலைபெறுகின்றன. லெமார்க்கின் கொள்கைகளை அறிஞர்கள் பலர் ஏற்க மறுத்தனர். ஆனால், அவர்தம் மாணவர்கள் அதனை மறுத்துப்

புதிய விளக்கங்கள் கொடுத்தனர். அவர்களின் கொள்கை புதிய லெமார்க்கியம் (neo-Lamarckism) எனப்படும்.



18-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மண்ணியலார் புதைபடிவங்களைத் தோண்டி எடுத்தனர். அப்புதை வடிவங்களை ஆராய்ந்த பின்னர் உயிரினங்கள் எவ்வாறு வளர்ச்சியுற்றன என்பதை விளக்க முடியுமென நம்பினர். அவர்களுள் ஜார்ஜ்கூவியர் (George Cuvier) (1769 – 1832) குறிப்பிடத்தக்கவராவார். இவர் உயிரினப் படிமலர்ச்சியை விளக்க திடீர் நிகழ்வுக் கோப்பாட்டை (catastrophism) வகுத்தார். அக்கொள்கையின்படி வெவ்வேறு காலகட்டத்தில் பூமியின் மேற்பரப்பானது பெருவெள்ளங்களாலும், நில அதிர்வுகளாலும், எரி மலைகளாலும், இன்னும் பிற திடீர் நிகழ்வுகளாலும் அடித்துச் செல்லப்பட்டது அல்லது மாற்றம் பெற்றது. அந்தத் 'திடீர் நிகழ்வுகள்' (catastrophes) அந்தந்தக் கால கட்டத்தில் பூமியின் மேற்பரப்பில் வாழ்ந்த உயிரினங்களை அழித்து விட்டன. அவையே இன்று புதை படிவங்களாகக் கிடைக்கின்றன.

ஒவ்வொரு முறையும் திடீர் நிகழ்வுகள் நிகழ்ந்த பின்னர்த் தெய்விகப் படைப்பு மூலம் புதிய உயிரினங்கள் தோற்றுவிக்கப் பட்டன. அவ்வுயிரினங்கள் அடுத்து நிகழ்ந்த திடீர் நிகழ்வுகள் மூலம் அழிந்து அவை மண்ணியலின் அடுத்த அடுக்கில் புதை படிவங்களாகச் சேர்ந்துவிட்டன. இன்று உயிர்வாழும் உயிரினங்கள் அனைத்தும் இறுதியாகப் படைக்கப் பட்டவையாகும். விவிலியத்தில் கூறப்பட்டுள்ள பெரும்வெள்ளமே (biblical flood) மிக அண்மையில் நிகழ்ந்த மண்ணியல் மாற்றம் (திடீர் நிகழ்வு) ஆகும். (Merwyn .garbarino, *Sociocultural Theory in Anthropology* (NewYork : Holt, Renehart and Winston, 1977, p.19)

கூவியரின் திடீர்நிகழ்வுக் கோட்பாட்டை ஆங்கிலேய மண்ணியல் அறிஞர்சர் சார்லஸ் லயல் (1797 – 1875) ஏற்க மறுத்தார். மண்ணடுக்குகள் திடீர் நிகழ்வுகளால் ஏற்பட்டவையல்ல என்றும் உயிரினங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டுப் பின்னர்ப் புதிதாகத் தோற்றுவிக்கப் பட்டவையல்ல என்றும் வாதிட்டார். இவர்தம் கருத்துக்களை 'ஒருமுகத்தன்மைக் கொள்கை' (uniformitarianism) மூலம் விளக்குகிறார். அக் கொள்கையை 1930-இல் இவர் எழுதிய 'மண்ணியலின் விதிகள்' (Principles of Geology) என்னும் நூலில் விவரிக்கிறார்.

பூமியில் மண்ணடுக்கானது திடீர் திடீரென மாறாமல் மிகவும் மெதுவாக, ஒரே சீராக, காலந்தோறும் மாறி வந்துள்ளது. மண்ணியலின் விசைகள் (geological forces) இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுள்ளன. மண்ணரிமானம், எரிமலை நிகழ்ச்சிகள், நில அதிர்வுகள் போன்றவை இன்றும் நிகழ்கின்றன. மண்ணியல் மாற்றங்கள் மிகவும் மெதுவாக நிகழ்ந்துள்ளதால் பூமிக்கடியில் புதைந்து கிடக்கும் புதை

குறிப்பு

படிவங்கள் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த உயிரினங்கள் என்றும், பூமியின் வயது பல்லாயிரக்கணக்கான மில்லியன் ஆண்டுகள் என்றும் லயல் உறுதியாகக் கூறினார். இவர் நிகழ்கால நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு ஒருமுகத்தன்மைக் கொள்கையை உறுதிப்படுத்துகிறார். 19ஆம் நூற்றாண்டில் மண்ணியல் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. காலநிலை, வேதிப்பொருள்கள் சிதைதல், உள்ளார்ந்த மாற்றங்கள் போன்றவை அனைத்துக் காலத்திலும் ஒரே சீராக மாறிக் கொண்டு வந்துள்ளன. இம்மாற்றல்களுக்கேற்ப உயிரினங்கள் மாறி வந்துள்ளன. இவை திடீர் திடீரென அழியவில்லை. புதிய புதிதாய்த் தோன்றவில்லை. ஒரு சீரான மாற்றத்தின் வழி உயிரினப் படிமலர்ச்சி நிகழ்ந்துள்ளது என்றார். (ibid, p.19)

லயலின் இக்கொள்கையை அறிஞர்கள் தொடக்கத்தில் சில ஐயப்பாடுகளுடன் ஏற்றுக் கொண்டனர். இருப்பினும், உயிரினங்களின் படிமலர்ச்சியை விளக்க முற்பட்ட அனைத்துக் கொள்கைகளும் சார்லஸ் தார்வின் தோன்றிய காலம் வரை தான் நிலைபெற முடிந்தது.

### 5.1.3.6. தார்வினியம்

தார்வின் ஓர் இயற்கைவியலார். உலகின் பல பகுதிகளுக்குச் சென்று உயிரினங்களை நுண்ணாய்வு செய்தவர். பல புத்தாய்வுகள் மேற்கொண்டதிலிருந்தே உயிரினங்களின் படிமலர்ச்சி குறித்து மிகத் தீவிரமாய் ஆய்வு செய்து வந்தார். இந்தக் கால கட்டத்தில்தான் பொருளியல் மேதை தாமஸ் மால்தஸ் எழுதிய 'மக்கள் தொகை பற்றிய கட்டுரை' இவரைப் பெரிதும் ஊக்குவித்தது. 20 ஆண்டுகளுக்கு மேல் ஆய்வு செய்த பின் இறுதியாக, தார்வின் உயிரியல் படிமலர்ச்சியை விளக்க 'இயற்கைத் தேர்வு' (natural selection) என்னும் கோட்பாட்டை வகுத்தார். அக்கோட்பாட்டினை 1859-இல் வெளியிட்ட சிறப்பினத்தின் தோற்றம் (On the Origin of Species) என்னும் நூலில் விளக்குகிறார்.

ஒவ்வொரு குறிப்பிட்ட உயிரினத்திற்குள்ளும், தனி உயிரிகளிடமும் 'வேறுபாடுகள்' (variations) உள்ளன. அவ்வேறுபாடுகளே உயிரினங்களுக்குள் மாற்றங்களை ஏற்படுத்தி, புதிய புதிய சிறப்பினங்களைத் தோற்றுவிக்கின்றன. வேறுபாடுகளைக் கொண்ட உயினிங்கள் இயற்கைச் சூழலில் வாழ முற்படும்போது இயற்கையின் ஆற்றல் சில உயிரிகளை (organisms) மட்டும் ஆதரிக்கிறது. சிலவற்றை ஆதரிப்பதில்லை. அதற்குக் காரணம் சுற்றுச் சூழலோடு தகவமைத்து வாழும் தன்மையைச் சில உயிரிகள் பெற்றுள்ளன. சில பெற்றிருக்கவில்லை. இயற்கையோடு தகவமைந்து வாழும் இயல்புடையன தொடர்ந்து வாழ்கின்றன. மற்றவை காலப் போக்கில் அழிந்து விடுகின்றன.

இயற்கைச் சூழலில் தகவமையும் நிகழ்வே ஒவ்வோர் உயிரினத்திடமிருந்தும் புதிய சிறப்பினம் தோன்ற வழிகோலுகிறது. ஒவ்வொரு குறிப்பிட்ட சூழலிலும் உயிரினங்கள் நிலைத்து வாழும்

குறிப்பு

வீதத்தைக் காட்டிலும் மிகுதியாகவே இனப்பெருக்கம் செய்கின்றன. அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட அனைத்தும் அக்குறிப்பிட்ட சூழலில் வாழ வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. அந்நிலையில் அவை வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைகளை ஈட்டி நீண்டகாலம் வாழ தீவிரமாக முயல்கின்றன. அதனால் உயிரினங்களுக்கிடையே 'வாழ்க்கைப் போராட்டம்' (struggle for existence) ஏற்படுகிறது. இப்போராட்டத்தில் தகுதியனப் பிழைக்கின்றன (survival of the fittest); தகுதியற்றவை அழிந்து போகின்றன. தகுதியனப் பிழைத்தல் என்பது இயற்கைத் தேர்வு நிகழ்வால் கிடைக்கப் பெறும் தேர்ச்சியைக் குறிக்கும்.

இயற்கைத் தேர்வு என்பது ஒரு நீண்டகால நிகழ்வாகும். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் வாழும் ஒவ்வோர் உயிரினமும் இயற்கையின் தேர்வுக்கு உட்படுகிறது. தான் சார்ந்திருக்கும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தகவமையும் உயிரிகளை இயற்கையானது தேர்வு செய்து கொள்கிறது. மற்றதைக் கழித்துவிடுகிறது. இதனால் உயிர்கள் வாழ்க்கைப் போராட்டத்திற்கு ஒவ்வாத பண்புகளைக் கழித்துவிட்டு மிகவும் இணக்கமுற்ற பண்புகளை மேன்மேலும் வளர்த்துக் கொள்கின்றன. சிறந்த முறையில் தகவமையும் உயிரிகள் தலைமுறை தோறும் மேலும் மேலும் இணக்கமுடைய பண்புகளைப் பெருக்கிக் கொள்வதால் காலப்போக்கில் இவ்வுயிரிகள் தனிச் சிறப்பினமாக மாறிவிடுகின்றன. இதனை விளக்க தார்வின் எண்ணற்ற எடுத்துக்காட்டுகளைச் சுட்டிக் காட்டினார். (Charles Darwin, On the Origin of Species, reprinted in *Evolution of Man ed.*, Lousie B. Young, op. cit., pp.76-79)

இயற்கைத் தேர்வின் நிகழ்விற்கு உயிரிகளிடமுள்ள 'வேறுபாடுகளே' முதன்மையான காரணமாகின்றன. உயிரிகள் வேறுபாடுகளின்றிக் காணப்படுமேயானால் இயற்கைத் தேர்வு எவ்வித வேறுபாடுகளின்றிக் காணப்படுமேயானால் இயற்கைத் தேர்வு எவ்வித குழுவையும் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்த முடியாமல் போய்விடும்.

தார்வினின் இயற்கைத் தேர்வுக் கொள்கையை அறிந்த இந்நிலையில் இக்கொள்கையின் ஐந்து அடிப்படைக் கருத்துகளைப் பின்வருமாறு சுருக்கிக் காணலாம்.

1. ஒவ்வோர் உயிரினமும் உயிர்வாழும் வீதத்தைக் காட்டிலும் மிகுதியான அளவில் இனப்பெருக்கம் செய்கின்றது.

2. தனி உயிரிகளிடமும் தனிப்பட்ட இனத்திற்குள்ளும் வேறுபாடுகள் எல்லா நிலைகளிலும் காணப்படுகின்றன.

3. இயற்கைச் சூழலில் நிகழும் இயற்கைத் தேர்வின் வாயிலாக ஒவ்வோர் உயிரியும் நீண்ட காலம் வாழ வேண்டுமென்றும் சிறந்த முறையில் வாழ வேண்டும் என்றும் உறுதிப்படுத்த முயல்கிறது. இதனால் வாழ்க்கைப் போராட்டம் ஏற்படுகிறது. இது இரு

வேறுபட்ட குழுக்களிடையேயும், ஒரே குழுக்குள்ளும் நடைபெறலாம்.

குறிப்பு

4. வாழ்க்கைப் போராட்டத்தில் தகுதியன வாழ்கின்றன. தகுதியற்றவை அற்றுப் போகின்றன. இச்செயல்தான் புதிய சிறப்பினத்தை உருவாக்கக் காரணமாகின்றது.

5. ஒரு தலைமுறையைச் சேர்ந்த தகவமைந்த பண்புகள் (வாழக்கைப் போராட்டத்தில் வெற்றி பெற உதவிய பண்புகள்) வருங்காலத் தலைமுறைகளிலும் இடம் பெறும். இருப்பினும், வருங்காலத் தலை முறைகளில் மேலும் மேலும் புதிய தகவமையும் பண்புகளை உயிரிகள் ஏற்படுத்திக் கொள்வதால் அவை அவற்றின் மூதாதையர்களிடமிருந்து சிறிது சிறிதாக விலகி இறுதியில் ஒரு புதிய சிறப்பினமாக மாற்றம் பெறும்.

சிறப்பினத்தின் தோற்றம் என்னும் நூலை வெளியிட்ட 12 ஆண்டுகளுக்குப் பின் (1817) தார்வின் 'மனிதனின் வம்சாவழி' (The Descent of Man) என்னும் நூலை வெளியிட்டார். அந்நூலில் மனிதனின் மூதாதையர்கள் குரங்கினங்களே என்பதை உறுதிப்படுத்துகிறார். இக்கருத்தை உறுதிப்படுத்த இவ்விரு உயிரினங்களின் உடற்கூற்றியலை ஒப்பிட்டுக் காட்டுகிறார். மனிதப் படிமலர்ச்சியை விளக்கிக் கூறியதில் தார்வினைப் போன்று வேறு எவரும் அதற்கு முன்னர் விரிவாகக் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மனிதனும் குரங்கினங்களும் மிகவும் நெருக்கமுடையன என்பதை உறுதிப்படுத்தும்போதும், படி மலர்ச்சிக் காலத்தில், உயிரினங்கள் பெற்ற உற்கூற்றியல் நிலைகளை விளக்கும்போதும் தார்வின் மூன்று குறிப்பிடத் தகுந்த கருத்துக்களைக் கூறுகிறார். அவையானவை:

1. உயிரினங்களின் படிமலர்ச்சி எளிய நிலையில் தொடங்கி பின் ஒவ்வொரு நிலையிலும் பல சிக்கலான அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு வந்துள்ளது.

2. உடற்கூற்றியல் பண்புகளைப் பார்க்கும்போது மனிதன் சில உயிரினங்களோடு மட்டுமே தொடர்புடையவனாக உள்ளான். பிற உயிரினங்களிடமிருந்து மிகவும் விலகி நிற்கிறான். இந்த இடைவெளி அந்தந்த உயிரினத்தின் தன்மைக்கேற்ப நீண்டோ குறுகியோ உள்ளது.

3. மனிதனின் மனவியல், உளவியல், ஒழுக்கவியல் பண்புகள் விலங்குகளிடமும் உள்ளன. ஆனால் அதன் அளவு மட்டுமே வேறுபடுகின்றது.

உயிரியல் படிமலர்ச்சி குறித்த 'தார்வினியம்' (Darwinism) அவர் காலத்திற்கு மட்டுமன்றி எக்காலத்திற்கும் பொருத்தமானது என்பது காலத்தால் உறுதியாகியுள்ளது.

இன்றைய உடல்சார் மானிடவியலார் படிமலர்ச்சியைக் குவியும் படிமலர்ச்சி (convergent evolution), விரியும் படிமலர்ச்சி (deivergent evolution), இணைப் படிமலர்ச்சி (parallel evolution), கிளைப் படிமலர்ச்சி (cladogenic evolution) ஒருவழிப் படிமலர்ச்சி (anagenic evolution), நுண்படி மலர்ச்சி (micro – evolution), பெருநிலைப் படிமலர்ச்சி (macro- evolution) போன்ற பல்வேறு நிலைகளில் ஆராய்கின்றனர்.

### 5.1.3.7. உயர்பாலூட்டியியல்

ஓரணு உயிரியான அமீபாவிலிருந்து உயர்ந்த நிலையில் உள்ள மனிதன் வரை அனைத்து உயிரினங்களும் அவற்றின் படிமலர்ச்சி நிலைகளுக்கேற்ப முதுகுத்தண்டற்றவை (invertebrates), முதுகுத்தண்டுள்ளவை (vertebrates) என இரு பிரிவுகளாகப் பாகுபடுகின்றன. அவற்றுள் முதுகுத் தண்டுள்ள விலங்கினங்கள் அவற்றின் படிமலர்ச்சி நிலைகளுக்கேற்ப மீனினம் (pisces), இருவாழ்விகள் (amphibian), ஊர்வன (reptiles), பறப்பன (aves), பாலூட்டிகள் (mammals) எனப்பல தொகுதிகளாகப் (phylum) பாகுபடுகின்றன. ஒவ்வொரு தொகுதியிலும் விலங்கினங்கள் மேலும், பல வரிசைகளாகப் (order) பாகுபடுகின்றன. பாலூட்டித் தொகுதியில் மனிதன் இடம்பெறும் வரிசை உயர்பாலூட்டி (primate) ஆகும். அதனாலேயே உயர்பாலூட்டிகளைப் பற்றிய ஆய்வு உடல்சார் மானிடவியலில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

உயர்பாலூட்டி வரிசையில் மனிதன், மனிதனின் நேர் மூதாதையர்களான வாலில்லாக் குரங்குகள் (apes), அவற்றின் மூதாதையர்களான குரங்கினங்கள், அக்குரங்களின் மூதாதையர்களான தொடக்கக்காலக் குரங்கினங்கள் போன்றவை அடங்கும். மனிதனைத் தவிர ஏனைய குரங்கினங்கள் அனைத்தும் ‘மனிதரல்லாத உயர்பாலூட்டிகள்’ (non-human primates) என வழங்கப்பெறும் அவற்றுள் சில சிறப்பினங்கள் (species) காலத்தால் அற்றுப்போயின. சில இன்றும் வாழ்ந்து வருகின்றன.

மனிதனின் மூதாதையர்களைப் பற்றி அறிய நமக்குள்ள ஒரே வழி உயர்பாலூட்டிகளை ஆராய்வதேயாகும். உயர்பாலூட்டிகளைப் பற்றிய ஆய்வுகள் மனிதனின் உயிரியலையும், பண்பாட்டையும் அறிய உதவுகின்றன. குறிப்பாக, படிமலர்ச்சியியல் ஆய்வுகளில் உயர்பாலூட்டிகளின் பங்கு இன்றியமையாதது. உயர்பாலூட்டிகளின் உடலியங்கியல் (physiology), உடற்கூற்றியல் (anatomy), புறத்தோற்றம், தகவமைப்பு, நடத்தை முறைகள் முதலானவற்றை அறிந்து அதன்மூலம் மனிதனோடு தொடர்புடைய படிமலர்ச்சித் தொடர்ச்சியினைப் பெருமளவு அறுதியிடலாம். அதற்கு இன்று வாழும் உயர்பாலூட்டிகளும், அற்றுப்

போன உயர்பாலூட்டிகளின் புதைபடிவங்களும் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

குறிப்பு

மண்ணுள் புதைந்து கிடக்கும் அனைத்து எலும்புகளையும் சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தி அவற்றை நுண்ணிலையில் ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு புதைபடிவத்தின் உடலமைப்பை மீட்டுருவாக்க முடியும். அவ்வகையான மீட்டுருவாக்கத்திற்குப் பின் பல்வேறு உடலமைப்புகளை ஒப்புமைப்படுத்திப் பார்க்கும் போது அவற்றின் வளர்ச்சி நிலைகளை மதிப்பிட இயலும். புதை படிவங்களைப் பற்றிய ஆய்வில் மேலும் பல முதன்மையான செய்திகளைக் கண்டறிய இயலும். புதைபடிவங்களின் ஒவ்வோர் உறுப்பிற்கான எலும்புகளை நுணுகி ஆராயும்போது அவற்றின் உணவுமுறை, அவற்றின் நகர்ச்சிமுறை (locomotion), சுற்றுச் சூழலுடன் கொண்டிருந்த தகவமைப்புப் போன்ற பல்வேறு கூறுகளைக் காணமுடியும். (S.I.Rosen, *Introduction to the Primates :* Living and *Fossil* (Englewood Cliffs, N.J.Prentice – Hall, 1974, pp.153 – 155) இவ்வகையான செய்திகளைப் பல நிலைகளில் தொகுத்த பின்னர் எவ்வகையான புதைபடிவங்கள் ஒன்றோடு ஒன்று ஒத்துள்ளன. எவையெவை வேற்றுமைத் தன்மைகளைக் கொண்டுள்ளன. மனிதனோடு எவை மிகுந்த தொடர்பினைப் பெற்றுள்ளன என்பனவற்றை மதிப்பாய்வு செய்யவேண்டும். அதற்கு இன்று வாழும் உயர்பாலூட்டிகளின் உடலமைப்பினை ஒப்பிட்டு ஆராய வேண்டியதாகிறது.

இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் உயர்பாலூட்டிகளை இரு நிலைகளில் உடல்சார் மானிடவியலார் ஆய்வு செய்கின்றனர். விலங்குகள் அதன் இயற்கைச் சூழலில் வாழும்போது அவற்றை நீண்டகாலம் உற்றுநோக்கி ஆராய்வது ஒரு வகையாகும். சில ஆய்வுகளின் தன்மை வேறுபடுவதால் அவற்றை ஆய்வுக் கூடங்களுக்குக் கொண்டு வந்து ஒரு குறிப்பிட்ட இடத்திற்குள் அடைத்து ஆராயும் முறை இரண்டாவது வகையாகும். முதல் வகை ஆய்வுகள் பொதுவாக விலங்குகளின் நடத்தை முறைகளை ஆராயும் ஆய்வுகளாகவும், இரண்டாம் வகை, ஆய்வுகள் மனிதர்களுக்காகச் செய்யப்படும் புதிய புதிய மருந்துகளின் செயல் திறனையும் எதிர்விளைவுகளையும் கண்டறியும் ஆய்வுகளாகவும் உள்ளன. உயர்பாலூட்டிகள் மனித உடலமைப்பைப் பெரிதும் ஒத்துள்ள விலங்குகளாக உள்ளதால் இவ்வகை ஆய்வுகளில் அவை பெரிதும் பயன்படுகின்றன. விலங்குகளைச் சோதனைக் கூடங்களில் அடைத்து மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுள் சில நடத்தை முறைகளை ஆராயவும் செய்யப்படுகின்றன.

### 5.1.3.8. தொல்லுயிரியல்

மனிதப் படிமலர்ச்சி தொடர்பான அனைத்து ஆய்வுகளிலும் தொல்லுயிரியல் முதன்மையான இடம்பெறுகிறது. இப்பிரிவு தொல்மானிடவியல் (palaeoanthropology) அல்லது ‘மனிதத்

தொல்லுயிரியல்' என்றும் கூறப்பெறும். மனிதனோடு தொடர்புடைய புதைபடிவங்களை ஆராய்வதே இப்பிரிவின் தலையான நோக்கமாதலால் இதனைப் 'புதைபடிவவியல்' என்றும் கூறுவதுண்டு.

குறிப்பு

நம் மூதாதையர்கள் எந்த உருவத்தைக் கொண்டவர்களாக இருந்தனர். எவ்வளவு உயரம் இருந்தனர். அவர்கள் எவ்வாறு நடந்தனர், எதை உண்டனர், எந்தச் சூழலில் வாழ்ந்தனர் போன்ற பலவகையான வினாக்களுக்குப் புதைபடிவ ஆய்வுகள் விடை கூறுகின்றன. மனிதப் படிமலர்ச்சியின் வேகமும் வீதமும் அனைத்துக் காலங்களிலும் ஒரே சீராக இல்லை இதனைப் பல்வேறு காலகட்டத்தைக் காட்டும் மண்ணடுக்கியல் (stratigraphy) பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட புதைபடிவங்கள் உறுதிப்படுத்துகின்றன. சில மண்ணடுக்குப் பிரிவுகளைச் சேர்ந்த புதைபடிவங்கள் குறைவாகவும் சிலவற்றில் மிகுதியாகவும் உள்ளன. இது பல்வேறு வகையான வினாக்களுக்கு விடைகூறுவதாக அமைகிறது. படிமலர்ச்சி ஆய்வுகளில் விலங்கினங்களின் உடலமைப்பு எவ்வாறு காலந்தோறும் மாறிவந்தது என்பதைப் புதைவடிவங்களின் மூலம் துல்லியமாகக் கூறவியலும் எடுத்துக்காட்டாக, மனிதனின் இன்றைய தலையமைப்பு உருவாவதற்கு நெடுநாட்களுக்கு முன்னரே கால்கள் அதன் இன்றைய வடிவத்தைப் பெற்றுவிட்டன என்பதைப் புதைபடிவச் சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன. (Elmer S. Miller and Charles A. Weitz, *Introduction to Anthropology* New York : Prentice – Hall, Inc., 1979, p.25)

தொல்மானிவியலார் புதைபடிவங்களை ஆய்வு செய்யும் போது அதன் எலும்பு வகைகளைக் கொண்டும் அகழாய்வு செய்த இடத்தில் கிடைத்த எச்சங்களைக் கொண்டும் தொல் மனிதனின் வாழ்க்கையைப் பல பரிமாணங்களில் காண முயலுகின்றனர். குறிப்பாக, புதைபடிவங்களைப் பகுத்தாயும் போது மனிதப் படிமலர்ச்சியை இயக்கிய காரணிகளை இனங்காணுவர். இதில் உயிரியல் காரணிகள் (மனிதன் புறச் சூழலோடு கொண்டிருந்த இடைவினை), பண்பாட்டுக் காரணிகள் (மனிதன் சமுதாயச் சூழலோடு கொண்டிருந்த இடைவினை) ஆகிய இரண்டையும் கவனத்தில் கொள்வர். ஏனெனில், மனித மூதாதையர்களின் உடலமைப்பிலும் மனிதர்களின் உடலமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தியதில் இவ்விருவகையான காரணிகளும் பெருமளவு செல்வாக்குப் பெற்றிருந்தன.

உயிரியல்சார் படிமலர்ச்சியினை விளக்கும் எந்த ஒரு முயற்சியிலும் அந்தந்தப் படிமலர்ச்சிக் காலத்தைச் சேர்ந்த தொழிற் கருவிகளின் வளர்ச்சி, அவை பயன்படுத்தப்பட்ட முறை, வேட்டை முறை நெருப்பினைப் பயன்படுத்திய முறை, உறைவிடத்தை ஏற்படுத்திக்கொண்ட முறை போன்ற பல கூறுகளை ஆழ்நிலையில் ஆராயும் போக்கு இடைபெற வேண்டும். மேற்கூறிய கூறுகளும், மனிதனின் புறச்சூழலும் மாறுபட்டபோதெல்லாம் மனிதனின் உயிரியல் மலர்ச்சியில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. (ibid, p.25) மேலும் குறிப்பிட்டுக்

குறிப்பு

கூறவேண்டுமாயின் மனிதப் படிமலர்ச்சியில் ஏற்பட்ட சில உயிரியல் மாற்றங்கள் அம்மக்களின் பண்பாட்டு வளர்ச்சியோடு நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தன. மிகத் தொடக்கக் காலத்தில் மனித மூளையின் அளவும் மூளையில் ஏற்பட்ட மாற்றங்களும் அவன் பயன்படுத்திய தொழிற் கருவிகளோடு மிக நெருக்கமாகத் தொடர்புற்றிருந்தன. (Theodosius Dobzhansky, *Mankind Evolving* New Haven : Yale University Press, 1962, pp.195-97) மனிதப் பண்பாடும் மனித உயிரியலும் ஒன்றோடொன்று இணைந்து செயல்பட்டுள்ளதால் புதைபடிவங்களை ஆராயும் ஆய்வாளர்கள் அகழ்வாய்வுகளின்போது எலும்புகளைத் தவிர பிற பண்பாட்டு எச்சங்களுக்கும் சிறப்பிடம் தந்து அவற்றையும் நுணுகி ஆராயவேண்டும்.

புதைபடிவங்களை ஆராயும் தொல்மானிடவியலாரின் பணி பல சிக்கல்களைக் கொண்டதாகும். ஒரு புதைபடிவம் அகழாய்வு செய்து கண்டெடுக்கப்பட்டவுடன் ஆய்வாளரின் முதல் பணி அதன்காலத்தை வரையறுப்பதாகும். பின்னர் மனிதப் படிமலர்ச்சியின் காலவரிசையில் (chronology) அப்புதைபடிவம் கொண்டுள்ள உறவைக் கண்டறிவதாகும். அதற்கடுத்து, மனித மூதாதையர்களின் மலர்ச்சி எந்த நிலையிலிருந்து எந்த நிலைக்கு மாறியது என்ற படிமலர்ச்சித் தொடர்ச்சியில், கண்டெடுக்கப்பட்ட புதைபடிவம் எவ்வகைச் சான்றுகளை அளிக்கிறது என்பதை முடிவு செய்தல். இது மிக மிகச் சிக்கலான ஆய்வுப் பணியாகும். கண்டெடுக்கப்பட்ட புதைபடிவமானது மனிதன், மனிதனின் மூதாதையர்கள் (மனிதரல்லாத உயர்பாலூட்டிகள்) அல்லது அவற்றின் மூதாதையர்கள் (குரங்குகள்) ஆகிய இவற்றுள் எதனுடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளது என்பத புதைபடிவ ஆய்வுகளில் மிகப்பெரும் சவாலாகும். ஏனெனில் அண்மைக் காலம்வரை சில புதைபடிவங்களின் கால வரிசையைத் தொடர்படுத்திக் கூறுவதில் மாறுபட்ட கருத்துக்கள் இருந்துவந்தன. அதற்குக் காரணம் புதைபடிவங்களின் எலும்புகளும் பிற எச்சங்களும் முழுமையான நிலையில் கிடைக்காததேயாகும். இக்காலத் தொல்லுயிரியல் வளர்ச்சி மூலம் புதைபடிவங்களின் காலத்தைக் கணக்கிடும் முறைகள் வலுவாகியுள்ளன. ஆதலின் உடல்சார் மானிடவியலில் தொல்லுயிரியல் ஓர் இன்றியமையாத பிரிவாகத் திகழ்கிறது.

### 5.1.3.9.ஒப்பியல் உடற்கூற்றியல்

உடல்சார் மானிடவியலின் இன்றியமையாத பெரும் பிரிவுகளுள் ஒப்பியல் உடற்கூற்றியலும் ஒன்று. படிமலர்ச்சி ஆய்வுகளிலும், புதைபடிவ ஆய்வுகளிலும், மனித இனங்களுக்குக்கிடையே உள்ள வேறுபாடுகளை அறியும் ஆய்வுகளிலும் இப்பிரிவின் பங்கு இன்றியமையாததாக உள்ளது.

மனிதப் படிமலர்ச்சியின் வரலாறு என்பது உயிரினங்களின் உடலமைப்புகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான மாற்றங்களின் வரலாறேயாகும். (Gabrial Ward Lasker, *physical Anthropology* New

York: Holt, Rinehart and Winston, 1976, p.20) இன்று மனிதர்கள் அவர்களுக்கென்று கொண்டுள்ள உடற்பண்புகள் மனிதரல்லாத உயர்பாலூட்டிகளின் உடலமைப்பிலிருந்து பெற்ற மாறுபாடாகும். மனிதனின் தோற்றத்தைத் (origin) துல்லியமாகக் காண வேண்டுமானால் மனிதனுக்கும் மனிதரல்லாத உயர்பாலூட்டிகளுக்கும் இடையேயுள்ள பொதுப்பண்புகளை நீக்கி ஒவ்வொரு குழுவுக்குமான தனிப்பண்புகளை இனங்காண வேண்டும். அதற்கு இக்கால மனிதனின் உடற்கூற்றையும் பிற உயர்பாலூட்டிகளின் உடற்கூற்றையும் ஒப்பீடு செய்ய வேண்டியதாகிறது. (Philip L. Stein and Bruce M.Rowe, *physical Anthropology* New York: McGraw – Hill. P.20)

குறிப்பு

உடற்கூற்றியல் அறிஞர்கள் பொது உடற்கூற்றியலில் வல்லுநர்கள். உடல்சார் மானிடவியலார் மனிதன், உயர்பாலூட்டிகள் ஆகிய இரண்டின் படிமலர்ச்சி சார்ந்த உடற்கூற்றியலில் வல்லுநர்கள். இவ்விரு துறையினரும் ஒன்று சேர்ந்து புதைபடிவங்களின் எலும்புகளைக் கொண்டு விலங்கினத்தின் உருவத்தை மதிப்பிடுவர். வாழும் உயர்பாலூட்டிகளின் எலும்புகளின் அமைப்புகளைப் பற்றியும், அதன் மெல்லிய தசைகள், திசுக்கள் போன்றவற்றின் அமைப்புகளைப் பற்றியும் உடல்சார் மானிடவியலார் தெளிவான அறிவினைப் பெற்றுள்ளதால் அற்றுப்போன உயிரிகளை வாழும் உயிரிகளளோடு ஒப்பமைப்படுத்தி வகைப்படுத்த இயலுகிறது.

உயர்பாலூட்டிகளின் வரிசையில் இடம்பெற்றுள்ள பல்வேறு குடும்பங்களைச் (family) சேர்ந்த விலங்குகள் படி மலர்ச்சிக் காலத்தினூடே எவ்வாறு மாற்றங்களைப் பெற்றுத் தோன்றின என்பதை அறிவதில் ஒப்பீட்டு உடற்கூற்றியல் பெரிதும் உதவுகிறது. இன்று வாழும் உயர்பாலூட்டிகளுக்கிடையில் நிலவும் படிமலர்ச்சித் தொடர்புகளை அறிவதில் 1960களில் ஒரு புதிய முறை உருவாக்கப்பட்டது. அம்முறையைக் கொண்டு ஆய்வாளர்கள் பல்வேறு குடும்பங்களைச் சேர்ந்த உயர்பாலூட்டிகளின் இரத்தச் சிவப்பணுக்களின் (haemoglobin) அமைப்பையும், புரத ஊண்நீரின் (serum protein) அமைப்பையும் நுணுகி ஆராய்ந்தனர். இரத்தச் சிவப்பணுக்கள், புரத ஊண்நீர், அவற்றின் மூலக்கூறுகள் (molecules) ஆகிய அனைத்தும் படிமலர்ச்சிக் காலத்தினூடே ஒரு நிலையான வீதத்தில்மாறிக் கொண்டே வந்துள்ளதை ஆய்வாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். (Gabrial Ward Lasker, *physical Anthropology*, op. cit., p.53-55) அதைக் கொண்டு உயர் பாலூட்டி வரிசையைச் சேர்ந்த விலங்கினங்கள் எந்தக் காலம் வரை பொதுவான மரபினைப் பெற்றிருந்தன என்றும், எப்போது அவற்றின் அமைப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டன என்றும், மனிதப் படிமலர்ச்சியோடு ஒப்பிடும் போது எது எதற்கடுத்து தோன்றியது என்றும் மதிப்பிட முடிகிறது. (Philip L. Stein Bruce M. Rowe, *Physical Anthropology*, op. cit.,p.269)

குறிப்பு

ஆலன் வில்சன், வின்செென்ட் சாரிச் ஆகிய ஆய்வாளர்கள் மேற்கூறிய முறையைக் கொண்டு 1960களில் புதைபடிவங்களின் தொகுதிவழி வரலாற்றைக் 'Phylogeny' என்னும் சொல் மரபு வழியில் தொடர்புடைய (genetically related) பல உயிரினங்களின் படிமலர்ச்சி வரலாற்றைக் குறிக்கும். உயிரினங்களின் வகைப்பாட்டில் 'phylum' என்னம் சொல் 'தொகுதி' என கையாளப்படுவதால், 'phyogeny' என்பது 'தொகுதிவழி வரலாறு' எனக் குறிக்கப் பெறுகிறது. 'phylogeny-க்கு நேர்மாறானது 'ontogeny' ஆகும். இது ஒரு தனிப்பட்ட உயிரியின் படிமலர்ச்சி வரலாற்றைக் குறிக்கிறது. ஆகவே இது 'தனிஉயிர் வரலாறு' (ontogeny) எனச் சொல்லாக்கம் செய்யப்பெறுகிறது.) கணித்துள்ளனர். இவர்கள் செய்த ஓர் ஆய்வு மனித இரத்தத்திலுள்ள மூலக்கூறுகளோடு ஒத்துள்ளன என்பதை உறுதிப்படுத்துகிறது. மற்ற உயர்பாலூட்டிகளின் இரத்த மூலக்கூறுகள் குறைந்த அளவில் மட்டுமே ஒத்துள்ளன. இதன்மூலம் வாலில்லாக் குரங்குகள் மனிதனின் நேர் மூதாதையர் என்பது உறுதியாகிறது. (Elmer S.Miller and Charles A. Weitz, *introductionto Anthropology*, op. cit.,p.27)

### 5.1.3.10.எலும்பியலும் பல்லியலும்

எலும்புகளையும் பற்களையும் பற்றிய அறிவியலே எலும்பியலும் பல்லியலும் ஆகும். உடல்சார் மானிடவயிலில் இப்பிரிவுகள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன. ஏனெனில் எலும்புகள், பற்கள் ஆகிய இவ்விரண்டு உடற்கூறுகளே பல மில்லியன் ஆண்டுகளாகச் சிதைவுறாமல் மண்ணில் புதைந்து கிடக்கின்றன. இவை கடந்தகால படிமலர்ச்சியை மீட்டுருவாக்க பெரிதும் உதவுகின்றன.

முன் வரலாற்றுக் காலத்திய (prehistoric period) மக்கள் தொகையின் அமைப்பினை ஆராய்வதில் மானிடவியலார் பற்களையும் எலும்புகளையுமே மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். இவ்விரு கூறுகளும் மக்கள் தொகையின் இரண்டு அடிப்படைப் பண்புகளைச் சுட்டிக்காட்டுகின்றன. அதாவது இவை மக்களின் பால்தன்மை, வயதுத்தன்மை ஆகிய இரண்டையும் வெளிப்படுத்தக் கூடியன. (Gabriel Ward Lasker, *physical Anthropology*, op.cit., pp.319-330) கிடைக்கும் எலும்புகளையும் பற்களையும் கொண்டு அவை ஆண் பாலுக்குரியதா, பெண்பாலுக்குரியதா, இளங்குழந்தைக்குரியதா, வளரும் வயதினருக்குரியதா, முதிர்ந்த வயதினருக்குரியதா என்பனவற்றை மதிப்பிடமுடியும். இப்பண்புகளை அறிவதன்மூலம் ஓர்இடத்திற்குரிய மக்கள்தொகையின் பால் வீதம், வயது வீதம், பிறப்பு இறப்பு வீதங்கள், சராசரி வாழும் வயது முதலானவற்றை மதிப்பிடலாம். (Ibid, pp.318-353) அ

இக்கால உடல்சார் மானிடவியலார் மேலும் ஒருபடி மேலே சென்று புதைபடிவச் சான்றுகள் மூலம் அக்கால மனிதச் சூழலியலையும் (human ecology) விலங்கினங்களின் உடற்பண்புகளையும்

குறிப்பு

விளக்குகின்றனர். அகழாய்வில் கிடைக்கும் எலும்புகளையும் பற்களையும் கொண்டு அப்பகுதியில் வாழ்ந்த உயிரினங்களின் சூழலை மதிப்பிட பல ஆய்வு முறைகளை இவர்கள் கொண்டுள்ளனர். உயிரினங்களின் உணவமைப்போடு பற்கள் மிகவும் தொடர்புடையன. (Ibid,pp.330-31) தாவர உண்ணிகளின் பற்களமைப்பும் விலங்குண்ணிகளின் பற்களமைப்பும் வெவ்வேறானவை. விலங்குண்ணிகளுள் மிகச் சிறு விலங்குகளை உண்ணும் பழக்கமுடையவற்றிற்கும் பெரும் விலங்குகளைக் கொன்று உண்ணும் பழக்கமுடையவற்றிற்கும் பற்களில் வேறுபாடுகள் உள்ளன. ஆகவே, வெட்டுப் பற்கள், கோரைப் பற்கள், முன், பின் கடைவாய்ப் பற்கள் ஆகியவற்றின் தன்மைகளைக் கொண்டு அதனதன் உணவு முறையை மதிப்பிட முடியும். ஒரு பகுதியைச் சேர்ந்த உயிரினங்களின் உணவு முறை அப்பகுதியின் சுற்றுச் சூழலோடு நெருக்கமாகத் தொடர்பு கொண்டுள்ளதால் கிடைக்கும் தரவுகளைக்கொண்டு அந்தந்தப் பகுதியின் சூழலியலையும் மதிப்பாய்வு செய்ய முடியும். (Ibid, pp.330-40)

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உடல்சார் மானிடவியலார் உலகின் பல பகுதிகளில் அகழாய்வு செய்தனர். அப்பகுதிகளில் கண்டெடுக்கப் பட்ட மண்டையோடுகளையும் பிற உடற்பகுதிகளையும் கொண்டு அங்கு வாழ்ந்த தொல் மனிதர்களைப் பல்வேறு இனங்களாக வகைப்படுத்தினர். இவ்வகைத் தரவுகள் இனவகைப் பாட்டிற்குப் பயன்படுவது மட்டுமல்லாமல் இவ்வினங்களின் படிமலர்ச்சியினை அறியவும் வழிகோலுகின்றன. அதோடு மக்களிடம் காணப்படும் நோய்களையும், அவர்களின் மரபுப் பண்புகளையும் (genetic characters), எலும்புகளும் பற்களும் பல சான்றுகளைக் கொண்டுள்ளன.

### 5.1.3.11.விலங்கின நடத்தையியல்

இப்பிரிவு உடல்சார் மானிடவியலுக்கு மட்டும் உரியதன்று. விலங்கினங்களின் நடத்தை முறைகளை அறிவதில் பல்வேறு துறையினர் ஆர்வங் கொண்டுள்ளனர். ஆயினும், உயர்பாலூட்டிகளின் நடத்தை முறைகளை அறிவதில் உடல்சார் மானிடவியலாரும் பண்பாட்டு மானிடவியலாரும் பெரிதும் அக்கறை காட்டுகின்றனர். உயர்பாலூட்டிகளை அதன் இயற்கைச் சூழலிலும், விலங்கினப் பூங்காக்களிலும் (Zoological parks), ஆய்வுக்கூடங்களிலும் அல்லது பிற செய்கைச் சூழலிலும் ஆய்வு செய்யும் முறை 1950, 60களில் அதன் உச்ச நிலைக்குச் சென்றது. பெரும்பாலான ஆய்வுகள் அவை இயல்பாய்ச் சுற்றித் திரியும் காட்டுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகை ஆய்வுகள் மூலம் உயர்பாலூட்டிகளின் சமுதாய வாழ்க்கை, உணவு ஈட்டும் முறைகள். பால்சார்ந்த வாழ்க்கை, கருத்துப் புலப்படுத்தும் முறை (communication system), வாழும் காட்டுப் பகுதிகளில் அவை கொண்டுள்ள ஆளுகை முறை, பல்வேறு செயல்களில் அவை வெளிப்படுத்தும் நடத்தை முறைகள் போன்ற

குறிப்பு

பலவற்றைப் பற்றி அறிய முடிந்தது. உயல்பாலூட்டிகளின் புதை படிவங்களைக் கொண்டோ அவற்றைச் செயற்கைச் சூழலில் வைத்து ஆய்வு செய்யும்போதோ கிடைக்காத விவரங்களை மேற்படி ஆய்வுகள் தந்தன.

புத்துலகப் பரப்பிலும் மேற்கொள்ளப்பட்ட இவ்வகை ஆய்வுகள் தொல்மனிதன் (proto-humans) எவ்வாறான நடத்தை முறைகளைக் கொண்டிருந்தான்? அவற்றிற்கான காரணங்கள் என்னென்ன? என்பனவற்றை விளக்கின. இவ்வகை ஆய்வுகளுள் சிம்பன் சிக்களைப் (chimpanzees) பற்றி இலாவிக் குட்டால் செய்த ஆய்வும், கொரில்லாக்களைப் (gorillas) பற்றி ஜார்ஜ் ஷாலர் செய்த ஆய்வும், பபூன்களைப் (baboons) பற்றி இர்வன் திவோர் செய்த ஆய்வும் குறிப்பிடத்தகுந்தவற்றுள் சில.

பண்பாட்டு மானிடவியலார் விலங்கின நடத்தை முறைகளை அறிவதில் உடல்சார் மானிடவியலாரிடமிருந்து வேறுபடுகின்றனர். ஒரு குறிப்பிட்ட சமுதாய முறை (social organization) உண்டாவதற்குச் சுற்றுச்சூழல் (environment) எவ்வகையில் பங்குபெறுகிறது என்பதும், சமுதாய நடத்தையை உண்டாக்குவதில் சூழலியல் காரணிகள் (ecological factors) எவ்வாறு பங்குபெறுகின்றன என்பதும் பண்பாட்டு மானிடவியலாரின் முதன்மையான நோக்கங்களாகும். இவைதவிர ஒரு குறிப்பிட்ட குழுவிற்குள் இடம்பெறும் குழு நடவடிக்கைகள், ஆதிக்க விலங்குகள், ஒடுங்கி வாழும் விலங்குகள், அவற்றின் நடத்தை முறைகள் முதுலானவற்றை ஆராய்வதும் இந்நோக்கங்களுள் அடங்கும்.

உடல்சார் மானிடவியலார் விலங்குகளின் நடத்தை முறைகளை மட்டும் ஆராய்வதோடு நிற்காமல் மனிதர்களின் நடத்தை முறைகளையும் ஆராய்கின்றனர். இவர்கள் ஈடுபடும் இப்பிரிவு சமுதாய உயிரியல் (Sociobiology) எனப்படும். சமுதாய உயிரியலானது பல துறை அறிவைத் தேடும் வகையில் அமைந்துள்ளது. உயிரியல் அறிவும் சமுதாயப் பண்பாட்டு அறிவும் இதில் தலையானவை. மனிதர்கள் அனைவரும் உயிரியல் அடிப்படையில் ஒத்தவர்கள். உடற்கூறுகள், உடல்தொழில் முதலான அனைத்தும் எல்லா மனிதர்களுக்கும் பொதுவானவை. அவ்வாறிருக்க மக்கள் குழுவினர் தனித்தனி வாழ்க்கை முறையையும் பண்பாட்டையும் கொண்டுள்ளனர். அதற்குக் காரணம் அவரவர் வாழும் புவிச் சூழலேயாகும். அதன்வழி அமைவதே அவரவர் பண்பாடாகும்.

மேற்கூறிய கருத்துகளை உற்றுநோக்கும்போது உயிரியலும் பண்பாடும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படுகிறது என்பதை உறுதிப்படுத்த முடியும். இதில் உயிரியல் கூறுகள் மேலோங்கிக் காணப்படாமல் உள்ளார்ந்த நிலையில் இருந்தாலுங்கூட அவற்றின் செயல்கள் மனித நடத்தை முறையை அமைப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன. அதே நேரத்தில் நடத்தை முறையை அமைப்பதில்

பண்பாடு வெளிப்படையாக செயல்படுவதைப்போல் காணப்படினும் அதன்பங்கு உயிரியல் கூறுகளின் பங்கினை விடக் குறைவேயாகும்.



சமுதாய உயிரியலைச் சிலர் உயிர்சார் இலக்கணம் விதிகளைக் கொண்டு மொழியின் அமைப்பைப் பொருள் காண்கின்றோமோ அவ்வாறே சமுதாய உயிரியலார் படிமலர்ச்சி நிகழ்வோடும் பண்பாட்டு அமைப்போடும் இணைந்த உயிர்சார் இலக்கணத்தைக் கொண்ட மனிதர்கள் எந்தெந்த முறையான நடத்தை முறைகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர் என ஆராய்கின்றனர். இதில் அடிப்படைக் கருத்து என்னவெனில், இலக்கணம் எவ்வாறு ஒரு மொழியின் எல்லையை வரையறுக்கிறதோ அவ்வாறே உயிர்சார் இலக்கணமும் மனித நடத்தை முறைகளுக்கு ஓர் எல்லையை வரையறை செய்கிறது என்பதாகும். இன்றைய சமுதாய உயிரியலார் மனிதனையும் விலங்குகளையும் இணைத்து மேற்கூறிய பரப்புகளில் ஆராய்ந்து வருகின்றனர்.

## 5.2.இனவியல்

இக்கால மனிதனின் அனைத்து இனங்களும் நியாண்டர்தால் (Neandertal) மூதாதையாயிலிருந்து ஒரே சிறப்பினமாகத் (species) தோன்றியவையாகும். பல்வேறு காரணிகளின் தாக்கத்தினால் இச்சிறப்பினத்திற்குள் பல வேறுபாடுகள் ஏற்பட்டு இன்று பல இனங்களாகப் பிரிவுபட்டுள்ளன. இதன் அனைத்துத் தன்மைகளையும் ஆராய்வதே இனவியலாகும்.

ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள் பிற இனத்தவர்களிடமிருந்து எண்ணற்ற பண்புகளில் வேறுபடுகின்றனர். இப்பண்புகளுள் சில எளிய மரபுக் கூறுகளால் (simple genetic traits) நிருணயிக்கப் படுகின்றன. ஏனைய கூறுகள் சிக்கல் வாய்ந்த மரபுக் கூறுகளால் (complex genetic traits) நிருணயிக்கப்படுகின்றன. (Elmer S. Miller and Charles A Wietz., *introduction to Anthropology*, op. cit., p.29)

உடல் நீரிலுள்ள சில புரதங்களின் (proteins) அமைப்பைப் பார்க்கும்போது அவை மரபுக் கூறுகளால் ஏற்படுத்தப் படுகின்றன. இப்புரதங்கள் அமினோ அமிலங்களின் (amino acids) கூட்டிணைப்போல் உருவாகின்றன. அமினோ அமிலங்களோ சில குறிப்பிட்ட மரபணுக்களால் உண்டாகின்றன. ஆகையால் இம்மரபணுக்கள் இணையும் பாங்கின் அடிப்படையிலே புதரங்களின் அமைப்பும் அமினோ அமிலங்களின் அமைப்பும் ஏற்படுகின்றன. இரத்தம் எளிய மரபணுக் கூறுகளால் ஆக்கப்பெற்றது. இதனுள் பல கூறுகள் இடம்பெற்றுள்ளன. சில இடம்பெறவில்லை. இதனடிப்படையிலேயே இரத்தம் பல வகைகளாக (A, B, AB, O) வகைப்படுத்தப்படுகின்றன. இந்த எளிய மரபணுக் கூறுகளின் அடுக்கு நிகழ்வை (frequency) அல்லது எது நிகழும், எண்ணிக்கையை கண்டுபிடிக்க முடியும். (Ibid, p.29) இதனடிப் படையிலேயே உயிரியலாரும் உடல்சார் மானிடவியலாரும் மனித இனங்களில் நிகழும்

உடனடி மாற்றம் (mutation), மரபணுப் பெயர்ச்சி (genetic draift), மரபணு ஓட்டம் (gene flow), இயற்கைத் தேர்வு (natural selection) முதலானவற்றை ஆராய்கின்றனர்.

**குறிப்பு**

மனிதனின் பெரும்பாலான உடற்பண்புகள் சிக்கலான மரபணுக் கூறுகளால் உண்டாகின்றன. எடுத்துக்காட்டாக, உடல் உயரம், தோல் நிறம் போன்றவை இவ்வகைக் கூறுகளால் நிருணயிக்கப்படுகின்றன. சிக்கல் வாய்ந்த மரபுக்கூறுகள் அதன் பண்புகளை வெளிப்படுத்தும்போது அவற்றைச் சுற்றுச் சூழல் (environment), காலநிலை (climate) போன்ற புறச்சூழற் கூறுகள் பெரும்பாலும் கட்டுப்படுத்துகின்றன. அவ்வாறே குறை உணவு உடல் வளர்ச்சியைக் குறைக்கும் சிறந்த ஊட்ட உணவு மரபணுக் கூறுகளின் வெளிப்பாட்டை மிகுதியான அளவு ஊக்குவிக்கும். மேற்கூறிய இவ்வனைத்துக் கூறுகளின் அடிப்படையிலேயே மக்களிடம் வேறுபாடுகள் நிலவுகின்றன.

மனித குலத்தைப் பல இனங்களாகப் பிரிப்பதற்கு மானிடவியலார் பல அலகுகளைக் கையாளுகின்றனர். (இனவகைப்பாட்டின் அலகுகளைப் பற்றி விரிவாக அறிய விழைவோர் பின்வரும் கட்டுரையைக்காண்க. பக்வத்சலபாரதி, “இனவகைப்பாட்டின் அலகுகள்” வாழ்வியற் களஞ்சியம் (தஞ்சாவூர், தமிழ் பல்கலைக்கழகம்) தொகுதி, 4, பக்.589-597) பெரும்பாலானவை உடல் தோற்றப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டவை. சில உடற்கூற்றியற் பண்புகளை அடிப்படையாகக் கொண்டவை இப்பண்புகளுள் குறிப்பிடத்தக்கவை தோலின் நிறம், மூக்கமைப்பு, முக வடிவம், தலைமயிர், தலையமைப்பு, கண், உடலுயர்வளவு (stature), தோற்கூற்றியல், இரத்த வகைகள். த∴ப்பி காரணி (duffy factor), சுவை உணர்வோரும் சுவை உணராதவர்களும் (மக்களுள் பெரும்பான்மையோர் பினைல் தாயே கார்பமைடுவின் (Phenlythiocarbomide – PTC) சுவையை உணரக் கூடியவர்கள். இதன் நீர்த்த அமிலத்தை வடித்தாளில் நனைத்து ஒருவரைச் சுவைக்கச் செய்யும் போது அவரால் ஒருவித கசப்பான சுவையை உணர முடியும். இச்சுவையை உணர்பவர்களின் அடுக்கு நிகழ்வு (frequency) பல்வேறு இனத்தவர்களிடையே வேறுபடுகிறது. இப்பண்பைக் கொண்டு மக்களைப் பல இனங்களாக வகைப்படுத்தலாம்.) (tasters and non-tasters), காது குரும்பி (ear wax) முதலானவை ஆகும்.

மேற்கூறிய இப்பண்புகளைக் கொண்டு மனித இனத்தை வகைப்படுத்தும்போது அறிஞர்கள் ஏதோ சில பண்புகளுக்குச் சிறப்பிடம் கொடுத்து வகைப்படுத்தியதால் பல வகைப்பாடுகள் வழக்கிற்கு வந்தன. பொதுவாக இனங்களைக் காக்கேசியர் (Caucasiods), மங்கோலியர் (Mongoloids), நீக்ரோவினர் (Negroids) என மூவகையாகப் பிரிப்பர். வில்லியம்பாய்டு 5 இனங்களாகவும், கூன் 9 இனங்களாகவும், பிரிட்செல் 32 இனங்களாகவும் பிரிப்பார். (Theodosius Dobzhansky, *Mankind Evolving : The Evolution of the Human Species* (New Have : Yale

குறிப்பு

University Press, 1962, p.266) இதற்கடுத்து, மானிடவியலார் சிலர் இனங்களைப் புவியமைப்பிற்கேற்ப வகைப்படுத்தினர். 'ஸ்டான்லி எம் கார்ன்' என்னும் அறிஞர் மனித இனத்தைப் புவியல்சார் இனங்களாகப் (geographicalraces) பகுத்தார். (S.M.Garn, *Human Races* springfiled, Illionis : Charles C.Thomas, 1971, pp.152 – 57) பிற்கால மானிடவியலார் மக்களின் மரபுப் பண்புகளின் அடிப்படையிலும், இனப்பெருக்க முறைகளின் அடிப்படையிலும், இனங்களைப் பேரினம் (macro-race), நுண்ணினம் (micro – race), இனப்பெருக்க மக்கள்தொகை (breeding population), வட்டார இனம் (local – race) போன்ற பல பிரிவுகளாக வகைப்படுத்த முயன்றுள்ளனர். (மனித இனங்களின் வகைபாடுகளைப் பற்றி விரிவாக அறிய விழைவோர் பின்வரும் கட்டுரைகளைக் காண்க. பக்தவத்சலபாரதி, "இனங்கள் மனிதர்". வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 4, பக்.566-78) பக்தவத்சலபாரதி, "இந்திய இனங்கள்" வாழ்வியற்களஞ்சியம், தொகுதி 3, பக்.278 – 83)

இன்று பெரும்பாலான மானிடவியலார் 'இனம்' (race) என்னும் கோட்பாட்டை முதன்மையாகக் கொண்டு ஆராய்வதில்லை. மனிதப் படிமலர்ச்சியின் கொள்கைகளைச் சோதித்துப் பார்ப்பதில் இன்றைய ஆய்வாளர்கள் 'இனம்' என்ற பெரும் பரப்புடைய கோட்பாட்டை எடுத்துக்கொள்ளாமல் தனித்தனி இன மாதிரிகளை (case studies) மட்டுமே எடுத்தக் கொள்கின்றனர். ஏனெனில், மக்கள் அவர்கள் வாழும் சுற்றுச் சூழலிற்கேற்ப தகவமையும் பண்புகளைப் பெற்றுள்ளனர் என்பதால் அவர்களைத் தனித்தனியே, அந்தந்தச் சூழலின் பின்னணியில் மட்டுமே ஆராய வேண்டுமென விரும்புகின்றனர். எடுத்துக்காட்டாக, உயரம் மிகுந்த மலைப்பகுதி மக்கள் அடர்த்தி குறைந்த காற்றை மிகுதியாக இழுக்க வேண்டியுள்ளதால் விரிந்த மார்பினையும், கொள்ளளவு மிகுந்த நுரையீரல்களையும் பெற்றுள்ளனர். (Richard B. Mazess, "Human Adaptation to High Altitude, in Physiological Anthropology," ed. Albert Damon (New York: Oxford University Press, 1975, pp.180-82) இவை சமநிலமக்களுக்கு நேர்மாறானவை, அண்மைக்கால ஆய்வு முறைகளின்படி மனித மரபணுப் பண்புகள் மிக நீண்டகாலத் தகவமைப்புக்கு உட்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

மனித வேறுபாடுகளுக்கான காரணங்கள் பற்றித் தொடக்க காலத்தில் அறிவியல் முறையிலான அறிவு வளரவில்லை என்பதால் இன வேறுபாட்டுணர்வு (racism) தலை விரித்தாடியது. வெள்ளை இனத்தவர்கள் உயர்ந்தவர்கள் என்றும் பிற இனத்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் வாதாடியதுடன் அவர்கள் கருத்திற்கு அறிவியல் அடிப்படையில் உண்மை காண அலைந்தனர். இக் காலகட்டத்தில்தான் உடல்சார் மானிடவியலாரும் பிற துறை அறிஞர்களும் அக்கருத்தை மறுத்தனர். இனவெறிக்குட்பட்ட அவர்களின் கொள்கையைப் பொய்யாக்கிய பெருமை மானிடவியலாரைச் சேரும். மண்டையோடுகளின் அளவுகள், பண்பாடுகள்

குறிப்பு

வேறுபட்டிருக்கக் காரணம், மக்களின் தகவமைப்புப் பண்புகள் போன்ற பல உண்மைகளை விளக்கி வெள்ளையர்கள் மட்டும் மிகுந்த நுண்ணறிவு ஈவு (IQ) பெற்றுள்ளனர் என்ற மாயக் கருத்தைப் பொய்யாக்கினர்.

## 5.3.மானிட உடலளவையியல்

மக்களின் பல்வேறு வகையான உடல் தோற்றம் பற்றியும், அதன் தன்மைகள் பற்றியும், ஆராய வேண்டியதன் அவசியத்தை மிகத் தொடக்கக் காலத்திலேயே மானிடவியலார் உணர்ந்தனர். அதனால் முகிழ்த்ததே மானிட உடலளவையியல் (anthropometry) மனித வேறுபாடுகளையறிய உடலளவுகள் மிகவும் இன்றியமையாதன. உடல்சார் மானிடவியலார் உடலளவையை முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்து ஆராய்கின்றனர். அவை: "புறத்தோற்ற உடலளவையியல் (somatometry), மண்டையோட்டளவையியல் (craniometry), எலும்பளவையியல் (osteometry) முதல் பிரிவு உயிர்வாழும் மக்களின் புற உறுப்புகளின் அளவுகளை எடுக்கிறது. மனிதனின் உடலுறுப்புகளுள் மண்டையோட்டைப் போல் வேறு எந்தப் பகுதியும் மிகுதியான பண்புகளைக் கொண்டிருக்கவில்லை. ஆகவே அப்பகுதியை இரண்டாம் பிரிவான மண்டையோட்டளவையியல் பிரிவு ஆராய்கிறது. இவ்வகை ஆய்வில் இறந்த மனிதனின் மண்டையோடுகளே அளக்கப் படுகின்றன. மூன்றாவது பிரிவான எலும்பளவையியல் இறந்த மனிதனின் எலும்புகளை அளந்து மனித வேறுபாடுகளின் தன்மைகளை விளக்குகிறது.

மனிதர்களை வகைப்படுத்துவதில் இரத்தக் குழுக்கள் மிகுந்த பயனுள்ளவையாக உள்ளதால் 'ரத்தவியல்' (serology) பற்றிய அறிவு இன்றியமையாததாக உள்ளது. இப்பிரிவு பெரும்பாலும் மானிட உடலளவையியலில் ஓர் உட்பிரிவாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

### 5.3.1.தோற்கூற்றியல்

மனிதனின் உள்ளங்கைகளிலும், உள்ளங்கால்களிலும், விரல்களிலும் உள்ள இரேகைகள், வரியமைப்புகள் (ridge patterns) முதலானவற்றையும் தலைச் சுழிகளையும் பற்றி அறியும் பிரிவே தோற்கூற்றியலாகும். இது உடல்சார் மானிடவியலின் முதன்மையான உட்பிரிவுகளுள் ஒன்று. முதலில் இப்பிரிவு தோற்கூற்றியல் கூறுகளைக் கொண்டு மனித இனங்களை அடையாளங்காணும் பிரிவாகத் தோன்றியது. இன்று இப்பிரிவின் அறிவு பல நிலைகளில் வளர்ச்சி பெற்று உடற்கூற்றியல், கருவியல், மருத்துவவியல் போன்ற பல துறைகளில் பயனுடையதாக உள்ளது.

மனிதர்களின் உடற்பண்புகள் கூட்டு மரபணுக்களால் (polygenes) நிருணயிக்கப்படுகின்றன. அவ்வாறே ஒவ்வொரு மக்களினத்திலும் அவ்வினத்திற்கென்றே தனிப்பட்ட பண்புகளைக் கொண்டு செல்லும் கூட்டு

குறிப்பு

மரபணுக்கள் உள்ளன. அவை புறச்சூழலால் பாதிக்கப்படாதவை : மரபு வழியில் வருபவை. எடுத்துக்காட்டாக, காக்கேசியர், மங்கோலியர், நீக்ரோவினர் போன்றோர் ஒருவருக்கொருவர் முற்றிலும் மாறுபட்ட பண்புகளைக் கொண்டுள்ளனர் அல்லது ஒவ்வொரு வட்டார இனத்தினரும் வேறுபட்ட பண்புகளைக் கொண்டுள்ளனர்.

தோற்கூற்றியல் கூறுகளும் கூட்டு மரபணுக்களால் நெறிப்படுத்தப்படுகின்றன. (polygenically controlled). எனவே இக்கூட்டு மரபணுக்கள் ஒன்றோடு ஒன்று சேரும் முறையிலும், அவற்றின் பண்புகள் வெளிப்படும் முறையிலும் ஏற்படும் மாற்றமே தோற்கூற்றியல் பண்புகள் ஒவ்வோர் இனத்தவரிடமும் வேறுபட்டிருப்பதற்குக் காரணமாகும். (H. Cummins and C. Midlo, Finger Prints on Palms and Soles : An Introduction to Dermatoglyphics New York : Dover Publications, 1961, pp.3-5)

மனித உடலில் உள்ளங்கை, உள்ளங்கால், விரல்கள் ஆகிய பகுதிகளைத் தவிர வேறு எந்தப் பகுதியிலும் இரேகைகளும் வரியமைப்புகளும் இல்லை. இப் பண்புகள் இனத்திற்கு இனம் எவ்வாறு மாறுபட்டுள்ளன என்பதைத் தோற்கூற்றியலார் ஆராய்கின்றனர். இதை ஆராயும் பொருட்டுத் தோற்கூற்றியலை விரல் தோற்கூற்றியல் (finger dermatoglyphics), உள்ளங்கைத் தோற்கூற்றியல் (planter dermatoglyphics) என மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கொள்கின்றனர்.

## 5.4.தொகுத்துக் காண்போம்

உடல்சார் மானிடவியலின் சிறப்புக் கூறுகளைப் பற்றி மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

மானிடவியலின் உட்கூறுகள் பற்றியும், படிமலர்ச்சியியல் பற்றியும், இனவியல் பற்றியும், மானிட உடல் அளவையியல் பற்றியும் மாணவர்கள் தெரிந்து கொண்டீர்கள்.

## 5.5.சோதித்தறியும் வினாக்கள்

மானிடவியல்-சொல் விளக்கம் தருக

தார்வினியம் பற்றி நீவீர் அறிவன யாவை?

இனவியல் பிரிவு மானிடவியலில் இன்றியமையாததா? ஆய்க.

மானிட உடல் அளவையியல் பற்றிக் குறிப்பு எழுதுக.

**5.6.பயிற்சி வினாக்கள்:**

மானிடவியலின் உட்பிரிவுகள் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

உடல்சார் மானிடவியலின் படிநிலைகளை விவரி.

## 5.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

குறிப்பு

பக்தவத்சலபாரதி, மானிடவியல் கோட்பாடுகள், அடையாளம் பதிப்பகம், திருச்சி.

பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

# கூறு - 6 : மனிதச் சூழலியல் - உளவியல்சார் மானிடவியல்

குறிப்பு

## 6.1. அறிமுகம்

இப்பகுதியில் மனிதனைச் சார்ந்துள்ள சூழலியல் பற்றியும், உளவியல்சார் மானிடவியல் பற்றியும் அறியலாம்.

## 6.2. குறிக்கோள்கள்

மனிதனைச் சார்ந்துள்ள சூழலியல் பற்றி அறிந்து கொள்வீர்கள்

மனிதனின் உளம்சார்ந்த செயல்பாடுகள் அனைத்து நடவடிக்கைகளுக்கும் காரணமாக அமைவதால் உளவியல்சார் மானிடவியல் பற்றிய விளக்கங்களை மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

## 6.3. மனிதச் சூழலியலும் உளவியல்சார் மானிடவியலும்

மக்கள் இன்று ஏறக்குறைய உலகின் அனைத்துச் சூழ்நிலைகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இது எவ்வகையான சூழ்நிலையையும் ஏற்று வாழ இயலும் என்ற மனிதனின் அறிவியல் முன்னேற்றத்தைக் காட்டுகிறது அல்லது சூழ்நிலையோடு முழுமையாகத் தகவமைந்து வாழும் தன்மையை மக்கள் பெற்றுள்ளனர் என்பதைக் காட்டுகிறது. கடுங்குளிர் மிகுந்த தென் துருவம், வடதுருவம், நீரில்லாத – வெப்பம் மிகுந்த பாலை வளப் பகுதி, உயரம் மிகுந்த மலைப்பகுதி போன்ற எண்ணற்ற சூழ்நிலைகளில் வாழும் மக்கள் உடற் செயலிலும், மரபணுப் பண்பிலும், உருவத் தோற்றத்திலும் எண்ணற்ற மாற்றங்கள் பெற்று வாழ்கின்றனர். (பக்தவத்சலபாரதி, ‘‘தகவமைப்பு” வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 9, பக்.723 – 28)

கடல் மட்டத்தில் வாழ்வோர் அவர்கள் சுவாசிக்கும் காற்றில் 21 விழுக்காடு உயிர்வாயு (oxygen) உள்ளது. உயரம் மிகுந்த மலைப் பகுதிகளில் உயிர் வாயுவின் விழுக்காடு அதே நிலையில் இருந்தாலும் காற்றழுத்தம் குறைவானவதால் ஒவ்வொரு முறை மூச்சு இழுக்கும்போதும் குறைவான அளவில் உயிர்வாயு உட்செல்கிறது. (William A, Stini, *Econology and Human Adaptation* Dubuque, lowa : Wm. C.Brown, 1975, p.53) அதனால் அப்பகுதிகளில் வாழ்வோரிடம் வேகமாக மூச்சிழுக்கும் முறை ஒரு சாதாரண உடலியல் கூறாகக் காணப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு வகையான சுற்றுச்சூழலுடன் மக்கள் கொண்டுள்ள தகவமைப்பு முறைகள். சுற்றுச்சூழலுடன் மக்கள் கொண்டுள்ள கூட்டுவாழ்க்கை (symbiosis), உடற்கூற்றியல், உடலியக்கம், உயிர் வேதிநிலை, நோய்முறைகள் முதலானவற்றை மனிதச் சூழலியல் பிரிவு ஆராய்கிறது. வேறு சில அறிவியல் பிரிவுகளும் மனிதச் சூழலியல் ஆய்வுப் பரப்பினைக் கொண்டுள்ளன. இருப்பினும் உடல்சார்

குறிப்பு

மானிடவியல் மேம்கூறிய கூறுகளை மனிதனை முன்னிலைப் படுத்தியும் பண்பாட்டுப் பின்னணியைக் கருத்தில் கொண்டும் ஆராய்கிறது. மனிதச் சூழலியலை ஆராயும் இப்பிரிவு பெரும்பான்மையில் மக்களின் தகவமைப்பு முறைகளை ஆராயும் மானிடவியல் என்றும் கூறப்பெறும்.

மனித இனக்குழுக்களிடம் காணப்படும். உயிர்சார் வேறுபாடுகளையும், ஒற்றுமைகளையும், மரபுப்பண்புகளின் அமைப்புகளையும், பிறப்பு இறப்பு வீதங்களின் முறைகளையும் மனித மரபியல் (human genetics) அணுகுமுறையில் உடல்சார் மானிடவியலார் ஆராய்கின்றனர். அதோடு, மக்களின் இனப்பெருக்க வீதம், பால்சார்ந்த மக்கள் வீதத்தில் மரபணுப்பெயர்ச்சி (genetic drift) ஏற்கும் நிலைகள் போன்றவற்றையும் இப்பிரிவு ஆராய்கிறது.

குடித்தொகை மரபியல் பிரிவானது மக்களிடையே காணப்படும் இணைதல் முறைகளையும் (mating patterns) அதனோடு தொடர்புற்ற குடித்தொகைச் சமநிலை (population equilibrium), இனப்பெருக்க மக்கள் தொகை (breeding population) ஆகியவற்றின் தன்மைகளையும் ஆராய்கிறது. ஒரு சமுதாயத்தின் குடித்தொகை அமைப்பானது நேரடியாக இனப்பெருக்க மக்கள் தொகையின் அமைப்பைச் சார்ந்துள்ளது. இனப்பெருக்க மக்கள் தொகையின் செயற்பாட்டினாலேயே குடித்தொகையின் சமநிலையும் அறுதியிடப்படுகிறது.

இணைதல் (mating) என்பது ஒருவர் அவரது சமுதாய அமைப்பிற்கேற்ப ஒருவரை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொண்டு பால் வாழ்வில் ஈடுபடுவதைக் குறிக்கும். குடித்தொகை அமைப்பில் இணைதல் முறைகள் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளன. ஏனெனில், குடித்தொகையில் ஏற்படும் நுண்படிமலர்ச்சி (micro-evolution), மரபணுக்களில் ஏற்படும் உடனடி மாற்றம் (mutation) போன்றவை இணைதல் முறைகளால் ஏற்படுவன. இவ்வனைத்துக் கூறுகளையும் ஆராயும் இப்பிரிவு குடித்தொகையியல்சார் மானிடவியல் (demographic anthropology) என்றும் கூறப்பெறும்.

## 6.4.கருவியலும் உடலியங்கியலும்

கருத்தோற்றத்திலிருந்து இறப்பு வரை மனித உடலியகத்தில் ஏற்படும் அனைத்துக் கூறுகளையும் ஆராயும் முறை உடல்சார் மானிடவியலில் ஒரு பகுதியாக உள்ளது. திணைக் குடிகளின் கருவளம், கருச்செழிப்பு முறைகள். அதனைச் சார்ந்த நம்பிக்கைகள், உணவு ஊட்டம், உடலியங்கியல், வளர்ச்சிமுறை (growth) முதலான உயிரிக் காரணிகளை ஒப்பிட்டு, கரு முதல் முதிர்ச்சி பெற்ற மனிதன் வரை இடம்பெறும் அனைத்து உடலியல் கூறுகளை ஆராய்வது இப்பிரிவின் நோக்கமாகும்.

## 6.5.உணவியல்சார் மானிடவியல்

குறிப்பு

மக்கள் அவர்கள் வாழும் சுற்றுச் சூழலை முழுமையாகப் பயன்படுத்தி அவர்களுக்குத் தேவையான உணவினை ஈட்டுவதில்லை. அவரவர் பண்பாட்டால் அறுதியிடப்பட்ட உணவுப் பொருள்களை மட்டுமே சுற்றுச் சூழலிலிருந்து பெறுகின்றனர். எவற்றை உண்பது, எவற்றைத் தவிர்ப்பது, எவை என்னென்ன ஊட்டச் சத்தினைக் கொண்டுள்ளது போன்ற அறிவு அவரவர் பண்பாட்டோடு சார்புடையது. ஒரு பண்பாட்டின் உணவியல் கோட்பாடுகள் அப்பண்பாட்டைச் சேர்ந்த மக்களின் உடலமைப்பையும் உடலியக்கத்தையும் அறுதியிடும் தன்மையைப் பெற்றுள்ளன.

ஆப்பிரிக்காவில் வாழும் சில பழங்குடிகள் பாலைக் குடிப்பதில்லை. இவ்வகை வழக்கம் உலகின் வேறுசில பகுதிகளிலும் உள்ளது. (Gail G. Harrison, "Primary Adult Lactase Deficiency : A problem in Anthropological Genetics" *American Anthropologist,* 77, No.4, December 1975, pp.812- 35. கீழை நாட்டு மக்களுள் சிலர் (orientals), தெற்கு ஐரோப்பியர்களுள் சிலர், மத்தியதரைக் கடல் பகுதியைச் சோந்த அரேபயிாக்ள், யூதர்கள், மேற்கு ஆப்பிரிக்கர்களுள் சிலர், வட அமெரிக்க நீக்ரோக்களுள் சிலர், அமெரிக்க இந்தியர்களுள் சிலர், எஸ்கிமோக்களுள் ஒரு பகுதியினர் ஆகிய இவர்கள் அனைவரும் பாலைக் குடிப்பதில்லை. குறிப்பாக வயது வந்தோர் (adult) பாலைக் குடிப்பதில்லை. அதற்குக் காரணம் பாலிலுள்ள சர்க்கரைச் சத்தைச் செரிக்க உதவும் லேக்டேஸ் (lactase) என்ற நொதிப்பி (enzyme) அவர்களிடம் இல்லாமையாகும். இது உடலியல் தகவமைப்பாகவோ மரபணுக்கள் ஒன்று சேரும் முறையில் (genetic combination) ஏற்பட்ட பண்பாகவோ இருக்கலாம். (Ibid, pp.826-29) மனிதர்கள் அனைவரும் ஒரு காலத்தில் இந்த நொதிப்பியைப் பெற்றிருக்கவில்லை. சூழ்நிலையோடு தகவமையும் காலத்தில் பெரும்பான்மையோர் பெற்றுவிட்டனர். ஏனையோர் பெறாமலேயே உள்ளனர். (Rober D. McCracken, "Lactase Deficiency : An Example of Dietary Evolution", *current Anthroplogy,* 21 : No.4 – 5. Oct – December 1971, pp.479 – 500)

மக்கள் அவரவர் உண்ணும் சாதாரண உணவிற்கும், தேர்ந்தெடுத்து உண்ணும் சிறப்பு உணவிற்கும், பிற ஊட்ட உணவிற்கும் பல்வேறு காரணங்களைக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு பண்பாட்டிலும் அதற்கான காரணங்கள் ஆயிரக் கணக்கிலுள்ளன. அவையனைத்தையும் உயிரியல்சார் நோக்கில் ஆராய்வதே உணவியல்சார் மானிடவியலாரின் பணியாகும். இவ்வகை ஆய்வுகளில் ஓர் இனம் அதன் சுற்றுச் சூழலைப் பயன்படுத்தி அதன் உயிர்சார் ஆற்றலை (biomass) அந்த சுற்றுச் சூழலின் மொத்த உயிர்சார் ஆற்றலோடு எவ்வாறு பொருத்தம்

பெற்றதாகச் செய்து கொள்கிறது என்பது முதன்மையான அணுகுமுறையாக உள்ளது.

குறிப்பு

## 6.6.மூலக்கூற்று உயிரியல்

மூலக்கூற்று உயிரியல் அணுகுமுறையுடன் இனக்குழுக்களிடமும் உயர்பாலூட்டிகளிடமும் மூலக்கூறுகளின் பண்புகள் எவ்வாறு வகைப்படுகின்றன என்பதை அறிவதில் ஒருசாரார் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர். இவர்கள், பிறழ்நிலை இரத்தச் சிவப்பணுக்கள் (abnormal haemoglobin), பிறழ்நிலை மரபணுக்கள், பிற பிறழ்நிலை உயிரணுக்கள் ஆகியவற்றின் தன்மைகளையும், குன்றிய உடலமைப்புத் தோன்றுவதற்கான காரணங்களையும் ஆராய்கின்றனர். இவ்வகை ஆய்வுகள் மருத்துவ மானிடவியலிலும், உடலியங்கியல்சார் மானிடவியலிலும், இனமேம்பாட்டியலிலும் பயனுடையதாக உள்ளன.

## 6.7.இனமேம்பாட்டியல்

குறிப்பிட்ட சில அணுகுமுறைகளில் சிறந்த மனித குலத்தை உருவாக்கும் ஒரு பிரிவே இனமேம்பாட்டியலாகும். இத்துறையை சர் பிரான்சிஸ் கால்டன் என்பவர் தோற்றுவித்தார். இனமேம்பாட்டியல் என்னும் பொருளுடைய 'eugenics' என்ற கிரேக்கச் சொல்லுக்க 'நன்றாகப் பிறத்தல்' (well – born) அல்லது 'மேம்பட்ட மரபணுக்கள்' (engens) என்பது பொருளாகும்.

உடலாலும் உள்ளத்தாலும் வலிமையான சந்ததியினரைப் பெற இனப்பெருக்கம் செய்து அதன் மூலம் சிறந்த மனித இனத்தை உருவாக்குவதே இனமேம்பாட்டியலின் குறிக்கோளாகும். மரபு வழியில் குறைபாடுகள் கொண்ட சந்ததியினர் உருவாவதை இது ஆதரிக்கவில்லை. சிறந்த கருவளமுள்ளவர்களை நிலைநிறுத்தி, குறைபாடுடையவர்களை நீக்கியோ மேம்படுத்தியோ வளமான மனித இனத்தை உருவாக்கும் வழிமுறைகளை காண்பதில் இத்துறை இரண்டு உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை : ஆக்கமுறை இனமேம்பாட்டியல் (positive eugenics), எதிர்மறை இனமேம்பாட்டியல் (negative eugenics), ஆக்கமுறை இனமேம்பாட்டியல் மேற்கூறிய பண்புகளைக் கொண்டு செல்லும் மரபணுக்களை (genes) மனிதன மரபணுப் பொதுச் சேர்மத்திலிருந்து (gene pool) குறையாமலிருக்க வழி கூறுகிறது. எதிர்மறை இனமேம்பாட்டியல் விரும்பத்தகாத பண்புகளை ஏற்படுத்தும் மரபணுக்களைத் தடுத்துக் குறைக்க வழிகூறுகிறது. இவ்விரண்டு பிரிவுகளுமே மனிதர்களின் மரபணுப் பொதுச் சேர்மத்தில் காணப்படும் கொல்லும் தன்மையுடைய மரபணுக்களின் (lethal genes) நிகழ்தன்மையைக் குறைப்பதற்கான அணுகுமுறைகளைக் கொண்டுள்ளன. (Gorden Allen, "Eugenics," *in International Encyclopaedia of the Social Sciences* New york : The Macmillan and The Free Press)

குறிப்பு

மனித இனத்தின் பண்புகளை வளம்பெறச் செய்ய இணக்கமான கலப்பினை ஆதரித்தல், மனிதர்களின் கருத்திசு ஊண்நீரை (germplasm) ஊக்கப்படுத்துதல், வாழும் சூழ்நிலையை மேம்படுத்துதல், சிறந்த ஊட்ட உணவு, சிறந்த கல்வி, சிறந்த மருத்துவ வசதி முதலானவற்றை இனமேம்பாட்டியலார் வற்புறுத்துகின்றனர். இருப்பினும், இனமேம்பாட்டியல் துறை சிறப்புறாமைக்குக் காரணம் இவர்களின் அணுகுமுறைகளுள் ஒன்றான விந்தணுக்களைச் சேகரித்து செயற்கை முறையில் கருவூட்டல், சிறந்த பண்புகள் கொண்டோரை இணைத்தல் முதலான ஏற்பற்ற முறைகளை ஆதரித்தமையாகும். (Ibid, pp.196-97)

## 6.8.மருத்துவ மானிடவியல்

பண்பாட்டுக் கூறுகளுக்கும் உயிரியல் கூறுகளுக்கும் உள்ள உறவை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்வதன் மூலம் மனித நோயியல் பற்றி முழுமையாக அறிய முடியும் என்பார் கார்ல்டன் கஜ்டுசெக். இவர் உடல்சார் மானிடவியல் அணுகுமுறையோடும், கொள்கை நோயியல் (epidemiology) அணுகுமுறையோடும், ஆய்வு செய்து 1976-இல் நோபல் பரிசு பெற்றவர். நியூகினி மேட்டுநில மக்களிடம் குரு (kuru) என்ற ஒருவகை நோய் பெருமளவில் காணப்பட்டது. அது ஒருவகை நரம்பியல் நோய், அம்மக்கள் சடங்குப் படையலில் வைக்கும் உணவானது சமைக்கப்படாத மூளைப்பகுதியாகும். அதை உண்பதால் அந்நோய் ஏற்படுகிறது என்பதை கஜ்டுசெக் அறிந்தார். (Cited in Elmer S. Miller and Charles A. Weitz, op. cit., p.6) நியூகினியல் ∴போர் (Fore) எனப்படும் பகுதியைச் சேர்ந்த மக்களிடம் மட்டும் அந்நோய் மிகுதியாக இருப்பதற்கான காரணத்தையும் இவர் அறிந்தார். அந்நோயை எதிர்த்துப் போரிடாமல் அதனை ஏற்கும் தன்மையுடைய மரபணுக்களே அவர்களிடம் உள்ளன என்பது நீண்ட கால ஆய்விற்குப் பின் தெரிய வந்தது.

தமிழ்நாட்டில் ஏலகிரி மலையில் வாழும் மலையாளிப் பழங்குடிகளின் பண்பாட்டுச் சின்னமாகப் பன்றி திகழ்கிறது. மண ஒப்பந்தத்தின் அடையாளமாகவும், மணப்பரிசாகவும், மருந்து உணவாகவும், தெய்வ வழிபாட்டிலும் முன்னோர் வழிபாட்டிலும் படைக்கும் படையல் உணவாகவும், விதைப்பு, அறுவடைச் சடங்குப் படையலாகவும், உயிர்ப்பலி கொடுக்கும் விலங்காகவும், கருவளத்தை மேம்படுத்தும் உணவாகவும், மங்கல நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் போது வழிபடும் வழிபாட்டுப் பொருளாகவும் பன்றி அவர்களிடம் சிறப்பிடம் பெற்றுள்ளது. அவர்களுள் பெரும்பான்மையோர் பாதியளவு வெந்த பன்றி இறைச்சியை உண்கின்றனர். அதற்கு அவர்களிடமுள்ள சில நம்பிக்கைகளே காரணம். பாதியளவு வெந்த இறைச்சியை உண்பதால் மூளைக் காய்ச்சல் உள்பட பல நோய்களுக்கு ஆளாகியுள்ளனர். (பக்தவத்சலபாரதி, "பண்பாட்டு மாற்றமும் மரபுவழி நம்பிக்கையும் : பழங்குடிப் பண்பாட்டில் ஓர் ஆய்வு", ஆராய்ச்சி, 1988, இதழ் 27, பக்.5-12) மேற்கூறிய வகைகளில் உலகம் முழுவதும் பல பழங்குடிப்

பண்பாடுகளில் பன்றி சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை மா்வின் ஹேரிஸ் சுட்டிக்காட்டுகிறாா். (Marvin Harris, *Cows, pigs, Wars and Witches* New York : Vintage, 1975)

குறிப்பு

நகர மக்களிடமிருந்தும், ஊரக மக்களிடமிருந்தும் தனித்து ஒதுங்கி வாழும் பழங்குடியினரின் பெரும்பாலான நோய்கள் அவரவா் பண்பாட்டோடு தொடா்புடையன. அனைவருக்கும் பொதுவான நோய்களைத் தீா்ப்பதில் மருத்துவவியலாா் நவீன பொதுவான மருத்துவ முறைகளைக் கண்டுபிடித்துள்ளனா். ஆனால் மாறுபட்டச் சூழலில் வாழும் எண்ணற்ற இனக்குழுவினரின் நோய் முறைகளை அறிவதிலும், அவா்களுக்கு நவீன மருத்துவ முறையைக் கொண்டு மருத்துவம் செய்வதிலும் மருத்துவவியலாா் வெற்றிபெற இயலவில்லை. ஏனெனில், இனக்குழுவினரின் நோயியலில் சுற்றுச்சூழல், நோய் பற்றிய நம்பிக்கைகள், சடங்குகள். முந்திரம், உணவுமுறை, தொழில்நுட்பம் போன்ற பல கூறுகள் ஒன்றோடு ஒன்று பிண்ணிப் பிணைந்துள்ளன. ஒன்றைப் புரிந்து கொண்டாலொழிய மற்றொன்றைப் புரிந்து கொள்ள முடியாது. இந்நிலையில் மருத்துவ மானிடவியலாா் முழுதளாவிய அணுகுமுறையில் இனக்குழுவினரின் நோய் முறைகளை ஆராய்வதில் ஈடுபட்டுள்ளனா்.

## 6.9.உடல்சாா் கருத்துக்கள்

ஒரு துறையின் கொள்கைகள், கருத்தாக்கங்கள் (comcepts), அணுகுமுறைகள், செயல்முறைகள் முதலானவற்றைக் கொண்டு மனித வாழ்வில் நேரடிப் பயன்களை ஏற்படுத்த முடியுமானால் அதுவே அத்துறையின் பயன்முறையாகும். வாழ்வியற் புலத்தைச் சோ்ந்த சில துறைகளும் அறிவியற் புலத்தைச் சோ்ந்த பெரும்பாலான துறைகளும் பயன்முறை சாா்ந்தவையாக (applied scope) உள்ளன. அந்த வகையில் உடல்சாா் மானிடவியல் மக்களின் நடைமுறை வாழ்வில் நேரடியாகப் பங்கு பெற்றுப் பல வகைகளில் பயனளித்து வருகிறது.

அன்றாடவாழ்வில் பயன்படுத்தும் பெரும்பாலான பொருள்களை வடிவமைப்பதற்கு மக்களின் உடலளவுகள் தேவைப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, நாற்காலிகள், மேசைகள். பேருந்து, தொடா்வண்டி, விமானம் போன்ற பல ஊா்திகளில் அமைக்கப்படும் இருக்கைகள், தலையில் அணியும் கவசங்கள், மூக்கில் அணியும் கண்ணாடிகள் போன்ற பல பொருள்களை ஒவ்வொருவருக்குமெனச் செய்ய இயலாது. பல பிரிவினா்களாகப் பயன்படுத்தும் வகையில் செய்ய வேண்டும். ஆகவே அனைத்துப் பிரிவினா்களுக்குமான பேராளா்களைத் தோ்ந்தெடுத்து அவா்களின் அளவுகளைக் கொண்டு அனைவரும் பயன்பெறத்தக்க வகையில் வடிவமைக்கின்றனா்.

நாம் அணியும் காலணிகளும், புதை காலணிகளும் (shoes) தயாா் நிலையில் கடைகளில் கிடைக்கின்றன. ஒவ்வொருவரும் அவரவா் வயதிற்கேற்பவோ உடல் வளா்ச்சிக்கேற்பவோ உடனே வாங்கி

அணியுமளவிற்குத் தயார் நிலையில் உள்ளன. அவற்றின் நீளம், அகலம், உயரம் அனைத்தும் ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்தோருக்கும் பொருத்தமாக உள்ளன. இது அப்பிரிவைச் சேர்ந்த அனைத்து மக்களுக்குமான அளவுகளின் வீதங்களைக் கணக்கிட்டுச் செய்வதால் மட்டுமே இயலுகிறது. இதைப் போன்றே சாதாரண உடைகள், போர்க் கால உடைகள், விண்வெளி வீரர்கள் பயன்படுத்தும் உடைகள், தலைக் கவசங்கள். இன்ன பிற தயார்நிலைப் பொருள்கள் (readymade goods) அனைத்தும் மக்களின் உடலளவுகளைப் பெற்று அவற்றைப் பல நிலைகளில் பொதுமைப்படுத்திச் செய்வதால் மட்டுமே தயார்நிலைப் பொருள்களாகச் செய்ய முடிகிறது. இதனால் உற்பத்தியாளருக்கு அடிப்படைப் பொருள்களும் உற்பத்திச் செலவும் பெருமளவு குறைகின்றன. மக்களுக்குக் குறைந்த விலையில் பொருள்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. இதற்கு நேரடியாக உதவுவது மானிட உடலளவையாகும்.

மருத்துவத் துறையிலும் மானிடஉடலளவையியல் மிக்க பயனுடையதாய் உள்ளது. இன்றைய நவீன மருத்துவ உலகில் மனிதனின் பெரும்பாலான உறுப்புகளுக்குச் செயற்கை உறுப்புகள் பொருத்தும் முறை தவிர்க்கவியலாததாக உள்ளது. இவ்வகை உறுப்புகளைத் தயாரிக்கும் நிறுவனங்கள் அனைத்தும் மானிட உடலளவையிலாரின் ஆலோசனையையும், உதவியையும், மேற்பார்வையையும் பெறுகின்றன. மானிட உடலளவையின் பயன்களைக் கூற இதுபோன்ற எண்ணற்ற எடுத்துக்காட்டுகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம். இப்பிரிவின் கருவிகளையும் மக்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்துகின்றனர் தையல்காரர் பயன்படுத்தும் அளவு நாடாவும் ஒரு மானிட உடலளவையியல் கருவியே.

உயிர் வகைப்பாட்டியல் (biotypology) துறையிலும் மானிட உடலளவை மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. மிகச் சிறந்த உயிர் வகைப்பாட்டியலாரான எச். லாகியர் 1834-ஆம் ஆண்டு இலண்டனில் நடந்த பன்னாட்டு மானிடவியல் அறிவியல் கழகத்தில் (International Congrees of Anthropological Science) உடல்சார் மானிடவியலின் தேவையையும் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார். உயிர் வகைப்பாட்டியலில் மானிட உடலளவையியல் பயன்படுத்தப்படுகிறது. பணியாளர்களைத் தேர்வு செய்வதில் குறிப்பாக, படைப்பிரிவு ஊழியர், விளையாட்டு வீரர்களைத் தேர்வு செய்தல், வாழ்க்கைத் தொழில் சார்ந்த பிரிவில் துணை புரிதல், கற்பித்தல்வழி வகைப்படுத்துதல் (pedagogical classification) போன்ற சூழல்களிலும் மனித இனங்களின் உயிர்சார் பண்புகள் எங்கெல்லாம் பகுத்து வகைப்படுத்த வேண்டியுள்ளதோ அச்சூழல்களிலும் இப்பிரிவு பயனுடையதாக உள்ளது.

இராணுவத்தில் ஊழியர்களைத் தேர்வு செய்யும்போது உடல் உறுப்புகளில் தன்மையையும் அளவுகளையும் கண்டறிந்து அவற்றின் அடிப்படையிலேயே படைப் பிரிவில் சேர அனுமதிப்பது

பன்னெடுங்காலமாக கையாளப்படும் முறையாகும். உடலுறுப்புகளைக் கணித்தல், அடையாளக் குறிகளைக் கண்டறிதல், புற உறுப்புகளின் அளவினை எடுத்தல் முதலானவற்றிற்குத் தேர்ச்சி பெற்ற உடல்சார் மானிடவியலார் ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் மருத்துவக் குழுவில் இடம் பெற்றிருப்பர். படைப்பிரிவிற்கு ஆட்களைத் தேர்வு செய்வது மட்டுமல்லாமல் அவர்கள் பயன்படுத்தும் இயந்திரங்களின் இருக்கைகள். துணைப்பொருள்கள், மண்டைக் கவசங்கள். ஆவிக் கவசங்கள் (gasmasks), உடைகள் முதலானவற்றை வடிவமைப்பதிலும் மானிட உடலளவையியலாரின் நிபுணத்துவம் பயன்படுத்தப்படுகிறது.

தண்டனைவியலிலும் குற்றவியலிலும் உடல்சார் மானிடவியல் அறிவு நேரடியாகப் பயன்படுத்தப்படுகிறது. சட்டம் சார்ந்த கணிப்புகளுக்கு, முன்னர்ப் பயன்படுத்தப்பட்ட பெர்ட்டிலன் முறை (Bertilon method) மேலும் மேம்படுத்தப்பட்டு இன்று விரலமைப்பியல் (dactyloscopy) பிரிவில் பயன்படுத்தப்படுகிறது. அண்மைக் காலம் வரை குற்றவியலில் கணிக்கப்படும் உடல் அடையாளங்கள் அனைத்தும் மானிடஉடலளவையின் ஒரு பிரிவான புறத்தோற்ற உடலளவையின் (somatometry) ஒரு பகுதியாகவே இருந்தது. இன்றும் சட்டம் சார்ந்த மருத்துவத்தில் (forensic medicine) இப்பிரிவு மிக்க பயனுடையதாக உள்ளது.

வெள்ளையர்களும் ஐரோப்பியர்களும் உயர்ந்தவர்கள், மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்னும் இன உயர்வுக் கொள்கையைப் (racism) பொய்யாக்கி அது பெரும் பகட்டானது. ஆதாரமற்றது என்று நிரூபித்ததில் உடல்சார் மானிடவியலின் பங்கு தலையானது. மனித குலம் அனைத்திற்கும் மிகப்பெரும் சவாலாக இருந்த இக்கொள்கையைக் காலப்போக்கில் ஒழித்தமை மானிடவியலார் மனித சமுதாயத்திற்காற்றிய பெரும்பணிகளுள் ஒன்று. உடல்சார் மானிடவியலின் பயன்முறைகள் பற்றி இங்குக் கூறியுள்ளவை மிகக் குறைவானவை; விரிவானவையல்ல. உடல்சார் மானிடவியலின் பிற பயன்முறைகள் பற்றி இதன் உட்பிரிவுகளை விளக்கியவற்றிலிருந்தும் அறியலாம்.

## 6.10.தொல்லியல்

தொல்லியலானது பண்பாட்டு மானிடவியல் ஆய்வுப் பரப்போடும், உடல்சார் மானிடவியல் ஆய்வுப் பரப்போடும் தொடர்புடைய ஒரு கதம்பப் பிரிவாக இருந்து வந்துள்ளது. இருப்பினும், இன்று இப்பிரிவு அதற்கென்ற தனி ஆய்வுப்பரப்பையும், ஆய்வுமுறைகளையும், அணுகுமுறைகளையும் கொண்டு ஒரு தனித்துறையாக விளங்குகிறது. முன்வரலாற்றுக் காலத்தில் (prehistoric period) வாழ்ந்த மக்களின் வரலாற்றையும், வாழ்க்கை முறைகளையும், அவர்களின் பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களையும், வளர்ச்சியையும், விளக்கும் அறிவியலே தொல்லியல். வேறு வகையில் கூற வேண்டுமாயின் மனித சமுதாயத்தின் வரலாறு

எழுத்து வடிவத்தில் ஏறுவதற்கு முன்னர் வாழ்ந்த மக்களின் வாழ்வியலைப் பற்றியதே தொல்லியல்.

கடந்த 5000 ஆண்டுகளாக மட்டுமே மனித வரலாறு எழுத்து வடிவத்தில் குறிக்கப் பெற்றுள்ளது. (William A. Haviland, *cultural Anthropology* New York : Holt, Rinehart and Winston), p.6) இக்காலகட்டத்தைச் சேர்ந்த மனித வரலாற்றினை வரலாற்றறிஞர்கள் விளக்கிக் கூறுகின்றனர். ஆனால் பல மில்லியன் ஆண்டுகளாக மனிதப் பண்பாடு தோன்றி வளர்ந்துள்ளது. எழுத்து வடிவத்தில் எழுதப்படாத இக்கால கட்டத்தின் வரலாற்றினை விளக்குவதில் தொல்லியலார் ஈடுபட்டுள்ளனர். மக்கள் விட்டுச் சென்ற பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டு அக்கால மக்களின் பண்பாட்டையும் வாழ்வியலையும் மீட்டுருவாக்கம் செய்கின்றனர். மண்ணுக்கடியில் பெரும்பாலும் மக்கள் பயன்படுத்திய தொழிற் கருவிகளும், இறந்த மக்களுக்காகச் செய்யப்பட்ட ஈமச்சடங்குப் பொருள்களும், புதைபடிவங்களும், மட்பாண்டங்கள், அணிகலன்கள் போன்ற சில பொருள்களும் மட்டுமே கிடைக்கின்றன. அவற்றைக் கொண்ட அம்மக்கள் வாழ்ந்த காலம், சூழ்நிலை, தொழில், சமுதாய வாழ்க்கை, சமய நம்பிக்கைகள், கலை போன்ற பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை ஆராய்கின்றனர். அதனால் தொல்லியல் என்பது இனக்குழு ஒப்பாய்வியலின் ஒரு வகையே என்று கூறுவதும், அதனைத் ‘தொல் இனக்குழு ஒப்பாய்வியல்’ (palacoethnology) என்று கூறுவதும் பொருத்தமானது என்பார் ராட்சிளி.்.ப் பிரௌன். (A.R.Radcliffe-Brown, *Method in Socieal Anthropology,* ed.by M.N.Srinivas (Midway reprint, 1976 p.98. Originally pubhlished by The Unviersity of Chicage Press, Chicago, 1958)

தொல்லியலார் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைக் கற்காலம், செப்புக் காலம், இரும்புக் காலம் என மூன்று கால கட்டமாகப் பிரிக்கின்றனர். கற்காலத்தை, பழங்கற்காலம் (palacolithic period), இடைக்கற்காலம் (Mesolithic period), புதிய கற்காலம் (Neolithic period) என மேலும் மூன்று கால கட்டமாகப் பிரித்து ஆராய்கின்றனர். இந்த ஒவ்வொரு காலத்தையும் மேலும் பல பிரிவுகளாகப் பிரித்துக் கொள்வர். ஒவ்வொரு காலகட்டத்தையும் சேர்ந்த தொழிற் கருவிகள் அம்மக்களின் வளர்ச்சி நிலைகளைக் காட்டுவனவாக உள்ளன. பின்வரும் அட்டவணையில் கற்கருவிகளும், அவற்றின் காலங்களும், பயன்படுத்தப்பட்ட முறைகளும் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு அம்மக்களின் தொழில் நுட்ப வளர்ச்சி நிலைகளை மேலெழுந்தவாரியாக அறியலாம்.

ஒவ்வொரு காலத்திலும் மக்கள் பயன்படுத்த கருவிகளின் தன்மை என்ன, அவற்றை எதற்காகச் செய்தார்கள், எந்த முறையில் செய்தார்கள், கருவிகளின் திறன் என்ன, எந்த வகையான கருவிகள் இயற்கைச் சூழலிற்கேற்ப வெவ்வேறு வகைகளில் பயன்படுத்தப் பட்டன போன்ற கேள்விகளுக்குத் தொல்லியலார் விடை காண்கின்றனர். கற்கருவிகளின்

குறிப்பு

தொழில் நுட்பம் காலத்திற்கேற்ப மாறியுள்ளதால் அது நேரடியாக மக்களின் உணவு ஈட்டும் முறையைப் பிரதிபலிக்கிறது. ஆகவே கற்கருவிகளின் தொழில்நுட்பத்தைக் கொண்டு தொடக்கக் காலம் முதல் மனித வரலாறு எழுத்து வடிவம் பெறும் வரை மக்களின் வாழ்க்கை முறை எவ்வாறெல்லாம் மாற்றம் பெற்று வருந்திருக்கிறத என்பதைப் பெருமளவு மதிப்பிட முடிகிறது.

பழங்கற்காலம் தொடங்கியப்புதிய கற்காலம் வரை மக்கள் கற்கருவிகளைச் செய்து வாழ்ந்த இடங்கள் 24-க்கும் அதிகமாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் அகழாய்வு செய்து எடுத்த கருவிகளைக் கொண்டு தொன்மையான கருவிகள் எப்பகுதியில் தோன்றின என்றும் அதற்கடுத்த வகையான கருவிகள் எங்கெங்குத் தோன்றின என்றும் மதிப்பிட்டு அக்காலத்திய வாழ்க்கை முறையை விளக்குவர். மக்கள் விட்டுச் சென்ற பிற பண்பாட்டு எச்சங்கள், மக்களின் குடியிருப்பு முறை, வாழ்க்கைத் தொழில், கலை, சமய நம்பிக்கைகள் போன்றவற்றை மதிப்பிட முடிகிறது. இதுவரை கிடைத்த சான்றுகளின்படி 100,000 ஆண்டுகளுக்கு முன்னரே மக்கள் சமய நம்பிக்கை கொண்டிருந்தனர் என மதிப்பிடப்படுகிறது. ((CarolR. Ember and Melvin Ember, *Anthropology*, op. cit., p.9)

| **வ. எண்** | **கற்கருவி** | **பயன்பட்டகாலம்** | **கருவியின் பயன்கள்** | **கருவிவகை** |
|---|---|---|---|---|
| 1 | கைக்கோடரி<br>(hand axe) | முதல் பழங்கற்காலம்<br>(lower palaeolithic) | தோண்டுதல் வெட்டுதல் | மூலக்கல் கருவி*<br>(core tool) |
| 2 | நீண்ட கோடரி<br>(lanceolate) | “ | “ | “ |
| 3 | நீள்வட்ட கைக் கோடரி (ovate hand axe) | “ | தோண்டுதல், வேட்டையாடு தல் | “ |
| 4 | வெட்டுக்கருவி<br>(chopper) | “ | வெட்டுதல் வேட்டையாட ல் | “ |
| 5 | பிளப்பான்<br>(cleaver) | முதல்/இடைப் பழங்பற்காலம் | பிளத்தல், வெட்டுதல் | சில்லுக்கருவி<br>(flake tool) |

குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | செதுப்பான் (scrapper) | இடைப்பழங்கற்காலம் (middle palaeolithic) | செதுக்குதல், சீவுதல் | “ |
| 7 | பட்டை அலகு (blade) | கடைப் பழங்கற்காலம் (upper palaeolithic) | வெட்டுதல், வேட்டையாடல் | எலும்புக் கருவி |
| 8 | எரிஈட்டி (harpoon) | கடைப் பழங்கற்காலம் (upper palaeolithic) | வேட்டையாடல் | எலும்புக் கருவி |
| 9 | கட்டியக்கோல் (banton) | “ | சமயச்சார்புடைய கருவி அம்புகளுக்கு | மான் கொம்புக் கருவி |
| 10 | கூர்முனைக் கருவிகள் (points) | வலுவூட்டல் நுண்கருவிக் காலம் (microlithic period) | வேட்டையாடுதல், சண்டையிடுதல் | கூர்முனைக் கற்கருவி |
| 11 | வழவழப்பான கைக் கோடரி (celt) | புதிய கற்காலம் (neolithic) | மரங்களை வெட்டுதல் காய், கிழங்குகளை வெட்டுதல் | மெருகூட்டிய கருவிகள் |
| 12 | வெட்டுக் கருவி (mace – head) | “ | தோண்டு கழிக்குப் பயன்பட்டது | “ |

* ‘மூலக்கல் கருவி’ என்பது கருவி செய்ய தேர்ந்தெடுக்கப்படும் கல்லின் பெரும் பகுதியை அப்படியே பயன்படுத்திக் கொள்வதாகும்.

குறிப்பு

தொல்லியல் ஆய்வுகளுக்கு உடல்சார் மானிடவியலார், மண்ணியலார் ஆகியோரின் நிபுணத்துவம் தேவைப்படுகிறது. அகழாய்வு செய்யும்போது கிடைக்கும் மனிதப் புதைபடிவங்களின் காலத்தையும், அம்மக்களின் பிற வாழ்வியற் கூறுகளையும் விளக்குவதில் உடல்சார் மானிடவியலார் உதவுகின்றனர். அகழாய்வு செய்யும்போது கற்கருவிகள் பல்வேறு மண்ணடுக்குகளைச் சேர்ந்ததாக உள்ளதால் மண்ணியலாரின் உதவியுடன் மண்ணடுக்கியலின் (stratigraphy) காலத்தைக் கணித்து அதன் மூலம் கற்கருவிகளின் காலத்தைக் கணக்கிடுகின்றனர். அவை தவிர காலவரிசையைக் (chronology) கணிப்பதில் தொல்லியலார் அவர்களுக்கென்று பல்வேறு முறைகளைக் கொண்டுள்ளனர். ஆகவே தொல்லியலாரும் உடல்சார் மானிடவியிலாரும் காலப்பரிமாணத்துடன் ஆராயும் ஆய்வு முறையை மானிடவியலுக்குச் சேர்த்துள்ளனர் என்று கூறுவது மிகவும் பொருத்தம். இம்முறை பிற நடத்தைசார் அறிவியல்களில் இல்லை என்றே சொல்லலாம்.

## 6.11. தொகுத்துக் காண்போம் :

மனிதனைச் சார்ந்துள்ள சூழலியல் பற்றி அறிந்து கொண்டீர்கள்.

மனிதனின் உளம்சார்ந்த செயல்பாடுகள் அனைத்து நடவடிக்கைகளுக்கும் காரணமாக அமைவதால் உளவியல்சார் மானிடவியல் பற்றிய விளக்கங்களை மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

## 6.12. சோதித்தறியும் வினாக்கள்

கருவியலும் உடலியங்கியலும் பற்றி நீவீர் அறிவன யாவை?

உணவியலும் மானிடவியலும் பற்றிக் குறிப்பு எழுதுக.

தொல்லியல் மானிடவியலின் பிரிவா? ஆராய்க

## 6.13. பயிற்சி வினாக்கள்:

உளவியல்சார் மானிடவியலின் உட்கூறுகளைப் பற்றி விவரி

உடல்சார்ந்த மானிடவியல் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

## 6.14. மேலும் பயில்வதற்கான நூல்

பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

# கூறு-7 மொழியியல் - பண்பாட்டு மானிடவியல்

குறிப்பு

## 7.1. அறிமுகம்

மானிடவியல் களப்பணிகளில் மொழியியல் பற்றிய அறிவு முதன்மையாகத் தேவைப்பட்டதால் மொழிகளை அறிந்து கொள்ள வேண்டியதன் அவசியம் மானிடவியலின் ஓர் ஒன்றிணைந்த கூறாகக் கருதப்பட்ட தன்மையையும், பண்பாட்டு மானிடவியல் கருத்துக்களையும் இப்பகுதியில் அறிந்து கொள்ளலாம்.

## 7.2. குறிக்கோள்கள்

மொழியியல் ஒப்பியல் அல்லது வரலாற்று மொழியியல் அவற்றின் அமைப்பிலும் பயன்பாட்டு நிலையிலும் எவ்வாறு வேறுபட்டுக் காணப்படுகின்றன என்பதை மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

உலகம் முழுவதும் எண்ணிலடங்கா வகைகளில் பரவி வாழும் சமுதாயங்களின் பண்பாட்டைக் காலப் பரிமாணங்களுடன் ஆராயும் பண்பாட்டு மானிடவியல் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

## 7.3. பண்பாட்டு மானிடவியல்

மானிடவியலின் மற்றுமொரு முதன்மையான பிரிவுமொழியியலாகும். மொழியியல் இன்று தனித்துறையாக விளங்கி வந்தாலும் இத்துறை பண்பாட்டு மானிடவியலின் ஓர் உட்பிரிவாக இருந்து வந்தது. எனினும், மொழியைப் பற்றிய ஆய்வுகள் மானிடவியல் ஆய்வுகளைக் காட்டிலும் காலத்தால் முந்தியவை. தொடக்கக்கால மானிடவியல் களப்பணிகளில் மொழியியல் பற்றிய அறிவு முதன்மையாகத் தேவைப்பட்டது. அதனால் மொழிகளை அறிந்து கொள்ள வேண்டியதன் அவசியம் மானிடவியலின் ஓர் ஒன்றிணைந்த கூறாகக் கருதப்பட்டது. அது முதற்கொண்டே மானிடவியலில் மொழியியல் ஆய்வுகள் பல்கிப் பெருகின.

இன்றைய மானிடவியல்சார் மொழியியலாருள் சிலர், வழக்கிழந்து அற்றுப்போகும் நிலையிலுள்ள மொழிகளைப் பதிவு செய்து ஆராய்கின்றனர். ஏனெனில், தொன்மைக் குடியினர் பலர் பண்பாட்டு மாற்றத்தினால் அவர்களின்திணைப் பண்புகளையும் மொழியையும் விரைந்து இழந்து வருகின்றனர். வேறு சிலர் உடல்சார் மானிடவியலாரைப் போன்று காலப் பரிமாணத்துடன் கூடிய ஆய்வுகளிலும் ஈடுபடுகின்றனர். உலக மொழிகள் எங்கு எவ்வாறு தோன்றின, அவை காலந்தோறும் எவ்வாறு மாறிவந்துள்ளன என்பனவற்றை இவர்கள் ஆராய்கின்றனர். இவ்வகை மொழியியல் ஒப்பியல் அல்லது வரலாற்று மொழியியல் (comparative orhistorical linguistics) எனக் கூறப்பெறும். மற்றுமொருசாரார் இக்கால மொழிகள் அவற்றின் அமைப்பிலும்

குறிப்பு

பயன்பாட்டு நிலையிலும் எவ்வாறு வேறுபட்டுக் காணப்படுகின்றன என்பதை ஆராய்கின்றனர். இது விளக்க மொழியியல் (descriptive linguistics) என வழங்கப்பெறும். மானிடவியல் மொழியியலார் சிலர் மொழிகளுக்குக்கிடையில் உள்ள வேறுபாடுகளை ஆராய்வதை விடுத்து, அனைத்து மொழிகளுக்கும் பொதுவான அமைப்புக்களைக் (universal structures) காண்பதில் ஈடுபடுகின்றனர். இவ்வகை அணுகுமுறைமூலம் மக்கள் அனைவரும் கருத்துப் பொதுவான அமைப்பு முறைகளை அறிய முடிகிறது. இதன்மூலம் மனித மனத்தின் அடிப்படைச் சிந்தனை முறையை விவரிக்க முடிகிறது. இப்பிரிவு அமைப்பியல் மொழியியல் (structural linguistics) எனக் கூறப்படும். ஒருசாரார் மேற்கூறிய நிலைகளிலிருந்து மாறி, பேச்சு வழக்கில் மொழி எவ்வாறு பயன்படுகிறது என்பதை ஆராய்வதில் ஈடுபடுகின்றனர். இவ்வகை மொழியியல் சமுதாய மொழியியல் (socio-linguistics) என வழங்கப்பெறும்.

மானிடவியல்சார் மொழியியலார் பெரும்பாலும் மொழியின் வரலாறு பற்றி அறிவதிலும் நாட்டங் கொண்டுள்ளனர். அவற்றைப் புரிந்து கொள்வதன்மூலம் பண்பாட்டின் அமைப்பைப் புரிந்துகொள்ள முடியுமென நம்புகின்றனர். ஏனெனில், கருத்துப் புலப்படுத்தும் முறையை மொழி மட்டுமே வடிவமைக்கிறது. புற உலகைப் புரிந்து கொள்வதிலும் அவற்றை வெளிப்படுத்துவதிலும் மொழியின் ஆளுகையே மேலோங்கி நிற்கிறது. மொழியின் செல்வாக்கைப் பொருத்தே அம்மக்களின் அறிதிறனும் (congnition) அமைகிறது. மொழிக்கும் பண்பாட்டிற்கும் உள்ள தொடர்புகள் பற்றி ‘பண்பாட்டுக் கோலங்கள்’ என்னும் அத்தியாயத்தில் விரிவாகக் காணலாம்.

உலகம் முழுவதும் எண்ணிலடங்கா வகைகளில் பரவி வாழும் சமுதாயங்களின் பண்பாட்டைக் காலப் பரிமாணங்களுடன் ஆராயும் மானிடவியல் பிரிவே பண்பாட்டு மானிடவியலாகும். இந்நூல் பண்பாட்டு மானிடவியலைப் பற்றியதாகையால் இதுபற்றி விளக்கமான அறிமுகம் ஏதுமில்லாமல் இதன் உட்பிரிகளைக் காண்போம்.

பண்பாட்டு மானிடவியலின் உட்பிரிவுகளில் தொல்லியல், மொழியியல் ஆகிய பிரிவுகள் சேர்க்கப்பட்டாலும் இதன் தலையாய பிரிவுகள் இனக்குழுவியல் (ethnography), இனக்குழு ஒப்பாய்வியல் (ethnology) ஆகிய இரண்டு மட்டுமே.

பண்பாட்டை ஆய்வுப் பரப்பாக எடுத்துக்கொண்டு ஆராய முற்பட்ட தொடக்கக்கால ஆங்கிலேய, அமெரிக்க அறிஞர்களின் அணுகுமுறைகளில் வேறுபாடுகள் ஏற்பட்டதால் இப்பிரிவு பண்பாட்டு மானிடவியல், சமுதாய மானிடவியல் (social anthropology) என இரு பெரும் பிரிவுகளாகப் பாகுபடுகிறது. பண்பாட்டு மானிடவியலார் அமெரிக்க மானிடவியல் மரபினைச் சேர்ந்தவர்கள் என்பதால் இவர்களின் துறை ‘அமெரிக்க மானிடவியல்’ (பண்பாட்டு மானிடவியல்) என்றும் வழங்கப் பெறும் சமுதாய மானிடவியலார் ஆங்கிலேய மானிடவியல் மரபைச்

சேர்ந்தவர்கள் என்பதால் இவர்களின் துறை 'ஆங்கிலேய மானிடவியல்' (சமுதாய மானிடவியல்) என்றும் வழங்கப்பெறும். இவ்விரு பிரிவுகளுக்குள் உள்ள வேறுபாடுகளை இங்குக் காண்போம்.

குறிப்பு

## 7.4.பண்பாட்டு (அமெரிக்க), சமுதாய (ஆங்கிலேய) மானிடவியல்

அமெரிக்கப் பண்பாட்டு மானிடவியலும் ஆங்கிலேயச் சமுதாய மானிடவியலும் அதனதன் அணுகுமுறைகளில் வேற்றுமையைக் காட்டிலும் ஒற்றுமையையே மிகுதியாகப் பெற்றுள்ளன. இவ்விரு நாடுகளைச் சேர்ந்த வருகைப் பேராசிரியர்கள் அவர்கள் செல்லும் நாட்டிலுள்ள பல்கலைக்கழகம் பேராசிரியர்களின் ஆய்வு முறைகளை ஏற்றுக்கொள்ள முற்பட்டனர். அதனால் இரு நாட்டினரின் அணுகுமுறைகள் ஒன்றையொன்று வளம்பெறச் செய்தன. அமெரிக்காவில் இன்றுள்ள மானிடவியல் மாணவர்கள் தொன்மைக்கால அமெரிக்க மானிடவியலறிஞர்களான போவாஸ், லோவி அல்லது குரோபர் போன்றோரின் நூல்களைப் படிப்பதைக் காட்டிலும் இக்கால ஆங்கிலேய மானிடவியலாரின் நூல்களை விரும்பிப் படிக்கின்றனர். இருப்பினும் இவ்விரு நாட்டின் மானிடவியலானது வரலாற்றுக் கால வளர்ச்சியில் பெற்றிருந்த வேறுபாடுகளைப் போன்றே இன்றும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைப் பெற்றுள்ளது.

## 7.5.அமெரிக்க மானிடவியல்

அமெரிக்க மானிடவியல் அதற்கே உரிய தன்மையைப் பெறுவதற்குப் புத்துலகத்தில் பரவி வாழ்ந்த திணைக்குடிகள் பல வழிகளில் காரணமாயிருந்தனர். ஐரோப்பியர்கள் அமெரிக்கப் புத்துலகப் பகுதிகளுக்குச் சென்று குடியேறியது முதற்கொண்டே அமெரிக்க இந்தியர்களைப் பற்றி அறிந்து கொள்வதில் ஆவலுடையவர்களாய் இருந்தனர். இதில் முழுநேர மானிடவியலாரும், ஓய்வ நேரத்தில் பயில்வோரும், மேம்போக்காக மானிடவியல் அறிவினைப்பெற விரும்பியோரும் ஈடுபட்டனர். அமெரிக்க இந்தியர்களின் தோற்றம், இடப்பெயர்ச்சி, ஐரோப்பியர்களின் தொடர்புக்குப்பின் தொடர்புக்குப்பின் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவற்றை ஆராய வேண்டுமென இவர்கள் விரும்பினர். இப்பெரும் ஆய்வுப் பரப்பு அமெரிக்க இனக்குழு ஒப்பாய்விலுக்கு மிகுந்த வளர்ச்சி உண்டென்பதை உறுதிப்படுத்தியது. அமெரிக்க இந்தியர்களைப் பற்றி ஆராய வேண்டுமென்ற ஆர்வம், வரலாற்றிலும், வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாற்றிலும் ஆர்வங் கொண்டதாகும். இந்நிலையில் அமெரிக்க மானிடவியலின் தந்தை பிரான்ஸ் போவாஸ் தொடக்கக் காலத்தில் புவியியல் ஆய்வுகளோடு மிகவம் தொடர்பு பெற்றிருந்தார். அதோடு டில்தேயின் (Dilthey) தாக்கத்தைப் பெற்றிருந்ததால் அவர் இடம் - காலம் (time and space) உள்ளிட்ட ஆய்வுகளையே மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தில்

மிகவம் உறுதியாய் இருந்தார். அந்த ஆய்வுப் போக்கையே தம் மாணவர்களுக்கும் கற்பித்தார்.

**குறிப்பு**

அமெரிக்காவில் மானிடவியல் ஒரு முழுநேரக் கல்வித் துறையாக வளர்ச்சி பெற்ற காலத்தில், அமெரிக்க இந்தியர்கள் கடந்த காலத்தில் கொடுமைப்பட்டிருந்ததைப் போன்றே அப்போதும் பல கொடுமைகளாலும் அடக்கு முறைகளாலும் துன்புற்றிருந்தனர். அமெரிக்க மானிடவியலார் அவர்களின் நிலையை முதன்முதலில் கண்டபோது அவர்கள் ஒரு காலத்தில் செல்வாக்குடனும் பாதுகாப்புடனும் வாழ்ந்து அப்போது சீர் குலைந்து அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர் என்பதைத் தெளிவாக உணர்ந்தனர். அமெரிக்க மானிடவியல் வளர்ச்சி பெற்ற காலம், அங்குச் சிறுபான்மையினருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் அறிவார்ந்த நிலையில் தாராளப்போக்குடன் ஏதாவது செய்ய வேண்டும் என்ற காலமாகும். அந்நிலையில் அம்மக்களின் சமுதாய நலத்திற்காக மானிடவியலார் பலர் முழுநேர முறையில் முனைப்புடன் பணி செய்ய இறங்கினர். சில மானிடவியலார் வளர்ந்து வரும் நாடுகளில் வாழும் மக்களின் சிக்கல்களை ஆராய்வதில் தீவிரமாக இறங்கினர்.

மானிடவியலார் உட்பட அம்மக்களின் பால் ஆர்வம் கொண்ட அனைவரும் அவர்களின் சிக்கல்களையும் துன்பங்களையும் நீக்கி அவர்களின் பண்பாடு அழிவதற்குள் அவர்களின் கடந்தகால வாழ்வு, பாரம்பரியம் முதலானவற்றை எந்த அளவிற்கு மீட்க முடியுமோ அந்த அளவிற்கு மீட்க விரும்பினர். மானிடவியலாரின் இந்த ஆர்வம் அம்மக்களின் தொல் பண்பாட்டினை மீட்டுருவாக்கம் செய்வதற்கு வழிகோலிற்று. அவ்வாய்விற்காக முதியோர்களுடன் நேர் காணல், அம்மக்களின் வரலாற்றோடு தொடர்புடைய தொல்லியல் தரவுகள். பழைய கடிதங்கள், கால இதழ்கள், நாட்குறிப்பேடுகள், தொன்மக் கதைகளை ஆராய்தல் முதலான அனைத்து இனக்குழு வரலாறு (ethnohistory) ஆய்வு முறைகளையும் பயன்படுத்தி அம்மக்களின் வரலாற்றினை மீட்டுருவாக்கம் செய்தனர். மேலும் அம்மக்கள் இடம் பெயர்ந்த நிகழ்ச்சிகள், பண்பாடு மாற்றமடைந்த நிகழ்வுகள் முதலானவற்றோடு தொடர்புற்ற மொழிக்கூறுகளையும் ஆராய்ந்தனர். அதன்மூலம் அமெரிக்க இந்தியர்களைப் பற்றிய ஆய்வு முறை கால அளவில் ஆழ்நிலையில் அமைந்ததுடன் அதன் கண்ணோட்டம் பரந்த நிலையிலும் அமைந்தது.

ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை ஆராயும்போது அதன் முற்கால வரலாற்றை ஒதுக்கி விடுவது மலட்டுத் தன்மைக்கு ஒப்பாகும் என போவாஸ் உறுதியாக நம்பினார். ஒவ்வொரு பண்பாடும் தனித்தனியாக பல வரலாற்று நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் அடிப்படையாகக் கொண்டே ஒட்டு மொத்தமாக உருவெடுக்கிறத என்றும், வரலாற்றுக் காலத்தில் நிகழ்ந்த பல எதிர்பாரா நிகழ்வுகளாலும் பிற கூறுகளின் சேர்மங்களாலும் ஏற்படுவதே பண்பாடு என்றும் போவாஸ் நம்பினார். நிகழ்காலப் பண்பாட்டுக் கூறுகளின் இயக்கத்தில் வரலாற்றுக் கால

குறிப்பு

நிகழ்ச்சிகள் பெரும் பங்கு பெற்றுள்ளன என்பதால் ஒரு பண்பாட்டுக் கூறின் தன்மையை விளக்க முற்படும்போது அதன் முந்தைய வரலாற்றுப் பின்னணியை முழுவதுமாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அப்போதுதான் அதைச் சிறப்பாக விளக்க முடியும் என்னும் கருத்திலும் போவாஸ் உறுதியாக இருந்தார். வரலாற்றுத் தனி நிகழ்வுகளுக்குப் போவாஸ் முக்கியத்துவம் கொடுத்ததால் அவர் நிலையையும், அவர்தம் மாணவர்களின் நிலையையும் மானிடவியலார் வரலாற்றுச் சார்புக் கொள்கையினர் (historical particularists) எனக் குறிப்பிடுவர்.

போவாஸ் தலைமையிலான அமெரிக்க மானிடவியல் ஒவ்வொரு சமுதாயத்தையும் வரலாற்று அணுகுமுறையுடன் ஆராயும் முறையோடு மேலும் பல தனித்தன்மைகளை வளர்த்துக் கொண்டது. போவாஸ் பரந்த ஆர்வங் கொண்டவராதலால் மொழியியல், உடல்சார் மானிடவியல், தொல்லியல் போன்ற பிரிவுகளின் அறிவைப் பண்பாட்டு ஆய்வுகளில் இணைத்துக் கொண்டார்.

பண்பாடு பற்றிய டைலரின் கருத்தாக்கம் மிகவும் பயனுடையது; அது அனைத்தையும் ஒன்றுபடுத்தி அறிகிறது என போவாஸ் உணர்ந்தார். ஆகவே மானிடவியலில் அனைத்தையும் ஒன்றிணைக்கும் பாங்கினைப் 'பண்பாடு' என்னும் கோட்பாடு கொண்டுள்ளதாக போவாசினர் பிரபலப்படுத்தி அதன் பயனை விளக்கிக் கூறி வந்தனர். 'பண்பாடு' என்னும் கோட்பாடு எவ்வளவு முக்கியமானது என்பதைக் கணிதவியலின் 'சுன்னம்' (zero) என்னும் கோட்பாட்டோடு ஒப்பிட்டுப் பேசினர். அதனாலேயே அமெரிக்க மானிடவியலானது பண்பாட்டு மானிடவியல் என வழங்குப் பெறலாயிற்று. (Merwyn S. Garbarino, *Sociocultural Theory in Anthropology,* op. cit., p.49)

அதனையடுத்து, அமெரிக்காவில் விரைந்து பெருகிய மக்கள் தொகையும், அதற்கேற்றாற்போல் பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் எண்ணிக்கையில் பெருகியதும் மானிடவியல் துறையின் பணியிடங்களை மிகுதியாக்கின. ஆய்வுப்பரப்பினைப் பெருக்கிக்கொண்ட நிலையில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பல்வேறு வகையான புதிய ஆய்வுகளை மேற்கொண்டனர். அதனால் அமெரிக்க மானிடவியலின் ஆய்வுத்தன்மை புதுமையாகவும், முற்றிலும் உண்மையானதாகவும் அமைந்தது. ஓர் ஆய்வைப் போன்ற ஆய்வையே மீண்டும் மீண்டும் செய்தல், செய்து முடித்த ஆய்வு முடிவுகளை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ள முயலுதல், பழைய ஆய்வுகளைப் புதிய முறையில் செய்தல் முதலான முறைகளில் அமெரிக்க ஆய்வாளர்கள் ஈடுபடாமல், ஏதாவது புதியதாகச் செய்ய வேண்டுமென எண்ணினர். அதனால் அவர்கள் புதிய புதிய சிக்கல்களை ஆராய்ந்தனர். புதிய உத்திகளைக் கொண்டு சோதனை செய்தனர். ஒரு குறிப்பிட்ட பரப்பிற்குள் ஆய்வுகளைக்

குறுக்கிவிடாமல் பரந்த நிலையில் மேலும் மேலும் ஆராய முனைந்த வேகமே அமெரிக்க மானிடவியலின் தனித்தன்மையாக அமைந்துவிட்டது.

குறிப்பு

அமெரிக்க மானிடவியலானது உடல்சார் மானிடவியல், இனக்குழு ஒப்பாய்வில், தொல்லியல், மொழியியல் ஆகிய பிரிவுகளைப் 'பண்பாடு' என்னும் கோட்பாட்டின்கண் ஒன்றிணைத்துப் புதிய முறையியலுடன் ஒரு முழுதளாவிய, விரிவான துறையாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

## 7.6. ஆங்கிலேய மானிடவியல்

அமெரிக்கப் பண்பாட்டு மானிடவியலைக் காட்டிலும் இங்கிலாந்தில் வளர்ச்சி பெற்ற சமுதாய மானிடவியல் அதன்பரப்பை ஓரளவு கட்டுப்படுத்திக் கொண்ட துறையாகும். ஆனால், மிகவும் ஆழ்நிலையான ஆய்வுப் பரப்பைக் கொண்டதாகும். அதன் அணுகுமுறை முழுதளாவிய நிலையிலும் மிகவும் சூழ்நிலையிலும் அமைந்தது. மாலினோஸ்கியைத் தவிர அனைத்து ஆங்கிலேய மானிடவியலாரும் அமெரிக்கர்கள் பயன்படுத்தும் 'பண்பாடு' என்னும் கோட்பாட்டை எளிதில் கையாள முடியாது எனக் கருதினர். அதனால் அவர்களின் ஆர்வம் சமுதாயக் குழுக்களையும், சமுதாய உறுப்பினர்களிடையே காணப்படும் நிலையான பங்குகளையும் (roles) உறவுகளையும் ஆராய்வதில் மிகுதியானது. அதனாலேயே ஆங்கிலேய மானிடவியல் பெரும்பாலும் 'சமுதாய-மானிடவியல்' எனக் குறிக்கப்படும்.

இக்காலச் சமுதாய மானிடவியலின் தந்தையான ராட்கிளி.்.ப் பிரௌன் சமுதாய மானிடவியலைப் பின்வருமாறு குறிப்பிடுவார். சமுதாய மானிடவியலானது தொன்மைக்குடியினர், பழங்குடியினர், எழுத்தறிவில்லாதார் போன்றோரின் சிறு சமுதாயங்களை முறைப்படியாக ஒப்பிட்டு ஆராய்ந்து அதன்மூலம் மனித சமுதாயத்தின் தன்மையையும் அமைப்பையும் கொள்கை சார்ந்த அளவில் விளக்க முற்படும் அறிவியலாகும். (A.R.Radcliffe – Brown, *Method in Social Antrhopology*, op. cit., pp.133-3)

சமுதாய மானிடவியலார் சமுதாய உறவுகளைப் (social relations) படிப்பதையே முதன்மையான ஆய்வுப் பரப்பாகக் கொண்டுள்ளனர். குறிப்பாக, குடும்பம், உறவுமுறை, வயது அடிப்படைக் குழுக்கள் (age groups), அரசியல் அமைப்பு, சட்டம், சமயம், பொருளாதாரச் செயல்கள் போன்றவற்றை ஆராய்வர். அவை அனைத்தையும் 'சமுதாய அமைப்பு' (social structure) என்ற பெருந்தலைப்பின் கீழ் ஆராய்கின்றனர். சமுதாய அமைப்பின்கீழ் உள்ள கூறுகளை ஆராயும்போது ஓர் அமைப்பின் கூறுகள் மற்றவையோடு எவ்வாறு சார்புடையதாக உள்ளது என்றும், அது அச்சமுதாய அமைப்பில் எவ்வாறான உறவைப் பெற்றுள்ளது என்றும் விவரிப்பதில் மிகுந்த ஆர்வங் காட்டுகின்றனர். அவ்வகையான ஆய்வுகளில் சமுதாயத்தின் கடந்த கால வரலாறு பயன்படுத்தப்படுவதில்லை ஆதலால் சமுதாய மானிடவியல் வரலாற்று

அணுகுமுறையைச் சாராதது (non – historical) அமெரிக்கப் பண்பாட்டு மானிடவியல் இதற்கு நேர்மாறானது என்பதை இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆங்கிலேய சமுதாய மானிடவியலில் ஒப்பீட்டு முறை (comparative method) உயிர் மூச்சாக உள்ளதால் இத்துறை சில வேளைகளில்'ஒப்பீட்டுச் சமுதாயவியல்' (comparative sociology) என்றும் கூறப்பெறும். (Ibid, pp.108-10) ஆங்கிலேயச் சமுதாய மானிடவியலின் தனித்தன்மைக்கு அதன் வரலாற்றுக் கால வளர்ச்சியே காரணமாகும்.

ஆங்கிலேய மானிடவியலாரின் அணுகு முறைகள் அவர்களது பேரரசுக் கொள்கையின் தேவைகளை நிறைவு செய்வதாக அமைந்தன. இருப்பினும், ஆட்சியாளர்களின் அனைத்துத் தேவைகளுக்கும் இந்த அணுகுமுறை வேண்டும் போதெல்லாம் பயன்படுத்தப்பட்டது என்றோ, அதற்காகவே ஏற்படுத்தப் பட்டதென்றோ கூறுமுடியாது. ஆனால், ஆங்கிலேய மானிடவியலார் திணைக்குடிகளின் சமுதாயக் கட்டமைப்பை ஆராய்வதில் பெருமளவு ஈடுபட்டனர். அவர்கள் சொந்த நாட்டிலும் அவர்களின் பேரரசு பரவி இருந்த நாட்டிலும் சென்று ஆய்வு செய்தனர். புத்துலகப் பகுதிகளில் வாழ்ந்த திணைக்குடிகள் அற்றுப்போகும் நிலையிலிருந்தனர். ஆனால் குடியேற்றப் பகுதிகளில் வாழ்ந்த திணைக்குடியினர் அழியும் தருவாயிலில்லை. அவர்களின் மக்கள்தொகை பெரும்பாலும் பெருகிக் கொண்டேயிருந்தது. அதனால் அவர்களைத் தம் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமென்ற எண்ணமே குடியேற்ற அரசு அதிகாரிகளுக்கு இருந்தது. அரசின் அவ்வகையான கொள்கை அதிகாரிகளுக்கு இருந்தது. அரசின் அவ்வகையான கொள்கை மானிடவியலாரிடையே பெருகி நின்ற ஆய்வு வேட்கைக்கு ஏற்றதாக அமைந்தது. குறிப்பாக, திணைக்குடியினர் எவ்வாறு ஓர் அமைப்பாக உள்ளனர். எக்கூறுகள் அவர்களை ஒன்றாக வைத்துள்ளது போன்ற சமுதாய அமைப்புப் பற்றிய அய்வுகளை மேற்கொண்டனர். குடியேற்ற அரசுகள் திணைக்குடிகளை வளர்ச்சிக்கு உட்படுத்தாமல் ஒரே நிலையாக வைத்திருந்தது என்ற கருத்தை மானிடவியலார் கூறத் தவறியதில்லை. இருப்பினும், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தை மட்டும் ஆய்விற்கு எடுத்துக் கொண்டு செயற்பாட்டியல் (functionalism) அணுகுமுறையில் ஆராய இந்நிலை மிகவும் உகந்ததாக இருந்தது. அதனாலேயே ஆங்கிலேய மானிடவியல் செயற்பாட்டியல் சார்ந்ததாக வளர்ச்சி பெற்றது.

இங்கிலாந்து மானிடவியலின் கல்விசார் துறை பரந்து விரிந்த நிலையில் இல்லாமல் ஓரளவு குறுகிய நிலையினைக் கொண்டதாகும். மானிடவியலில் உயர்கல்வி அளிக்கும் நிறுவனங்களின் எண்ணிக்கையையும், உயர் கல்விக்கடுத்துச் செல்ல வேண்டிய பணியிடங்களின் வாய்ப்பையும், துறையின் விரிவாக்கத்தையும் நோக்கினால் அமெரிக்காவை விட இங்கிலாந்தில் அதன் அளவு குறைவாகும். இங்கிலாந்துப் பல்லைக் கழகங்களில் பணியிடங்கள் குறைவான உள்ளது போன்றே கல்விசார் நிலையிலும் பல வேறுபாடுகள் உள்ளன. பெரும்பாலான இங்கிலாந்து பல்கலைக் கழகங்களில்

குறிப்பு

பேராசிரியர்களுக்கு இணையாகப் பலர் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. ஒரு துறையில் முதியோர்கள் பணி விலகும்போது மட்டும் நிரப்பப்படும். பணியிடங்களும் விலகிச் செல்வோரின் ஆலோசனையின் பேரில் அவர்களுக்குப்பின் அந்தப் பதவியை எற்பவர் யார் என முடிவு செய்யப்படுகின்றது. அதனால் இளம் ஆய்வாளர்கள் பொறுப்பிலுள்ளோரைத் திருப்திப்படுத்தும் வகையில் நடந்து கொள்ள வேண்டியுள்ளது. அதோடு முதியோர்க்ள ஈடுபடாத புதிய ஆய்வுப் பரப்புகளில் ஈடுபடுதலும் கூடாது. (Ibid, pp.79-80)

இந்நிலையில் அமெரிக்க மானிடவியலின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது அதன் அணுகுமுறை புதியதாகவும். ஆய்வுகள் தனித்தன்மையானதாகவும், புதிய கோணத்தைக் கொண்டதாகவும், செய்த ஆய்வுகள் சோதித்துப் பார்ப்பதாகவும் அமைந்ததேயாகும். ஆனால் இங்கிலாந்து மானிடவியலின் அணுகுமுறையில் பழைய சிக்கல்களை மீண்டும் மீண்டும் ஆய்வு செய்தல், பழைய கொள்கைகளை மீண்டும் விரிவாக ஆராய்ந்து விளக்குதல் போன்றவையே பெரும்போக்காக அமைந்தன. அவையே அவர்களின் சாதனையாகவும், சிறப்பிடம் பெறுவதற்கான முறையாகவும் கருதப்பட்டன. அவ்வகையான நிலைக்கு ஆங்கிலேய அரசும் ஒரு வகையில் பொறுப்பாகும்.

ஆங்கிலேய அரசின் தேவைகளை உடனுக்குடன் நிறைவு செய்யவேண்டியிருந்ததால் ஆங்கிலேய மானிடவியலில் சமுதாயக் குழுக்களைப் பற்றி அறிவதையே மேலும் மேலும் விரிவாக்க வேண்டியிருந்தது. அதோடு வேலை வாய்ப்பில் குறைவான இடங்களே இருந்ததாலும், முதிய மானிடவியலாரைத் திருப்திப்படுத்தும் முறையில் இளையவர்கள் நடந்து கொள்ள வேண்டியிருந்ததாலும் புதிய பரப்புகளில் ஆய்வுகள் பெருகவில்லை. அதன் விளைவாக ஆங்கிலேய மானிடவியலார் உறவுமுறை ஆய்வுகளிலும், சமுதாய அமைப்புப் பற்றிய ஆய்வுகளிலும் மிகவும் ஆழ்நிலையில் ஆராய்பவாக்ள் என்ற பெயருக்கு இலக்கணமானவர்களாய்த் திகழ்ந்தனர். அதனால் அவர்கள் பண்பாட்டு வரலாற்றியல் ஆய்வுகள், முதலானவற்றைப் பெருமளவு ஒதுக்கி விட்டனர். (Ibid, pp.79-80) இங்கிலாந்தில் மானிடவியல் துறைகளில் உடல்சார் மானிடவியல், தொல்லியல் ஆகிய பிரிவுகள் சேர்க்கப்படாமல் அவை உயிரியல் போன்ற துறைகளில் சேர்க்கப் பட்டுள்ளன அல்லது தனித்துறைகளாக இயங்குகின்றன. அவ்வாறே அமெரிக்க மானிடவியலுக்கென்ற ஆய்வுப் பரப்புகளிலும் ஆங்கிலேயர்கள் ஆய்வுகள் மேற்கொள்வதைத் தவிர்த்து வந்தனர். இன்றும் இங்கிலாந்தில் சமுதாய மானிடவியலின் தனித்தன்மை பெருமளவு காக்கப்பட்டு வருகிறது.

சமுதாய மானிடவியல், பண்பாட்டு மானிடவியல் ஆகிய இரண்டும் தனித்தனி நிலையில் காணப்பட்டாலும் அவை இனக்குழுவியல், இனக்குழு ஒப்பாய்வியல் ஆகிய இரு உட்பிரிவுகளின் அடித்தளத்தின்மீது செயல்படுகின்றன.

## 7.7. இனக்குழுவியல்

குறிப்பு

சமுதாயப் பண்பாட்டு மானிடவியலுக்கு அடித்தளமாகத் திகழ்வது இனக்குழுவியலேயாகும். ‘இனக்குழுவியல்’ என்னும் பொருளுடைய ‘ethnogrphy’ என்னும் ஆங்கிலச் சொல் ‘ethonos’, ‘graphein’ ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெற்றது. ‘ethnos’ என்பதற்கு இனம் (race), இனக்குழு (ethnic group), மக்கள் (people) என்பது பொருள் ‘graphein’ என்பதற்கு ‘எழுதுவது’ (to write) என்பது பொருள். ஆகவே இனக்குழுவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது. ஒரு இனக்குழுவைப் பற்றிய முழுமையான படிப்பு என்னும் வகையில் இப்பிரிவை ‘இனக்குழுவியல்’ என்று கூறலாம்.

சமுதாயப் பண்பாட்டு மானிடவியலார் சமுதாயத்தின் அமைப்பையும், பண்பாட்டின் அமைப்பையும் புரிந்து கொள்வதில் ஈடுபட்டுள்ளதால் அவர்கள் மக்கள் வாழுமிடங்களை ஆய்வுக்கூடங்களாக ஏற்றுக் கொள்கின்றனர். ஆய்வுக் களத்தில் ஒவ்வொரு மானிடவியலாரும் நேரடியாகப் பங்கு பெற்று அந்தந்தச் சமுதாயப்பண்பாட்டு அமைப்புகளை முழுமையாகப் புரிந்து கொண்டு அதுபற்றிய செய்திகளை முறையாகத் தொகுப்பர். ஆகவே இனக்குழுவியல் என்பது ஒரு தனிப்பட்ட சமூகத்தின் பண்பாட்டை முழுமையாகப் புரிந்துகொண்டு அவற்றை முறையாகத் தொகுத்து வழங்குதலாகும்.

முதல் அத்தியாயத்தில் கூறியபடி, மனித சமுதாயங்களைப் பற்றிய செய்திகள் புத்தாய்வாளர்களாலும், பயணிகளாலும், சமயப்பரப்பிகளாலும் தொகுக்கப் பெற்றன. அவ்வகைச் செய்திகள் பல வகைகளில் போதுமானதாயிராததால் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்ஸ் போவாஸ் போன்ற பயிற்சி பெற்ற மானிடவியலார் நேரடியாக மக்களிடம் சென்று ஆய்வுசெய்யத் தொடங்கினர்.

இக்கால இனக்குழுவியல் ஆய்வுகள் அனைத்தும் மிகவும் பயிற்சி பெற்ற மானிடவியலாரால் மேற்கொள்ளப்படுகின்றன. அவர்கள் ‘பங்கேற்று உற்றுநோக்கல் முறை’ (participant observation), நேர்காணல் முறை, மக்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்ளும் முறை, எந்தெந்த நிகழ்வுகளை எவ்வாறு அணுகுவது போன்ற களப்பணி உத்திகளில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பர். சமுதாயப் பண்பாட்டு நிகழ்ச்சிகளை அகவய (emic), புறவய (etic) முறைகளில் நோக்கி அந்நிகழ்ச்சிகள் எந்தெந்தச் சமுதாயப் பண்பாட்டுக் கூறுகளோடு தொடர்பு பெற்றுள்ளன என்பதைக் கண்டறிந்து அவற்றை விருப்பு வெறுப்புக்கு இடமின்றி மிகச்சரியாக எழுதுவர். பண்பாட்டுக் கூறுகளின் உறவுகளைச் சரியாகப் புரிந்து கொள்வதும் அவற்றை நடுநோக்கில் விளக்குவதுமே இனக்குழுவியலின் தலையான நெறியாகும். அதனாலேயே சமுதாயப் பண்பாட்டுக் கூறுகளின் உறவை ஆழ்ந்து நோக்கும்இக்குழுவியலார்

பொதுவாகச் செயற்பாட்டியல் பின்னணியில் அக்கூறுகளை உற்று நோக்குவர்.

குறிப்பு

ஓர் அயற்பண்பாட்டை விளக்க முற்படும் எந்த ஒரு சிறந்த இனக்குழுவியல் தொகுப்பும் பின்வரும் முதன்மையான கூறுகளைப்பற்றி விளக்குவதாக அமையும். அவை : புவிச்சூழலியல் (topography), சுற்றுச் சூழல் (environment), காலநிலை (climate), குடியிருப்பு முறை (settlement pattern), பொருள்சார் பண்பாடு (material culture), குடும்ப அமைப்பு, திருமணமுறை, உறைவிட முறை (residence pattern), வாழ்வியற் சடங்குகள், குழந்தை வளர்ப்பு முறை, பண்பாட்டு வயமாக்க முறை (enculturation), மக்களின் உளவியற் பாங்குகள், மணக்கொடை, மணவிலக்கு முறை, வாழ்க்கைப் பொருளாதாரம் (subsistence economy), தொழிற் பகுப்பு (division of labour), உற்பத்தி முறை, நுகர்வு முறை, பங்கீட்டு முறை, பரிமாற்ற முறை, கைவினைத் தொழில்கள், அரசியல் முறை, அதிகார உறவுகள், சமூகக்கட்டுப்பாடு, மரபுசார் சட்டங்கள் (customary laws), சமய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள். மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுகள், அழகியற் சிந்தனைகள், வழக்காறுகள் (folklore), ஈமச்சடங்குகள், பிற தொடர்புடைய செய்திகள் முதலியன. அவ்வாறு தொகுக்கப்படும் செய்திகள் ஒரு தனிப்பட்ட சமூகத்தைப் பற்றியதாக இருப்பதால் இனக்குழுவியல் நூல்கள் அனைத்தும் ‘தனிவரைவு நூல்கள்’ (monographs) எனக் கூறப்பெறும்.

இனக்குழுவியல் ஆய்வு முற்றிலும் ஒரு தனிப்பட்ட இனக்குழுவைப் பற்றிய தரவாகையால் அவ்வகை ஆய்வுகளில் பிற பண்பாடுகளோடு ஒப்பிட்டு எழுதும் முறை தவிர்க்கப்படும். அதோடு பெரும்பாலும் கொள்கைசார் விளக்கங்களும் இடம் பெறா. ஆனால் இனக்குழு ஒப்பாய்வியல் (ethnology) ஆய்வுகளில் எடுகோள்நிலை (hypothetical stage), பண்பாட்டிடைஆய்வு (cross – cultural study), கொள்கை சார்ந்த விளக்கங்கள் முதலியன பெரும்பங்கு வகிக்கின்றன. எவ்வாறியிருப்பினும் மானிடவியலின் கொள்கைசார் ஆய்வுகளிலும் ஒப்பீட்டு ஆய்வுகளிலும் ஈடுபடும் இனக்குழு ஒப்பாய்வியலுக்குத் தேவையான பலவகைப்பட்ட தரவுகளை அளிக்கும் களஞ்சியங்களாக இனக்குழுவியல் ஆய்வுகள் திகழ்கின்றன.

## 7.8. இனக்குழு ஒப்பாய்வியல்

பல்வேறு இன மக்களைப் பற்றியும், அவர்களின் பண்பாட்டைப் பற்றியும், அவர்களின் வரலாற்றைப் பற்றியும் பண்பாட்டிடை நிலையில் அறியும் அறிவியலே இனக்குழு ஒப்பாய்வியல் (ethnology) என்பார் குரோபர். இருப்பினும் இப்பிரிவின் பொருள் பல காலகட்டங்களில், பல நாடுகளில் வெவ்வேறு வகைகளில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இனக்குழு ஒப்பாய்வியலின் பரப்பைச் சில வேளைகளில் விரித்துக்

குறிப்பு

கூறும்போது இச்சொல் பண்பாட்டு மானிடவியல் என்னும் மொழித் தொடருக்கு இணைச் சொல்லாகவும் கூறப்பெறுகிறது. ஒன்றுக்கும் மேற்பட்ட பண்பாடுகளை ஒப்பீட்டு நோக்கிலும் வரலாற்று நோக்கிலும் ஆராயும் அறிவியலே இனக்குழு ஒப்பாய்வியல் என்பது ஒரு வகையான வரையறை. வேறொரு வரையறையின்படி மனித இனங்களை ஆராயும் அறிவியலே இனக்குழு ஒப்பாய்வியல் ஆகும். இத்துறை பண்பாடுகளை வரலாற்று நோக்கிலும் ஆராய முற்படுவதால் இதனைப் 'பண்பாட்டு வரலாற்றியல்' (cultural history) என்று கூறும் வழக்குமுண்டு இவையனைத்தும் கடந்த காலத்தில் வழங்கப் பெற்றவையாகும்.

அண்மைக் காலங்களில் இத்துறையின் பொருள் மிகத் துல்லியமாகவும் தெளிவாகவும் கூறும் நிலை உருவாகியுள்ளது. பண்பாடுகளைப் பற்றிய முறைப்படியான அறிவியலே இனக்குழு ஒப்பாய்வியல் என்னும் வரையறை இன்று அனைவராலும் பயன்படுத்தப்படுகிறது இனக்குழு ஒப்பாய்வியல் ஆய்வுகள் ஒன்றுக்கும் மேற்பட்ட பண்பாடுகளை ஒப்பிட்டு ஆராய்வதால் அவை பண்பாட்டிடை ஆய்வுகள் (cross – cultural studies) எனச் சிறப்பாக வழங்கப்பெறும்.

ஒரு சமூகத்தைப் பற்றி முழுமையாகத் தொகுக்கும் 'இனக்குழுவியல்' செய்திகள் அச்சமூகத்தைப் பற்றி அறிய மட்டுமே உதவுகிறது. அவ்வாறு தனித்தனிச் சமூகங்களைப் பற்றிய இனக்குழுவியல் ஆய்வுகள் ஏராளமாகச் செய்த பின்பு ஒவ்வொரு சமூகமும் மற்றவையோடு ஒன்றுபட்டோ வேறுபட்டோ நிற்கும் நிலையினைக் காணமுடியும். இந்நிலையில் அனைத்துச் சமூகமும் மற்றவையோடு ஒன்றுபட்டோ வேறுபட்டோ நிற்கும் நிலையினைக் காணமுடியும். இந்நிலையில் அனைத்துச் சமுதாயங்களின் ஒருமித்த அமைப்பையும், வேறுபட்ட தன்மையையும் கருத்தில் கொண்டு அனைத்துச் சமுதாயத்திற்குமான பொதுக் கொள்கைகள், விதிகள் ஆகியவற்றை வகுப்பதே இனக்குழு ஒப்பாய்வியலின் தலையான நோக்கமாகும். மனித சமுதாயத்தைப் பற்றிய மானிடவியல் ஆய்வினைக் கொள்கைசார் நிலைக்குக் கொண்டு வருவது இனக்குழு ஒப்பாய்வியலே என்று கூறுவது மிகையல்ல.

இனக்குழு ஒப்பாய்வியலார் சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளைக் கொள்கையாக்கம் செய்ய முற்படும்போது பல பண்பாடுகளை ஒப்பிட்டு ஆய்வு செய்ய வேண்டியதாகிறது. இந்நிலையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் அனைத்துப் பண்பாடுகளிலும் களப்பணி செய்து தரவுகள் பெற இயலாது என்பதால் ஆய்வாளர்கள் தம் சொந்த இனக்குழுவியல் தரவுகளோடு பிற இனக்குழுக்களைப் பற்றிய தனிவரைவு நூல்களையும் (monographs) அறிக்கைகளையும் (reports) ஆய்வுக்குப் பயன்படுத்துவர். இனக்குழு ஒப்பாய்வியல் கொள்கையாக்கம் சார்ந்த பிரிவாகையால் இத்துறை அறிஞர்கள், பெற்ற தரவுகளை ஒப்புமைப்படுத்துதல் (comparison), தொடர்பு படுத்துதல் (correlation), எடுகோள் (hypothesis) அமைத்தல், கருத்தியலாக்குதல்

குறிப்பு

(abstraction), சோதனை செய்தல் (testing), பொதுமையாக்கம் செய்தல் (generalization) போன்ற தொடர்ச்சியான பலநிலைகளுக்கு உட்படுத்தி அதன் மூலம் அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொருந்தும் கொள்கை சார்ந்த விளக்கங்களை வகுப்பர்.

இனக்குழு ஒப்பாய்வியல் கொள்கை சார்ந்த பிரிவாகையால் மானிடவியலில் இது ஒரு தனிப்பிரிவு என்றோ இனக் குழுவியலோடு தொடர்பற்ற பிரிவு என்றோ எண்ணக்கூடாது. இனக்குழுவியலையும் இனக்குழு ஒப்பாய்வியலையும் அவ்வளவு எளிதில் தனிதனியாகப் பிரித்துக் காண்பது இயலாது. இனக்குழுவியல் தரவுகளின் அடிப்படையிலேயே இனக்குழு ஒப்பாய்வில் கொள்கை சார்ந்த விளக்கங்களை அல்லது ஒப்பீட்டு நிலையிலான விளக்கங்களைத் தேட முயல்கிறது. ஆனால், அதே நேரத்தில் இனக்குழு ஒப்பாய்வியலின் கொள்கைசார்ந்த அல்லது ஒப்பீட்டு நிலையான விளக்கங்கள் மூலம் பெறப்படும் புதிய உள்ளொளி (insight), வருங்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் இனக்குழுவியல் ஆய்வுகளின்போது எவ்வாறான தரவுகளைப் பெற வேண்டும், எவற்றை மிகுதியாக உற்று நோக்க வேண்டும், எவ்வாறான உறவுகளை மேலும் ஆழ்நிலையில் புரிந்துகொள்ள வேண்டும் போன்ற களப்பணி ஆய்வு முறைகளுக்கு வித்திடுகிறது. களப்பணிக்குச் செல்லும்போது ஒருவர் கொள்கை சார்ந்த பிரிவில் பெற்றுள்ள பயிற்சியைப் பொறுத்தே அவரது களப்பணி விவரங்களின் தரம் அமையும். அந்த வகையில் இனக்குழு ஒப்பாய்வியல் இனக்குழுவியல் ஆய்வுகளுக்கு, அடித்தளமாக விளங்குகிறது என்றும் கூறலாம்.

உண்மையில் சொல்லப் போனால் இனக்குழுவியலார், இனக்குழு ஒப்பாய்வியலார் என்ற தனித்தனி வகையினர் இல்லை. மானிடவியலைப் பயிலும் ஓர் இளைஞர் தொடக்கத்தில் சிறந்த முறையில் இனக்குழுவியல் ஆய்வுகளை மேற்கொள்ளும் தகுதியினைப் பெற்று, பின் படிப்படியாக இனக்குழு ஒப்பாய்வியல் ஆய்வுகளை மேற்கொள்ளும் தகுதியினை வளர்த்துக் கொள்வார்.

இனக்குழு ஒப்பாய்வியலின் ஆய்வுகள் அதன் தன்மைக்கேற்ப 'சிறிய அளவு ஆய்வுகள்' (small scale studies), 'பரந்த அளவு ஆய்வுகள்' (large scale studies) என்ற இருநிலைகளாகப் பாகுபடுகின்றன. முதல் வகை ஆய்வுகள் நுண்ணிலைக் கொள்கையாக்க (micro-theorizing) ஆய்வுகள் என்றும் இரண்டாம் வகை ஆய்வுகள் பருநிலைக் கொள்கையாக்க (macro-theorizing) ஆய்வுகள் என்றும் வழங்கப்பெறும். (James Cliffton, "Ethnolgoy" in Encyclopaedia of Anthropology ed. by Whitten and whitten New York : Harper & Row, 1976, p.150) அது பற்றிச் சுருக்கமாகக் காணலாம்.

## 7.9.சிறிய அளவு ஆய்வுகள்

குறிப்பு

இவ்வகை ஆய்வுகள் குறிப்பிட்ட சில சமுதாயங்களை எடுத்துக்கொண்டு அவற்றின் சமுதாயப் பண்பாட்டு மாறிகளுக்கிடையில் (sociocultural variables) உள்ள உறவினைப் புரிந்து கொள்ளவும், அதுபற்றிய கொள்கை சார்ந்த விளக்கங்களைக் காணவும் வகை செய்கின்றன. இவ்வாறான ஆய்வுகளில் ஆய்வுக்குரிய பொருள் மிகக் குறுகியதாக இருக்கும். அதோடு ஆய்வுக்கு ஈடுபடுத்தும் சமுதாயங்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கும். இதனால் சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளில் உள்ள உறவினைப் புரிந்து கொள்ளும்போது அடிப்படைத் தரவுகளையும், தேர்ந்தெடுத்துத் தொகுக்காமல் மிக விரிவான அளவில் பயன்படுத்தக்கூடிய தரவுகளையும் அப்படியே ஆய்வில் ஈடுபடுத்த முடிகின்றது. இவ்வாறு செய்வதால் ஆய்வுகள் மிகவும் பொருள் பொதிந்த பகுப்பாய்வாக (qualitative analysis) அமைகின்றன.

சிறிய அளவு ஆய்வுகளில் ஈடுபடும் இனக்குழு ஒப்பாய்வியலார் அவர்களின் ஆய்வு விருப்பத்திற்கேற்ப சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளில் குறிப்பிட்ட சில பிரிவுகளை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொண்டு ஆய்வில் ஈடுபடுவர். ஆய்வாளர்கள் பெரும்பாலும் உறவுமுறை, குடும்பமுறை, பொருளாதார அமைப்பும் தொழில்நுட்பமும், சட்டமும் சமூக ஒழுங்கும், பொருள்சார் பண்பாடு, மொழி, கலை, இசை, நடனம், வழக்காற்றியலும் தொன்மமும் (myth) போன்ற பழக்கப்பட்ட பிரிவுகளில் மிகுதியாக ஈடுபடுவர்.

சிறிய அளவு ஆய்வுகளில் ஈடுபடும் இனக்குழு ஒப்பாய்வியலார் வரலாற்றுக் காலங்களில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பலவகைகளில் ஒருமித்தப் பண்புகளையுடைய சமுதாயங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை ஒப்பிட்டு ஆராய்வதில் மிகுந்த ஆர்வங்காட்டுவர் அதற்குக் காரணம் அவ்வகைச் சமுதாயங்கள் பல வகைகளில் தொடர்புடையனவாக இருந்தாலும் ஒத்த பண்புகள் பலவற்றைக் கொண்டிருந்தாலும் அந்தந்தச் சமுதாயத்திற்கென்ற தனித்தமைகளைக் கொண்டுள்ளன என்பதேயாகும். ஒற்றுமையில் வேற்றுமையுடைய சமுதாயங்கள் எவ்வாறு அதன் பண்புகளை நிலைப்படுத்திக் கொள்கின்றன என்பதை அறிந்துகொள்ள முயல்வது என்பது ஒரு பண்பாட்டின் கட்டமைந்த உறவுகளை வெளிப்படுத்த முயல்வதாகும். ஒத்த பண்பாட்டுக் கூறுகள் அந்தந்தச் சமுதாயத்தில் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை விளக்க முயல்வதாகும். அவ்வாறான ஆய்வுகள் ஒரு வகையில் அதன் பண்பாட்டு வரலாற்றை அறிவதற்கும் வகை செய்கின்றன.

சமுதாயங்களுக்கிடையில் நிலவும் ஒற்றுமை வேற்றுமைகளை வெளிப்படுத்துவதிலும் சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளை அலசிப் பார்ப்பதிலும் அறிஞர்கள் செயற்பாட்டியல் அல்லது காரண காரியத்

தொடர்பு முறையில் (functional or causal relationship) மிகவும் நம்பிக்கைக் கொண்டுள்ளனர். ஏனெனில், அவையே பண்பாடுகளுக்கிடையில் நிலவும் ஒற்றுமை வேற்றுமைகளுக்கான காரணத்தைத் தெளிவுபடுத்துகின்றன.

சிறிய அளவு ஆய்வுகளுக்கு மிகச் சிறப்பானதோர் எடுத்துக்காட்டைக் கூறுவேண்டுமானால் ஆப்பிரிக்காவில் நான்கு பழங்குடிச் சமுதாயங்களில் காணப்படும் சூனிய முறையை (witchcraft) விவரிக்கும் எஸ்.எ.ஃப். நேடலின் ஆய்வைக் (1960) கூறலாம். இந்நான்கு சூழல்களில் செயல்படுகிறது என்பதை நேடல் விளக்குகிறார். டபள்யூ.எம்.வொயிட்டிங் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட ஆறு பண்பாடுகளில் குழந்தை வளர்ப்பு முறை என்னும் ஆய்வு இவ்வகையைச் சேர்ந்ததே இவ்வாறான ஆய்வுகள் மூலம் கட்டமைந்த சமுதாய அமைப்பையும், அதன் இயக்கங்களையும் (dynamics), பண்பாட்டுக் கோலங்களையும் அலசிப் பார்க்க முடியும். இனக்குழு ஒப்பாய்வியலில் இவ்வகை ஆய்வுமுறை அதன் பல்வேறு ஆய்வுமுறைகளுள் ஒன்று என்பதை இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## 7.10. பரந்த அளவு ஆய்வுகள்

நேடல் மேற்கொண்டதைப் போன்ற அனைத்து வகையான சிறிய அளவு ஆய்வுகளின் முடிவுகளைப் பெரும் எண்ணிக்கையிலான சமுதாயங்களோடு ஒப்பிட்டுச் சோதித்துப் பார்க்கும்போது தான் அந்த முடிவுகள் கொள்கை நிலையை அடைய முடியும். அவ்வாறன்றி அது ஓர் எடுகோளாகவோ அப்போதைக்கு ஏற்படுத்தப்பட்ட கருத்தாக்கமாகவோ கருதப்படும். ஆகவே சிறிய அளவு ஆய்வுகளின் முடிவுகள் பல இனக்குழுவியல் ஆய்வுகளோடு பொருந்திப் பார்த்துச் சோதிக்க வேண்டிய அவசியமாகிறது.

பரந்த அளவிலான ஒப்பீடுகளின் தேவையை முதன் முதலில் வலியுத்தியவர் டைலரே. அவர் பண்பாட்டுப் படிமலர்ச்சி பற்றி ஆராயும்போது பரந்த ஒப்பீட்டு ஆய்வின் அவசியத்தை உணர்ந்தார். டைலர் தம் படிமலர்ச்சிக் கருத்துக்களை வெளியிடும்போது அவ்வளவாக இனக்குழுவியல் ஆய்வுகள் பல்கிப் பெருகவில்லை. பிற்காலத்தில் இனக்குழுவியல் ஆய்வுகள் பெருமளவு வெளிவந்தபோது டைலரின் படிமலர்ச்சிக் கருத்துகளைச் சிலர் ஐயப்பாடுடையதாக்கினர். அதற்குக் காரணம் சில சமுதாயங்களின் படிமலர்ச்சி டைலரின் படிமலர்ச்சித் திட்டத்தில் பொருத்தம் பெறாமல் உள்ளது என்று கருதப்பட்டதேயாகும்.

படிமலர்ச்சி சார்புடைய ஆய்வுகளைப் பிற்கால ஆங்கிலேய மானிடவியலார் ஒருவகையில் குறை கூறுவர். அவ்வகை ஆய்வுகள் மூலம் சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளைப் புரிந்துகொள்ள முடியாது என்பர். அவர்கள் தளப்பார்வை (ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தைச் சேர்ந்த சமுதாய அமைப்புகளை மட்டும் ஆராயும் முறை – synchronic

study) ஆய்வுகளிலும் பற்றுடையவர்களாக இருந்தனர். ஆனால் பரந்த அளவுடைய ஆய்வு முறையை அனைவருமே ஆதரித்து அதனை வளம்பெறச் செய்தனர்.

இன்றைய சிந்தையாளர்களுள் சிலர் பண்பாட்டிடை நிலையில் பரந்த அளவில் ஒப்பீடு செய்யும் பாலப்பார்வையுடைய (தொடர்ச்சியான காலகட்டங்களை உள்ளடக்கிய ஆய்வு – diachronic study) ஆய்வு முறையில் மட்டுமே பண்பாட்டின் நீண்டகாலப் படிமலர்ச்சியையும், பண்பாட்டின் அனைத்து முறைகளையும் ஆய்வு செய்ய முடியும் என நம்புகின்றனர். செயற்பாட்டியல் ஆய்வாளர்கள் படிமலர்ச்சி ஆய்வுகளின் மூலம் சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாது என வாதாடுபவர்கள் என்றாலும் வரலாற்று நோக்குடைய ஆய்வுகளை அவர்கள் எதிர்ப்பதில்லை.

சமுதாயத்தைப் பற்றிய உண்மைகளைக் கண்டறிய முற்படும்போது எடுத்த எடுப்பில் பரந்த நிலை ஆய்வில் ஈடுபட இயலாது. முதலில் நுண்ணிலையிலும் பின்னர்ப் பருநிலையிலும் ஈடுபட வேண்டியதாகிறது. அதனால் இனக்குழு ஒப்பாய்வியலில் இவ்விரண்டு வகையான ஆய்வுகளும் இன்றியமையாதனவாக உள்ளன.

## 7.11. மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டிய நூல்கள்

Beals, Ralph L., and Harry Hiojer. 1965. *An Introduction to Anthropolgy*, New York : Macmillan. மானிடவியலின் அனைத்துப் பிரிவுகளையும் பற்றிய சிறந்த அறிமுக நூல்.

Beattie, John.1964, *OtherCultures*, New York : The Free Press.

சமுதாய மானிடவியலின் நோக்கம், அணுகுமுறைகள் குறிக்கோள்கள் போன்றவற்றை விளக்கும் சிறந்த நூல், முதற்கட்ட மாணவர்களுக்குச் சற்று கடினமாக இருக்கும்.

Fried, Morton, 1972. *The Study of Anthropology*, New York : Crowell.

இளநிலையாளர்களுக்கு ஒரு முழுமையான நூலாக இது விளங்குகிறது. மானிடவியல் தொழிலும் அதன் நெளிவு களிவுகளம் குறித்துச் சுருக்கமாகக் கூறுகிறது.

Evans – Prichard, E.E. 1964. Social Anthropology, Clencoe : The Free Press.

சமுதாய மானிடவியலின் தோற்றம், வளர்ச்சி, இலக்கு ஆகியன குறித்து இவான்ஸ் பிரிட்சர்டு பொதுமக்களுக்கு வானொலி மூலம் ஆற்றிய உரைகளின் அடிப்படையில் அமைந்த நூலிது.

குறிப்பு

Lasker, Gabriel Ward. 1973. *Physical Anthropology*, New York: Holt, Rinehart and Winston. உடல்சார் மானிடவியலைப் பற்றி எழுதப் பெற்றுள்ள சிறந்த அறிமுக நூல்களுள் இதுவும் ஒன்று.

Stein, Philip L., and Bruce M.Rowe, 1978 *Physical Anthropology*, NewYork : McGraw – Hill.

உடல்சார் மானிடவியலைப் பற்றிய மேலுமொரு சிறந்த அறிமுக நூல். உடல்சார் மானிடவியலில் வளர்ந்துவரும் பிரிவுகளைப் பற்றியும் ஆய்வுகளைப் பற்றியும் ஆசிரியர் நூல் முழுவதும் சிறப்பாக விளக்குகிறார்.

## 7.12. தொகுத்துக் காண்போம்

மொழியியல் ஒப்பியல் அல்லது வரலாற்று மொழியியல் அவற்றின் அமைப்பிலும் பயன்பாட்டு நிலையிலும் எவ்வாறு வேறுபட்டுக் காணப்படுகின்றன என்பதை மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

உலகம் முழுவதும் எண்ணிலடங்கா வகைகளில் பரவி வாழும் சமுதாயங்களின் பண்பாட்டைக் காலப் பரிமாணங்களுடன் ஆராயும் பண்பாட்டு மானிடவியல் பற்றி மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

## 7.13. சோதித்தறியும் வினாக்கள்

அமெரிக்க மானிடவியல் சிந்தனைகளை விவரி

சமுதாய மானிடவியல் என்றால் என்ன? விளக்குக.

## 7.14. பயிற்சி வினாக்கள்:

இனக்குழு ஒப்பாய்வியல் படிநிலைகளை எடுத்துரைக்க.

அமெரிக்க, ஆங்கிலேய பண்பாட்டு வேறுபாடுகளை விளக்குக.

## 7.15. மேலும் பயில்வதற்கான நூல்

பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

# கூறு- 8 : மானிடவியலும் களப்பணியும்- களப்பணியில் தரவுகளைப் பெறுதலும்



## 8.1. அறிமுகம்

மனிதர்களைப் பற்றி ஆராயும் மானிடவியல் அவர்கள் வாழக்கூடிய இடங்களைக் களமாகக் கொண்டு நிகழ்த்திய களப்பணிகளைப் பற்றியும் அங்கு திரட்டப்பட்ட தரவுகளைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.

## 8.2. குறிக்கோள்கள்:

மானிடவியலின் மகத்தான பணி மனிதப் பண்பாட்டின் படிமலர்ச்சி நிலைகளை மீட்டுருவாக்கம் செய்வது எனத் தீர்மானிக்கப்பட்ட நிலையில் நிகழ்ந்த தொழில்நுட்ப மாற்றங்கள், குடும்ப அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள், பொருளியல் மாற்றங்கள், சமுதாய அமைப்பில் ஏற்பட்ட பிற மாற்றங்கள் முதலானவற்றை மீட்டுருவாக்கம் செய்வது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

மக்கள் வாழுமிடங்களையே மானிடவியலார் ஆய்வுக் கூடங்களாக எடுத்துக் கொள்ளப் பட்டு பர நிலைகளில் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளின் தன்மையை மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

## 8.3. மானிடவில் ஆய்வு முறைகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மானிடவியல் ஒரு தனித்துறையாக உருவெடுத்தபோது மனிதப் படிமலர்ச்சி பற்றிய கருத்துக்களே முக்கிய இடம்பெற்றிருந்தன. அப்போதைய அறிஞர்களிடம் மக்களின் வாழ்க்கை முறை ஒரு முறையான வளர்ச்சிப் (Progress) பாதையில் வளர்ந்து வந்துள்ளது என்ற கருத்து பரவலாக வலுப்பெற்றிருந்தது. அக்கருத்தினைத் தொடக்கக்காலச் சமுதாய அறிவியலாரும் ஆதரித்தனர். அவர்கள் மனிதப் பண்பாடு எளிய நிலையிலிருந்து எளிமையற்ற (Complex) நிலைக்கு மாறிவந்துள்ளது என்றும், அவ்வகை மாற்றம் ஒரு நேர்க்கோட்டு வரிசையில் பல படிநிலைகளாக நிகழ்ந்துள்ளது என்றும் கருதினர்.

அந்நிலையில், மானிடவியலின் மகத்தான பணி மனிதப் பண்பாட்டின் படிமலர்ச்சி நிலைகளை மீட்டுருவாக்கம் செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. குறிப்பாக, மக்களிடையே நிகழ்ந்த தொழில்நுட்ப மாற்றங்கள், குடும்ப அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள், பொருளியல் மாற்றங்கள், சமுதாய அமைப்பில் ஏற்பட்ட பிற மாற்றங்கள் முதலானவற்றை மீட்டுருவாக்கம் செய்வது உடனடித் தேவை என வலியுறுத்தப்பட்டது.

குறிப்பு

மானிடவியலார் மேற்குறிப்பிட்ட ஆய்வுகளில் இறங்கிய உடனேயே மிகத் தொடக்கக் காலத்தில் வாழ்ந்த மக்களை ஆராய வேண்டியது அவசியமென்றும், அதன் மூலமே தொடக்கக் கால மக்களின் சமுதாயப் பண்பாட்டு முறைகளின் அடிப்படைகளைப் புரிந்து கொள்ள முடியுமென்றும், அவ்வடிப்படைகளைக் கொண்டே தொடக்கக் காலம் முதல் இக்காலம் வரையிலான சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளின் படிமலர்ச்சித் தொடர்ச்சியினைக் காலவரிசைப்படி அறிய முடியுமென்றும் நம்பினர். இன்று மிகவும் எளிய நிலையில் வாழும் தொன்மை மக்கள்(primitive) மிகத் தொடக்கக் காலத்தில் வாழ்ந்த மக்களின் பேராளர்கள் என்பதால் அம்மக்களை விரிவாக ஆராய முற்பட்டனர்.

மானிடவியலார் தொன்மை மக்களை மிகுதியாக ஆராய்வதற்கு வேறொரு காரணமும் உண்டு. மனித சமுதாயத்தின் இயக்காற்றலையும், பண்பாட்டுக் கோலங்களையும், மனித நடத்தை முறைகளையும் முழுமையாக ஆராய்வதே மானிடவியலின் இலக்காயிற்று. அதனால் மனித சமுதாயத்தின் சமுதாயப் பண்பாட்டு முறைகளை மிகத் தெளிவாக அலசிப் புரிந்து கொள்ள வேண்டியது மானிடவியலின் முதன்மையான பாடப் பொருளாயிற்று. அதற்கு மிகவும் சிக்கலான அமைப்புகளையுடைய சமுதாயங்களைக் காட்டிலும் சிக்கலற்ற, எளிமையான சமுதாயங்ளை ஆராய்வதன் மூலம் சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளை நன்கு புரிந்து கொள்ள முடியும் என நம்பினர். அதன்பின்னர் எளிமையற்ற சமுதாயங்களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என முடிவு செய்தனர். எனவேதான் தொடக்கத்தில் தொழில் சமுதாயங்களை ஆராய்வதில் மானிடவியலார் ஈடுபட்டு வந்தனர். அதனாலயே மானிடவியல் என்பது தொன்மை மக்களை மட்டும் ஆராயும் துறை என்று பெரும்பாலோர் இன்றும் கருதுகின்றனர். மானிடவியலார் கலப்புச் சமுதாயங்களையும் (complex societies), தொழில் துறையில் வளர்ச்சி பெற்ற சமுதாயங்களையும் ஆராய்ந்து வருகின்றனர் என்பது இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும்.

மானிடவியலின் ஆய்வுப்பொருள் பெரும்பாலும் மனிதப் பண்பாடு பற்றியதாக இருப்பதால் மக்கள் வாழுமிடங்களையே மானிடவியலார் ஆய்வுக் கூடங்களாக எடுத்துக் கொள்கின்றனர். இந்நிலை பிற அறிவியல் துறையிலிருந்து மானிடவியலைப் பிரித்துக்காட்டுவதாக உள்ளது. குறிப்பாக, இயற்பியல்சார் அறிவியல் (physical science) துறைகளில் ஆய்வுகள் சோதனைக் கூடங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. இக்வகைத் துறைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளில் ஓர் ஆய்வாளர் ஒரு சூழலில் பயன்படுத்தும் கருவிகள் அல்லது முறைகளைக் கொண்டு வேறோர் ஆய்வாளர் அதே ஆய்வைப் புதிய சூழலில் செய்யும் போது முடிவு ஒன்றாக இருக்கும். ஆனால், மனித அறிவியலில் (நடத்தைசார் அறிவியல்) இதுபோன்ற கட்டுப்பாடற்ற ஆய்வுமுறை மிக மிக அரிது அல்லது இல்லை என்றே கூறலாம். ஏனெனில், மனித அறிவியலில் நாம் நம்மைப் பற்றியே ஆய்வு செய்தால் நம் முடிவுகளும் கருத்துகளும் அவரவர் அகவய மதிப்புகளால்

(subjective values) தாக்கம் பெறுகின்றன. அதனால் எந்த வகையிலும் 'சார்பற்ற உண்மையைக்' காணமுடியாமற் போகிறது.

குறிப்பு

இயற்பியல்சார் அறிவியல் ஆய்வுமுறையிலிருந்து வேறுபடும் சமுதாய அறிவியல் ஆய்வுமுறையில் வேறொரு முக்கியகூறும் இடம்பெற்றுள்ளது. சமுதாய அறிவியல்களில் அனைத்து வகையான பகுப்பாய்வும் சார்புடையதும் சார்பற்றதுமான மாறிகளைக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. ஓர் அமைப்பின் கூறுகளில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதும் முந்தும் தன்மையுடையதுமான (precede) கூறுகள் 'சார்பற்ற மாறிகள்' (independent variables) ஆகும்.

சமுதாய அறிவியலில் காரண காரியத் தொடர்களை மேற்கூறிய மாறிகளைக் கொண்டு விளக்குவதென்பது மிகப்பெரும் சவாலாகும். ஏனெனில், ஒரு செயலிற்கான காரணம் காலத்தோடு (time) தொடர்புடையது. ஒரு காரணம் முதலில் இடம்பெறும். சில பின்வரும். சமுதாய நிகழ்வுகளில் ஒரு கூறின் தோற்றத்திற்கான (origin) காரணம் அதே நிகழ்வில் பின்னர்த் தோன்றும் வேறொரு கூறோடு தொடர்புடையது. ஒரு சமுதாயத்தின் அமைப்பு வேறொரு சமுதாயத்தின் அமைப்பிலிருந்து மாறுபடுவதால் ஒன்றதன் முடிவு மற்றொன்றுக்குப் பொருந்தாது. ஆகவே அந்தந்தச் சமுதாயங்களின் அமைப்புகளைப் புரிந்து கொண்டு ஆய்வு செய்ய வேண்டியதாகிறது.

## 8.4.மானிடவியலும் களப்பணியும்

18 –ஆம் நூற்றாண்டின் வணிகர்கள், பயணிகள், சமயப் பரப்பிகள், புத்தாய்வாளர்கள் போன்றோர் சேகரித்த தரவுகள் நிபுணத்துவமற்ற முறையில் சேகரிக்கப்பட்டதாக 19 – ஆம் நூற்றாண்டு மானிடவியலார் கருதினர். அக்காலத்தில் இயற்கை அறிவியலில் பயிற்சி பெற்ற பலர் மானிடவியல் துறையில் ஈடுபட்டு அவர்களுக்கே உரிய முறையில் தரவுகளைச் சேகரிக்கத் தொடங்கினர். அவர்களுள் ஆல்.ஃ.பிரடு சி.ஹாடன், இயற்பியலாரும் உளவியலாருமான டபள்யு.எச்.ஆர்.ரிவர்ஸ், நோயியலார் சார்லஸ் ஜி. செலிக்மேன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் ஒரு பெருங்குழுவாக இணைந்து டாரஸ் நீர்ச்சந்தி ஆய்வுப் பயணத்தைத் (Torres strait expendition) துவக்கினர். தொடக்கத்தில் அவர்கள் மானிடவியலில் பயிற்சி பெறவில்லையாயினும் பின்னர் இத்துறையின் நிபுணத்துவத்தைப் பெற்றனர். அவர்களுக்கடுத்து வட பசிபிக் ஆய்வுப் பயணம், நியூகினித் தீவு ஆய்வுப் பணயம், மீண்டும் டாரஸ் நீர்ச்சந்தி ஆய்வுப்பயணம் எனப் பல ஆய்வுப் பயணங்கள் அனைத்திலும் பெருங்குழுவினர் இடம் பெற்றிருந்தனர்.

களப்பணிக்குக் குழுவினராகச் சென்று நீண்ட காலம் தங்கும்போது செலவினங்களும் இடர்ப்பாடுகளும் மிகுதியாயின. அதனைக் கருத்திற் கொண்டு பிற்காலத்திய ஆய்வாளர்கள்

குறிப்பு

ஒருவராகவோ இருவராகவோ சென்று ஆய்வு செய்யும் முறையைப் பெருவழக்காக்கினர். அதோடு பொதுவாக ஒரு தலைப்பில் பலர் தரவுகள் சேகரித்து ஆராய்வதைக் காட்டிலும் ஒவ்வொருவரும் தனிப்பட்ட பொருள் குறித்துத் தரவுகள் பெற்று ஆராயும் ஆய்வுகள் மானிடவியலுக்குத் தேவை என உணர்ந்தனர். அது முதற்கொண்டு தனி ஒருவராகச் சென்று ஆய்வு செய்வதே வழக்கமாயிற்று. குறிப்பிட்ட சில ஆய்வுகளுக்கு மட்டுமே சிறு குழுவினராகச் செல்கின்றனர்.

பெருங் குழுக்களாகவும் சிறு குழுக்களாகவும் சென்று ஆய்வு செய்த காலத்தில் பிரேசர் களப்பணி மேற்கொள்ளாமல் வினா நிரல்கள் மூலம் தரவுகள் பெற்று ஆய்வு செய்ய முற்பட்டார். இவர் 1887 – இல் சமய நிறுவனங்களுக்கும் (missionaries), குடியேற்றப் பகுதியிலிருந்த ஐரோப்பிய அரசு அதிகாரிகளுக்கும் வினா நிரல்களை அனுப்பிப் பெரும் எண்ணிக்கையிலான தரவுகளைப் பெற்றார். அவற்றை ‘Question on the Manners, Customs, Religions, Superstitions etc. of Uncivilized or Semi – Civilized People’ என்னும் தலைப்பில் பெரும் நூலாக வெளியிட்டார்.

பிரெசரின் இத்தொகுப்புப் பல வகைகளில் பயன்மிக்கதாக இருந்தாலும் சில குறைபாடுகளையும் கொண்டிருந்தது. தொகுக்கப் பெற்ற செய்திகள் அனைத்தும் உண்மை என்றாலுங்கூட அத்தரவுகளைக் கொண்டு அந்தந்த மக்களின் சமுதாயப் பண்பாட்டு முறைகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள இயலவில்லை. மேலும் அச்சமூகத்தின் கூறுகளுக்கிடையில் உள்ள உறவுகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதோடு ஒவ்வொரு கூறின்பால் மக்கள் கொண்டுள்ள கருத்துக்களையும் அதன் நடைமுறை உறவுகளையும் அறிய முடியவில்லை. அதனால் களப்பணியில் ஈடுபட்டு ஆய்வு செய்யும் முறை மானிடவியலுக்கு ‘உயிர்மூச்சு’ என்பது மீண்டும் தெளிவாயிற்று. அதுவே மானிடவியல் ஆய்வுமுறையின் தனித்தன்மை எனக் கூறப்பட்டது.

## 8.5.இக்காலக் களப்பணி முறை

மானிடவியலின் இக்காலக் களப்பணி முறைக்கு வித்திட்டவர் ஆங்கிலேய மானிடவில் அறிஞர் மாலினோஸ்கி ஆவார். இவர் முதல் உலகப் போரின்போது மேற்குப் பசிபிக் கடற்பகுதியில் உள்ள ட்ரோபிரியாண்டுத் தீவினரிடையே இனக்குழுவியல் ஆய்வினை மேற்கொண்டார். இவ்வாய்வானது மானிடவியலின் அனைத்துக் காலங்களிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுள் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது. இது மானிடவியல் களப்பணி முறையில் ஒரு பெரும் திருப்பத்தையே ஏற்படுத்திவிட்டது. இவ்வெற்றிக்குக் காரணமாக அமைந்தது மாலினேஸ்கியின் பங்கேற்று உற்றுநோக்கல் (participant observation) முறையாகும்.

அமெரிக்க மானிடவியலின் தந்தையான பிரான்ஸ் போவாசைப் போன்றே மாலினோஸ்கியும் களப்பணியில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்.

குறிப்பு

அவரது இனக்குழுவியல் ஆய்வுகளில் ஒவ்வொரு சமுதாயக் கூறுக்கும் இவர் கூறும் விளக்கம் இன்றும் பிரமிக்க வைப்பதாக உள்ளது. மாலினோஸ்கி ட்ரோபிரியாண்டுச் சமுதாயத்தில் இடம்பெறும் ஒவ்வொரு கூறுக்கும் முக்கியத்துவம் கொடுத்தார். ஒவ்வொரு சமுதாய நிகழ்விலும் தனிப்பட்டவர்களின் நடத்தைமுறைகளும் சமுதாய உறவை முழுமையாகப் புரிந்து கொள்ள உதவுகின்றன என நம்பினார். ஒவ்வொரு செயலையும் நேரில் உற்று நோக்கும் போதுதான் அச்செயல் ஏன் நிகழ்கிறது எப்படி நிகழ்கிறது, எவரெவர் பங்கு கொள்கிறார்கள், அதற்கான வழிமுறைகள் என்னென்ன என்பனவற்றை அறிய முடியும். அதோடு ஒவ்வொரு சமுதாய நிகழ்விற்கும் மக்கள் கொண்டுள்ள நெறிமுறைகள்(norms), விழுமியங்கள் (values), கருத்துக்கள் போன்றவற்றையும் அறிய முடியும். இவ்வாறு ஒவ்வொரு நிகழ்விற்கும் விளக்கங்களை மேலும் மேலும் தேடும் போது மட்டுமே சமுதாயப் பண்பாட்டு முறைகளைப் புரிந்து கொள்ள முடியும். மேற்கூறிய மகத்தான இலக்கினைப் 'பங்கேற்று உற்றுநோக்கல்' முறையால் மட்டுமே அடைய இயலும் என்பார் மாலினோஸ்கி.

பங்கேற்று உற்றுநோக்கல் என்பது ஆய்வு செய்யும் சமூகத்தினரோடு இரண்டறக் கலந்து அவர்களின் அன்றாட வாழ்வில் பங்கு கொண்டு உற்றுநோக்கலைக் குறிக்கும். சமுதாயப் பண்பாட்டு முறைமைகளைப் புரிந்து கொள்ள நமக்குள்ள ஒரே வழி பங்கேற்று உற்று நோக்குதலேயாகும். அதனாலேயே ஆய்வாளர்கள் அவர்கள் செய்யும் மக்களின் வாழ்க்கைச் சூழலோடு நீண்டகாலம் ஐக்கியமடைந்து அவர்களுள் ஒருவராக வாழ்ந்து ஆராய வேண்டியது அவசியம் என்ற கருத்து மானிடவியலில் ஒரு முதுமொழியாக அடிக்கடி சுட்டிக் காட்டப்படுகிறது.

மாலினோஸ்கி ட்ரோபிரியாண்டு இனக்குழுவியல் தரவானது இன்றுவரை எந்த ஒரு தனி மானிடவியலறிஞராலும் சேகரிக்க முடியாத அளவிற்குத் தொகுத்ததாகும். மானிடவியல் தோன்றிய காலம் முதல் இன்று வரை களப்பணியில் இவரைப்போல் வேறு எவரும் நிபுணத்துவம் பெற்றதில்லை. இன்றும் இப்பிரிவில் இவரே வாகையனாவார். இவரது வெற்றிக்குக் காரணம் இவர் ட்ரோபிரியாண்டு மக்களிடம் ஏறக்குறைய 4 ஆண்டுகள் வாழ்ந்தார். அவர்கள் பேசும் 'கிரிவானா' மொழியை மிகச் சரளமாகப் பேசி அவர்களுள் ஒருவராகவே வாழ்ந்தார். இவ்வகையான களப்பணி முறையே இன்று பங்கேற்று உற்றுநோக்கல் என வழங்கப்பெறுகிறது. (களப்பணியில் ஒரு சமூகத்தின் பண்பாட்டை எந்தப் பின்னணியில் ஆராயவேண்டும் என்பது இரண்டாம் அத்தியாயத்தில் 'இனக்குழுவியல்' என்னும் உட்தலைப்பின்கீழ் விவரிக்கப்பட்டுள்ளது).

களப்பணி மேற்கொள்ளும்போது ஆய்வினை எப்பகுதியில் செய்வது என்பது மிக இன்றியமையாதது. ஆய்வு செய்யும் சமூகத்தின் பண்பாடு முழுமையாகப் பெற்றிருக்கக்கூடிய இடத்தைத் தேர்வு செய்தல் வேண்டும். ஏனெனில், ஒரு பண்பாட்டிற்குரிய அனைத்துப் பகுதியிலும்

குறிப்பு

அப்பண்பாட்டிற்குரிய கூறுகள் முழுமையாகக் காணப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, கல்வராயன் மலைப்பகுதியானது மலையாளிப் பழங்குடியினா் வாழும் பகுதியாகும். இம்மலையின் மையப்பகுதியில் (core area) வாழ்வோா் பூப்புக் காலத்தில் பெண்கள் தனிக்குடிசையில் தங்கும் வழக்கத்தினைக் கொண்டுள்ளனா். ஆனால் சமநில மக்களுக்கு அருகாமையில் உள்ள விளிம்புப் பகுதியில் (peripheral region) வாழ்வோா் பண்பாட்டு மாற்றத்தினால் தனிக்குடிசையில் தங்கும் வழக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை. ஆகவே ஆய்வுக்குரிய இடத்தைத் தோ்ந்தெடுப்பது மிக அவசியமாகிறது. பெரும்பாலான மானிடவியலாா் ஆய்வுக்குரிய இடத்தைத் தோ்ந்தெடுப்பதற்காக முதலில் ஒரு முன்னோடி மதிப்பாய்வை ( pilot survey) மேற்கொள்வா்.

களப்பணியில் ஈடுபடுவோரின் பால்தன்மைக்கு (sex) ஏற்ப ஆய்வு செய்யும் மக்களிடம் பெறும் உறவும், தரவுகளும் வேறுபடும். பசிபிக் தீவு மக்களிடம் குழந்தை வளா்ப்பு முறை பற்றி மாா்க்ரேட் மீடு செய்த ஆய்வினை எந்த ஓா் ஆண் ஆய்வாளரும் செய்ய இயலாது. அவ்வாறே மொராக்கா தீவுப் பெண்களைப் பற்றி எலிசபெத் பொ்னியா செய்த ஆய்வினை எந்த ஓா் ஆண் ஆய்வாளராலும் செய்ய இயலாது. ஆனால் அதே நேரத்தில் பெண் ஆய்வாளா்கள் ஆண்களிடம் குறிப்பிட்ட சில பொருள் குறித்து ஆய்வு செய்ய இயலாது.

மானிடவியல் களப்பணிகளில் அடுத்து முதுமொழியாகச் சுட்டிக்காட்டப்படுவது தரவுகளின் ஏற்புத்தன்மையும் (validity) நம்பகத்தன்மையும;(reliability) ஆகும். பங்கேற்று உற்றுநோக்கல் மூலம் பெறப்படும் தரவுகள் நம்பகத்தன்மையானது என்றாலும் இவ்வகையில் பெறப்படும் தரவுகள் நம்பகத்தன்மையானது என்றாலும் இவ்வகையில் பெறப்படும் செய்திகள் ஆய்வுக்குப் போதுமானதாயிரா. மக்களிடமிருந்து வாய்மொழி மூலம் பெறப்படும் செய்திகளும் இன்றியமையாதவை. இவ்வகையான செய்திகளைப் பெறும்போது ஆய்வாளா்கள் அவற்றின் ஏற்புத்தன்மையிலும், நம்பகத்தன்மையிலும் கவனமாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் ஜவ்வாது, ஏலகிரி, கொல்லி, கல்வராயன் மலைகளில் வாழும் மலையாளிப் பழங்குடியினரிடம் ஆய்வு செய்யும் போது தரவுகளின் ஏற்புத்தன்மையிலும் நம்பகத்தன்மையிலும் சிக்கல்கள் எழுகின்றன. ஒவ்வொரு மலையைச் சோ்ந்தோரும் தங்களிடமிருந்து பிரிந்த சகோதரா்களே பிற மலைகளில் வாழ்பவா்கள் எனக் கூறுவா். இன்று ஆய்வாளா்கள் ஒரு பொதுக்கருத்தினைக் கூற முயன்றாலும் தொடக்கத்தில் ஆய்வு செய்யும் போது இவ்வகைச் சிக்கலுக்கு ஆளாகாமல் இருக்க முடியாது. எவ்வாறிருப்பினும் இனக்குழு வரலாற்றியல் ஆய்வுவழி பல உண்மைகளை வெளிக்கொண்டுவர இயலும்.

தகவலாளியைத் தோ்ந்தெடுப்பதன் மூலமும், பெற்ற தரவுகளை மறு சோதனைக்குட்படுத்துதன் மூலமும் ஆய்விற்கேற்ப உத்திகளைப் பயன்படுத்துவதன் மூலமும் தரவுகளை ஏற்புத்தன்மை உடையதாகவும்,

நம்பகத்தன்மை உடையதாகவும் பெற முடியும். தகவல்களைத் தரும்போது சில தகவலாளிகள் அவர்களின் தன்முனைப்பினைக் (ego) காட்ட முயல்பவர்களாக இருப்பர். அதனால் தரவுகளின் ஏற்புத்தன்மையும் நம்பகத்தன்மையும் குறையும். இவையனைத்தையும் பயிற்சி பெற்ற ஆய்வாளர்கள் சரிசெய்து கொள்வர்.

குறிப்பு

## 8.6.பொதுப்படையான தரவுகளைப் பெறுதல்

களப்பணியில் ஈடுபடும் ஆய்வாளர்கள் எடுத்த எடுப்பிலேயே ஆய்வுக்குரிய பொருளில் தரவுகளைச் சேகரிக்கக் கூடாது. அவ்வாறு ஒருவர் பெற முயன்றாலும் தரவுகளைப் பகுத்தாயும் போது அதன் உண்மையான பொருளை உய்த்துணர முடியாமற் போவதற்கு வாய்ப்புண்டு. அதனாலேயே மானிடவியலார் களத்திற்குச் சென்றவுடன் தொடக்கத்தில் எவ்வித ஆய்விலும் ஈடுபடாமல் அம்மக்களிடம் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ள முயலுவர். அதன் முதல் கட்டமாக அனைவரிடமும் இனிமையாகப் பழக முயலுதல், ஒவ்வொரு வீட்டாரும் தன்னை அறியும்படியாகச் செய்தல், ஆய்வுக்குரிய பகுதியின் ஒவ்வொரு இடத்திற்கும் சென்று மக்களின் அன்றாட வாழ்வில் பங்கு கொள்ளுதல், அவர்களின் பேச்சைக் கற்றுக் கொள்ள முயலுதல், அவர்களைப் போலவே நடந்து கொள்ள முயலுதல், தான் ஓர் அன்னியன் என்ற எண்ணத்தைப் போக்குதல் போன்ற செயல்களில் பல நாட்கள் செலவிடுவர்.

அவ்வாறான காலத்தில் ஆய்வாளர் பெற்ற அனுபவங்களை அப்படியே நாட்குறிப்பேட்டில் எழுதி வைக்க வேண்டும். நாட்குறிப்பேட்டில் எழுதி வைக்கும் ஒவ்வொரு சிறு குறிப்பும் பகுத்தாய்தலின்போது பல உண்மைகளுக்கு வழிவகுக்கும். இக்கருத்தினைப் பெரும்பாலான மானிடவியலார் தங்களின் களப்பணிப் பட்டறிவினை எழுதிய போது குறிப்பிட்டுள்ளனர். ஆய்வுக்குத் தொடர்பற்ற செய்திகள் என எண்ணி எவ்வகையான துணுக்குச் செய்திகளையும் பதிவு செய்யத் தவறக் கூடாது. கவனத்திற்கு வரும் அனைத்துச் செய்திகளையும் பதிவு செய்துவிட வேண்டும்.

அர்ஜன்டினாவில் களப்பணி செய்த எல்மர் எஸ். மில்லர் தன் அனுபவத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். “தோபா (Toba) சமூகத்தினர் பல இடங்களில் பரவி வாழ்கின்றனர். அவர்களுக்குள் பல உட்பிரிவுகளும் உண்டு. ஒவ்வொரு பிரிவினரும் அவர்களின் சமயத் தலைவனுக்குக் கொடுக்கும் மரியாதை முறைகளில் உள்ள வேறுபாட்டினை என் நாட்குறிப்புகளின் செய்தியிலிருந்து என்னால் உணர முடிந்தது. நாட்குறிப்பில் நான் எழுதி வைத்த தேதி, இடம், தலைவன் பெயர், அவரிடம் மக்கள் பேசிய உரையாடல் ஆகியவற்றைப் பகுத்தாயும்போது நாட்குறிப்பேட்டில் எழுதிவைத்த குறிப்புகளைக் கவனித்ததன் மூலம் ஒவ்வொரு பிரிவினரும் அவர்களின் சமயத்

தலைவனிடம் கொண்டுள்ள உறவு வெவ்வேறு என்பதை அறிய முடிந்தது.

குறிப்பு

ஆய்வாளர்கள் தொடக்கத்தில் மக்களிடம் தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் காலத்தில் இன்றியமையா அடிப்படைச் செய்திகளைத் தொகுக்க இயலும். குறிப்பாக, வரைபடங்கள் (அயிள), பொருட்பட்டி (inventory), குடிமதிப்பு (census), குடிவழியியல் (genealogy) போன்றவற்றைத் தயாரிக்கலாம். ஒவ்வொரு குடும்பத்தாருடன் ஆய்வாளர் தன்னை அறிமுகப்படுத்திப் பேசும் காலத்தில் குடும்ப உறுப்பினர்களைப் பற்றி விசாரித்து இவ்வகைச் செய்திகளைப் பெற இயலும். ஆய்வு செய்யும் இடத்தில் மக்கள் தொகை மிகக் குறைவாக இருந்தால் குடிமதிப்பு, குடிவழியியல் போன்றவற்றைத் தயாரிக்கலாம். இருப்பினும் ஆய்வு பொருளுக்கேற்ப இவற்றை எப்போது தயாரிக்கலாம் என்பதை முடிவு செய்யவேண்டும்.

ஆய்வு செய்யும் குடியிருப்பையும் அதனைச் சுற்றிய இயற்கைக் கூறுகளையும் வரைபடம் மூலம் செய்திகளைப் பதிவு செய்தால் பின்னாப் பகுப்பாய்வில் ஈடுபடும்போது பல உண்மைகளை உறுதிப்படுத்திக் கொள்ள உதவும். வரைபடங்களில் முதலில் குடியிருப்பின் ஒவ்வொரு கூறையும் தெளிவாகப் பதிவு செய்ய வேண்டும். இதில் தெருக்களின் அமைப்பு, அதிலுள்ள வீடுகளின் எண்ணிக்கை, வீடுகள் எப்பிரிவினருடையது, குடியிருப்பில் எங்கெங்கு வழிபடுமிடங்கள் உள்ளன, அவை எப்பிரிவினருக்குச் சொந்தமானவை, பொது இடங்களில் என்னென்ன உள்ளன, குறுக்குப் பாதைகள் உள்ளனவா, அவை எப்பகுதிகளை இணைக்கின்றன, குடியிருப்பைச் சுற்றிலும் உள்ள இயற்கைக் கூறுகள் என்னென்ன போன்ற எண்ணற்ற செய்திகள் அதில் இடம்பெறுவதாக இருக்க வேண்டும். இச்செய்திகளைக் கொண்ட வரைபடத்தைக் கொண்டு அவ்விடத்தில் வாழ்வோரின் சமுதாய அமைப்பைக் களப்பணியில் ஆழமாக இறங்குவதற்கு முன்னரே அறிந்து கொள்ள முடியும். வரைப்படத்தில் காணும் சிறப்புத்தன்மைகளை உற்றுநோக்கி அதற்கேற்ப தரவுகளைப் பகுத்தாயும்போது இவ்வரைபடங்கள் பல விளக்கங்களுக்கு உதவியாக இருக்கும்.

இந்தியச் சிற்றூர்களின் வரைபடத்தைக் கொண்டு அவ்வூரில் உள்ள சாதிகளின் படிநிலையையும், அவர்களுக்குள்ள சமுதாய உறவுகளையும் உடனே மதிப்பிட இயலும். இந்திய சிற்றூர்களைப் பற்றிய சிறப்பான ஆய்வுகளுள் ஆந்த்ரே பெத்திலி ஆய்வும் ஒன்று. தஞ்சைப் பகுதியில் ஆய்வு செய்த இவர் சிற்றூர்களில் அக்ரகாரவாடை (பார்ப்பனர்கள் வாழுமிடம்), பண்டாரவாடை (பார்ப்பணரல்லாதவர்கள் வாழுமிடம்) என இரு பிரிவுகள் உள்ளதெனச் சுட்டிக் காட்டுகிறார். சில சிற்றூர்கள் முழுவதும் அக்ரகாரவாடையாகவும் சில பண்டாரவாடையாகவும் உள்ளன எனக் கூறுகிறார். பொதுவாகத் தமிழ்நாட்டில் சிற்றூர்களின் ஒரு பகுதி அக்ரகாரமாகவும், மறுபகுதி பண்டாரவாடையாகவும், இவற்றைத் தள்ளி ஒரு பகுதி சேரியாகவும்

உள்ளது. அந்தந்தச் சிற்றூர்களின் வரைப்படங்களை எடுத்து உற்றுநோக்கினால் அவ்வூரின் சமுதாயப் படிநிலையையும், தகுதி நிலையையும், தூய்மை, தீட்டு (purity and pollution) பற்றிய கருத்தாக்கத்தையும் மதிப்பிடலாம்.

ஆய்வு செய்யும் சமூகத்தின் பொருள்சார் பண்பாட்டைப் (material culture) பற்றிய தரவுகள் மிகவும் பயனள்ளவை. வீடுகளின் அமைப்பு, செய்பொருள்கள், பயன்படுத்தும் பொருள்கள், வீட்டுச் சாமான்கள், உடைகள், அணிகலன்கள், போக்குவரத்துச் சாதனங்கள், கால்நடைகள், தொழிற்கருவிகள், தற்காப்புக் கருவிகள், சடங்குப்பொருள்கள் போன்ற பல்வேறு வகையான பொருள்களைப் பற்றிய தரவுகள் சமுதாயப் பண்பாட்டு முறைகளை அறிய உதவும். இவ்வகைப் பொருள்களைத் தொடக்கத்தில் தெரிந்து கொண்டோமானால் பிறகு ஆழ்நிலை ஆய்வு மேற்கொள்ளும் போது பல உண்மைகளைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

மானிடவியல் களப்பணியில் குடிவழிப்பட்டியல்(genealogical chart) தயாரிக்கும் முறை ஓர் இன்றியமையாத முறையாக உருவான சூழல் மிகவும் சுவையானது. டுபள்யு. எச்.ஆர்.ரிவர்ஸ் மரபியல் (genetics) கூறுகளை ஆராய முற்பட்ட போது ஏற்பட்டதே குடிவழியியல் முறை. இவர் புகழ்பெற்ற சமுதாய மானிடவியலார் என்பதே பலருக்கும் தெரியும். இவர் அடிப்படையில் உளநோய் மருத்துவவியலார் ஆவார். இவர் பல தலைமுறையினரின் உயிரியற் பண்புகளைக் கண்டறிய முனைந்த போது திணைக்குடிகளின் கால்வழி(lineage) அமைப்புகளைப் பதிவு செய்தார். குடிவழித் தொடர்பாகப் பெற்ற தரவுகள் எதிர்பாரா அளவிற்கு உறவுமுறைச் செய்திகளையும், பொதுவான சமுதாய உறவுகளையும் எடுத்துக்காட்டின. ஆதன் பின்னர் மானிடவியலில் குடிவழியியல் முறை மிகப் பெரும் செல்வாக்கினைப் பெற்று விட்டது. மேற்கொள்ளப்படும் ஆய்வு உறவு முறை பற்றியதாக இல்லாவிடினும்கூட இன்று களப்பணியில் குடிவழிப்பட்டியலைத் தயார் செய்வது என்பது தவிர்க்கவியலாத ஒரு களப்பணி உத்தியாக உள்ளது.

வரைப்படங்கள், பொருட்பட்டி, குடிவழிப்பட்டியல் முதலானவற்றைத் தயாரித்தல் தவிர ஒளிப்படங்கள் (photos) எடுத்தலும் பல தரவுகளைப் பெறுவதற்குச் சமம். ஆண்மைக் காலங்களில் குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளை அப்படியே படமாக்கும் முறை மானிடவியலாரிடம் பெருகியுள்ளது. இவ்வகைப் படங்கள் (films) ஆய்வாளர் களத்தில் உற்றுநோக்கிய போது அவர் கருத்திற்கு அகப்படாத பல செய்திகளைக் கொண்டுள்ளதாலும், மக்கள் குழுவாகச் சேர்ந்து செயல்படும் போது மக்கள் வெளிப்படுத்தும் நடத்தை முறைகள், உளவியல் பாங்குகள் முதலானவற்றைப் பதிவு செய்வதாலும் அதன் பயன் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பல நிகழ்ச்சிகளைப் முழுநீளப் படச்சுருளாக எடுத்துவிட்டால் ஆய்வாளர்கள் சொந்த இடத்திற்குத் திரும்பிய பின் தரவுகளைப் பகுத்தாயும் போது இது

குறிப்பு

மிகவும் பயனுடையதாய் அமையும். அதனாலயே களப்பணித்துறையில் படமெடுத்தல் என்பது ஓர் இன்றியமையாத உட்பிரிவு என இக்கால மானிடவியலார் கூறுவர். இந்த உட்பிரிவினை இவர்கள் காட்சிசார் மானிடவியல் (visual anthropology) எனக் கூறுவர். மேலை நாட்டு அறிஞர்கள் அவர்கள் ஆய்வு செய்த மக்களைப் பற்றி இதுவரை 50 – க்கும் மேற்பட்ட முழுநீளப் படங்களைத் தயார் செய்துள்ளனர்.

குளப்பணிக்குச் செல்லும் போது ஓர் ஆய்வாளர் அவரது ஆய்வுப் பொருளுக்குரிய தலைப்பில் தரவுகளைப் பெறுவது எவ்வளவு அவசியமோ அவ்வாறே மேற்கூறிய அடிப்படைத் தரவுகளைப் பெறுவதும் அவசியம். இக்கருத்து மானிடவியல் களப்பணி முறையியலில் ஒரு முதுமொழியாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. அடிப்படைத் தரவுகளைப் பெறுவதாயினும், ஆய்வுக்குரிய தரவுகளைப் பெறுவதாயினும் முதலில் ஆய்வாளர் மக்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வது மிகவும் அவசியம், குறிப்பாக, பழங்குடி மக்களிடம் ஆய்வு செய்ய முற்படுவோர் இதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். களப்பணியில் இறங்கிய உடன் மக்களிடம் ஏற்படுத்திக் கொள்ளும் உறவில் மயக்கம் ஏற்படின் களப்பணியை மேற்கொண்டு தொடரமுடியாமற் போகும். இவ்வகைச் சிக்கல் களப்பணியில் இடைக்காலத்திலோ கடைசிக் காலத்திலோ ஏற்பட்டால் கூட அது ஆய்வுத் தரத்தைப் பாதிக்கும்.

அந்தமான் பழங்குடிகளை ஆய்வு செய்ய முற்பட்ட தொடக்கக் கால ஆய்வாளர்கள் அத்தீவை அடைய முடியாமல் துரத்தியடிக்கப்பட்ட நிகழ்ச்சியும், அதற்குப் பின்னர்ச் சென்றவர்கள் சிலர் ஆய்வினை முடிக்காமலேயே திரும்பிய நிகழ்ச்சியும், ஆப்பிரிக்கா, பசிபிக், நியூகினி முதலான பகுதிகளில் பழங்குடியினரின் சந்தேகத்திற்கு ஆளான ஆய்வாளர்கள் கொடுரத்தாக்குதலுக்கு ஆளான நிகழ்ச்சிகளும், சில பகுதிகளில் ஓரளவு இடையூறுகளையும் இன்னல்களையும் அனுபவித்த நிகழ்ச்சிகளும் பலப்பல.

களப்பணியில் நிபுணத்துவம் பெற்ற மாலினோஸ்கியும் சில இடர்பாடுகளுடன் ஆய்வு செய்தார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவரது களப்பணி அனுபவங்களைக் குறிப்பிடும் போது ட்ரோபிரியாண்டு மக்கள் தன்னை அவர்கள் வாழ்வோடு கலந்து விட்ட மனிதர் என்றும், அவர்களுக்கு விருப்பமான தொல்லை தரும் மனிதர் என்றும் கருதினர். ஆவர்களின் இரண்டாவது எண்ணத்தை மாற்ற நான் எப்போதும் புகையிலைப் பொருள்களை அன்பளிப்பாகக் கொடுத்து வந்தேன் எனக் குறிப்பிடுகிறார்.

பல ஆப்பிரிக்கப் பழங்குடிகளிடம் நெடுமுங்காலம் ஆய்வு செய்த இவான்ஸ் பிரிட்சர்டு தன் அனுபங்களைக் குறிப்பிடும் போது நூயர் பழங்குடியினரிடம் ஆய்வு செய்த காலத்தில் அவர்கள் என்னை ஓர் அன்னியனாகவே கருதி அவர்களின் குடியிருப்பில் வாழ ஒருபோதும்

அனுமதித்ததில்லை. நான் அவர்கள் குடியிருப்பிலிருந்து மிகவும் தள்ளி தங்கியிருந்தேன் எனக் கூறுகிறார்.

குறிப்பு

ஆய்வு செய்யும் போது மக்களிடம் நன்மதிப்பைப் பெற்று ஆய்வு செய்யும்போது கூட, பல இடையூறுகள் நிகழ்வதுண்டு. உலகின் பல பகுதிகளில் மானிடவியலார் அனுபவித்த இடையூறுகளைக் குறிப்பிடுவதைக் காட்டிலும் தென்னிந்தியச் சூழலில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவதே பொருத்தமாகும். தென்னிந்தியாவில் எண்ணற்ற இனத்தவர்களிடம் பல ஆண்டுகள் ஆய்வு செய்தவர் தர்ஸ்டன். அவர் எதிர்கொண்ட இடையூறுகளைத் தென்னிந்தியச சாதிகளும் பழங்குடிகளும் (castes and Tribes of southern India)என்னும் நூல் வரிசையில் முதல் தொகுதியில் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் வரிசையினைத் தமிழில் மொழிபெயர்த்துள்ள பேராசிரியர் க. இரத்தினம் அவர்களின் நூலிலிருந்து சிறுபகுதி இங்குக் கொடுக்கப்பட்டள்ளது.

மனித உடல் சார்ந்த அளவையின்' கணக்கெடுப்பின் போது நான் ஓர் அரசு அலுவலர் என்ற உண்மையை மறைக்க இயலாது போனதால் மக்களின் கோழைத்தனம் காரணமாகப் பல எனக்குக் கற்றுத்தந்ததின் அடிப்படையில், பணிமேற்கொண்டுள்ள அப்பகுதியில் இன்றியமையாதனவாகத் தேவைப்படும் உடல்வாகு, உயரம், மூக்களவு, தலையின் நீள அகலம் ஆகிய அடிப்படை அளவுகளை மட்டும் எடுத்துக் கொள்வேன். இவற்றிலிருந்து பின்னர்த் தலையினுடைய நீள அகலத் தகவு அளவினைக் கணக்கிட்டுக் கொள்ளுதல் கூடும். சுருட்டுக்களையும், வழக்கில் உள்ள நாணயங்களையும் தாராளமாக வழங்குவதோடு மிகப் பொறுப்புடன் நடந்து கொண்டாலும் கூட மிக அற்பமானதொரு சிறிய அளவை எடுப்பதில் கூட நான் மேற்குறிப்பிட்ட நடைமுறைச் சிக்கல்கள் தோன்றிவிடுவதுண்டு. அவ்வாறு வழங்கப்படுபவை பெரும்பாலும் ஏதோ ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசின் கட்டுப்பாட்டினுள் கொண்டு வர வழங்கப்படுவதாகச் சந்தேகத்தோட பெற்றுக் கொள்ளப்பட்டன. அதற்கு வழங்கப்பட்ட காசினைத் தேங்காய், பூ, பழம், பூவோடுகூடக் கிராம தேவதைக்கு ஏற்பட்ட கோவத்தைத் தணிக்க வைத்த மற்றுமொரு காசினை மீண்டம் அதே கையோடு காணிக்கை வைத்த ஒருவனைப் பற்றியும் எனக்குத் தெரியும்.

தர்ஸ்டன் அவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுகள் அனைத்தும் இக்காலத்திலும் நிகழும் என்று எண்ண முடியாது. அவர் ஆய்வு செய்த காலம் 1900 ஆகும். ஆதற்குப் பின் ஏறக்குறைய 100 ஆண்டுகால மாற்றத்தில் மக்கள் பல நிலைகளில் முன்னேறியுள்ளனர். இருப்பினும் இந்த முன்னேற்றம் மக்களை முழுமையாக மாற்றி விட்டது என்று கூறுவதற்கில்லை. இவை போன்ற இடையூறுகள் பலவற்றை இன்றும் ஆய்வாளர்கள் எதிர்கொள்ள வேண்டி வரலாம்.

குறிப்பு

## 8.7. தொகுத்துக் காண்போம்:

மானிடவியலின் மகத்தான பணி மனிதப் பண்பாட்டின் படிமலர்ச்சி நிலைகளை மீட்டுருவாக்கம் செய்வது எனத் தீர்மானிக்கப்பட்ட நிலையில் நிகழ்ந்த தொழில்நுட்ப மாற்றங்கள், குடும்ப அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள், பொருளியல் மாற்றங்கள், சமுதாய அமைப்பில் ஏற்பட்ட பிற மாற்றங்கள் முதலானவற்றை மீட்டுருவாக்கம் செய்வது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

மக்கள் வாழுமிடங்களையே மானிடவியலார் ஆய்வுக் கூடங்களாக எடுத்துக் கொள்ளப் பட்டு பர நிலைகளில் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளின் தன்மையை மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

## 8.8. சோதித்தறியும் வினாக்கள்

இக்காலக் களப்பணிமுறை குறித்து விளக்குக.

பொதுப்படையான தரவுகளைப் பெறுவது எப்படி? விவரி.

## 8.9. பயிற்சி வினா

மானிடவியல் ஆய்வுமுறைகளின் படிநிலைகளை விளக்குக.

## 8.10. மேலும் பயில்வதற்கான நூல்

பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

# பிரிவு – 3 : உட்கூறுகள் - பொதுமை

## கூறு- 9 : தரவுகளைப் பகுத்து ஆய்தல் - ஒப்பீடு முறை

குறிப்பு

### 9.1. அறிமுகம்

மானிடவியல் ஆய்வுகளில் களப்பணிகளுக்குச் செய்து திரட்டிய தரவுகளைப் பகுத்தல், ஒப்பிடுதல் பற்றி இப்பகுதியில் விளக்கப்படுகின்றது.

### 9.2. குறிக்கோள்கள்

ஆய்வுத்தரவுகளைப் பல வகைகளாகத் திரட்டவும் அவற்றைப் பகுத்து ஆராய்தல் பற்றியும் மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்

திரட்டப்பட்ட தரவுகளுக்கு இடையிலான ஒப்புமைகளை ஒப்பீட்டு முறையில் ஆய்வது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

### 9.3. தரவுகளும் பகுப்பும்

களப்பணியில் தரவுகளைத் தொகுப்பதற்கு அனைவருக்கும் பொதுவான ஓர் ஆயத்தநிலை (readymade) ஆய்வுமுறை இல்லை. இது இயலாத ஒன்று களத்திற்குச் செல்லும் முன்னரே இந்த இந்த வகைகளில் தரவுகளைத் தொகுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடும், இந்த இந்தத் கேள்விகளைக் கேட்டுத் தரவுகளைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தோடும் அனைவரும் செல்ல இயலுமா? ஆய்வாளா் தம் சொந்தப் பண்பாட்டில் வேண்டுமானால் மேற்கூறிய நிலையில் ஆய்வு செய்ய முற்படும் போது இவ்வகை நிலையில் ஆய்வு செய்வது கடினம்.

ஓர் அயற்பண்பாட்டில் உறவுமுறை பற்றி ஆராய்வதாகக் கொள்வோம். தகவலாளியிடம் உன் மாமாவை என்ன உறவுப் பெயர் கொண்டு அழைப்பாய்? அத்தகைய மக்களை எவ்வாறு குறிப்பிடுவாய்? நீங்கள் தந்தைவழிச் சமூகத்தினரா? தாய்வழிச் சமூகத்தினரா? போன்ற கேள்விகளைக் கேட்டால் அவன் திணறிப் போய் நிற்பான். ஆய்வு செய்யும் போது அயற்பண்பாட்டில் அத்தை, மாமா என்னும் பொருளைப் புரிய வைக்க சரியான வழியைக் கையாளத்தவறினால் ஆய்வாளா் தொகுத்து வைத்த கேள்விகள் பயனற்றதாக அமையும். அவ்வாறே திணைக்குடியினா் தங்கள் சமுதாயம் தந்தை வழியுடையது தாய்வழியுடையது என்று ஒருபோதும் வகைப்படுத்திக் காண்பதில்லை. பொதுவாக எந்தவொரு சமுதாயத்தினரும் தம் சமுதாயத்தில் என்னென்ன அமைப்புகள் உள்ளன. அதற்கு என்ன பெயர் என்றெல்லாம் சிந்திப்பதில்லை. இவ்வகை வகைப்பாடுகள் மானிடவியலாா் அவா்களின் ஆய்விற்காக ஏற்படுத்திக் கொண்ட வசதிகளேயாகும். ஆகவே ஆய்வாளா்

குறிப்பு

கேட்கும் கேள்வி உறவுமுறை பற்றியதாக இருந்தாலும் சரி அது தகவலாளிக்குப் புரியாத வரை அக்கேள்விகள் பயனற்றதே. ஆய்வாளரின் சொந்தப் பண்பாட்டின் பின்னணியில் தொகுக்கப்படும் பல கேள்விகள் திணைக்குடியினருக்குத் தொடர்பற்றதாகவும் அர்த்தமற்றதாகவும் அமையக் கூடும். ஆகவே, ஆய்வாளர்கள் களத்திற்குச் செல்லும் முன் இந்த இந்தத் கேள்விகளைக் கேட்டு தரவுகளைப் பெற வேண்டும் என்றோ எண்ணினால் அது பயன்தராது. அதனால் களப்பணியில் எவ்வாறான முறையில் தரவுகளைச் சேகரிக்க வேண்டும் என்ற முன்னேற்பாடு தேவையில்லை என்று எண்ணக் கூடாது. அவ்வாறே களத்திற்குச் செல்லும்முன் ஆய்வாளர்கள் தொகுக்கும் கேள்விகள் ஆய்வுக்குப் பொருத்தமற்றது என்றும் எண்ணக்கூடாது. அக்கேள்விகள் தகவலாளியின் பண்பாட்டுப் பின்னணியுடன் களத்தில் கேட்கப்பட வேண்டும் என்பதே முக்கியம்.

அயற்பண்பாடுகளை ஆராயும் போது களப்பணியில் மேற்கூறிய இடர்பாடுகள் ஏற்பட்டால் மானிடவியலார் 1950களில் ஒரு புதிய அணுகுமுறையை ஏற்படுத்தினர். அது இனக்குழு அறிவியல் (ethnoscience) அல்லது அறிதல்சார் மானிடவியல் (cognitive anthropology) எனக் கூறப்படும்.

திணைக்குடிகளின் மொழியைப் பயன்படுத்துவதன் மூலமே அவர்களின் பண்பாட்டைப் புரிந்து கொள்ளமுடியும் என்றும், அயற்பண்பாட்டின் மொழியைப் பயன்படுத்தும்போது மட்டுமே அப்பண்பாட்டை முழுமையாக விளக்கும் தகுதியை ஆய்வாளர் பெற முடியும் என்றும் இனக்குழு அறிவியலார் கூறுவர். மக்களின் ஒவ்வொரு செயலையும் அவர்களின் கருத்துக்களையும் சமுதாய நடத்தை முறைகளையும் அம்மக்களின் கண்கொண்டே நோக்க வேண்டும். ஆய்வாளர் ஆய்வு செய்யும் மக்களோடு ஒருவராக இணைந்து அப்பண்பாட்டில் ஓர் உறுப்பினர் என்ற நிலையில் தரவுகளைப் பெற வேண்டும் என்பன போன்ற கருத்துக்களையும் இனக்குழு அறிவியலார் வலியுறுத்திக் கூறுவர்.

களப்பணியில் ஆய்வு செய்யும் பண்பாட்டை அம்மக்கள் எவ்வாறு காண்கிறார்களோ அக்கண்கொண்டு நோக்கும் அணுகுமுறை அகவய நோக்கு(emic viewpoint) எனக்கூறப்பெறும். அவ்வாறின்றி ஆய்வாளர் ஒரு வெளியராக நின்று விளக்க முற்பட்டால் அது புறவய நோக்கு (etic viewpoint) எனக்கூறப்பெறும். இது பற்றி மேலும் அறிய ‘பண்பாட்டுக் கோலங்கள்’ என்னும் அத்தியாயத்தில் ‘பண்பாடு ஓர் அறிதல் சார் அமைப்பு’ என்னும் உட்தலைப்பில் காண்க. இனக்குழு அறிவியலை இன்றைய மானிடவியலார் புதிய இனக்குழுவியல் (new ethnography) என்றும் வழங்குவர். இனக்குழுவியல் ஆய்வுகளில் இப்பிரிவின் செல்வாக்கு அண்மைக் காலத்தியது என்றாலும் இதன் தோற்றம் எட்வர்டு சப்பிர் காலத்திலிருந்தே தோன்றி விட்டது.

## 9.4. தரவுகளைப் பகுப்பது எப்படி

குறிப்பு

இனக்குழுவியல் அல்லது இனக்குழு ஒப்பாய்வியல் ஆய்வுகளில் தரவுகளைத் தேடும் இறுதிக்கட்டத்திலிருந்தே பொதுமையாக்கம்(generalization) செய்யும் நிலையினையும் தொடங்க வேண்டும். அதன் தொடக்கத்திலிருந்தே சமுதாயத்தில் மக்கள் ஒருவருக்கொருவர் இடைவினை புரியும் நிகழ்ச்சிகள் பலவற்றை ஆய்வாளர் தினந்தோறும் உற்று நோக்க வேண்டும். பல மாதங்கள் சென்ற பின்பு ஆய்வாளர் மக்களின் ஆயிரமாயிரம் நிகழ்ச்சிகளை உற்றுநோக்கும் வாய்ப்புக் கிட்டி விடுகிறது. அந்நிகழ்ச்சிகள் அனைத்திலும், மக்கள் வெளிக்காட்டும் நடத்தை முறைகளிலும் செயல்பாடுகளிலும் ஏதாவது தோரணிகள் (patterns) வெளிப்படுகிறதா என்பதைக் காண முயல வேண்டும். அவற்றைக் கொண்டு அக்குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைச் சார்ந்த சமுதாயக் கூறுகள் எந்த வகையான உறவினைப் பெற்றுள்ளன எனத் தற்காலிகமாக முடிவை அடுத்தடுத்த உற்று நோக்கலின் போது சரிபார்த்து உறுதிப்படுத்த வேண்டும். பொதுமைப்படுத்தித் தோரணிகளைக் காண்பதில் முயல வேண்டும். தோரணிகளைக் காண்பது என்பது சிக்கலான செயல் அன்று பொதுமையாக்கத்தின் மறுநிலையே தோரணிகளாகும்.

ஒரு தனிப்பட்ட பண்பாட்டை ஆராயும் இனக்குழுவியல் ஆய்வுகளில் பொதுமையாக்கம் செய்ய வேண்டியுள்ளது. ஆனால் இனக்குழு ஒப்பாய்வில் ஆய்வுகளில் பொதுமையாக்கம் செய்வது அவ்வளவு எளிதல்ல. ஆய்வுக்குரிய பொருளோடு தொடர்புடைய பல பண்பாடுகளையும் ஒப்பீடு செய்ய வேண்டும். அதன்பொருட்டு உருவனதே ஒப்பீட்டு முறை(comparative method) ஆகும்.

## 9.5. ஒப்பீட்டு முறை

மானிடவியலின் கொள்கை சார்ந்த ஆய்வுகள் அனைத்திற்கும் அடித்தளமாக விளங்குவது ஒப்பீட்டு முறையாகும். இது பண்பாட்டிடை ஒப்பீடு (cross – cultural comparison) என்றும் பண்பாட்டிடை ஆய்வு (cross – cultural study) என்றும் வழங்கப்பெறும். மானிடவியலில் ஒப்பீட்டு முறை தோன்றிய முறையையும் இன்றுள்ள நிலையையும் நோக்கினால் அதன் வளர்ச்சி பெரும் வியப்பினைத் தரும். இம்முறை பல நிலைகளில் வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

19- ஆம் நூற்றாண்டு மானிடவியலார் இன்று வாழும் பழங்குடி மக்களைப் பழங்காலத்தில் வாழ்ந்து அற்றுப்போன மக்களின் பேராளர்களாகக் கொண்டு கடந்த கால மக்களின் நடத்தை முறைகளை ஆராய்ந்தனர். இதுமுதல் வகை ஒப்பீட்டு முறையாக அமைந்தது. அதற்கடுத்து மானிடவியலார் ஒவ்வொரு சமுதாயக் கூறையும் தனித்தனியாக எடுத்துக் கொண்டு எளிய நிலையிலிருந்து வளர்ச்சி பெற்ற நிலைவரை அதன் வளர்ச்சி நிலைகளை ஒப்பிட்டுப் பேசி

வந்தனர். எடுத்துக்காட்டாக முன்னோர் வழிபாடு ஆவியுலக நம்பிக்கையைக் காட்டிலும் மேம்பட்டதாகக் கருதினர். பின்னர் ஒருதெய்வ வழிபாடு முன்னோர் வழிபாட்டைவிட உயர்ந்த நிலை எனக் கருதினர். சமயத்தின் தோற்றம் ஆவியுலக நம்பிக்கை என்ற எளிய நிலையில் தொடங்கி படிப்படியாக வளர்ச்சி பெற்று ஒருதெய்வ வழிபாடு என்ற வளர்ச்சி பெற்ற நிலைக்கு வந்துள்ளது என முடிவு செய்தனர். அவ்வாறே ஒவ்வொரு சமுதாயக் கூறின் வளர்ச்சி நிலைகளை ஒப்பிட்டு வரிசைப்படுத்தினர். இது இரண்டாம் வகை ஒப்பீட்டு முறையாக அமைந்தது.

இன்றைய ஒப்பீட்டு முறை மிக அண்மைக் காலத்தில்தான் தோற்றம் பெற்றது. மனித சமுதாயத்தைப் பற்றிய எந்த ஒரு விளக்கத்தைக் கூறும் போதும் மானிடவியலார் தம் சொந்த சமுதாயத்தைக் கொண்டோ தமக்குத் தெரிந்த நான்கைந்து சமுதாயங்களைக் கொண்டோ பொதுமைப்படுத்திக் கூறுவதில்லை. எந்த அளவிற்குப் பிற சமுதாயங்களை ஒப்பிட்டுப் பார்க்க முடியுமோ அந்த அளவிற்கு ஒப்பிட்டுப் பார்க்க முயல்வர். எடுத்துக்காட்டாக, மனிதனைப் பற்றியும் மனிதனின் தன்மை (human nature) பற்றியும் ஒருவர் கூற முற்பட்டால் அவர் அனைத்துப் பகுதிகளைச் சார்ந்த இனத்தவர்களின் உடல் உயிரியலையும் சமுதாய நடத்தை முறைகளையும் அறிய வேண்டும். இவ்வாறான முயற்சியில் இன்று மானிடவியலார் மனிதனின் பொதுப்படையானதும் தனித்தன்மை வாய்ந்ததுமான (unique) தன்மைகளை அறுதியிடும் பொருட்டு இக்கால மக்கள் தொடங்கி பண்டைக் காலத்தில் வாழ்ந்த மக்கள் வரை அவர்களின் பெரும்பாலான வகைகளை ஒப்பிட்டு ஆராய்கின்றனர். பண்பாட்டு மானிடவியலார் சமுதாயப் பண்பாட்டு முறைகளை அறுதியிடும் பொருட்டு இயன்றவரை அனைத்து வகையிலான பழங்குடி (tribe) மக்களையும் இக்காலத் தொழில்துறை மக்களையும் ஒப்பிட்டு ஆராய்கின்றனர். பொது மானிடவியலார் உடல்சார் கூறுகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் இணைத்து மனிதனைப் பற்றிய ஒப்பிட்டுத் தன்மையை விளக்குகின்றனர்.

ஒப்பபீட்டு முறைக்குத் தனிப்பெரும் தகுதியை ஏற்படுத்த முயன்றவர் ஜார்ஜ் பீட்டர் மர்டாக் ஆவார். இவர் 1937 - இல் உலகம் முழுவதற்குமான பண்பாட்டிடை மதிப்பாய்வை (cross – cultural survey) மேற்கொண்டார். இத்திட்டத்தைப் பின்னர் மனித உறவு பரப்புக் கோப்புகள் (Human Relations Area Files - HARF) என மாற்றியமைத்தார். இன்று நமக்குத் தெரிய வந்துள்ள அனைத்துப் பண்பாடுகளைப் பற்றிய தரவுகள் இக்கோப்புகளில் உள்ளன. இக்கோப்புகள் மூலம் களப்பணி மேற்கொள்ளாமலேயே ஓர் எடுகோளைச் சோதிப்பதற்குத் தேவையான தரவுகளைப் பெற இயலும். தொடர்புடைய கூறுகள் குறித்த புள்ளி விவரங்களைக் கொடுப்பதோடு இவ்வகைக் கூறுகளின் மாதிரிகளைத் தேர்ந்தெடுத்து அறிதற்கும், அவற்றை

குறிப்பு

இனவாரியாகப் பிரித்துப் பகுத்து ஆராய்வதற்கும் இக்கோப்புகள் உதவுகின்றன.

ஏல் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் தரவுகளைச் சேகரிக்கும் போது அவற்றிற்குக் குறியீடுகள் கொடுத்துப் பின்னர் மீண்டும் அக்குறியீட்டைப் பயன்படுத்தி தரவுகளைப் பெறும் முறை ஏற்படுத்தப்பட்டது. இதனால் ஒரு தலைப்பின்கீழ் வரும் தொடர்புடைய கூறுகள் அனைத்தையும் ஒன்று சேர்க்க முடிகிறது. ஒரு தனிப் பண்பாட்டுக் கூறை(culture trait) ஆராய விரும்பும் ஆய்வாளர் இக்கூறு உலகின் பிற பண்பாடுகளில் எவ்வாறு செயல்படுகிறது என்பதை உடனே ஆராய இக்கோப்புகள் உதவுகின்றன.

மர்டாக் (HRAF) திட்டத்தை வெற்றிகரமாக முடிக்க உதவியது அவரது ‘உலக இனக்குழுவியல் வரைபடத் (world Ethnographic Atlas) திட்டமாகும். இவ்வரைபடம் உலகின் பல்வேறு பகுதியிலிருந்து 250 க்கும் மேற்பட்ட பண்பாட்டுகளின் தரவுகளைத் தலைப்பு வாரியாகத் தொகுத்து விவரிக்கிறது. மானிடவியலின் பண்பாடுகளில் எவ்வாறு செயல்படுகிறது? சூனிய முறை உலகம் முழுவதும் எவ்வாறு உள்ளது? பூப்புச் சடங்கு பிற பண்பாடுகளில் எந்தெந்த வகைகளில் மேற்கொள்ளப்படுகிறது? போன்ற எண்ணற்ற தலைப்புகளில் ஆராய இதுவகை செய்கிறது.

மர்டாக்கின் தொகுப்பியல் பணிமூலம் மானிடவியல் பொதுமையாக்கத்திற்கும் பண்பாட்டிடை ஒப்பீடுகளுக்கும் புத்துயிர் பிறந்தது. இதன் மகத்தான வெற்றி என்னவெனில், சில குறிப்பிட்ட பண்பாட்டுக் கூறுகள் உலகம் முழுவதும் பல பண்பாடுகளில் ஒன்றாக இணைந்தே காணப்படுவதேன், அவை இணைந்து காணப்படுவதற்கு எவை காரணமாயுள்ளன போன்ற எடுகோளுக்கு விடை காண முடிந்தது. மர்டாக்கின் தரவுகளைப் பயன்படுத்தி ஆய்வு செய்த சுவான்சனின் சில கருத்துக்களை இங்கு காண்போம். ஒரு கடவுள் வழிபாடானது மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட படிநிலைக் குழுக்களையுடைய சமுதாயத்தில் தோன்றியது என்பார். இவர். சமுதாய ஒழுங்கை நிலை நாட்டுவதில் முறைப்படியான சட்ட முறைகளைக் கொண்டிராத சமுதாயங்களில் சூனியமுறை காணப்படுகிறது என்பார் இவர். இவ்வகைக் கருத்துக்களை (எடுகோள்களை) உருவாக்க மர்டாக்கின் கோப்புகளும், இனக்குழுவியல் வரைபடமும் உதவுகின்றன.

20 – ஆம் நூற்றாண்டில் ஒப்பீட்டு முறை பண்பாட்டு மாற்ற (culture change) ஆய்வுகளில் பெருமளவு பயன்படுத்தப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுப் பரப்பிற்குள் உள்ள சமுதாயங்களுக்கிடையில் எவ்வாறு பண்பாட்டு மாற்றம் நிகழ்கிறது என்பதில் ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. அமெரிக்கர்கள் இவ்வகை ஆய்வுகளை அமெரிக்க இந்தியப் பழங்குடிகளிடம் மேற்கொண்டனர். அதே நேரத்தில் ஆங்கிலேயர்கள் இவ்வகை ஆய்வுகளை ஆப்பிரிக்கச் சமுதாயங்களில்

குறிப்பு

மேற்கொண்டனர். இக்காலகட்டத்தில் ஒப்பீட்டு முறையில் மேலுமொரு வகையைச் சேர்ந்தவர் ஃபிரட் எக்கான் ஆவார். இவர் 1954 – ஆம் ஆண்டு அமெரிக்க மானிடவியலார் கழகத்தில் உரையாற்றியபோது இப்புதிய முறையைக் குறிப்பிட்டார். அமமுறைக்கு அவர் கொடுத்த பெயர் கட்டமைந்த ஒப்பீடு (controlled comparison) ஆகும்.

ஃபிரட் எக்கான் ஒத்த சமுதாயங்களையும் ஒத்த பண்பாடுகளையும் மட்டுமே ஒப்பிட வேண்டும் என வலியுறுத்தினார். ஒருவர் ஆஸ்திரேவிய முதுகுடிகளின் கால்வழி அமைப்புகளை (lineage systems) ஆராய விரும்பினால் அவர் அவ்வாறான அமைப்புகளையுடைய தென் கலிப்போர்னிய இந்தியர்களிடமும் ஆய்வு செய்ய வேண்டும். பின்னர் அதுபோன்ற சமுதாயங்களில் இம்முறை எவ்வாறுள்ளது என ஆய்வு செய்ய வேண்டும். ஆகவே ஒரு பண்பாட்டை ஆராய விரும்புபவர் அதே தன்மையுடைய பண்பாடுகளை மட்டுமே ஒப்பீடு செய்ய வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது. எக்கான் வலியுறுத்திய இம்முறை 'குறைந்த அளவுடைய ஒப்பீட்டு முறை'யாக (limited comparison) இருந்தமையால் இது பெரும் செல்வாக்குப் பெறவில்லை. ஆயினும் இது ஒப்பீட்டு முறையில் ஒரு புதிய பரிமாணத்தையும் வகையையும் சேர்த்தது.

ஒப்பீட்டு முறை பிற துறைகளிலும் பயன்படத்தக்கது. பண்பாட்டிடை நிலையில் ஒப்பீட்டு ஆய்வுகள் பிற துறைகளுக்கும் (உளவியல்) எவ்வாறு பயனுடையதாக உள்ளது என்பதைப் புகழ்பெற்ற மானிடவியலாலரான கேம்பல் பின்வருமாறு குறிப்பிடுகிறார். உளவியலில் மேற்கொள்ளப்படும் பல தற்காலிகக் கருத்துக்களை மானிடவியலின் பண்பாட்டிடை கருத்துக்களைக் கொண்டு அவற்றை மறுசோதனை செய்து உறுதிப்படுத்திக் கொள்ள இயலும். நம் சொந்த சமுதாயத்தைப் பற்றிச் சோதனைக் கூடங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளும் பிறவற்றுடன் தொடர்புபடுத்தி ஆராயும் ஆய்வுகளும்(correction studies) பல வேளைகளில் பொய்த்துப் போவதுண்டு. அவ்வாறான வேளையில் பண்பாட்டிடைத் தரவுகள் பயனளிப்பதாக அமையும். மானிடவியல் ஒப்பீட்டு முறை மேலும் எவ்வகைகளில் எல்லாம் பயன்படுத்தப்படுகிறது என விரிவாக அறிய விழைவோர் இராட்கிளிஃப் பிரௌனின் 'சமுதாய மானிடவியலின் முறை' என்னும் நூலைக் காணலாம்.

## 9.6. தொகுத்துக் காண்போம்:

ஆய்வுத்தரவுகளைப் பல வகைகளாகத் திரட்டவும் அவற்றைப் பகுத்து ஆராய்தல் பற்றியும் மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

திரட்டப்பட்ட தரவுகளுக்கு இடையிலான ஒப்புமைகளை ஒப்பீட்டு முறையில் ஆய்வது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 9.7. சோதித்தறியும் வினாக்கள்

குறிப்பு

ஒப்பீட்டு முறை ஆய்வுகள் குறித்து விளக்குக.

ஆய்வுத் தரவுகளைப் பெறும் வழிமுறைகளை எழுதுக.

## 9.8.. பயிற்சி வினா

தரவுகளைப் பகுத்தாய்தலின் படிநிலைகளை விளக்குக.

## 9.9. மேலும் பயில்வதற்கான நூல்

பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

# கூறு-10 : பண்பாட்டின் உட்கூறுகள் - உட்கூறுகளின் தன்மைகள்

குறிப்பு

## 10.1. அறிமுகம்

மானிடவியலின் அனைத்து ஆய்வுப்பரப்புகளும் ‘பண்பாடு’ என்று அடித்தளத்தின் மீது எழுப்பப் பெற்றுள்ள தன்மையையும், பண்பாட்டின் உட்கூறுகளின் தன்மைகளைப் பற்றியும் அறிந்து கொள்ள இப்பகுதி வழிகாட்டுகின்றது.

## 10.2. குறிக்கோள்கள்

மானிடவியலின் பரந்துபட்ட ஆய்வுப் பரப்புகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் பாங்கினைப் பண்பாடு என்னும் கருத்தாக்கம் பெற்றுள்ளது தன்மையை மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

ஒவ்வொரு பண்பாட்டிலும் இடம்பெற்றுள்ள கூறுகளைத் தொகுத்துக் காணும்போது நிலையில் அவற்றின் மூன்று நிலைகளாக மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

## 10.3. பண்பாடு சில வரையறைகள்

மானிடவியலின் பரந்துபட்ட ஆய்வுப் பரப்புகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் பாங்கினைப் பண்பாடு என்னும் கருத்தாக்கம் பெற்றுள்ளது. அனைத்து ஆய்வுப்பரப்புகளும் ‘பண்பாடு’ என்று அடித்தளத்தின் மீது எழுப்பப் பெற்றுள்ளது என்பார் பிரான்ஸ் போவாஸ். பண்பாடு என்னும் கருத்தாக்கத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடும்போது, கணிதவியலின் சுன்னம் (zero) என்னும் கருத்தாக்கம் எவ்வளவு முதன்மையானதோ அவ்வாறே மானிடவியலிலும் ‘பண்பாடு’ என்னும் மிகவும் முதன்மையாகிறது என்பார் போவாஸ். (Merwyn s.Garbarion, sociocultural Theory in anthropology (new york holt, Rinehart and Winston,1977) p.49 ) இவ்வகைக் கருத்து போவாஸ் காலத்திலிருந்து அமெரிக்க மானிடவியலில் வலுப்பெற்று விட்டது.

மானிடவியலின் அடித்தளமாக விளங்கும் பண்பாடு பற்றிய கருத்தாக்கம் இத்துறைக்கே உரியது என இல்லாமல் பிற துறையினரும் கையாளும் நிலை இருந்து வந்துள்ளது. அதனால் இப்பொருள் குறித்த ஆய்வுகளும், விளக்கங்களும், வரையறைகளும் பலவகைப் பட்டவையாக உள்ளன. பண்பாட்டின் உட்பொருளைக் குறிப்பிடுவதில் ஏற்பட்ட வேறுபாடுகள் அளவிடமுடியாதவை பாலூட்டிகள் (அயஅஅயடள) எவை என்பது குறித்து ஏற்பட்ட வரையறைகள் எவ்வளவு வேறுபாடுகளைக் கொண்டதோ அதற்கும் மேல் வேறுபாடுகளைக் கொண்டது பண்பாடு பற்றிய வரையறைகளும் விளக்கங்களுமாகும்.

பண்பாடு என்றால் என்ன? என்பது பற்றிப் பல வல்லுநர்கள் பலவாறு விளக்கியுள்ளனர். வுரையறை செய்துள்ளனர். அவற்றை அறிய விழைவோர் குரோபரும் குளுக்கானும் எழுதிய நூலினைப் (Kroeber, a.l.,and kluckhohn c.(eds), culture: A Critical Review of Concepts and definitions (New York: Random house, 1952) படிக்க வேண்டும். அந்நூலில் 160 க்கும் மேற்பட்ட வரையறைகள் அவ்வாறு வேறுபட்டுள்ளன என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

அ). பண்பாடு என்பது மக்களால் ஆக்கப் பெற்ற கருவி. அந்த ஊடகத்தைக் கொண்டே மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர்.

ஆ). பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து செயல்படும் போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இது அந்தந்தச் சமுதாயத்திற்கு மட்டுமே உரியது. இது உயிரியல் நிலையில் மரபுரிமையாக வராதது.

இ). மக்கள் தலைமுறை தலைமுறையாக குழுவாகப் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், பழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு ஆகும்.

ஈ). பண்பாடு என்பது மனிதனின் உடல்சாராத தகவமைப்பு.

ஊ). பண்பாடு என்பது மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சுற்றுச்சூழல். இதில் பொருள்சாராப் பண்புகள், சட்டங்கள், நம்பிக்கைகள் முதலானவை அடங்கும்.

ஊ). பண்பாடு என்பது மரபு வழியில் புரிந்துகொண்டுள்ளவை பற்றிய ஓர் அமைப்பு. இது கற்றலின் மூலம் பெறப்படுவது: கற்றல் நடத்தைமுறையின் வழி உருவாக்கப்படுவது.

எ). பண்பாடு என்பது அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துக்களும், சமுதாய மரபுரிமையாகப் பெறப்பட்ட நம்பிக்கைகளும் அடங்கிய தொகுப்பாகும்.

ஏ). பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும்.

மேற்கூறிய வரையறைகளுள் இறுதியாகக் கூறப்பட்டது புகழ்பெற்ற மானிடவியலறிஞர் எட்வர்ட் பானட் டைலரின் வரையறையாகும். ஆவியுலகக் கோட்பாட்டை (animism) வகுத்தவரும் இவரே. இன்று பண்பாடு என்பதை எவ்வாறு பொருள் கொள்கிறோமோ அதே வகையில் இச்சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் டைலரே. இவர் 1871 - இல் வெளியிட்ட ‘தொன்மைப் பண்பாடு’

(primitive culture) என்னும் நூலில் மேற்கூறிய வரையறையைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பு

Culture or civilization, taken in its wide ethnographic sense,

Is that complex whole which

Includes knowledge, belief, art, morals, law,

Custom, and any other capabilities and

Habits acquired by man as a member of society.

(E.B. Tylor, Primitive Culture,2 Vols(New York: Harper&Row, 1958), p.l.Originally published in 1871)

டைலரின் இவ்வரையறையே இன்று மிகவும் புகழ் பெற்றதாகவும், பெருவழக்காகவும், அனைவராலும் பயன்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.

பண்பாடு பற்றி குரோபரும் குளுக்கானும் தொகுத்த வரையறைகள் அனைத்தையும் ஆழ்ந்து நோக்கும்போது அவை இருவகைகளில் பண்பாட்டை விளக்க முற்படுகின்றன என்பதை அறிய முடியும். முதல்வகை வரையறைகள் உண்மையியல் வகை(realistic categeory) என்றும், இரண்டாம் வகை வரையறைகள் கருத்தியல் வகை (idealistic categeory) என்றும் வகைப்படுத்தலாம்.

உண்மையில் வகையைச் சேர்ந்த வரையறைகளை வகுத்தவர்கள், நேரடியாக உற்றுநோக்குதல் மூலம் அறியப்பெறும் நடத்தைமுறைகளையும், நடத்தைமுறையால் விளைந்த மற்றவைகளையும் கொண்டு பண்பாட்டை விளக்க முற்படுகின்றனர். இவர்கள் பண்பாட்டை உற்றுநோக்குதல் மூலம் அறிய முடியும் என்ற கருத்துடையவர்கள். (Merwyn s. Garbarino, Sociocultural Theory in Anthropology, op.cit.,p.49)

கருத்தியல் வகையிலான வரையறைகளை வகுத்தவர்கள், மக்கள் அவரவர் பண்பாட்டைப் பற்றி ஏற்படுத்திக் கொண்டுள்ள விழுமியங்களையும்(Values), நெறிமுறைகளையும் (norms), பிற கருத்தாக்கங்களையும் புரிந்துகொண்டு பண்பாட்டை விளக்க முற்படுகின்றனர். இவர்கள் பண்பாட்டை மனதளவில் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என்ற கருத்துடையவர்கள். இவ்வகையைச் சேர்ந்த ஆய்வாளர்கள் அவரவர் திறனுக்கேற்பவும் சொந்த அளவுகோலுக்கேற்பவும் பண்பாட்டை விளக்க முற்படுபவர் என்பது இங்குக் கவனத்திற்குரியது.

சுருக்கமாகக் கூறவேண்டுமானால் உண்மையில் அணுகுமுறையானது பண்பாட்டை உற்றுநோக்கக் கூடியது (observable) என்று கூறுகிறது. ஆனால் கருத்தியல் அணுகுமுறையானது பண்பாட்டை

குறிப்பு

உய்த்துணரக் கூடியது (infered) என்று கூறுகிறது. இவ்விரு வகைக் கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ளும் போது பல ஐயப்பாடுகள் எழுகின்றன. பண்பாடு என்பது உண்மையா? அல்லது உண்மையானவற்றிலிருந்து கருத்துவடிவமாகப் (abstract) பெறப்பட்டதா? இது புறஉலகில் நிலை பெற்றுள்ளதா? இக்கேள்விகள் அனைத்தும் மிகவும் முக்கியமானவை. ஏனெனில் இக்கேள்விகளுக்கான விடைகளை ஆய்வாளர்கள் எந்த முறையில் ஏற்படுத்திக் கொள்கின்றனர் என்பதைப் பொறுத்தே பண்பாட்டியல் ஆய்வுகள் அமைகின்றன. பண்பாட்டியல் ஆய்வுகள் பல வகைகளாகக் காணப்படுவதற்குக் காரணம் மேற்கூறிய வினாக்களுக்கு ஆய்வாளர்கள் வெவ்வேறு வகைகளில் விடைகளை ஏற்படுத்திக் கொண்டதேயாகும்.

பண்பாடு பற்றி ஓர் இனக்குழுவியலார் வகுத்துக் கொள்ளும் வரையறையாவது அவரது களப்பணி ஆய்வுப் போக்கிலும், அவர் தொகுக்கும் தரவுகளைப் பகுத்தாய்வதிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

கருத்தியலாருக்குப் (idealist) பண்பாடு என்பது செய்பொருள்களை (artifacts) மட்டும் சார்ந்ததன்று: அவற்றைப் பற்றிய மக்களின் கருத்துக்களுமாகும். அதோடு, பண்பாடு என்பது ஒரு முறைப்படியான நடத்தை முறைக்கு மக்கள் ஏற்படுத்திக் கொள்ளும் ஓர் அமைப்பு அல்லது மன அளவிலான விதி எனக் கருத்தியலார் கருதுகின்றனர். கருத்தியலாரின் இவ்வகை வரையறை நடைமுறைக்கு ஒவ்வாததாகவும், சோதித்துப் பார்க்க இயலாததாகவும் உள்ளதெனத் தொடக்கத்தில் விவாதிக்கப்பட்டது. ஏனெனில், பண்பாடு உற்றுநோக்கல் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது என்று கூறியதே காரணமாகும்.

உண்மையியலார் பண்பாட்டை உற்றுநோக்கல் மூலம் புரிந்து கொள்ள முடியும் என்கின்றனர். அவ்வாறு உற்றுநோக்க முற்படும்போது பல சிக்கல்கள் எழுகின்றன. ஆய்வாளர்கள் அயற் பண்பாட்டை ஆராயும்போது அவரவர் சொந்தப் பண்பாட்டின தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு அதே கண்ணோட்டத்தில் நோக்குவதால் ஆய்வுக்குட்படுத்தப்படும் பண்பாட்டுக் கூறுகள் வடிகட்டப்படுகின்றன: பண்புகள் உருமாற்றப் படுகின்றன. ஆகவே, பண்பாட்டைப் புரிந்து கொள்வதில் கருத்தியல், உண்மையியல் ஆகிய இரு அணுகுமுறைகளிலும் குறைபாடுகள் இருந்து வந்தன. பின்னர்ப் படிப்படியாக இக்குறைகளை அகற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இறுதியாக 60களில் இச்சிக்கல்கள் பண்பாட்டுச் சார்புடைமைக் கொள்கை (cultural relativism) மூலம் தீர்க்கப்பட்டது.

பண்பாடு என்பது சில வேளைகளில் புவிப்பரப்பு அல்லது நாடு சார்ந்ததாகவும் (எ-டு: அமெரிக்கப் பண்பாடு, மேற்கத்தியப் பண்பாடு, இந்தியப்பண்பாடு), மொழி, இனம் சார்ந்ததாகவும் (தமிழர் பண்பாடு, திராவிட பண்பாடு, ஆங்கிலேயர் பண்பாடு, யூதர் பண்பாடு , நீக்ரோ

குறிப்பு

பண்பாடு, பிரஞ்சுப் பண்பாடு), இடம் சார்ந்ததாகவும் (நகரப்பண்பாடு, ஊரகப் பண்பாடு), மக்கள் சார்ந்ததாகவும் (பழங்குடியினர் பண்பாடு – tribal culture, வேளாண்குடியினர் பண்பாடு peasant culture ) கூறப்படுகிறது. இவை அனைத்தையும் உற்றுநோக்கும் போது பண்பாடு என்பது அனைவராலும் பகிர்ந்து கொள்ளக் கூடியவை என்ற பொதுகருத்தை எட்ட முடிகிறது. இங்கு 'அனைவர்' என்பது நாடு, புவிப்பரப்பு, மொழி, இனம் போன்ற எந்த ஒன்றோடும் சார்ந்த மக்களைக் குறிக்கிறது. அதனாலேயே அனைத்து வேறுபாடுகளையும், எல்லைகளையும் கடந்து பொதுமைப்படுத்திக் கூறும் வழக்கு மானிடவியலில் கையாளப்படுகிறது. தனிப்பட்ட கூறுகளைச் சிறப்பித்துக் கூறும் வழக்கு (எ-டு: அமெரிக்கர் பண்பாடு, யூதர் பண்பாடு) இனத்தன்மை வாய்ந்ததாக, சார்புடைய எண்ணங்கொண்டதாக இருக்குமென்பதால் இவை பெரும்பாலும் தவிர்க்கப்படும்.

## 10.4.உட்கூறுகள் எவையெவை

பண்பாடு என்பது இலக்கியம், கவிதை, நடனம், இசை, கோயில்கள், சடங்குகள், வேதமந்திரங்கள், தொழில்கள் போன்ற சில கூறுகள் மட்டும் ஆகாது. இது மக்களின் நடத்தை முறைகளைக் கட்டுக்கோப்பான நிலையில் செயல்படும் ஒரு மிகப்பெரும் அமைப்பாகும். இவ்வமைப்பில் ஆயிரமாயிரம் கூறுகள் இடம்பெற்றுள்ளன. அவை பல கோலங்களில் (Patters) அமைந்து நிற்கின்றன. அவற்றின் மொத்த அமைப்பு கணிப்பொறி அல்லது விண்வெளிக்கலம் போன்ற சிக்கலான அமைப்புகளுடைய எந்திரத்தைப் போன்றது. இவ்வகை எந்திரங்களின் செயற்பாட்டிற்கு எவ்வாறு ஆயிரமாயிரம் உறுப்புகளைச் சிறப்பாக வடிவமைத்து இணைக்கின்றார்களோ அவ்வாறே ஒவ்வொரு பண்பாட்டிலும் ஆயிரமாயிரம் கூறுகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பண்பாடு என்னும் அமைப்பிற்குள் பொருத்தப்பட்டுள்ளன.

எந்திரத்தின் அமைப்பு கண்ணால் பார்க்கக் கூடியதாக உள்ளதால் அதனுள் என்னென்ன உறுப்புகள் உள்ளன, என்னென்ன துணை உறுப்புகள் உள்ளன, அவற்றின் உறவுகள் என்ன என்பவனவற்றை அறிய முடிகிறது. ஆனால் பண்பாடு என்னும் அமைப்பு மக்களின் ஒட்டுமொத்த நடத்தை முறையின் வெளிப்பாடாக உள்ளதால் அதனுள் என்னென்ன உள்ளன? அவற்றை இனங்காண்பது போன்றவை மறைமுகமாகவே உள்ளன. அதன் அமைப்பினை விளக்கும் நிலையில் பண்பாட்டியலார் மூன்று வகையான உட்கூறுகளை இனங்காண்பர். அவை: பண்பாட்டுக்கூறு (culture trait), பண்பாட்டுக் கலவை (culture complex), நிறுவனம் (institution).

## 10.5.பண்பாட்டுக் கூறு

பண்பாட்டின் மிகச் சிறிய அலகே (unit) பண்பாட்டுக்கூறு எனப்படும். ஒரு பண்பாட்டில் மிகச்சிறிய அலகு என்பது என்ன? அதை

குறிப்பு

வரையறுப்பது எவ்வாறு? போன்ற கேள்விகள் உடனடியாக நம் மனதில் எழும். பண்பாட்டில் இவை இவை மிகச் சிறிய அலகுகள் என ஒருவர் கருதுவதையே வேறொருவர் கருதாமலும் போகலாம். இவ்வாறான நிலை பண்பாட்டைப் பற்றிய நுண்ணறிவை ஒருவர் பெறாத வரையில் தாம் நிலவும். பண்பாட்டைப் பற்றிய தெளிவான அறிவனை ஒருவர் பெற்று விட்டால் அவருக்கு இவ்வகைச் சிக்கல்கள் எழா.

பண்பாட்டுக்கூறு பற்றிய கருத்துக்களுள் ஹோபலின் கருத்தே சிறப்பானது. “கற்றுணர்ந்த நடத்தை முறையானாலும் சரி, உற்பத்தி செய்யப்பட்ட பயன்பாடு பொருளானாலும் சரி, அதனை எந்த அளவுக்குக் காணக் கூடிய ஒன்றே பண்பாட்டுக்கூறு ஆகும் என்பார் ஹோபல் (Adamson E.Hoebel , man in primitive world (new York: McGraw – hill, 1949, p.499) பொருள்சார் பண்பாட்டைச் (material culture) சேர்ந்த கூறுகளைக் குறிப்பிட்ட வேண்டுமானால் நகம், கத்தி, எழுதுகோல், கைக்குட்டை, கதவு போன்ற தனிப்பட்ட (அதற்கு மேலும் குறைத்துக் காண இயலாத) நிலையிலுள்ள எண்ணற்ற கூறுகளைக் கூறலாம். பொருள்சார் பண்பாட்டிலிருந்து (non material culture) சில எடுத்துக்காட்டுகள் கூற வேண்டுமாயின், தலைவாருதல், நண்பர்கள் சந்திக்கும் போது கைக்குலுக்குதல், அன்பை வெளிப்படுத்துவதற்காக முத்தம் கொடுத்தல், சாலையில் இடப்புறம் செல்ல வேண்டுமென்ற நெறியைப் பின்பற்றுதல், கொடியேற்றியவுடன் வணக்கம் செலுத்துதல் போன்ற எண்ணற்ற கூறுகளைக் குறிப்பிடலாம். ஒவ்வொரு பண்பாட்டிலும் ஆயிரக்கணக்கான கூறுகள் உள்ளன. அவற்றுள் பல அனைத்துப் பண்பாட்டிற்கும் பொதுவானவையாக இருக்கும். சில அந்தந்தப் பண்பாட்டிற்கு மட்டும் உரியனவாக இருக்கும்.

## 10.6. பண்பாட்டுக் கலவை

மேற்கண்ட பத்திகளில் பண்பாட்டுக்கூறைப் பற்றிப் புரிந்து கொண்ட இந்நிலையில் நடனம் என்பது ஒரு தனிப்பண்பாட்டுக் கூறு எனக் கூறலாமா? கூறமுடியாதா? என வினவினால் அது ஒரு தனிப்பண்பாட்டுக் கூறல்ல என்றுதான் கூற வேண்டும். அது பல கூறுகளின் தொகுப்பாகும். நடன அசைவுகள் ஒவ்வொரு நடன அசைவிற்குமுள்ள விதிமுறைகள், பல கருவிகளைக் கொண்ட பின்னணி இசை போன்ற பல கூறுகள் ஒன்றிணைந்த நிலையில் நிகழ்த்தப்படுவதே நடனமாகும். அதோடு நடனம் பல பொருள்களில் (meaning) நிகழ்த்தப்படுகிறது. சமயச் சடங்குகள், மந்திரச் சடங்குகள், காதல் வெளிப்பாடு, பொழுதுபோக்கு, விழாக்கள் போன்றவை அவற்றுள் சில. இதுபோன்ற வகைகளில் நிகழ்த்தப்படும் ஒவ்வொரு வகையான நடனத்திற்கும் தனித்தனிப் பொருளுண்டு. ஒவ்வொரு வகையிலும் பல கூறுகள் இணைகின்றன.

நடனத்தைப் போன்றே வீடு என்பது ஒரு தனிப்பட்ட பண்பாட்டுக் கூறன்று. கல், மணல், சிமெண்டு, வாயிற்படிகள், சன்னல்கள், கதவுகள்,

குறிப்பு

கிணறு போன்ற பல தனிப்பட்ட கூறுகள் ஒன்றிணைந்த தொகுப்பேயாகும். அவ்வாறே கால்பந்தாட்டமும் பல கூறுகளின் தொகுப்பாகவே உள்ளது. விளையாட்டுத்திடல், பார்வையாளர்கள், விளையாட்டுக் கருவிகள், விளையாட்டு நுட்பம், ஆட்டக்காரர்கள், நடுவர் போன்ற பல கூறுகள் அதனுள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு பல கூறுகள் ஒன்றாகக் கலந்து ஒரு சேர்மமாகக் காணப்படுவது பண்பாட்டுக் கலவை (culture complex) எனப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட கூறுகள் இணைக்கப்பட்ட இப்பண்பாட்டுக் கலவையானது பண்பாடு என்னும் எந்திரத்தில் பல துணை உறுப்புகளாக இணைக்கப்பட்டுள்ளது.

## 10.7. நிறுவனம்

பண்பாட்டுக் கலவை, பண்பாட்டில் எவ்வகையான இடத்தைப் பெற்றுள்ளது என்பதைக் கூறவேண்டுமானால் ஒரு தனிப்பட்ட பண்பாட்டுக் கூறுக்கும் நிறுவனத்திற்கும் (institution) இடைப்பட்ட நிலையில் உள்ளது எனக் கூறலாம்.

நிறுவனமானது பல பண்பாட்டுக் கலவைகளால் ஆனது. குடும்பம் ஒரு நிறுவனம் ஆகும். இதில் திருமணம், உறைவிடம், தேன்நிலவு, உடலுறவு, குழந்தை வளர்ப்புப் போன்ற பல கலவைகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு நிறுவனத்திலும் சில கலவைகள் (உறுப்புகள் அல்லது பிரிவுகள் - prats) சிறப்பிடம்பெறாமல் உள்ளன.

## 10.8. உட்கூறுகளின் தன்மைகள்

ஒவ்வொரு பண்பாட்டிலும் இடம்பெற்றுள்ள கூறுகள் பல்வேறு தன்மை வாய்ந்தவை. இருப்பினும் அவற்றின் பண்புகளைத் தொகுத்துக் காணும்போது அவற்றைப் பின்வரும் மூன்று நிலைகளாக வரிசைப்படுத்தலாம்.

1. பொருள்சார் கூறுகள் (Material components)
2. அறிதல்சார் கூறுகள் (cogniyive components)
3. நெறியியல் கூறுகள் (normative components)

### 10.8.1. பொருள்சார் கூறுகள்

மக்கள் அவர்களின் பயன்பாட்டிற்காக ஏற்படுத்திக் கொள்ளும் அனைத்துப் பொருள்களும் பொருள்சார் கூறுகள் எனப்படும். இயந்திரங்கள், வீட்டுப்பொருள்கள், அழகுப் பொருள்கள், தொழிற்கருவிகள், கட்டடங்கள், சாலைகள், போக்குவரத்துச் சாதனங்கள் போன்றவை இதிலடங்கும். இக்கூறுகள் மக்களின் சிந்தனைமுறை, உணர்வுகள், அறிவு, அழகுணர்வு போன்ற பல பொருள்சாராப் பண்பாட்டையும் வெளிப்படுத்துபவையாகத் திகழ்கின்ற. பொருள்சார் கூறுகள் மக்களின் தேவைகளுக்காக ஏற்படுத்தப்பட்டவையாதலால்

அத்தேவைகள் நிலைபெற்றுள்ள வரை அக்கூறுகளும் அவர்களின் பண்பாட்டில் நிலைத்திருக்கும்.

குறிப்பு

## 10.8.2.அறிதல்சார் கூறுகள்

ஒரு பண்பாட்டின் அறிதல்சார் கூறுகள் என்பவை அப்பண்பாட்டைச் சேர்ந்தவர்களின் 'அறிதிறன்' (cognition) கூறுகளைக் குறிக்கும். சுருங்கக்கூறின், உலகத்தைப் பற்றியும் உலகிலுள்ள ஒவ்வொரு பொருளைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும் மக்கள் என்னென்ன அறிந்து கொண்டுள்ளனர். ஆவற்றை எவ்வாறு அறிந்து கொள்கின்றனர் என்பவையே அறிதல்சார் கூறுகளாகும். அதாவது, மக்கள் அவர்கள் வாழும் உலகத்தைப் பற்றி என்ன கருதுகின்றனர். உலகியல் வாழ்வு எத்தன்மையானது என எண்ணுகின்றனர், உலகிலுள்ள ஒவ்வொரு பொருளையும் எவ்வாறு வகைப்படுத்திக் காண்கின்றனர். நல்லது, கெட்டது என எவ்வாறு தீர்மானிக்கின்றனர், சுற்றுச்சூழலிலுள்ள தாவர, விலங்கினங்களை எவ்வாறு வகைப்படுத்திக் காண்கின்றனர். இவற்றுள் எவை பயனள்ளவை, எவை பயனற்றவை என முடிவு செய்கின்றனர். பருவகாலங்கள், வானவெளி, இயற்கை நிகழ்ச்சிகள் போன்றவற்றை எவ்வாறு மதிப்பிடுகின்றனர் போன்ற அறிதிறன்களோடு தொடர்புடைய கூறுகளே அறிதல்சார் கூறுகளாகும். இவை தவிர மக்கள் வழங்கும் நம்பிக்கைகள் (beliefs), கருத்துகள் (ideas), வழக்காறுகள் (folklore) போன்றவையும் அறிதல்சார் கூறுகளே இவ்வகைத் திறன்களை மொத்தமாக 'அறிவு' (knowledge) எனக் குறிப்பிடலாம். இதில் இடம்பெறும் அனைத்துக் கூறுகளும் பண்பாட்டின் ஒரு பகுதியாக விளங்குகின்றன.

## 10.8.3.நெறியியல் கூறுகள்

ஒரு பண்பாட்டின் நெறியியல் கூறுகள் எனப்படுபவை அம்மக்களின் அறிவை நெறிப்படுத்தும் கூறுகளைக் குறிக்கும். சமுதாயத்தில் ஒருவர் எவ்வாறு வாழ வேண்டும், எவற்றைச் செய்யக் கூடாது போன்ற விதிமுறைகளோடு தொடர்புடைய கூறுகளே நெறியியல் கூறுகளாகும். அவற்றுள் முதன்மையானவை: விழுமியங்கள் (values), நெறிமுறைகள் (norms), விதிகள் (laws) குடிவழக்குகள் (folkways), வழக்கடிபாடுகள் (mores),மரபாண்மைகள் (ettos), அளிப்புகள் (sanctions), வழக்கங்கள் (customs), பழக்கங்கள் (habits) முதலானவையாகும்.

## 10.9.விழுமியங்கள்

ஒரு பண்பாட்டைச் சேர்ந்தவரின் வாழ்வியலுக்கும் செயல்களுக்கும், நடத்தைமுறைக்கும் (behaviour pattern) எவை எவை அவசியமென்று கருதப்படுகிறதோ அவையே அப்பண்பாட்டினரின் விழுமியங்கள் (values) ஆகும். மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து

குறிப்பு

வாழ முற்படும்போது எவை எவை ‘பண்பாட்டு விழுமியங்கள்’ (cultural values) எனப்படும். எடுத்துக்காட்டாக,‘அனைவருக்கும் சம வாய்ப்பு’ (equality of opportunity) என்பது நம் சமுதாயத்தில் ஓர் இன்றியமையாத விழுமியமாகக் கருதப்படுகிறது. பண்பாட்டு விழுமியங்கள் தனிமனிதரின் பண்பாட்டு விழுமியங்களிலிருந்து மாறுபட்டவை. தனிமனிதரின் விழுமியமானது அவரின் வாழ்விற்கு எவை அவசியமானவை, அவரின் நடத்தை முறைக்கு அவர் கூறும் அர்த்தங்கள் ஆகியவற்றைச் சார்ந்தது. பணம், அதிகாரம், தகுதி போன்றவை தனிமனிதரின் விழுமியங்களாக இருக்கலாம். ஆனால், பண்பாட்டு விழுமியங்கள் தனிமனிதரைச் சாராமல் அவர் சார்ந்த குழுவிற்கும் சமுதாயத்திற்கும் பொருந்தக் கூடியவையாக இருக்கும். அவை சமுதாயத்தில் நிகழும் நடத்தைமுறைகளை மதிப்பிட்டுக் கூறுவதாக இருக்கும் அல்லது அதற்கான அர்த்தத்தை வெளிப்படுத்துவதாக இருக்கும். எடுத்துக்காட்டாக, நீதிக்குக் கட்டுப்படுதல், அறம் செய்து வாழ்தல், வாய்மையே பேசுதல், வாய்மையே வெல்லும், பிறன்மனை நோக்காமை, நல்லது செய்யின் நல்லது விளையும், தினை விதைத்தவன் தினை அறுப்பான், உப்புத் தின்றவன் தண்ணீர் குடிப்பான் போன்ற எண்ணற்ற பண்பாட்டு விழுமியங்கள் தமிழரின் வாழ்வில் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்தும் சமுதாய வாழ்விற்கு இன்றியமையாதவை என மதிக்கப்படுகிறது.

ஒவ்வொரு பண்பாடும் குறிப்பிட்ட விழுமியங்களுக்கு முக்கியத்துவம் தருகின்றது. எடுத்துக்காட்டாக, பண்பாடுகளில் எண்ணற்ற கூறுகள் இருப்பினும் சில பண்பாடுகள் ‘தூய்மைக்கு’ முதலிடம் தருகின்றன. சில பண்பாடுகள் நேர்மை, அமைதி, சமத்துவம், தற்சார்புடைமை, கடவுள் வழிபாடு போன்ற விழுமியங்களுள் ஏதேனும் ஒன்றிற்கு முக்கியத்துவம் தருகின்றன. ஜப்பானியருக்கு ‘அழகு’ ஒரு இன்றியமையாத விழுமியமாகும். ஸ்பெயின் நாட்டவருக்கு ஆண்களின் வீரத்தன்மையும், ஜாவாத் தீவினருக்கு அமைதித்தன்மையும் (politeness), இந்தியர்களுக்கு ஆன்மீக உணர்வும் இன்றியமையா விழுமியங்களாக உள்ளன. ஒவ்வொரு பண்பாட்டிலும் முதன்மையான சில விழுதியங்கள் தவிர நூற்றுக்கணக்கான விழுமியங்கள் இடம்பெற்றுள்ளன.

## 10.10.நெறிமுறைகள்

மக்களின் நடத்தைமுறைகளையும், செயற்பாடுகளையும் முறைப்படுத்தக்கூடிய விதிகளே நெறிமுறைகள் (norms) எனப்படும். இவை விழுமியங்களிலிருந்து மாறுபட்டவை. விழுமியங்கள் பெரும்பாலும் கருத்தியல் (ideology) வடிவம் பெற்றவை. நெறிமுறைகளோ இவற்றைத்தான் செய்ய வேண்டும். இவற்றைச் செய்யக் கூடாது, இவை சரி, இவை தவறு , இவை நல்லவை, இவை கெட்டவை என உறுதிப்படக்கூறும் அல்லது நெறிப்படுத்தும் தன்மை பெற்றவை. எடுத்துக்காட்டாக, தமிழர் வாழ்வியலில் பெரியோர், ஆசிரியர் வரும்

குறிப்பு

போது இளையவர்கள் கால் மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்திருக்கக் கூடாது. எழுந்து நிற்க வேண்டும். இறைவழிபாட்டிற்குக் குளித்து விட்டுத்தான் செல்ல வேண்டும் விலக்குடைய பெண்கள் புனிதச் சடங்குகளில் கலந்து கொள்ளக் கூடாது. சாலையில் பச்சை விளக்கு எரிந்த பின்பே பயணத்தைத் தொடங்க வேண்டும். சாலையில் இடப்பக்கத்தில் மட்டுமே செல்ல வேண்டும் போன்ற எண்ணற்ற நெறிமுறைகள் உள்ளன. நெறிமுறைகளின்தன்மை சற்று மாறுபட்ட வகையிலும் காணப்படும். நல்லது எது? கேட்டது எது? எனப் பிரித்துப் பார்ப்பதில் பண்பாட்டிற்குப் பண்பாடு நெறிமுறை மாறுபடும். எதற்காக ஒன்றை நல்லது என்கிறோம். பிறிதொன்றைக் கெட்டது என்கிறோம் என்னும் கருத்து அனைத்துப் பண்பாட்டிலும் ஒரே மாதிரியாக இல்லை. அவற்றை அறிதியிடும் கருத்துக்களே நெறிமுறைகளாகின்றன.

சமுதாயம் இயல்பாக, இணக்கமாகச் செயல்படவும், தனிமனிதர்கள் ஒழுங்காகச செயல்படவும் நெறிமுறைகளே உத்திரவாதம் தருகின்றன. கணக்கியல் எவ்வாறு வாய்பாடுகளையும், சூத்திரங்களையும் பற்றி நின்று தீர்வு காண வேண்டியுள்ளதோ அவ்வாறே சமுதாய வாழ்விலும் மக்கள் நெறிமுறைகள் என்னும் வாய்ப்பாட்டைப் பற்றி நிற்க வேண்டும். அவை காலங்காலமாய் மக்களால் உறுதியாகப் பின்பற்றப்படுகின்றன. அவை காலத்தால் மாற்றம் பெறும் போது அவற்றை மக்கள் கருத்தளவில் பகிர்ந்துகொண்டு அதன்படி நடக்க முற்படுவர். நெறிமுறைகளைச் சமுதாயத்தை இயக்கும் கட்டுப்பாடுகள் என்றும் கூறலாம். தனிமனிதரானாலும் சரி குழுவினராக இருந்தாலும் சரி அவரவர் இப்படித்தான் செயல்பட வேண்டும். இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளை நெறிமுறைகள் குறிப்பிடுகின்றன. அவை சமுதாயத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் என ஒரு மதிப்புத்தரத்தை (standard) வரையறுத்து அதன்படி உறுப்பினர்கள் செயல்பட வேண்டுமெனப் பணிக்கிறது அல்லது எதிர்பார்க்கிறது. ஆகவே நெறிமுறைகளின் பங்கு ஒரு சமுதாயத்தின் கட்டுக்கோப்பான நடத்தை முறைக்கு வழிகாட்டும் முறையாக அமைகின்றது.

சமுதாயத்திற்குச் சமுதாயம் நெறிமுறைகள் மாறுபடும். பல மனைவி மணமுறை பல பண்பாட்டினருக்கு ஏற்புடையது. ஆனால் சில பண்பாட்டினருக்கு இது ஏற்புடையதல்ல. ஒரு சமுதாயத்திற்குள்ளே ஒரு குறிப்பிட்ட நெறிமுறையானது அனைவருக்கும் பொருந்தாது அல்லது அனைத்துச் சூழலுக்கும் பொருத்தமாக அமையாது. எடுத்துக்காட்டாக, தமிழ்ச் சமுதாயத்தில் பெண்களின் நடத்தைமுறைகளை வழிநடத்தும் நெறிமுறைகள் ஆண்களுக்குப் பொருந்துவதில்லை. எ-டு: முருங்கை மரத்தை ஒடிச்சி வளர்க்கனும், பெண் பிள்ளையை அடக்கி வளர்க்கனும்: பொம்பள சிரிச்சா போச்சி, புகையிலை விரிச்சா போச்சி. மருத்துவருக்குப் பொருந்தும் நெறிமுறைகள் ஆசிரியருக்குப் பொருந்துவதில்லை. முதியோர்களுக்கான நெறிமுறைகள் இளையவர்களுக்குப் பொருந்துவதில்லை.

குறிப்பு

நெறிமுறைகள் சமுதாய வாழ்விற்கு அரணாக விளங்குவதால் அவற்றை மீறுவோருக்கு அந்தந்தப் பண்பாட்டால் வரையறுக்கப்பட்ட ‘கட்டுப்பாடுகள்’ அல்லது ‘தண்டனைகள்’ விதிக்கப்படும். கேலிக்குள்ளாதல், தகுதியிழத்தல், தண்டம் கட்டுதல், சிறைக்குச் செல்லல் ஆகிய எந்த ஒன்றும் இக்கட்டுப் பாட்டுக்குள் சேரும். இதுவும் பண்பாட்டிற்குப் பண்பாடு மாறுபடும்.

## 10.11. குடிவழக்கு

ஒரு சமுதாயத்தில் அனைவரிடமும் காணக் கூடிய பொதுவான நடத்தை முறைகளே குடிவழக்கு (folkway) எனப்படும். இது பழக்கத்தால் வருவது: இயல்பாய் வெளிப்படுவது: சிந்திக்காமல் நிகழக்கூடியது: அந்தந்த மக்களுக்கே உரிய பாங்காய்க் காணப்படுவது. குடிவழக்கானது ‘வழக்கம்’(costom), ‘பழக்கம்’ (habit) ஆகியவற்றிடமிருந்து மாறுபட்டது. வழக்கம், பழக்கம் ஆகியவை ஒரு பண்பாட்டின் பரப்பிற்குள்கூட இடத்திற்கிடம் மாறுபடும் தன்மையது. ஆனால் குடிவழக்கானது அனைத்துப் பரப்பிலும் பரவிக் காணக்கூடியதாக இருக்கும். எடுத்துக்காட்டாக, கைக்கூப்பி வணக்கம் செலுத்துதல், ஒரு நாளைக்கு மூன்று முறை உண்ணுதல், பற்களைத் தினந்தோறும் தேய்த்தல், துக்கக் காலத்தில் பூச்சூடி, குங்குமமிட்டு அலங்காரம் செய்து கொள்ளாமல் களையிழந்து இருக்க வேண்டுமென்பது, விழாக் காலங்களில் சிறப்பாக உடை அணிவது, பசுவைக் கொல்லாமை போன்றவை தமிழ் மண்ணிலுள்ள பெரும்பாலான சமூகங்களில் (communities) குடிவழக்காகும். குாலையில் உணவு மட்டுமே சாப்பிடுவது போன்ற நடத்தை முறைகள் குடிவழக்கில் அடங்கா. இவை பழக்கவழக்கங்களில் அடங்கும். இவை வட்டாரத்தன்மையுடையவை அல்லது குடும்பம், குழு தன்மையுடையவை அல்லது தனிமனிதர் தன்மையுடையவை.

## 10.12. வழக்கடிபாடுகள்

ஒவ்வொரு பண்பாட்டிலும் வழங்கப்பெறும் குடிவழக்குகளுள் குறிப்பிட்ட சில அம்மக்களால் மிகவும் இன்றியமையாதவை எனக் கருதப்படும். அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, இதை இதைச் செய்வதன் மூலம் நல்ல தோரணை (manners)ஏற்படும் என்றும், மதிப்புறு பண்புகள் ஏற்படும் என்றும், நல்ல மனிதன் என்று பெயர் ஏற்படும் என்றும் இது போன்ற பிற பண்புகள் ஏற்படும் என்றும் கருதி செய்தல். இவ்வாறு சில குடிவழக்குகளோடு இவை இவை நல்லவை, கெட்டவை எனப் பொருள் சேர்த்து அவை வலுவான கருத்துகளாக, நடத்தைமுறைகளாக வடிவம் பெறுபவை. வழக்கடிபாடுகள் (mores) எனக் கூறும். எடுத்துக்காட்டாக, அச்செயல் அநியாயம் என்று மதிப்பிடுவது ஒரு வழக்கடிபாடு மீதான கருத்தாகும். சில குறிப்பிட்ட காலங்களில் சில உணவுப் பொருள்களை உண்ணுதல் கூடாது என்ற விலக்கு (taboo), சில குறிப்பிட்ட சொற்கள் தீய பொருளைக் குறிப்பிட்ட

குறிப்பு

சில சொற்களையே விரும்பிப் பயன்படுத்துதல் போன்றவையும் வழக்கடிபாடுகளே சுருக்கமாகக் கூறவேண்டுமானால் வழக்கடிபாடுகள் என்பவை நல்லவை, கெட்டவை என்னும் நம்பிக்கையோடு தொடர்புடைய கருத்துக்களையும் செயல்களையும் குறிப்பவையாகும்.

## 10.13. சட்டம்

பழங்குடிச் சமுதாயங்கள் முதற்கொண்டு பல மரபுச் சமுதாயங்களில் மக்களின் சமுதாய நடைமுறைகளை நிலைப்படுத்துவதற்கும், அவர்களுக்குள் எழும் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கும் நவீன சமுதாயங்களில் உள்ளது போன்ற சட்ட மன்றங்களால் இயற்றப்பட்ட சட்டங்கள் இல்லை. ஆனால் நவீன சமுதாயங்களுக்கு ஈடாக அல்லது அதற்கும் மேலாக அவர்களிடம் சமுதாய ஒழுங்கு கட்டிக் காக்கப்படுகிறது. இந்நிலை வழிவழியாக வரும் எழுதப்பெறாத சட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. எனவே தான் இவ்வகைச் சட்டங்கள் மரபுச்சார் சட்டங்கள் (customary laws) எனச் சிறப்பித்துக் கூறப்பெறும். இவ்வகைச் சட்டங்கள் எழுதப்பெறாமல் இருப்பதாலோ இதன் சிறப்புத்தன்மை குறைந்துவிடவில்லை. அம்மக்களின் சமுதாய ஒழுங்கிற்கு அவை வலுவானவையாகத் திகழ்கின்றன.

இன்றைய நவீன சமுதாயங்களில் சட்டங்கள் மேற்கூறிய வகையிலிருந்து மாறுபட்டவை. மக்களின் நடத்தைமுறைகளை ஒழுங்குபடுத்த ஓர் அதிகார அமைப்புடைய நிறுவனத்தால் (அரசு) ஏற்படுத்தப்பட்ட விதிமுறைகளே சட்டங்களாகும். இவற்றை மீறும்போதோ அலட்சியப்படுத்தும்போதோ நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர காவல் படையும் நீதிமன்றமும் பயன்படுத்தப்படுகின்றன.

## 10.14. அளிப்புகள்

சமுதாயத்தில் அனைவரும் இணக்கமாகச் செயல்படும் போதே சமுதாய ஒழுங்கு கட்டிக்காக்கப்படுகிறது. சமுதாயத்தின் நெறிமுறைகளைப் பெரும்பாலோர் பெரும்பாலான காலங்களில் பற்றியே நிற்கின்றனர். ஆனால், சமுதாயம் எதிர்பார்க்குமளவிற்கு முழுவதுமாக மக்கள் நன்னிலையில் செயல்படுவதில்லை அதற்குக் காரணம் சில சூழல்களில் தனிமனிதரின் விழுமியங்கள் அல்லது சமுதாய நெறிமுறைகள் அவருக்கு முரண்பட்டதாக அமைந்துவிடும். எடுத்துக்காட்டாக, நாட்டிற்கு நல்லவனாக நடக்க முயற்சித்தால் சில வேளைகளில் அது குடும்பத்திற்கு எதிர்மாறாக அமைந்து விடுவதுண்டு. தொழிற்சாலை கதவடைப்பில் இருக்கும்போது ஒருவன் நிருவாகத்தினருக்கு நல்லவனாக நடப்பதா? தொழிற்சங்கத்திற்கு நல்லவனாக நடப்பதா? இந்நிலையில் ஒருவரின் முடிவு ஏதோ ஒரு வகையில் ஒருவருக்கு முரண்பட்டதாக அமைந்து விடுகிறது.

குறிப்பு

தனிமனிதர்களின் விருப்பு வெறுப்புகளும் பல வேளையில் சமுதாய நலனிற்கு மாறானதாக அமையும். அதனாலேயே கருப்புப்பண்பு, கலப்படம், திருட்டு, கொள்ளை, லஞ்சம், கூடா ஒழுக்கம் போன்ற இழிசெயல்கள் நடைமுறையில் உள்ளன. அதனால் சமுதாயத்தின் நெறிமுறைகள் தொடர்ச்சியான அச்சுறுத்தலுக்கு ஆளாகின்றன. இந்நிலையில் மக்கள் நெறிமுறைகளைப் பற்றி நடக்க உறுதியான ‘வழிவகை’ செய்தால் மட்டுமே சமுதாய ஒழுங்கும் நலனும் காக்கப்படும். அதற்காக மேற்கொள்ளப்படும் ‘உறுதிப்பாடே’, வழிமுறைகளே அளிப்புகள் (sanctions) ஆகும். இவை மனித நடத்தைமுறைகளைக் கட்டுக்குள் வைக்கின்றன. சமுதாயம் போற்றிக்காக்கும் விழுமியங்களை, நடைமுறைகளை நிலைபெறச் செய்கின்றன. சமுதாய இணக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட அளிப்புகளானது அறிவுரை கூறல், கண்டித்தல், தண்டம் வழங்குதல், சிறையிடுதல், தூக்கிலிடுதல், மன்னித்துவிடுதல், பரிசு கொடுத்தல் போன்ற எந்த ஒரு நிலையிலும் வெளிப்படக் கூடியவையாகும். இவை பண்பாட்டிற்குப் பண்பாடு மாறுபடக்கூடியன.

மேற்கூறிய விழுமியங்கள் நெறிமுறைகள், குடிவழக்கு, வழக்கடிபாடுகள், பழக்கவழக்கங்கள், சட்டங்கள், அளிப்புகள் போன்ற அனைத்தையும் மக்கள் சமுதாயவயமாக்கம் (socialization) மூலமும், பண்பாட்டுவயமாக்கம் (enculturation) மூலமும் பிறந்தது முதல் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து பயின்று கொள்கின்றனர்.

## 10.15. தொகுத்துக் காண்போம்

மானிடவியலின் பரந்துபட்ட ஆய்வுப் பரப்புகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் பாங்கினைப் பண்பாடு என்னும் கருத்தாக்கம் பெற்றுள்ளது தன்மையை மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

ஒவ்வொரு பண்பாட்டிலும் இடம்பெற்றுள்ள கூறுகளைத் தொகுத்துக் காணும்போது நிலையில் அவற்றின் மூன்று நிலைகளாக மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

## 10.16. சோதித்தறியும் வினாக்கள்

பண்பாட்டுக் கலவை என்றால் என்ன? விளக்குக.

வழக்கடிபாடுகள் பற்றி நீவிர் அறிவன யாவை?

குடிவழக்கு நெறிமுறைகளைப் பற்றி எழுதுக.

குறிப்பு

## 10.17. பயிற்சி வினா

பண்பாட்டின் உட்கூறுகளின் தன்மைகளைப் பற்றிக் கட்டுரை வரைக.

## 10.18. மேலும் பயில்வதற்கான நூல்

பக்தவச்சலபாரதி, இலக்கிய மானிடவியல், அடையாளம் பதிப்பகம், திருச்சி.

# கூறு-11 : பண்பாட்டின் அமைப்பு – பண்பாட்டுப் பொதுமை

குறிப்பு

## 11.1. அறிமுகம்

பண்பாட்டுக் கூறுகள் இணைந்து செயல்படும் முறை பண்பாட்டிற்குப் பண்பாடு வேறுபடுகிறது. அதன்பல பரிமாணங்களை அறிவதற்கு முன் அதன் அடிப்படை அமைப்புகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

## 11.2. குறிக்கோள்கள்

பண்பாட்டின் அமைப்பு அதன் இயக்கத்தில் காணப்படுகின்ற ஆயிரமாயிரம் கூறுகள் அந்தந்தப் பண்பாட்டு உறுப்பினர்களால் சிறப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பண்பாட்டோடு பொருத்தப்படுகின்ற தன்மையை மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்

உலகிலுள்ள அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொதுவான கூறுகளைக் குறிக்கும் பண்பாட்டுப் பொதுமைகள் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

## 11.3. பொருள்சார் பண்பாடும் பொருள் சாராப் பண்பாடும்

பண்பாட்டினைப் பொருள்சார் பண்பாடு (material culture) என்றும், பொருள் சாராப் பண்பாடும் (non – material culture) என்றும் இருவகைகளாகப் பிரிக்கலாம். மக்கள் அவர்களின் தேவைகளுக்காகச் செய்து கொள்ளும் அனைத்து வகையான பொருள்களும் பொருள்சார் பண்பாட்டில் அடங்கும். இயந்திரங்கள், கருவிகள், மரச்சாமான்கள், வீட்டுப்பொருள்கள், உடைகள், அணிகலன்கள், கட்டடங்கள் , போக்குவரத்துச் சாதனங்கள், சாலைகள், வேளாண் நிலங்கள், எழுதுகோல், அழகுப்பொருள்கள், போர்க்கருவிகள் போன்ற எண்ணற்ற பொருள்கள் பொருள்சார் பண்பாட்டைச் சேர்ந்தவை. ஒரு பண்பாட்டைச் சேர்ந்த பொருள்கள் அதற்கென்ற பொருளையும் (meaning) பயன்பாட்டையும் நிலையாகக் கொண்டு அப்பண்பாட்டில் நிலைப்பெற்றிருக்கும் மக்களின் தேவைகளுக்காக பொருள்கள் ஏற்படுத்தப்பட்டதால் அத்தேவைகள் பண்பாட்டில் நிலைபெற்றுள்ள வரை அப்பொருள்களும் அப்பண்பாட்டில் இருக்கும் பண்பாட்டு மாற்றம் ஏற்பட்டுச் சில குறிப்பிட்ட தேவைகள் அற்றுப்போகுமானால் அவற்றிற்குரிய பொருள்களும் மறைந்து போகும் ஆகவே ஒரு பண்பாட்டைச் சேர்ந்த அனைத்துப் பொருள்களையும் கொண்டு அம்மக்களின் பண்பாட்டைப் பெருமளவு அறியமுடியும். அதனாலயே பண்பாட்டுப் பகுப்பாய்வில் பொருள்சார் பண்பாட்டை அறிய வேண்டியது அவசியமாகிறது. பொருள்சார் பண்பாட்டில் மக்களால் செய்யப்பட்ட செய்பொருள்கள் மட்டுமே இடம்பெற்றிருப்பதால் அவை மானிடவியல்

வழக்கில் கலை வடிவங்கள் அல்லது பொருள் வடிவங்கள் (artifacts) என்றும் கூறப்பெறும்.

குறிப்பு

பொருள் சாராப் பண்பாட்டில் பொருள் வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளும் இடம்பெறும். எடுத்துக்காட்டாக கருத்துகள் (ideas), பழக்கவழக்கங்கள், நெறிமுறைகள், அறிதிறன், அழகியல் சிந்தனைகள், கற்பனை, நடிப்பு, இலக்கியங்கள், பாடல்கள், இசை, நடனம், உணவு உண்ணும் முறை, தலைவாரும் முறை, வணக்கம் செலுத்தும் முறை, மந்திரங்கள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் போன்ற பொருள் வடிவம் பெறாத அனைத்தும் இதில் இடம்பெறும். இக்கூறுகள் மனத்தளவில் மட்டுமே உணரக் கூடியனவாகவும், புரிந்து கொள்ளக் கூடியனவாகவும் உள்ளதால் அவை மானிடவியல் வழக்கில் மனவடிவங்கள் (mentifacts) என்று கூறப்பெறும். பொருள் சாராப் பண்பாட்டுக் கூறுகள் அந்தந்தப் பண்பாட்டின் புதைநிலைக் கருத்துகளை மிகுதியாகக் கொண்டுள்ளதால் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டை ஆராய முற்படும் போது அம்மக்களிடம் மிக நீண்ட காலம் களப்பணி செய்து ஆழ்நிலையில் இவ்வகைக் கருத்துக்களைத் தொகுக்க வேண்டியது அவசியமாகிறது.

பொருள் சார் பண்பாடும் பொருள் சாராப் பண்பாடும் தனித்தனியானதன்று: ஒன்றையொன்று சார்ந்தது. ஒவ்வொரு பொருளுக்குப் பின்னும் அதற்கென்ற பொருள் சாராப் பண்பாடு உண்டு. எடுத்துக்காட்டாக, மரப்பந்தாட்டத்தில் (cricket) பயன்படுத்தப்படும் மட்டைகள், பந்து, கவசங்கள், சீருடை, கைக்கால் காப்புகள், குச்சிகள் போன்றவை பொருள்சார் பண்பாட்டைச் சேர்ந்தவை. இவ்விளையாட்டில் இடம்பெறும் விதிமுறைகள், ஆட்டக்காரர்களின் நுணுக்கங்கள், திறன்கள், விளையாட்டு உத்திகள், ஆட்டக்காரர்கள் விளையாடும் போது எவ்வாறெல்லாம் நடந்து கொள்ள வேண்டுமென்ற நடத்தை முறைகள் போன்றவை இவ்விளையாட்டின் பொருள் சாராப் பண்பாட்டுக் கூறுகளாகும். இதைப் போன்று பண்பாட்டின் ஒவ்வொரு பொருளுக்கும் அதன் பொருள் சாராப் பண்பாட்டினை விளக்கிக் கூறலாம்.

## 11.4. உகந்தநிலைப் பண்பாடும் உண்மைப் பண்பாடும்

பெரும்பாலான பண்பாடுகளில் எவற்றைச் செய்ய வேண்டும் எவற்றைச் செய்யக் கூடாது என்பதற்கான நெறிமுறைகள் உள்ளன. எவற்றைச் செய்யக் கூடாது என்று வரையறுக்கப் பட்டுள்ளதோ அவற்றுள் பலவற்றை மக்கள் நடைமுறை வாழ்வில் செய்து வருகின்றனர். காலங்காலமாக இது நடந்து வருகிறது. மாலினோஸ்கி ட்ரோபிரியாண்டுச் சமுதாயத்தில் தடை செய்யப்பட்ட ஒரு நடத்தை முறை எவ்வாறு மக்களின் நடைமுறை வாழ்வில் இடம்பெறுகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். ட்ரோபிரியாண்டுச் சமுதாயத்தின் விதிமுறைகளின்படி ஒரு குலத்தைச் (clan) சேர்ந்தவன் அதே குலத்தைச் சேர்ந்தவர்களுடன் பாலுறவு கொள்ளக் கூடாது. வேற்றுக் குலத்தவருடன்

குறிப்பு

மட்டுமே பாலுறவு கொள்ள வேண்டும் கூடா ஒழுக்கத்தில் ஈடுபடுபவர்களாக இருந்தாலும் இவ்விதியைத் தான் பின்பற்ற வேண்டும். இவ்விதியை மீறி ஒருவர் அவர்தம் குலத்தவருடன் உடலுறவு கொண்டால் புண், நோய் முதலானவை ஏற்படுவதுடன் இறப்பும் கூட நேரலாம் என்ற நம்பிக்கை அவர்களிடம் உள்ளது. ஆனால் பல வேளைகளில் குலப் புறமண முறையை (clan exoggamy) மீறி அவர்தம் சொந்த குலத்தவருடன் கூடா ஒழுக்கம் கொண்டதைப் பல தகவலாளிகள் என்னிடம் ஒப்புக் கொண்டனர் என்பார் மாலினோஸ்கி. பெரும்பாலான சமுதாயங்களில் உள்ளது போன்றே ட்ரோபிரியாண்டு மக்களும் கூடா ஒழுக்கச் குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக்கொள்ள பல வழிமுறைகளைக் கொண்டுள்ளனர். அவற்றுள் மந்திமும் ஒன்று.

மேற்கூறிய விவரங்களிலிருந்து உகந்தநிலைப் பண்பாடு (ideal culture)எது, உண்மைப் பண்பாடு (real culture) எது என்பதைப் புரிந்து கொள்ள இயலும். உகந்த நிலைப் பண்பாடு என்பது சமுதாய வாழ்வில் இதை இதைத்தான் செய்ய வேண்டும் என்று மக்களிடமிருந்து எதிர்பார்ப்பதைக் குறிக்கும். ஆனால் உண்மைப் பண்பாடானது மக்கள், சமுதாயத்தில் சட்டத்திட்டங்கள் எதிர்பார்ப்புகளைக் கவனத்தில் கொள்ளாமல் நடைமுறை வாழ்வில் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதைக் குறிக்கிறது. இவ்விரண்டையும் நன்கு அறிய நம்முடைய சொந்தப் பண்பாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளையே எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். பொது வாழ்வில் கையூட்டு வாங்குவது தவறு என்பது உகந்தநிலைப்பண்பாடு ஆனால் அது நடைமுறையில் செயற்படுத்தப்படுவதில்லை என்பது உண்மைப்பண்பாடு. காலந்தவறாமையை வலியுறுத்திப் பேசுவதும், அவரவர் கடமைகளைத் தவறாமல் செய்ய வேண்டுமென்று கூறுவதும் உகந்தநிலைப் பண்பாட்டைக் குறிக்கிறது. ஆனால் அவற்றைக் கடைப்பிடிக்க முடியாமல் வாழும் நிலை உண்மைப் பண்பாட்டைக் குறிக்கிறது. இதற்கு பின்வரும் எடுத்துக்காட்டுகள் பொருந்தும்.

1. குடித்தல், சூதாடுதல் போன்ற பொது விலக்குகளை (Prohibitions) மீறி அவற்றைச் செய்தல்.
2. தன்னலமற்ற பொதுநல வாழ்வு என்ற இலக்கை மீறி பிறரைத் துன்புறுத்திச் சுயநலத்தையும் ஆதாயத்தையும் தேடி அலைதல்.
3. குடும்ப அமைப்பிற்குள் கட்டுப்படாமல் பரத்தமை வாழ்வில் ஈடுபடுதல்.
4. வகுப்பறைகளிலும், தேர்வுகளிலும் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளை மீறி ஆசிரியர்களை எள்ளி நகையாடுதலும் நூல்களைப் பார்த்துத் தேர்வு எழுதுதலும்.
5. தகுதி அடிப்படையில் பணி நியமனம் செய்யும் மரவை மீறி இனஉணர்வு, தனிச்சலுகைகள் மூலம் அதைச் செய்தல்.

6. சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்று கூறுவோர் அவர்களின் சுய நலனுக்காக அவற்றை மீறுதல்.

குறிப்பு

மேற்கூறிய எடுத்துக்காட்டுகள் ஒவ்வொன்றிலும் முதற் பகுதியில் உள்ளவை உகந்த நிலைப் பண்பாட்டைக் குறிப்பவை.அவை மக்களின் நடத்தை முறை இந்த இந்த முறையில்தான் இருக்க வேண்டும் என்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுவழி விதிமுறைகளைக் குறிக்கின்றன. எடுத்துக்காட்டுகளின் பிற்பகுதியில் உள்ளவை உண்மைப் பண்பாட்டைக் குறிப்பவை. அவை மக்கள் ஏற்றுக் கொண்ட விதிமுறைகளையே மீறி நடக்கும் இயல்பான நிலையை (உண்மைப்பண்பாடு) உணர்த்துகிறது.

## 11.5. உள்ளார்ந்த பண்பாடும் வெளிப்படைப் பண்பாடும்

மக்கள் மனத்தளவில் பதிய வைத்துள்ள பண்பாட்டு விதிகளின் (cultural rule)அடிப்படையில் நிகழும் நடத்தை முறைகளின் தொகுப்பே உள்ளார்ந்த பண்பாடு (implicit or covert culture) ஆகும். பண்பாட்டில் நிகழும் சில நிகழ்ச்சிகள் மூலம் இதனைப் புரிந்து கொள்ளலாம். தேசியக் கீதம் பாடப் பெறும்போது எழுந்து நின்று அசையாமல் நிற்பதும், பெரியோர்கள் வரும்போது எழுந்து வணக்கம் தெரிவிப்பதும், விருந்தில் வாழை இலையைப் போடும்போது நுனி இடப்பக்கம் இருக்க வேண்டுமென்பதும், இலையில் உணவு பரிமாறும்போது ஒவ்வொன்றையும் எங்கு வைக்க வேண்டுமென்பதும், சடங்கு நிகழ்ச்சிகளில் எந்தச் செயலிற்கடுத்து எது நிகழ வேண்டும், எப்படி நிகழ வேண்டும் என்பதும் உள்ளார்ந்த பண்பாட்டில் அடங்கும்.

பண்பாட்டின் பொருள்சாராக் கூறுகளான நெறிமுறைகள், விழுமியங்கள், விதிகள், குடிவழக்குகள், வழக்கடிபாடுகள், பழக்க வழக்கங்கள், அளிப்புகள், நம்பிக்கைகள், கனவுகள், பயம், இன்பம், விரக்தி போன்ற மனதளவில் உணரப்படும் எந்த ஒரு கூறும் உள்ளார்ந்த பண்பாட்டின் கூறுகளே. இவை போன்ற ஆயிரமாயிரம் உள்ளார்ந்த கூறுகள் ஒவ்வொரு பண்பாட்டிலும் உண்டு. ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை நேரடியாகக் காண முடியாது. செயல் வடிவமாகவோ எண்ணத்தின் வெளிப் பாடாகவோ உணர்வுகளின் வெளிப்பாடாகவோ கதை, கவிதை, இசை, நடனம், சைகை, குறியீடு போன்ற எண்ணற்ற பொருள்சாராக் கூறுகளின் வெளிப்பாடாகவோ அறிய இயலும். உள்ளார்ந்த பண்பாட்டினை மக்கள் மனத்தளவில் மட்டுமே வெளிப்படையாகத் தெரியாது. இவை புற நிகழ்ச்சிகள் மூலமே வெளிபடக்கூடியன. எனவேதான் இவ்வகைக் கூறுகளின் தொகுப்பை உள்ளார்ந்த பண்பாடு என மானிடவியலார் குறிப்பிடுவர்.

உள்ளார்ந்த பண்பாட்டிற்கு நேர் எதிரானது வெளிப்படைப் பண்பாடு (explicit or over culture). இதில் கருத்து வடிவில் புதைந்து கிடக்கும் செய்திகளோ மனதளவில் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய நடத்தை முறைகளோ இடம்பெறுவதில்லை. வெளிப்படையாக

காணக்கூடியவை மட்டுமே இடம் பெறும். ஒரு சமுதாயத்தின் நடத்தைமுறைகள் எக்கூறுகளால் வெளிப்படுகிறதோ அவையே அச்சமுதாயத்தின் வெளிப்படைப் பண்பாடாகும். பெரும்பாலும் பொருள்சார் பண்பாட்டுக் கூறுகளால் அறியப்பெறுபவை அனைத்தும் வெளிப்படைப் பண்பாடு எனக் கொள்ளலாம்.

உள்ளார்ந்த பண்பாடு, வெளிப்படைப் பண்பாடு இரண்டையும் தனித்தனியே பிரித்துப் பார்ப்பது பல இடங்களில் பொருந்தாது. எடுத்துக்காட்டாக, பொருள்சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு ஆகிய இரண்டிற்கும் உள்ள தொடர்பை விளக்கும் மரப்பந்தாட்ட விளையாட்டு எடுத்துக்காட்டினைக் காண்க. ஆட்டத்திற்குப் பயன்படும் பொருள்கள் அனைத்தும் பொருள்சார் பண்பாட்டில் அடங்குகிறது. ஆட்டத்தின் விதிமுறைகள், உத்திகள் போன்றவை பொருள்சாராப் பண்பாட்டைச் சேருகிறது. இவ்வகையான உறவைப் பெற்றதே உள்ளார்ந்த பண்பாடும் வெளிப்படைப் பண்பாடுமாகும்.

## 11.6. உட்பண்பாடும் எதிர்ப்பண்பாடும்

இன்றைய நவீன சமுதாயங்கள் ஒவ்வொன்றிலும் பலவகைப் பிரிவினர் அல்லது குழுவினர் உள்ளனர். இவ்வகைப் பிரிவைச் சேர்ந்தோர் அவர்கள் சமுதாயத்தின் அனைத்துப் பண்புகளையும் முழுமையாகக் கொண்டிராமல் பல தனிப்பட்ட பண்புகளை வளர்த்துக் கொண்டு மற்றவர்களிடமிருந்து பிரிந்து காணப்படுவர். இவ்வகைப் பிரிவினரின் பண்பாடே உட்பண்பாடு (subculture)எனப்படும்.

உட்பண்பாட்டின் தன்மையை சில எடுத்துக்காட்டுகள் மூலம் அறியலாம். ஒரு நாட்டில் குடியுரிமை பெற்று வாழும் வேற்று நாட்டவர்கள் அவர்கள் குடியேறிய நாட்டின் பண்பாட்டில் ஒரு பகுதியையும் அவர்களின் சொந்தப் பண்பாட்டின் பெரும் பகுதியையும இணைத்துக் கொண்டவர்களாய் உள்ளனர். இவ்வாறான வாழ்க்கைமுறை அவர்கள் வாழும் நாட்டு மக்களின் பண்பாட்டிலிருந்து வேறுபட்டதாக அமையும். அவர்களின் அவ்வகைப் பண்பாடு அந்நாட்டின் மொத்தப் பண்பாட்டில் ஓர் உட்பண்பாடாக அமையும்.

ஒவ்வொரு சமுதாயத்திலும் மாணவர்களின் நடத்தை முறைகள், செயல்முறைகள் முதலானவை அச்சமுதாயத்தின் மொத்தப் பண்பாட்டிலிருந்து மாறுபட்டதாக இருப்பதால் அவர்களின் பண்பாடு அச்சமுதாயத்தின் மொத்தப் பண்பாட்டில் ஓர் உட்பண்பாடாக அமைகிறது. அதனை 'மாணவர் உட்பண்பாடு' (student subculture) எனக் கூறலாம். சமுதாயத்தில் அனைத்துப் பிரிவினரின் வாழ்க்கைமுறை ஒரே மாதிரியாக இருப்பதில்லை. செல்வந்தர்களின் வாழ்க்கைமுறை ஏழைகளின் வாழ்க்கை முறையிலிருந்து மாறுபடுகிறது. இருசாராரும் அவரவருக்கென்ற தனிப்பட்ட வாழ்க்கை முறையைக் கொண்டுள்ளனர்.

ஆகவே இவ்விரு பிரிவினரின் பண்பாடும் தனித்தனி உட்பண்பாடாக அமைகிறது.

குறிப்பு

ராணுவ வாழ்க்கையானது பொதுமக்களின் வாழ்க்கை முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது.ஒரு தொழிற்சாலையின் பணிமுறை பொதுவாழ்வில் நடைபெறும் பணிமுறையிலிருந்து வேறுபடுகிறது. ஆகவே ராணுவப் பண்பாடும், தொழிற்சாலைப் பண்பாடும் அச்சமுதாயத்தின் மொத்தப் பண்பாட்டின் உட்பண்பாடுகளாகின்றன. குமரப் பருவப் பண்பாடும் (adolescent culture) ஓர் உட்பண்பாட்டின் வகையே. இவை போன்று எண்ணற்ற எடுத்துக்காட்டுகளை அந்தந்தப் பண்பாட்டு அமைப்பிற்கேற்பத் தொகுத்துக் கூறலாம்.

ஒரு சமுதாயத்தின் முதன்மை அல்லது ஆதிக்கப் பண்பாட்டின்கண் (dominant culture) இயங்கும் உட்பண்பாடானது தனித்தன்மையைக் கொண்டது மட்டுமன்றிச் சில வேளைகளில் முதன்மைப் பண்பாட்டிற்கு நேர் எதிராகவும் செயல்படக் கூடியது. இவ்வாறான பண்பாடு எதிர்ப்பண்பாடு (counter culture) எனக் கூறப்பெறும். எடுத்துக்காட்டாக ஓர் இளங்குற்ற நடத்தைக் குழுவானது (delinquent group) தன் சமுதாயத்தின் நெறிமுறைகளையும், விழுமியங்களையும், ஒழுக்க நெறிகளையும், பொதுவான மரபுகளையும் மீறிச் செயல்படுகிறது. இவ்வாறான காலங்களில் அக்குழுவின் செயல்கள் அவர்களின் சமுதாய நலனிற்கு எதிரானவையாக அமைவதால் அவர்களின் பண்பாடு அப்பண்பாட்டின் எதிர்ப்பண்பாடாகிறது.

இன்றைய அமெரிக்கர்களுள் சில குழுவினர் ஆசிய சமய நெறிகளைப் பின்பற்றுகின்றனர். குறிப்பாக, சைவ உணவுமுறை, நீண்டகாலத் தியானம் மணத்துறவு (celibacy) போன்றவற்றைப் பின்பற்றுகின்றனர். அமெரிக்காவில் இன்று வளர்ந்துவரும் ‘ஹரேகிருஷ்ணா’ இயக்கமும் இவ்வகைக் குழுக்களுள் ஒன்றாகும். அவர்களின் இந்நிலை அமெரிக்காவின் முதன்மைப் பணபாட்டிலிருந்து வேறுபடுவதோடு அமெரிக்கச் சமய முறையைத் தீவிரமாக ஆதரிப்போருக்கு எதிரானதாகவும் அமைகிறது. ஆகவே அவர்களின் பண்பாடு அமெரிக்கப் பண்பாட்டில் ஓர் எதிர்ப்பண்பாடாக அமைகிறது.

மேலை நாடுகளில் போதை மருந்துகளை உட்கொள்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. இவ்வகை மருந்துகளை உட்கொள்வோர் அம்மருந்துகளுக்கு அடிமையாகி விடுவதால் அவர்களின் நடத்தை முறைகள் மற்றவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. அதோடு போதை மருந்து உட்கொள்வோர் பண்பாட்டு மரபுகளையும், சட்ட ஒழுங்குகளையும் மீற முற்படுவதால் அவர்களின் நடத்தைமுறை அவர்களின் சொந்தப் பண்பாட்டிற்கு எதிரானதாக மாறிவிடுகிறது. ஆகவே அவர்கள் சட்டம், ஒழுங்கினைப் பராமரிக்கும் காவல் துறையினரால் கண்காணிக்கப்படும் குழுவினருள் சேர்ந்து

விடுகின்றனர். அதனால் போதை மருந்துப் பண்பாடும் (drug culture) ஓர் எதிர்ப்பண்பாடாகக் காணப்படுகிறது.

குறிப்பு

## 11.7. பண்பாட்டுப் பொதுமைகள்

பண்பாட்டுப் பொதுமைகள் (cultural universals) என்பது உலகிலுள்ள அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொதுவான கூறுகளைக் குறிக்கும். எண்ணற்ற கூறுகள் அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொதுவாக உள்ளன. 250க்கும் மேற்பட்ட பண்பாடுகளின் தரவுகளைக் கொண்டு இனக்குழுவியல் வரைபடம் (ethnographic atlas) தயாரித்த மர்டாக் இவ்வனைத்துப் பண்பாடுகளிலும் இடம்பெற்றுள்ள அறுபதுக்கும் மேற்பட்ட பண்பாட்டுப் பொதுமைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். (G.P.Murdock, “The Common Denominator of Cultures”, in The *Science of Man in World Crisis*, ed. By Ralph Linton (New York: Columbia University Press), p.124) அவற்றுள் சில இங்கு பட்டியலிடப்பட்டுள்ளன.

அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொதுவான பண்பாட்டுப் பொதுமைகள் காணப்படுவதற்குக் காரணம் மனிதனின் அடிப்படைத் தேவைகள் அனைத்துப் பண்பாடுகளிலும்,

| | |
|---|---|
| அடக்கம், நாணம் | சமைத்தல் |
| அடுப்பு | சைகைகள் |
| அதிர்ஷ்டம் | சொத்து |
| அழகியல் உணர்வு | தகாப்புணர்ச்சி விலக்கு |
| அறிவியல் | திருமணம் |
| இசை | தொழிற்பகுப்பு |
| இறந்தவர்களுக்காகத்துயருறுதல் | தொன்மங்கள் |
| ஈமச் சடங்குகள் | நடனம் |
| உடல்நலம் | நன்னடத்தை |
| உடலில் வரைதல் கலை | பரிமாற்ற முறைகள் |
| உடை | பாலுறவு |
| உணவு உண்ணும் நேரம் | பூப்புச் சடங்குகள் |
| உணவு விலக்குகள் | போக்குவரத்துச் சாதனங்கள் |
| உறவுமுறை | போர் |
| கருவிகளைப் பயன்படுத்துதல் | மந்திரம் |

| | |
|---|---|
| கற்பித்தல் | மரபுக்கதைகள் |
| காதல் | மரபுரிமை விதிகள் |
| காலப் பகுப்புமுறை | மொழி |
| குடும்பம் | வயதுத் தரம் பிரித்தல் |
| கூட்டாகச் சேர்ந்து உழைத்தல் | வழக்காறுகள் |
| சட்டம் | வாணிகம் |
| சமயச் சடங்குகள் | விளையாட்டுகள் |
| சமுதாயத் தகுதி | வீடு |

போன்றவை ஒன்றாக இருப்பதேயாகும். மக்கள் அனைவரும் உயிர் வாழும் பொருட்டு உணவு ஈட்டுதல், உறுப்பினர்களை நெறிப்படுத்துதல், பாதுகாப்பளித்தல் (உறைவிடம்), இனத்தின் நிலைபேறுடைமைக்கு வழிகோலுதல் (இனப்பெருக்கம்), இளம் குழந்தைகளைப் பண்பாட்டு வளமாக்கல் (enulturation) போன்ற பல அடிப்படைத் தேவைகளைச் செய்ய வேண்டியுள்ளது. இத்தேவைகள் சில பண்பாட்டிற்கு மட்டும் தேவை என இல்லாமல் அனைத்துப் பண்பாட்டினருக்கும் இன்றியமையாததாக உள்ளன. இவையே பண்பாட்டுப் பொதுமைகள் ஏற்படக் காரணமாகின்றன.

தேவைகள் பொதுவானதாக இருந்தாலும் அத்தேவைகளை நிறைவு செய்யும் முறைகள் பண்பாட்டிற்குப் பண்பாடு மாறுபடுகின்றன. இதைப் பற்றிப் பண்பாட்டியல் வல்லுநர் கிளைட் குளுக்கான குறிப்பிடும்போது, அனைத்துப் பண்பாட்டினரின் தேவைகள் அடிப்படையில் ஒன்றாக இருந்தாலும் அவற்றை ஈடுசெய்வதில் ஒவ்வொரு பண்பாடும் தனிப்பட்ட முறையினைக் கொண்டுள்ளது என்பார். எடுத்துக்காட்டாக, திருமணம் என்பது ஒரு பண்பாட்டுப் பொதுமை. இது அனைத்துப் பண்பாட்டிலும் உள்ள ஒரு கூறு. இது பாலுணர்வுகளைத் தீர்த்துக் கொள்ளவும் இனத்தின் நிலைபேறுடைமைக்கு வழி செய்யவும் ஏற்பட்டுள்ள ஒரு பண்பாட்டுக் கூறாகத் திகழ்கிறது. ஆனால் திருமண முறை பண்பாட்டிற்குப் பண்பாடு மாறுபடுகின்றது. இவற்றுள் குழுமணம், பலமனைவி மணம், பல கணவர் மணம், மதனி மணம், மைத்துனி மணம், ஒரு துணை மணம் போன்றவை குறிப்பிடத்தக்க வகைகளாகும்.

பண்பாட்டுப் பொதுமைகள் ஒவ்வொரு பண்பாட்டிலும் வெவ்வேறு நிலைகளில் மாறுபட்டுக் காணப்படுவதற்கு இயற்கைச் சூழலும் சமுதாயச் சூழலும் காரணமாகும். பண்பாட்டுப் பொதுமைகள் பற்றி முதன்முதலில் சிந்தித்தவர்களுள் கிளார்க் விஸ்லரும் ஒருவர். இவர் பண்பாட்டுப் பொதுமைகளைப் 'பண்பாட்டுத் திட்டம்'(culture scheme)எனக் குறிப்பிடுகிறார். (clark Wissler, *Man and Culture* (New York : Crowell, 1923) p.74). பல பண்பாடுகளிலும் காணப்படும் ஒற்றுமைப் பண்புகளை

**குறிப்பு**

விளக்குவதற்கு இவர் உயிரியல் கூறுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் மரபுவழியில் பெறப்பட்ட பண்புகள் அனைவரிடமும் ஒத்துக் காணப்படுகின்றன. இந்த ஒற்றுமைத் தன்மை பண்பாட்டுப் பொதுமைகளிலும் பிரதிபலிக்கிறது. மனிதர்கள் பண்பாட்டைஉருவாக்கும் தன்மையைப் பெற்றிருக்கிறார்கள். இதில் அவர்கள் விரும்பிச் செய்யும் செயல்களே மிகுதி. இருப்பினும் மனிதனின் உயிரணுக்களில் உள்ள நீர் (protoplasm) அவன் விரும்பிச் செயல்படும் முன்னரே அவனைச் செயல்படுத்துகிறது. உயிர் நீரின் அவ்வாற்றல் மனிதனின் கற்றல் முறையால் ஒழுங்குபடுத்தப்பட்டு நடத்தை முறைகளில் நிலையான இடத்தைப் பெறுகிறது. ஒவ்வொரு மனிதனும் அவனது பண்பாட்டினைக் கற்கும்போது இந்த ஆற்றல் அவனை நெறிப்படுத்துகிறது. மக்களிடம் உள்ள இவ்வாற்றலின் வேறுபாட்டிற்கேற்ப அவர்களின் நடத்தை முறைகள் மாறுபடுகின்றன. இவை புறநிலை நடத்தையாக மட்டுமே உள்ளன. ஏனையவை பொதுமைக் கூறுகளாகக் காணப்படுகின்றன என்பார் விஸ்லர். இவர் ஒனபது வகையான பொதுமைக் கூறுகளைக் குறிப்பிடுகிறார். அவை 1. மொழி, 2. உணவு, வீடு, போக்குவரத்துச் சாதனங்கள், உடை, கருவிகள், பொருள்கள், தொழில்கள். 3. கலை 4.மரபுக் கதைகள், அறிவியல் கருத்துகள். 5. சடங்குகள், மூடநம்பிக்கைகள், 6. குடும்பம், திருமணம் சமுதாயக் கட்டுப்பாடு, விளையாட்டுகள், பிற தொடர்புடைய சமுதாய நிறுவனங்கள். 7. சொத்து, பறிமாற்ற முறைகள், வணிகம். 8. அரசு, சட்டம், 9. போர்.

பண்பாட்டுப் பொதுமைகளுக்கு அடால்ஃப் பாஸ்டியன் வேறு வகையில் விளக்கங்கூறுவார். இவரது கருத்துப்படி பல்வேறு பண்பாடுகளில் அவற்றுள் இயங்கும் சமுதாயப் பண்பாட்டு நிறுவனங்களில் ஒற்றுமைப் பண்புகள் காணப்படும். ஒரு பண்பாட்டில் காணப்படும் பண்புகள் மற்றொரு பண்பாட்டிலும் காணப்படுவது, இரு பண்பாட்டிலுள்ள மனிதர்களின் நடத்தை முறையிலுள்ள ஒற்றுமையைக் காட்டுகிறது. மக்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட தூண்டுதலுக்கு (stimulus) ஒரு குறிப்பிட்ட துலங்கலைக் (response) கொண்டுள்ளனர். இரு வேறுபட்ட பண்பாட்டினர் ஒரே தன்மையான சிக்கலை எதிர்கொள்ளும்போது இருவரும் ஒரே தன்மையான முடிவினைக் காண்பர். இதன் மூலம் அனைத்துப் பண்பாட்டினரிடமும் ஒத்த உளப்பாங்கும் மனச் செயல்களும் உள்ளன என்பதை அறுதியிடமுடியும். உளவழியில் அமையும் இந்த ஒற்றுமையே பண்பாடுகளுக்கிடையில் ஒற்றுமைக் கூறுகள் ஏற்படக் காரணமாகின்றது. இவரது இக்கொள்கை 'மனித குலத்தின் உளவழி ஒற்றுமை' (psychic unity of mankind) எனக் கூறப்பெறும் இன்று இக்கொள்கை உளவழி ஒற்றுமை (psychic unity) என்று பெருவழக்காகக் கூறப்படும்.

பல்வேறு பண்பாடுகளில் காணப்படும் பொதுமைக் கூறுகள் பற்றி விரிவாக விளக்கியவர் மாலினோஸ்கி. இவரது மறைவிற்குப் பின் 1944-இல் வெளியிடப்பட்ட 'பண்பாட்டைப் பற்றிய அறிவியல் கொள்கை'(A

குறிப்பு

Scientific Theory of Culture)என்னும் நூலில் இதனை விளக்குகிறார். அனைத்துப் பண்பாட்டினருக்கும் அடிப்படைத் தேவைகள் ஒன்றாக உள்ளதால் அவற்றை ஈட்டும் அடிப்படை முறைகளிலும் ஒற்றுமை நிலவுகிறது. தேவைகளை நிறைவு செய்ய மக்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஏற்படும் பண்பாட்டுத் துலங்கல்கள் ஒரே தன்மையானதாக உள்ளன. அவையே பண்பாட்டுப் பொதுமைக்குக் காரணமாகின்றன. மக்களின் அடிப்படைத் தேவைகளையும் பண்பாட்டுத் துலங்கல்களையும் அந்நூலில் மாலினோஸ்கி பல நிலைகளில் விளக்குகிறார். (B.Malinowski, *A Scientific Theory of Culture* (Chapel Hill : University of North Carolina Press, 1944) p.91) அவற்றுள் ஒருவகை இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

| அடிப்படைத் தேவைகள் | பண்பாட்டு துலங்கல்கள் |
|---|---|
| 1. வளர்சிதைமாற்றம் அரங்கம் (metabolism) | உணவுத்துறை (commissariat) |
| 2. இனப்பெருக்கம் (reproduction) | உறவுமுறை (kinship) |
| 3. உடல்வசதிகள் (bodily comforts) | உறைவிடம் (shelter) |
| 4. பாதுகாப்பு (safety) | பாதுகாத்தல் (protection) |
| 5. அசைவு (movement) | செயல்கள் (activities) |
| 6. வளர்ச்சி (growth) | பயிற்சி (training) |
| 7. உடல்நலம் (health) | உடல்நலவியல் (hygiene) |

## 11.8. பண்பாட்டு ஒன்றியம்

பண்பாடு என்பது ஏதோ சில கூறுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு என்றோ, அதனுள் உள்ள கூறுகள் (traits)அனைத்தும் ஏதோ சில செயல்களுக்காக மட்டுமே உள்ளன என்றோ, அக்கூறுகளை மக்கள் தான்தோன்றித்தனமாக ஏற்றுக் கொண்டனர் என்றோ கருத முடியாது. பண்பாடு என்பது மிகவும் இணக்கமுற்ற, ஒருங்கிணைந்த ஓர் ஒன்றியமாகும். அதனுள் உள்ள கூறுகள் அனைத்தும் செயல் நிலையில் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்றன. ஒவ்வொரு கூறும் பண்பாடு என்னும் முழுமைக்குள் மிகவும் ஏற்ற நிலையில் பொருத்தப் பட்டிருக்கிறது. அதன் இயக்கத்தினால் அம்முழுமை கட்டிக்காக்கப்பட்டு முழுமையாகச் செயற்பட முடிகிறது. அதனாலேயே பண்பாட்டை முழுமைத் தொகுதி (complex whole) என்றும் ஓர் ஒழுங்கமைப்பு (system) என்றும் கூறுவர்.

குறிப்பு

பண்பாட்டு ஒன்றியத்தை (cultural integration) ஓர் எடுத்துக்காட்டு மூலம் காணலாம். வீடு என்பது ஆயிரக்கணககான கற்களால் அடுக்கப்பட்ட ஓர் அமைப்பு எனக் கொள்ள முடியாது. அது பல கூறுகளைக் கொண்ட ஒன்றியமாகும். (முழுமை) அம்முழுமைக்குள் கற்கள், மணல், சிமெண்டு, சன்னல்கள், வாயிற்படிகள், கதவுகள், அறைகள், அடுப்பு, கிணறு, மின்விசிறிகள், வானொலிப் பெட்டி, பிற வசதிப்பொருள்கள் முதலான பல கூறுகள் அடங்கியுள்ளன. அவையனைத்தும் வீடு என்னும் முழுமைக்குள் அதற்கென்றுள்ள இடங்களில் அமைக்கப்படுகின்றன. அனைத்தையும் ஒரு சேர இணைத்துப் பயன்படுத்தும்போதே வீட்டில் வாழ்க்கை நடத்த முடிகிறது. அவ்வாறே பண்பாடு என்பதும் பல கூறுகளினால் ஆக்கப்பட்ட ஓர் ஒன்றியமாகும். அந்த ஒன்றியம் முழுமையாக இயங்கும் பொருட்டு அதனுள் உள்ள கூறுகள் ஒருங்கிணைந்த நிலையில் செயல்படுகின்றன. பண்பாட்டின் இந்த ஒன்றியத்தன்மையை விளக்குவதே செயற்பாட்டியல் கொள்கை (functionalism) ஆகும்.

பண்பாட்டு ஒன்றியம் என்னும் மொழித்தொடர் ஒரு பண்பாட்டின் ஒன்றியத்தன்மையின் நிலையைக் குறிப்பிடும் தொடராகப் பயன்படுத்தப்படுகிறது. சில பண்பாடுகள் மிக வலுவான ஒன்றியத்தன்மையைக் கொண்டிருக்கும் சில வலுவற்ற ஒன்றியத்தன்மையைக் கொண்டிருக்கும் வலுவான ஒன்றியத்தைக் கொண்ட பண்பாடுகளில் பண்பாட்டு மாற்றம் (culture change) குறைவாக ஏற்படும் வலுவற்ற ஒன்றியத்தில் மாற்றங்கள் விரைந்து நிகழும்.

‘மனிதனைப் பற்றிய ஆய்வு’ (The Study of Man, 1947)என்னும் நூலில் ரால்.்.ப் லிண்டன் பண்பாட்டு ஒன்றியத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது “வலுவான ஒன்றியத்தைப் பெற்ற பண்பாடுகளில் பல கூறுகள் செயல் நிலையில் ஒன்றுக்குள் ஒன்றானதாகக் காணப்படும்” என்கிறார். மடகாஸ்கர் தீவு மக்களிடம் ஆய்வு செய்த இவர் அத்தீவு மக்கள் மீது குடியேற்ற மக்கள் கிறித்தவத்தைத் திணிக்க முயன்று தோல்வி கண்டதைக் குறிப்பிடுகிறார். மடகாஸ்கர் மக்கள் கிறித்துவ சமயத்தை ஏற்காததற்கு அவர்களின் பண்பாட்டு ஒன்றியம் மிகவும் வலுவாக இருந்ததே காரணம் என்கிறார். அமெரிக்க இந்தியப் பழங்குடியினராக கொமன்சீ மக்களிடம் அதே வகையான ஆய்வினை இவர் மேற்கண்டபோது அப்பகுதிக்கு வந்த வெள்ளையர்களின் தாக்கத்திற்குட்பட்டு கொம்சீயினர் அவர்களின் வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டதைக் கண்டார். அம்மக்களின் பண்பாட்டு ஒன்றியம் வலுவற்ற நிலையில் இருந்ததே அதற்குக் காரணமாகும் என்கிறார் லிண்டன் (Ralph Linton, *The Study of Man* (New York : Appleton, 1947) pp.364-65').

## 11.9. தொகுத்துக் காண்போம்:

குறிப்பு

பண்பாட்டின் அமைப்பு அதன் இயக்கத்தில் காணப்படுகின்ற ஆயிரமாயிரம் கூறுகள் அந்தந்தப் பண்பாட்டு உறுப்பினர்களால் சிறப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பண்பாட்டோடு பொருத்தப்படுகின்ற தன்மையை மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்

உலகிலுள்ள அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொதுவான கூறுகளைக் குறிக்கும் பண்பாட்டுப் பொதுமைகள் பற்றி மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

## 11.10. சோதித்தறியும் வினாக்கள்

உள்ளார்ந்த பண்பாடும் வெளிப்படையான பண்பாடும் - விளக்குக

பொருள்சார் பண்பாட்டிற்கும் பொருள்சாராப் பண்பாட்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி.

## 11.11. பயிற்சி வினாக்கள்

பண்பாட்டின் அமைப்புமுறை எத்தகையது? மானிடவியல் ஆய்வுகளுக்குத் துணைநிற்குமா? ஆராய்க.

பண்பாட்டுப் பொதுமைகள் பற்றிக் கட்டுரை வரைக.

## 11.12. மேலும் பயில்வதற்கான நூல்

பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

# பிரிவு-4 : சாதி – நவீனக் கோட்பாடுகள்

குறிப்பு

## கூறு-12 : பண்பாடு ஒரு நடத்தைசார் முறை

### 12.1. அறிமுகம்

மக்களும் அவர்களின் நடத்தைமுறைகளும் அவரவர் உயிரியல் கூறுகளால் நெறிப்படுத்தப்படுவதால் இனவியல் கூறுகளாலும் சுற்றுச்சூழல் கூறுகளாலும் நெறிப்படுத்தப்படுகின்றன என்ற கருத்து மேலோங்கியிருக்கின்றது.

### 12.2. குறிக்கோள்கள்

நடத்தைமுறை சார்ந்த ஆய்வுகளும் உளவியல் சார்ந்த ஆய்வுகளும் பெருகின. இவ்வகை ஆய்வுகளை மேற்கொண்டவர்களுள் எட்வர்டு சப்பிர், ரூத் பெனிடிக்ட், மார்கரட் மீடு, ஆப்ரகாம் கார்டினர், கோரா தூபாய்ஸ், கீசாரோகீம் முதலானோரின் பணிகளை மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

பண்பாடு தனிமனித நடத்தையின் அடிப்படையிலும் கட்டமைக்கப்படும் என்ற கருத்தை மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

### 12.3. நடத்தையும் மானிடவியலும்

18-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை மக்களின் நடத்தைமுறைகளை விளக்கிக் கூறுவதில் உயிரியல், இனவியல், சுற்றுச்சூழலியல் ஆகியவற்றின் கருத்துக்களே பெருமளவு இடம் பெற்றிருந்தன. மக்களும் அவர்களின் நடத்தைமுறைகளும் அவரவர் உயிரியல் கூறுகளால் நெறிப்படுத்தப்படுகின்றன, இனவியல் கூறுகளால் நெறிப்படுத்தப்படுகின்றன, சுற்றுச்சூழல் கூறுகளால் நெறிப்படுத்தப்படுகின்றன என்ற கருத்து மேலோங்கியிருந்தது. போவாகம் அவரின் மாணவர்களும், அமெரிக்க மானிடவியலில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றவுடன் மேற்கூறிய கருத்துக்களைக் கடுமையாக எதிர்த்தனர். மனிதன் பண்பாட்டுக் கூறுகளினால் மட்டுமே உருவாக்கப்படுகிறான் என்றும் அவன் தன் பண்பாட்டுக் குணநலன்களைத் தானாகவே சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்பதன் மூலம் ஒரு முதிர்ந்த மனிதனாகிறான் என்றும் இவர்கள் வாதிட்டனர். இவர்களின் இக்கருத்து பண்பாட்டு அறுதிப்பாட்டியம்

(cultural determinism) எனப் பரவலாகக் கூறப்படும். இக்கொள்கை மூலம் பண்பாடு ஒரு நடத்தைசார் அமைப்பு என்பது உறுதியாகிறது.

குறிப்பு

போவாசிற்கடுத்து நடத்தைமுறை சார்ந்த ஆய்வுகளும் உளவியல் சார்ந்த ஆய்வுகளும் பெருகின. இவ்வகை ஆய்வுகளை மேற்கொண்டவர்களுள் எட்வர்டு சப்பிர், ரூத் பெனிடிக்ட், மார்கரட் மீடு, ஆப்ரகாம் கார்டினர், கோரா தூபாய்ஸ், கீசாரோகீம் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். மானிடவியலில் நடத்தை முறையைப் பற்றிய ஆய்வுகளுக்குப் பின்வரும் பின்னணியே காரணமாக அமைந்தது.

சமுதாயத்தில் நிகழும் இளங்குற்ற நடத்தை, அன்னியமாதல் (alienation), சமுதாய மாற்றம் முதலானவற்றை அறிவதில் பொது மக்களிடமும் கல்விசார் துறையிலும் ஆர்வம் மிகுதியானது. குறிப்பாக முதல் உலகப் போருக்குப்பின் ஏற்பட்ட இந்த ஆர்வம் தனிமனித உளவியலையும், உளவியலின் பிற கூறுகளையும் பற்றியதாக அமைந்தது. இவ்வகைச் சிக்கல்களை ஆராய முற்பட்ட உளவியலார் மேற்கத்தியச் சமுதாயத்தை மட்டுமே ஆய்வு செய்தனர். இந்நிலையில் மானிடவியலார் உளவியல் முறைகளைப் பயன்படுத்தி மேற்கத்தியரல்லாத பண்பாடுகளை ஆய்வு செய்ய முனைந்தனர்.

## 12.4.பண்பாடும் ஆளுமையும்

1920-30 காலகட்டங்களில் அமெரிக்காவில் போவாசின் மாணவர்களுள் பலர் உளவியல் கொள்கைகளையும் அதன் ஆய்வு முறைகளையும் பண்பாட்டிடை நிலையில் (cross-cultural) பயன்படுத்தவும் சோதித்துப் பார்க்கவும் ஆர்வங்கொண்டனர். அவர்கள் மேற்கொண்ட இவ்வகை ஆய்வுகள் பண்பாடும் ஆளுமையும் (personality) குறித்த ஆய்வுகள் எனக் கூறப்பட்டன. ஆனால் அவர்களுக்குப் பின் ஆய்வுசெய்தோர் இப்பிரிவை உளவியல்சார் மானிடவியல் (psychological anthropology) எனக் கூறத்தொடங்கினர்.

மேற்கத்தியரல்லாத சமுதாயங்களில் பண்பாடும் ஆளுமையும் பற்றி ஆராய்ந்த மானிடவியலார் சில உளவியல் முறைகளை மட்டும் பயன்படுத்தினர். அவை : கற்றல்முறை (learning system), முழுமை உளவியல் (gestalt psychology), பிராய்டின் சில கொள்கைகள் முதலானவையாகும். இம்முறைகளைப் பயன்படுத்தி ஆராய்ந்த அவர்கள் தனிமனிதர்களின்மீது பண்பாட்டின் தாக்கம் என்ன என்ற கருத்தை மையமாகக் கொண்டிருந்தனர். சில ஆய்வாளர்கள் பண்பாட்டில் சிலரிடம் மட்டும் மிகவும் உகந்த (ideal) ஆளுமை எவ்வாறு ஏற்படுகிறது என்பதை ஆராய்ந்தனர். வேறு சிலர் பால் வேறுபாடுகள் பற்றி ஆராய்ந்தனர்.

தொடக்கக்கால உளவியல்சார் மானிடவியலில் எட்வர்டு சப்பிர் (1884 – 1934) சிறப்பிடம் பெற்றிருந்தார். இவர் மானிடவியல்சார் மொழியியலோடும் தொடர்புடையவர். சுப்பியர்வெ.ஃ.ர்ப் எடுகோள் மொழியியல் ஆய்வுகளில் சிறப்பிடம் வகிக்கிறது. சப்பிர், ஒரு

பண்பாட்டில் ஆளுமை எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதை ஆராய்வதிலும் ஆர்வங்கொண்டார். வழக்கமாக மேற்கொள்ளப்படும் இனக்குழுவியல் ஆய்வுகள் மூலம் தனிமனிதர்களையும், அவர்களின் உணர்ச்சிகளையும், சூழலுக்கேற்ப மாறுபடும் நடத்தை முறைகளையும் அறிய முடியவில்லை என சப்பிர் எண்ணினார். இக்குறையைப் போக்க உளவியல் கொள்கைகளையும், முறைகளையும் பயன்படுத்திப பண்பாட்டிடை நிலையில் ஆராய வேண்டும் என வலியுறுத்தினார். பண்பாட்டின் இயல்நிகழ்ச்சிகள் மக்களின் உளவியற் பாங்குகளையும் பண்பாட்டின் உட்கருத்துகளையும் தெளிவுடன் காட்டுமாதலால் பண்பாட்டின் உண்மையான கருத்து அல்லது அதன் உறைவிடம் மனிதர்களுக்கிடையே நிகழும் இடைவினைகளில் உள்ளது, இந்த இடை வினைகளின் போது ஏற்படும் பட்டறிவு மக்களிடையே கருத்தளவில் (மனதில்) பதிந்துவிடுகின்றன. இவை வெளிப்படும்போது அப்பண்பாட்டிலுள்ள அனைவராலும் அவை புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது என சப்பியர் கருதினார். இதனால் சப்பிர் பண்பாட்டை உளவியல் உண்மைப்படி (pshychological reality) காண விரும்பினார். இதுவே பண்பாட்டில் ஒரு தனிமனிதரின் உண்மைப் பாங்காகவும் இயல்பான பாங்காகவும் இருக்குமென நம்பினார்.

## 12.5.உண்மைப் பண்பாடும் போலிப் பண்பாடும்

மக்கள் எவ்வாறு தங்கள் தாய்மொழியைப் பேசக் கற்றுக் கொள்கிறார்களோ அவ்வாறே பண்பாட்டின் அமைப்புகளையும் நனவிலி (unconscious) நிலையில் கற்றுக் கொள்கின்றனர் என்பார் சப்பிர். பண்பாடு ஒவ்வொரு தனிமனிதராலும் வெளிப்படுத்தப் படுகிறது அல்லது அவருள் உறைந்துள்ளது என்பதால் பண்பாட்டின் தன்மையை அறிவதென்பது தனிமனிதரை அறிவதாகும். சப்பிரின் கருத்துப்படி, சில பண்பாடுகள் தனிமனிதர்களைச் சிறப்பாக நடத்துகிறது ; அவர்களை மிகவும் இணக்கமாகவும் சமநிலையிலும் நடத்துகிறது ; உறுப்பினர்கள் தங்களின் கருத்துகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்த வழிகோலுகிறது. ஆனால், சில பண்பாடுகள் உறுப்பினர்களுக்கிடையே மனவிரிசலையும், முரண்பாடுகளையும் ஏற்படுத்தி அவர்களை ஒருவிதத் துன்பத்தில் ஆழ்த்தி விடுகிறது. இக்கருத்துக்களைக் குறிப்பிட்ட சப்பிர் புதுவகையான சொற்களைக் கையாண்டார். முதல்வகைப் பண்பாட்டைத் தன்னியில்பான அல்லது ‘உண்மைப் பண்பாடு’ (genuine culture) என்றும், இரண்டாம் வகைப் பண்பாட்டைத் தன்னியல்பற்ற அல்லது ‘போலிப் பண்பாடு’ (spurious culture) என்றும் குறிப்பிட்டார். பண்பாடு எவ்வாறு தனிமனிதர்களைப் பாதிக்கிறது என்ற புதிய மரப்பில் சப்பிர் ஏற்படுத்திய ஆர்வம் உரூத் பெனிடிக்ட், மார்கரட் மீடு ஆகிய இருவரிடமும் பெரும் தாக்கத்தை உண்டாக்கியது.

உரூத்.ஃபுல்டன் பெனிடிக்ட் (1887 – 1948) தொடக்கத்தில் தத்துவம், இலக்கியம் பயின்றவர். பின்னர் மானிடவியல் துறையில் ஈடுபாடு கொண்டார். பண்பாடும் ஆளுமையும் குறித்து இவர்

கொண்டிருந்த ஆர்வம் சப்பிர் அவர்களுடன் ஏற்பட்ட தொடர்பால் வலுப்பெற்றது. இந்த ஆர்வம் அவரின் பேராசிரியர் போவாஸ் கொடுத்த ஊக்கத்தினால் மேலும் வலுவடைந்தது.

குறிப்பு

பெனிடிக்டின் முக்கியமான ஆய்வு நூல்களுள் ஒன்று 'மானிடவியலும் இயல்பிறழ்வும்' (Anthropology and Abnormality, 1934) ஆகும். அந்நூலில் ஒருவருக்கு ஏற்படும் இயல் பிறழ்வுத் தன்மையைப் பண்பாடு மட்டுமே அறுதியிடுகிறது என உறுதிப்படுத்தினார். ஒரு சமுதாயத்தில் காணப்படும் இயல்பிறழ்வுத் தன்மை அல்லது "பித்துத்தன்மை" (insane) என்பது அச்சமுதாயத்திற்கு மட்டுமே பொருந்தக்கூடியது. வேறொரு சமுதாயத்தில் அந்த தன்மை இயல்பானதாகவும், பித்துத் தன்மையற்றதாகவும், இணக்கமானதாகவும் கருதப்படும். இக்கூற்றையே வேறொரு முறையில் கூறுவதானால், ஒரு பண்பாட்டில் சில பண்புகள் நன்னிலையற்றவை என்று கூறுமளவிற்கு ஓர் உலகளாவிய நன்னிலை (universal sanity) இல்லை. அதனால் இயல்பிறழ்வு என்பது ஒருவர் அவரது பண்பாட்டின் நெறிமுறைகளை ஏற்று நடக்காத போக்கையே குறிக்கும் என்பார் பெனிடிக்ட். ஒரு பண்பாட்டின் நெறிமுறைகளின் எதிர்பார்ப்பு வேறொரு பண்பாட்டில் வேறுபடுமாதலால் இயல் பிறழ்வுத்த தன்மையைக் குறிப்பிட ஓர் உலகளாவிய அளவுகோல் இல்லை என்பார்.

ஒருவர் பிறக்கும்போது பலதரப்பட்ட ஆளுமை வகைகளைப் பெறும் திறம்பெற்றவராகவே காணப்படுகிறார். ஆனால் ஒவ்வொரு சமுதாயமும் பண்பாட்டு வயமாக்க (enxulturation) முறையால் தன் பண்பாட்டின் நெறிமுறைகளைப் புகுத்தி அவரை அச்சமுதாயத்திற்கு உகந்த மனிதராக மாற்ற முனைகிறது என்ற மையக் கருத்தை பெனிடிக்ட் அடிக்கடி குறிப்பிடுவார். பண்பாட்டு வயமாக்க முறை மூலம் சமுதாயத்தில் அனைவரும் ஒத்த தன்மையைப் பெறுவதற்குக் கற்பிக்கப்பட்டாலும் ஒவ்வொரு மனிதனிடமும் காணப்படும் ஏற்புத்தன்மையின் நெகிழ்வுப்பாங்கு (human plasticity) சமுதாயத்தில் பலவகையான ஆளுமை வகைகளை ஏற்படுத்திவிடுகிறது.

## 12.6.ஆளுமை வகைகள்

ஆளுமை வகைகளைப் பற்றி ஆராய்ந்த பெனிடிக்ட் அவர்தம் முடிவுகளைத் தொகுத்து 'பண்பாட்டுக் கோலங்கள்' (Patterns of Culture, 1934) என்னும் நூலாக வெளியிட்டார். அந்நூல் மானிடவியலின் மிகச் சிறந்த நூல்களுள் ஒன்று எனப் பெயர் பெற்றுவிட்டது. அந்த ஆய்வில் சூனி (Zuni), தோபு (Dobu), குவாக்யூட்டில் (Kwakuitl) போன்ற இன்னும் பிற பழங்குடிச் சமுதாயங்களை ஆய்வு செய்து ஒவ்வொரு பண்பாட்டிற்குமான உளவியல் அமைப்பினைக் கண்டுபிடிக்கும் திட்டத்தை உருவாக்குவதில் முனைந்தார். இவரது இம்முயற்சி குரோபர் மேற்கொண்ட அமைப்பொழுங்கு (configuration) அணுகுமுறை போன்று இருந்தது என்றாலும் பெனிடிக்டின் முறை உளவியல்

அடிப்படையிலானது. டைலரின் முறை பண்பாட்டின் பாணியை (style) அறிவதாக இருந்தது.

குறிப்பு

பெனிடிக்ட் அம்மையார் சூனி, பியூப்லோ (Pueblo) மக்களிடம் மேற்கொண்ட களப்பணித் தரவுகளையும், தோபு மக்களைப் பற்றி இரியோ பார்ச்சூன் (Reo Fortune) சேகரித்த தரவுகளையும், வடமேற்குக் கடற்கரை குவாக்யூட்டில் இந்தியர்களைப் பற்றி போவாஸ் சேகரித்த களப்பணி குறிப்புகளையும் பெற்று இம்மூன்று சமுதாயத்தினரும் எவ்வாறு அவரவர் சமுதாயத்திற்கு உகந்த ஆளுமையை ஏற்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை பெனிடிக்ட் விளக்கினார். இம்மூன்று பழங்குடிகளைக் குறிப்பிடும்போது, சூனி மக்கள் வாழ்வில் நன்னெறிகளையும் அமைதியையும் கொண்டவர்கள் (apollonian); கொந்தளிப்பில்லாதவர்கள்; அமைதியானவர்கள்; அனைத்தையும் நடுத்தரமான போக்கில் காண்கிறவர்கள் என்று கூறுவார். ஆனால் தோபு மக்களைக் குறிப்பிடும்போது, அவர்கள் குழப்பமானவர்கள் (paranoid); சந்தேகக் குணமுள்ளவர்கள்; பயந்த பாங்கினர்; எதையும் அளவுக்கு மீறி எண்ணிச் செயல்படுகிறவர்கள் என்பார். குவாக்யூட்டில் மக்களைப் பற்றி எழுதும் போது அவர்களைத் தற்பெருமை உணர்வுடையவர்கள் (megalomanical): தன்னலப் போக்குடையவர்கள்; தன்முனைப்புப் போக்குடையவர்கள் (egotistic) என்று குறிப்பிடுவார். இக்கருத்துக்களைக் கொண்டு பெனிடிக்ட் பண்பாட்டை அமைதிப் பண்பாடு (apollonian), முரட்டுப் பண்பாடு (Dionysian)என இருவகையாகப் பிரிப்பார். (R.Benedict, *Patterns of culture* (New York : Houghton Miffin Company, 1934, pp. 57-58). ஒவ்வொரு சமுதாயத்தின் பண்புகளைப் பற்றிய பெனிடிக்டின் கருத்துகள் மிகைப்படுத்தப் பட்டதாக உள்ளது எனத் திறனாய்வாளர்கள் கருதினர். இவரது ஆய்வு முடிவுகளுக்கு எதிர்மாறாக இருந்த தரவுகளை பெனிடிக்ட் ஒதுக்கிவிட்டார் எனவும் அவர்கள் குறை கூறினர்.

மக்களிடையே எண்ணிலடங்கா வகையிலான மாறுபாடுகள் காணப்படுவதற்கு வாய்ப்புள்ளதால் அவை பற்றி மிகப் பெருமளவில் பொதுமையாக்கம் செய்வதையும், காரணகாரியத் தொடர்புகளை விளக்குவதையும் மக்களின் வேறுபட்ட பாங்கு தடைசெய்கிறது. இந்நிலையில் பெனிடிக்டின் கொள்கை நிலை பண்பாட்டுச் சார்புடைமைக்கு வழிகோலுவதாகப் பலர் எண்ணினர். போவாசின் வரலாற்றுச் சார்புக் கொள்கை அணுகுமுறையைப் (historical particularistic approach) போன்றே பெனிடிக்டும் ஆளுமை அமைப்புகளானது வரலாற்றுக் காலத்தினூடே உருவாக்கப்பட்டவை எனக்கருதினார். இவரது ஆய்வு செயற்பாட்டியல் அணுகுமுறையைக் கொண்டது. இவர் பண்பாட்டை ஓர் ஒன்றியமான அமைப்பு என்றும், பண்பாடு அதன் உறுப்பினர்களைத் தன் நெறிமுறைகளுக்கு (norms) ஏற்ப வளர்க்கும் செயலைச் செய்கிறது என்றும் உறுதியாக நம்பினார். இருப்பினும் இவர் ஏற்படுத்திய பண்பாட்டு அமைப்பொழுங்குகளில்

(cultural configurations) சார்புடைய மாறிகளையும் (dependent variable) சார்பற்ற மாறிகளையும் (independent variable) தெளிவாகக் காணவில்லையென்றும் அவை எவ்வாறு மாற்றம் பெறுகின்றன என்பதை விளக்கவில்லை என்றும் சிலர் கூறுவர். ஆனால் பெனிடிக்ட் பண்பாட்டை ஒரு நிலையான அமைப்பாக எடுத்துக்கொண்டு அதில் ஆளுமையின் வளைந்து கொடுக்கும் தன்மை (plasticity) எவ்வாறு உள்ளது என்பதைப் பற்றி அறிவதில் கவனம் கொண்டிருந்தார்.

மார்கரட் மீடு (1901 – 1978) பெனிடிக்டின் மாணவர்களுள் ஒருவர். இந்த அம்மையாரும் தன் பேராசிரியரைப் போன்றே பண்பாடும் ஆளுமையும் பற்றித் தொடக்கக் காலத்திலிருந்தே ஆராய முற்பட்டார். இவரது ஆய்வுகளில் 'தனிமனிதர்களும் பண்பாட்டு வயமாக்க முறையும்' (enculturation process) என்ற கருத்தை மையமாகக் கொண்டு ஆராய்ந்தார். குறிப்பாக 1920-30 காலகட்டங்களில் பொதுமக்களிடமும் அறிஞர்களிடையேயும் மிக விரிவாகப் பேசப்பட்டு வந்த குமரப்பருவச் சிக்கல்கள், இளங்குற்ற நடத்தைகள், பூப்புக்காலத்தில் ஏற்படும் பொதுவான உணர்வெழுச்சிகளின் தாக்கம் முதலானவை பற்றி மீடு மிகவும் ஈடுபாடு கொண்டு ஆராய்ந்தார்.

வாலிபப் பருவச் சிக்கல்களினால் தோன்றும் சமுதாயச் சிக்கல்களும், உணர்வெழுச்சி சார்ந்த முரண்பாடுகளும் உயிரியல் அடிப்படையில் ஏற்படுபவை என்று ஒருசாரார் விவாதித்து வந்தனர். அவர்களுக்குச் சமமாக மற்றொரு சாரார் குமரப்பருவச் சிக்கல்கள் அனைத்தும் பண்பாட்டு அடிப்படையில் அமைந்தவை என்று கூறிவந்தனர். அதனால் மீடு தன் தொடக்கக்கால ஆய்வுகளில் இவ்வகைச் சிக்கல்களுக்குக் காரணமாக உள்ள பண்புகளுள் பண்பாட்டு அடிப்படையில் வருபவை எவை, உயிரியல் அடிப்படையில் வருபவை எவை என ஆராய்ந்தார். இவர் எழுதிய "நியூகினி மக்களின் வளர்ப்பு முறை' (Growing Up in New Guinea, 1930), 'சமோவா சமுதாயத்தில் உரிய வயதடையும் பாங்கு' (Coming of Age in Samoa, 1928) ஆகிய இரண்டு நூல்களும் குமரப்பருவச் சிக்கலை நன்கு ஆராய்ந்து எழுதப் பட்டவையாகும். ஆய்வின் முடிவினைக் குறிப்பிடும்போது குமரப்பருவம் ஏற்படும் உணர்வெழுச்சி சார்ந்த சிக்கல்கள் அனைத்தும் பண்பாட்டு அடிப்படையிவானவை என உறுதியாகக் கூறினார்.

இவர் எழுதிய 'பாலும் மனவியல்பும்' (Sex Temperament, 1935) என்னும் நூல் உயிரியல் அடிப்படையில் நிலை நிறுத்தப்படும் பண்புகள் எவை, பண்பாட்டு அடிப்படையில் நிலைநிறுத்தப்படும் பண்புகள் எவை என்பதைப் பற்றியதாகும். இருப்பினும் அந்நூல் ஆண், பெண் இருபாலாரின் மனவியல்பினை விளக்குவதற்காக எழுதப்பட்டது. உயிரியல் கூறுகள் அடிப்படையிலான ஆண், பெண் மனவியல்பு (temperament) உலகம் முழுவதும் பொதுவாக உள்ளதா? அல்லது ஆண்மைத் தன்மை, பெண்மைத் தன்மை என்ற பாங்கைப் பெறுவதற்குப் பண்பாடு மக்களை நெறிப்படுத்துகிறதா? என்னும் கூற்றை ஆராய்ந்த மீடு

**குறிப்பு**

உலகளாவிய நிலையில் ஆண்களுக்கென்று தனியாகவும் பெண்களுக்கென்று தனியாகவும் மனவியல்புக்கூறுகள் இல்லை என அறிந்தார். அவ்வாறு ஆண்களுக்கென்று தனியாகவும் பெண்களுக்கென்று தனியாகவும் ஆளுமை இருக்குமானால் அது பண்பாட்டால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதாகும். எடுத்துக்காட்டாக, ஆண்கள் முரட்டுத்தன்மை பெற்றவர்கள் என்பதும் பெண்கள் அமைதித்தன்மை பெற்றவர்கள் என்பதும் பண்பாட்டளவில் ஏற்பட்டதே. ஆண்மைத்தன்மை, பெண்மைத்தன்மை பற்றி மீடு குறிப்பிடும் இக்கூறுகள் மனவியல்பு, ஆளுமை பற்றியது மட்டுமே. இனப்பெருக்கச் செயல்களையோ பிறசெயல்களையோ குறிப்பிடவில்லை.

பண்பாட்டு வயமாக்கத்தின் மூலம் ஆண், பெண் இருபாலாரும் தத்தம் சமுதாயத்திற்கு ஏற்ற இயல்பான மனநிலையைப் பெறுகிறார்கள் என்று அறிந்த மீடு சமுதாயத்திற்கு முரண்பாடுள்ள (deviant) மனிதர்கள் உருவாகும் முறையை விளக்குவதில் சிக்கல்கள் உள்ளதாக உணர்ந்தார். ‘பாலும் மனவியல்பும்’ நூலில் முரண்பாடுள்ள நடத்தைமுறை உயிரியல் அடிப்படையில் மட்டுமே தோன்றுகிறது, பண்பாட்டால் அன்று என முடிவுசெய்தார். இருப்பினும் ஒவ்வொருவரின் மனவியல்பு பண்பாட்டால் அறுதியிடப் படுகிறது என்னும் கருத்தில் உறுதியாக இருந்தார்.

மீடு ஆய்வு செய்த அரபேஸ் (Arapesh) பழங்குடிகளை ஆர்.பார்ச்சூன் அவர்களும் விரிவாக ஆய்வு செய்ததலால் மீடு ஆய்வினைப் பல கோணங்களில் அவர் திறனாய்வு செய்தார். அரபேஸ் சமூகத்தில் ஆண், பெண் இருபாலாரின் மனவியல்பு பெண்மைத்தன்மை போன்று உள்ளது, அனைத்து ஆண் குழுக்களையும் ஆய்வுசெய்து அவர்களின் செயல்களை மதிப்பிட்டுள்ளேன் என்று மீடு கூறிய கூற்றுகளை பார்ச்சூன் கூற்றுப்படி அரபேஸ் சமூகத்தில் ஆண்களுக்கென்று தனிப்பட்ட செயல்கள் பல உண்டு. அவற்றை ஒரு பெண் காணவோ அதைப்பற்றி அறியவோ இயலாது. அவ்வாறான சூழலில், தான் ஒரு ஆண் என்ற முறையில் பல மறுப்புகளுக்கிடையில் முயன்று அறிந்தேன். அவ்வாறு இருக்கும்போது மீடு ஒரு பெண் என்ற நிலையில் அவர்களைப் பற்றி அறிந்தவற்றை இங்கு எழுதியிருக்க முடியாது எனக் குற்றஞ்சாட்டுகளுக்கு 1950ஆம் ஆண்டு மறுபதிப்புச் செய்த ‘பாலும் மனவியல்பும்’ என்னும் நூலின் முன்னுரையில் மீடு பதில் கூறியுள்ளார்.

ஏ.ஐ.ஹாலோவெல் என்பார் ஒஜிப்வா (Ojibwa) இந்தியர்களின் உளவியற் பாங்குகளையும் அவர்கள் ஐரோப்பியரோடு கொண்டிருந்த பண்பாட்டுத் தொடர்பினையும் பல ஆண்டுக்காலம் ஆராய்ந்தவர். அந்த ஆய்வின் பயனாய் அம்மக்களின் பண்பாட்டுத் தொடர்பு நிகழ்வில் காணப்பட்ட பல்வேறு கூறுகளின் செயல்களையும் அந்த நிகழ்வில் தனிமனிதர்கள் அனுபவித்த நெருக்குதல்களையும் ஒன்றுபடுத்தி அறிய நேரிட்டது. இவரது ஆய்விற்கு மூன்று ஒஜிப்வா இந்தியச் சமூகங்களை

*Self-Instructional Material*

குறிப்பு

எடுத்துக்கொண்டார். இம்மூன்று சமூகங்களும் வெவ்வேறு நிலையில் ஐரோப்பியரின் பண்பாட்டுத் தாக்கத்தைப் பெற்றிருந்தன. வெவ்வேறு நிலையிலிருந்த அச்சமூகத்தினரைக் கருத்தறிச் சோதனை (projective test), பொருள் இணைத்தறி சோதனை (Thematic Apperception Test – TAT), வரலாற்றுத் தரவுகள் முதலானவற்றைக் கொண்டு ஆராய்ந்தபோது தொழில் நுட்பத்தில் ஆதிக்கம் பெற்ற ஐரோப்பியருடன் நீண்ட காலம் தொடர்புற்றிருந்தாலும் பல நிலைகளில் ஒஜிப்வா மக்கள் மரபுசார் ஆளுமைப் பண்புகளைச் சிதையாமல் கொண்டிருந்தனர்; பழைய நடத்தை முறைகளைத் தொடர்ந்து பின்பற்றி வந்தனர் என்பதை அறிந்தார். இதற்கு ஓர் எடுத்துக்காட்டைக் கூறுகிறார். தொடக்கக் காலத்தில் இப்பகுதிக்கு வந்து சென்ற ஐரோப்பியரின் உளப்பாங்குகளை ஒஜிப்வாவினர் ஏற்றுக்கொண்டிருந்தனர். 200 ஆண்டுகளுக்கும் மேலான காலத்தில் பொருள்சார் பண்பாட்டில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆனால் உளவியற் பாங்குகள் குறைந்த மாறுபாட்டுடன் அவர்களிடம் தொடர்ந்து நிலவின. ஆனால் குறிப்பிட்ட அளவு பண்பாட்டுப்பேறு (acculturation) அடைந்தவர்கள் தங்களின் ஆளுமை அமைப்பில் மாற்றத்தைப் பெற்றனர் அல்லது மாற்றத்தினைப்பெற்று மீண்டும் பழைய நிலைக்கே திரும்பினர். இதன்மூலம் பழைய நடத்தை முறைகளை இழந்த மக்கள் அதற்கு ஈடான புதிய நடத்தைப்பாங்கினை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை ஹாலோவெல் கண்டறிந்தார்.

## 12.7.தேசியப் பண்பு ஆய்வுகள்

இரண்டாம் உலகப்போருக்கு முன்னரும் போரின்போதும் மானிடவியலார் உள்பட பல துறைகளைச் சேர்ந்த அறிஞர்கள் கூட்டாட்சி அமைப்புடைய (federal) அரசுகளோடு இணைந்து உளவழிப்போர் (psychological warfare) பற்றி அறியும் ஆய்வுகளை மேற்கொள்ள முனைந்தனர். அதில் பெனிடிக்டும் மீடும் முக்கிய இடம்பெற்றிருந்தனர். ஜெருமனியில் ஹிட்லர் ஆட்சியின் கடுமையான விளைவுகள் மானிடவியலாரையும் பிற நடத்தைவியல் அறிவியலாரையும் ஒன்று சேர்த்தன. ஒன்று கூடிய இவர்கள் உளவழிப்போர் முறைகளை அரசு சார்பில் ஆராய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். இவ்வகை ஆய்வுமுறையே தேசியப் பண்பு ஆய்வுகள் (National character studies) என வழங்கப் பெறலாயிற்று.

தேசியப் பண்பு ஆய்வுகளைக் களத்தில் சென்று மேற்கொள்ள இயலாது. ஏனெனில், முதல் உலகப்போர் முதலே பல நாடுகள் சண்டையில் ஈடுபட்டிருந்ததால் ஆய்வாளர்கள் ஏதோ ஒரு நாட்டைச் சேர்ந்தவராக மட்டுமே இருக்க வேண்டியிருந்தது. அதனால் ஒரு பகைவர் நாட்டில் சென்று களப்பணி மேற்கொள்வது என்பது எண்ணிப்பார்க்க இயலாதது. அதனால் இவ்வகை ஆய்வுகளில் ஈடுபட்ட அறிஞர்கள் மக்களின் உளம்சார் உள்நோக்கத்தினை (psychological insights) அறிய ஒரு புதிய முறையியலை உருவாக்க வேண்டியிருந்தது. இவர்கள்

குறிப்பு

மேற்கொண்ட ஆய்வு முறையில் களப்பணி தவிர்த்து ஏனைய மூலங்கள் அனைத்தையும் பயன்படுத்தினர். நூல்கள், இதழ்கள், திரைப்படங்கள், செய்தித்தொடர்பு முதலானவற்றைப் பயன்படுத்துதல், போர்க்கைதிகளையும் நாடு கடத்தப் பட்டவர்களையும் நேர்காணல் மூலம் அறிந்தவையும் இவர்கள் பயன்படுத்திய முறைகளுள் சில களப்பணி மேற்கொள்ளாமல் ஆய்வு செய்யும் இம்முறை பண்பாட்டைத் தொலைவிலிருந்து ஆராய்தல் எனச் சிறப்பாகக் கூறப்பட்டது.

இந்த முறையைப் பயன்படுத்தி பெனிடிக்ட் எழுதிய 'கொத்து மலருடைய செடியும் கத்தியும்' (The Chrysanthemum and th Sword, 1946) என்னும் நூல் இவ்வகை ஆய்வுகளில் மிகச் சிறந்தது எனப் பெயர் பெற்றது. ஜப்பானின் தேசியப் பண்பினை விளக்கும் இந்நூல் மிகச் சிறந்த உழைப்பால் விளைந்தது என்று போற்றப்பட்டாலும் இதனைச் சிலர் குறை கூறவும் தொடங்கினர். இவர்களின் கூற்றுப்படி பெனிடிக்ட் முதல்தர நடுவகுப்பாரிடம் பெறப்பட்ட தரவுகளையே மிகுதியாகச் சார்ந்திருந்தார்; வகுப்பு வேறுபாடுகளையும் அவை சார்ந்த பண்புகளையும் புறக்கணித்தார்; பண்பாட்டு மாற்றத்தைப் பொருட்படுத்தாமல் விட்டுவிட்டார்; அதனால் ஓர் இயக்கமற்ற வகைப்பாட்டினை (static typology)உருவாக்கினார் என்பதாகும்.

பெனிடிக்டு குற்றச்சாட்டிற்கு ஆளானாலும் குறை கூறியோரின் ஆலோசனைகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்வதற்கியலாது எனக் கூறினார். பல இனக்குழுக்களையும் பல வகுப்புகளையும் கொண்ட ஒரு சமுதாயத்தில் எண்ணிலடங்கா மாறிகள் (Variables) இருக்குமாதலால் அவை அனைத்தையும் ஒன்றுவிடாமல் வகைப்படுத்தி ஆராய்வது எளிதல்ல எனக்கூறினார்.

## 12.8. பிராய்டின் அணுகுமுறைகள்

பண்பாடும் ஆளுமையும் பற்றிய தொடக்கக்கால ஆய்வுகள், முதிர்ச்சியுற்ற மனிதனின் ஆளுமை அமைப்புகள் எவ்வாறு இளம்பருவத்திலிருந்து மாற்றம் பெற்று வருகிறது என்பதை அறிவதாக அமைந்தன. இந்த ஆய்வுகளுக்குக் குழந்தைகளின் சமுதாயவயமாக்க முறையை (socialization) அடிப்படையாக எடுத்துக் கொண்டாலும் கற்றல் கொள்கை (learning theory), வாட்சனின் (Watson) நடத்தைக் கொள்கை (behavior theory), முழுமை உளவியல் (gestalt psychology), பிராய்டின் கருத்துகளில் சில, குழந்தை உளவியல் முதலானவற்றையே பெரும் பான்மையாகச் சார்ந்தனர். சுருக்கமாகக் கூறினால் பிராய்டின் கொள்கைப்படி, சில உளப் பண்புகளும் பதில் வினைகளும் (responses) உள்ளார்ந்ததாகவும், நிலையானதாகவும், உலகளாவியதாகவும் காணப்படும். அவ்வாறே உளம்சார் இயக்கங்கள் (psychological mechanisms), உளத்திறன் (capacities), குறியீடு சார்ந்த பண்புகள் (symbolism) முதலான உளக்கூறுகள் அனைத்து மக்களுக்கும்

பொதுவானவை. ஒவ்வொருவரின் ஆளுமையிலும் நனவிலி உந்துதல்கள் (unconscious forces) உள்ளன. அவை உலகளாவியது. ஆதில் 'இத்'(id) 'உயர் தன்முனைப்பு' (super-ego) ஆகிய இரண்டும் செயல்படுகின்றன. 'இத்' என்பது வெளியேறத் துடிக்கும் ஆற்றல் மிக்க இயல்பூக்கங்களையும் அடக்கி வைக்கப்பட்டுள்ள இச்சைகளையும் கொண்டுள்ள நனவிலி நிலை அல்லது அடிமனம் ஆகும். உயர்தன் முனைப்பு என்பது தனிமனிதரின் நனவுநிலை அல்லது பண்பாட்டால் இயக்கப்படும் மதிப்புகளை உணரும் நிலை. அதோடு இது 'இத்' நிலையைக் கட்டுப்படுத்தும் தன்மையதுமாகும். தன்முனைப்பு (ego)என்பது 'இத்' யையும் உயர்தன் முனைப்பையும் இணைக்கும் ஒருவரின் நனவுநிலை, பிராய்டின் கொள்கைப்படி மேலும் சில உளம்சார் இயக்கங்களை அனைத்து மக்களும் கொண்டுள்ளனர். அவை : அடக்கி வைக்கப்படும் பண்புகள், புறத்தெறிவு (projection), இயல்புணர்ச்சிகள் நிறை வெய்திய நிலை (sublimation) முதலியன. இவை உலகளாவிய பண்பாகக் காணப்படுகின்றன.

பிராய்டின் அணுகுமுறையிலிருந்து சற்று விலகி மீடு, பெனிடிக்ட் ஆகிய இருவரும் இவர்களின் கொள்கைக் குழுவினரும் நடத்தை முறையின் மீது பண்பாடு ஏற்படுத்தும் தாக்கம் பற்றி விளக்கிக் கூற முற்பட்டனர். ஆனால் பிராய்டின் கொள்கையாளர் உலகளாவிய மனித உளச் சேர்மத்திலிருந்தும் (mental endowment) உள அமைப்பிலிருந்தும் தோன்றுபவையே நடத்தை முறைகள் என்றும், சமுதாயவயமாக்க முறைகளின் போது ஒரு குழந்தை எந்தெந்நத நடைமுறைகளோடு செயல்பட வேண்டியுள்ளதோ அதைப் பொறுத்தே அக்குழந்தையின் பண்புகள் அமைகின்றன என்றும் நம்பினர்.

19-ஆம் நூற்றாண்டுக் காலத்திய வியன்னா நாட்டு நோயாளிகளை ஆராய்ந்ததன் மூலம் பிராய்டு உளப்பகுபாய்வுக் கொள்கையை உருவாக்கினார். பிராண்டின் கொள்கைகளைப் பயன்படுத்தி, திணைக்குடிகளை ஆராய்வதற்கு மானிடவியலார் பல ஆண்டுகளாக விரும்பவில்லை. பிராய்டு எழுதிய 'குலக்குறியும் விலக்கும்' (Totem and Taboo, 1938)நூலில் மானிடவியல் செய்திகளைக் கொண்டு பொருள்படுத்திக் காட்டிய முறையையும் மானிடவியலார் பலர் ஒதுக்கிவிட்டனர்; பலர் குறைகண்டனர்.

ஈடிபஸ் சிக்கல் (odeipus complex) அதன் தொன்மை நிலையில் ஓர் உலகளாவிய பண்பாகக் காணப்படவில்லை என்று பிராய்டு கூறுவதாக மாலினோஸ்கி நம்பினார். உளப் பகுப்பாய்வு (psychoanalysis) முறையில் தேர்ச்சி பெற்ற கீசா ரோகீம் என்னும் ஆய்வாளர் மாலினோஸ்கியின் கூற்று தவறானது என எண்ணினார். இவரது கருத்துப்படி, பிராய்டின் கொள்கை நிலையானது என்றும், பரந்த நிலையில் உண்மையைக் காட்டுவதாக உள்ளது என்றும் அவரது கொள்கை நிலையைக் குறை கூறுவோர் தங்கள் சொந்த வாழ்வில்

ஈடிபஸ் சிக்கலுடன் தொடர்புடையவர்களாய் இருக்கக்கூடும் என்றும் கூறினார்.

குறிப்பு

ஒரு சமுதாயத்தின் "அடிப்படை ஆளுமை அமைப்புகளைப் (basic personality structure) பகுத்தாய்தல் என்னும் முறையை ஆப்ராம் கார்டினர் என்பவர் ரால்ஃப் லிண்டன், கோரா, தூபாய்ஸ் ஆகிய இரு மானிடவியலாரின் உதவியுடன் உருவாக்கினார். இவர் பிராய்டின் கொள்கைகளை மானிடவியலில் பயன்படுத்தி அதன்மூலம் பண்பாட்டில் காணப்படும் உளவியற் கூறுகளை வெளிப்படுத்த முயன்றார். முழுமையான இனக்குழுவியல் தரவுகள் மூலம் ஒரு சமுதாயத்தின் பொதுவான ஆளுமை அமைப்பினைக் காட்டமுடியும் என்று நம்பியயதால் பல இனக்குழுவியல் தரவுகளைக் கொண்ட களப்பணி ஆய்வுகளை இவர் தேர்ந்தெடுத்துக்கொண்டார். கார்டினரின் முடிவுகளை மானிடவியலார் பலர் அவரவர் களப்பணியில் மேற்கொண்ட கருத்தறி சோதனைகள் (projective tests), மைத்தடச் சோதனைகள் (Ink – blot tests) முடிவுகளுடன் சோதித்துப் பார்த்தனர். அதோடு அவரவர் ஆய்வுசெய்த குழுவிலுள்ள வயது வந்த மக்களின் ஆளுமையைத் தம் சொந்தக் கருத்துக்கள் மூலம் மதிப்பிட்டுப் பின்னர் அதனைக் கார்டினரின் முடிவுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தனர். இவ்வகையான ஆய்வுகளும் பசிபிக் தீவில் வாழும் அலோர் (Alor) மக்களைப் பற்றி கோரா தூபாய்ஸ் மேற்கொண்ட ஆய்வும் முதன்மையானவை. (Cora Dubois, *The People of Alro* (Minneapolis : University of Minnesota Press, 1944).

கார்டினர் வேறு வகையிலும் ஆய்வு செய்ய இயலுமென நம்பினார். ஒரு சமுதாய அமைப்பில் இரு நிறுவனங்களை உற்றுநோக்கினால் அச்சமுதாயத்தின் "அடிப்படை ஆளுமையினை" அறிய முடியுமெனக் கூறினார் கார்டினர். (A.Kardinar, "The Concept of Basic Personality Structure as an Operation tool in the Social Sciences", in R.Lintoned, *The Sceinece of Man in World Crisis* New York : Columbia University Press, pp.107-122) ஒன்று : குழந்தை வளர்ப்பு முறைகள் (கார்டினர் இதனை, முதன்மை நிறுவனங்கள் எனக் குறிப்பிடுவார்). மற்றொன்று : இரண்டாம் நிறுவனங்கள் இதில் அரசியல், சமயம். தொன்மம் முதலின அடங்கும்), அலோர் மக்களிடையே மேற்கொள்ளப்பட்ட கருத்தறி சோதனைகள், ரோஷாக் சோதனைகள் (Rorschach tests), மைத்தடச் சோதனைகள் (ink blot tests) மூலம் பெறப்பட்ட தரவுகளை எமில் ஓபர்ஹோல்சர் என்னும் வல்லுநர் ஆராய்ந்தார். இவருக்குப் பின்னர் பல வல்லுநர்கள் ஒரே காலக் கட்டத்தில் ஆய்வுகளை மேற்கொண்ட போதிலும் தரவுகளைப் பகுத்தாயும்போது மற்றவர்கள் எவ்வித முடிவுகளைக் காண்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளாமல் தனித்தனியாக ஆராய்நதனர். மானிடவியலாரும் ஈடுபட்ட இவ்வகை ஆய்வுகளில் மிகவும் தொடர்புடைய முடிவுகளையே அனைவரும் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் ஒரே வகையான கருத்தறி சோதனை முறையைப்

*Self-Instructional Material*

பண்பாட்டிடை நிலையில் பயன்படுத்துவது எந்த அளவிற்குப் பொருத்தமானது என்ற கருத்திற்கு விடைகாண முடியாத நிலையே ஏற்பட்டது.

மக்களின் கருத்தினை அறியும் சோதனைகளான உரோஷாக் சோதனை, பொருள் இணைத்தறி சோதனை (TAT) முதலான பிற சோதனைகள் அனைத்திற்கும் பின்னணிக் கொள்கையாக அமைவது சோதனைக்கு உட்படுவோரின் ஆழ்மனதில் உள்ள விருப்ப உணர்வுகளையும் மனப்போக்கையும் நடத்தை முறையையும் வெளிக்கொண்டு வருவதாகும். அதோடு இச்சொதனைகளின்போது குறிப்பிட்ட சில கருத்துகளைத் தகவலாளி விரிவாக விவரிக்கும் முறையின் மூலம் அதைப் பற்றி என்னென்ன புரிந்துகொண்டுள்ளார் என்பதும், எவ்வாறு புரிந்து கொண்டுள்ளார் என்பதும் தெளிவாக வெளிப்படும். கருத்தறி சோதனைகளின் பயன்பாடு 1950-களில் அதன் உச்ச நிலையை எட்டியது. அதன்பின்னர் மெல்ல மெல்ல அதன் பயன்தன்மை குறைந்துகொண்டே வந்தது. இவ்வகைச் சோதனைகளை மிகவும் நெறிப்படுத்திய முறையில் கையாண்டால் பின்வரும் சில வினாக்களுக்குச் சிறந்த விடைகளைக் காணமுடியுமென ஆய்வாளர்கள் நம்பினர். அவை 1. ஒரு சமுதாயத்திற்குள் அடிக்கடி நிகழும் துலங்கல்கள் (responses)என்ன? 2. எது இயல்பானது (typical), எது முரண்பட்டது? (deviant), 3. ஒரு பண்பாட்டிற்குள் உள்ள பலதரப்பட்ட ஆளுமை முறைகள் எவ்வாறுள்ளது? முதலியன. இருப்பினும் இவ்வகையான சோதனைகள் பண்பாட்டிடை நிலையில் பெருமளவில் நிகழ்த்தப்பட்ட பின்னரே ஒப்பீட்டுக் கருத்துக்களைக் கூறமுடியும்.

குறிப்பு

## 12.9. தொகுத்துக் காண்போம்:

நடத்தைமுறை சார்ந்த ஆய்வுகளும் உளவியல் சார்ந்த ஆய்வுகளும் பெருகின. இவ்வகை ஆய்வுகளை மேற்கொண்டவர்களுள் எட்வர்டு சப்பிர், ரூத் பெனிடிக்ட், மார்கரட் மீடு, ஆப்ரகாம் கார்டினர், கோரா தூபாய்ஸ், கீசாரோகீம் முதலானோரின் பணிகளை மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

பண்பாடு தனிமனித நடத்தையின் அடிப்படையிலும் கட்டமைக்கப்படும் என்ற கருத்தை மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

## 12.10. சோதித்தறியும் வினாக்கள்

உளளார்ந்த பண்பாடும் வெளிப்படையான பண்பாடும் - விளக்குக

பொருள்சார் பண்பாட்டிற்கும் பொருள்சாராப் பண்பாட்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி.

குறிப்பு

## 12.11. பயிற்சி வினாக்கள்

பண்பாடு ஒரு நடத்தைசார் முறை என்பதற்கான சான்றாதாரங்களை எடுத்துரைக்க

ஆளுமையின் வகைகளைப் பற்றி மானிடவியலாளர் முன்வைக்கும் கருத்துக்கள் யாவை

## 12.12. மேலும் பயில்வதற்கான நூல்

பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

## கூறு-13

# தமிழகப் பழங்குடியின் பண்பாட்டு மாற்றம் - இனக்குழு – சாதிகள் - சாதிக்கொள்கைகள்

குறிப்பு

## 13.1. அறிமுகம்

தமிழகத்தில் பழங்குடியினர் என அழைக்கப்படுபவர்களைப் பற்றியும், அவர்களுடைய தனித்த பண்பாட்டு மாற்றங்களையும், இனக்குழு சாதிகள், சாதிக்கொள்கைகள் பற்றியும் இப்பகுதியில் அறிந்து கொள்ளலாம்.

## 13.2. குறிக்கோள்கள்

பழங்குடி என்னும் தொன்மை மக்களைப் பற்றியும், அவர்கள் உலகளாவிய நிலையில் எத்தகைய வாழ்வியலைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார்கள் என்பதையும் மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

பழங்குடி மக்களுக்கிடையேயான சாதிகள், சாதிக்கொள்கைகள், இனக்குழுச் சாதிகள் என்னென்ன என்பதையும் மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

## 13.3. பழங்குடி அமைப்பு

இன்றைக்கு ஏறத்தாழ 9,000 ஆண்டுகளுக்கு முன்னர்க் கூட்ட அமைப்பிலிருந்து சற்று மாறுபட்ட 'பழங்குடி அமைப்பு' (tribal organization) என்னும் சமுதாய முறை தோன்றியதாகக் கீழ்த்திசை நாடுகளில் கிடைத்த தொல்லியல் விவரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வகை முறை பெரு (peru) பகுதியில் 5,000 ஆண்டுகளுக்கு முன்னரும், இடைக்கால அமெரிக்காவில் 3,300 ஆண்டுகளுக்கு முன்னரும் தோன்றியதாக வரலாறு தெரிவிக்கின்றது.

பழங்குடியமைப்பானது குலக்குழு அமைப்பைக் காட்டிலும் பெரியது. இதில் ஒரு பொதுவான குடிவழியைக் கொண்ட பல குடும்பங்கள் அல்லது குலங்கள் (clans), கால்வழிகள் (lineages) போன்ற உறவுக் குழுக்கள் இடம்பெற்றன. தொடக்கத்தில் ஒவ்வோர் உறவுக் கூட்டமும் நிலத்தைப் பொதுவாகக் கொண்டிருந்தது. இவர்கள் நிலைத்தையே நம்பி வாழ முற்பட்டதால் ஒவ்வொரு குழுவும் நிலப்பகுதியை வரையறுத்துக் கொண்டது. அதனால் வழிவழியாக வரும் குடிவழியும் அவரவருக்குரிய நிலமும் சமுதாய வாழ்வில் முக்கிய இடம் பெற்றன. இதற்கான சான்றுகள் கீழ்த்திசைக் கிராமங்களில் தொல்லியல் ஆய்வு செய்தபோது கிடைத்ததாகவும், ஒவ்வொரு குடிவழியைச் சேர்ந்த வீடுகளின் கீழ்த் தலைமுறை வாரியாக மண்டையோடுகள் வரிசையாகக் கிடைத்ததாகவும் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

குறிப்பு

பழங்குடிச் சமுதாய அமைப்பில் தரநிலைகளோ படிநிலைகளோ இல்லை. தகுதி, மதிப்பு மட்டுமே சில தனியாட்களிடம் வேறுபடுகின்றன. இத்தகுதியும் மதிப்பும் கூடத் தொழிலளவில் ஏற்படுவதில்லை. அவரவர் கொண்டுள்ள திறமையால் மட்டுமே ஏற்படுகிறது அனைவரும் ஒரே வகையான தொழிலைச் செய்வர். ஒருவன் சிறந்த வேட்டைக்காரனாக இருக்கலாம். அதற்காக அவன் மதிக்கப்படுவான். அப்பண்பு மரபுவழி செல்வதன்று. சிறந்த வேட்டைக்காரனுக்குப் பிறக்கும் மக்கள் எதிர்மாறாகவும் இருப்பதற்கு வாய்ப்புண்டு. ஆகவே மதிப்பு என்பது சமமின்மைக்கு எந்த வகையிலும் வழிகோலுவதில்லை. இந்நிலையில் இவர்களிடம் வேறுபாடு சிலவகையில் மட்டுமே நிலவுகிறது. அவை வயது, பால் ஆகியவற்றைப் பொறுத்து அமையும். வயது, பால் ஆகிய வேறுபாடுகள் தொழிற் பகுப்பிலும் பிற சமூகப் பொருளாதாரச் செயல்கள் செய்வதிலும் மட்டுமே வேறுபாட்டை ஏற்படுத்தும்.

மாந்தரீகன் (shaman), சமயச் சடங்குகள் செய்வோர் ஆகியோர்கூட மந்திரம், சடங்குகள் செய்யும் காலங்களில் மட்டுமே தனித்தன்மை பெற்றவர்களாகக் கருதப்படுவர். ஏனைய காலங்களில் அவர்களும் மற்றவர்களைப் போன்று வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், வேளாண் பணியில் ஈடுபடுதல் போன்ற பல்வேறு பணிகளைச் செய்வர். தலைமை முறை (leadership)கூடச் சிக்கல்கள் ஏற்படும் காலங்களில் மட்டுமே செயற்படுகிறது. இதனை ஒரு நிலையான அமைப்பாக ஏற்படுத்தி அதன் பொறுப்புகளைக் கவனிக்கும் பொருட்டுச் சிலர் பொருளாதாரப் பணிகளைச் செய்வதிலிருந்து ஒதுங்கிவிடுவதில்லை. அதனால் எந்த வகையிலும் ஒரு பிரிவினர் மற்ற பிரிவினர் மீது ஆதாயம் தேடும் வகையில் செயற்படுவது கிடையாது. வர்க்க அமைப்பில்லா இவ்வகைப் போக்கிற்குக் காரணம் செய்யும் தொழிலில் விரிவு ஏற்படாததேயாகும். குறிப்பிட்ட சில தொழில்களை மட்டுமே அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் நிலவுகிறது. பழங்குடி அமைப்புடைய சமத்துவச் சமுதாயத்தினர் எளிய தொழில் நுட்பத்தைக் கொண்டு இயற்கையின் ஆதாரங்களை நம்பி வாழ்வதால் இவர்கள் பெரும்பாலும் குறைவான எண்ணிக்கையுடையவர்களாக இருக்கின்றார்கள்.

மத்திய ஆப்பிரிக்காவில் வாழும் இம்புத்திக் குள்ளர்கள் (Mbuti pygmies) சமத்துவச் சமுதாயத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாவர். சடங்குகள், வேட்டை, உறவுமுறை போன்ற எந்த ஒரு நிலையிலும் அவர்களிடம் சமமின்மையோ தரப்பிரிவுகளோ இல்லை. அவர்களின் வேட்டைக் குழுக்களுக்குத் தலைவர்கள் இல்லை. வேட்டைப் பொருள்களும் பிற உணவுப் பொருள்களும் அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. இவ்வகைப் பண்பே சமத்துவச் சமுதாயத்தின் சிறப்புப் பண்பு என மானிடவியலார் சுட்டிக்காட்டுவர். சமத்துவச் சமுதாயம் பகிர்ந்து கொள்வதை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறையைக் கொண்டது. இது சமநிலையின்மையை ஒதுக்கிவிடுகிறது ; உறவுப் பிணைப்பை வலுப்படுத்துகிறது ; 'நாம்' என்ற உணர்வை

*Self-Instructional Material*

மேலோங்கச் செய்கிறது. இவ்வகை உறவு வர்க்கச் சமுதாயங்களில் இல்லை என்பது இங்கு எண்ணிப் பார்க்க வேண்டியதாகிறது.

குறிப்பு

ஆப்பிரிக்கப் பழங்குடிகளுள் ஒன்றான குங் புஷ்மன் (Dung Bushmen) சமுதாயம் ஓரளவு எளிமையற்ற சமூக அமைப்பினைக் கொண்டது. இவர்களிடையே உள்ள ஒவ்வொரு குழுவும் ஒரு தலைவனைக் கொண்டுள்ளது. ஆனால், தலைவர்கள் அதிகார முறை கொண்டவர்களல்லர். மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தும் ஒரு பொது மனிதராக மட்டுமே அவர் மதிக்கப்படுகிறார். ஒரு வெளியார் புஷ்மன் பகுதியில் உள்ள தண்ணீர்க் குழியில் (Water hole) நீர் எடுக்க வேண்டுமாயின் தலைவனின் அனுமதி பெற வேண்டும். தலைவனும் மறுப்பதில்லை. அவ்வாறே தலைவர் பதவியானது வேட்டைக் குழுவுக்குத் தலைமையேற்று நிருவகிக்கும் பொறுப்பு பெற்றதுமாகாது. வேட்டைக்குச் செல்வோரே அனைத்தையும் கவனித்துக் கொள்வர்.

சில பழங்குடிச் சமுதாயங்களில் உள்ள வயது அடிப்படைக் குழுக்கள (age – sets) சமுதாயத்தில் படிநிலையமைப்பை ஏற்படுத்துகின்றன என்று எண்ண முடியாது. இளையோர் குழு முதல் முதியோர் குழு வரை ஒவ்வொரு குறிப்பிட்ட வயதினரும் பல குழுக்களாகச் செயற்பட்டு அந்தந்த வயதிற்கேற்பச் சமுதாயப் பொருளாதாரப் பணிகளைக் கவனிக்கின்றனர்.

இன்று சில பழங்குடிச் சமுதாயங்கள் முடியாட்சித் தன்மையுடைய தலைமை முறையையும் (chiefdoms), அரசுகளையும் (state) கொண்டுள்ளனவாதலால் அவை எவ்வாறு சமத்துவச் சமுதாய முறையில் அடங்கும் என எண்ண வாய்ப்புண்டு. அவ்வகைச் சமுதாயங்கள் பழங்குடிச் சமுதாயத்திற்கோ வர்க்கச் சமுதாயத்திற்கோ மாறும் நிலையை எட்டியுள்ளதாகக் கொள்ள வேண்டும். சமுதாயப் படிமலர்ச்சியில் அதன் வளர்ச்சி நிலைகளை இணைக்கும் அல்லது அதன் அவ்வாறான இணைப்பு நிலையைக் குறிப்பனவாக மேற்கூறிய எடுத்துக் காட்டைக் கொள்ள வேண்டும்.

## 13.4.'பழங்குடி'– விளக்கங்கள்

மானிடவியலில் பெருவழக்காகப் பயன்படுத்தப்படும் 'tribe' என்னும் சொல் இலத்தீன் மொழியில் 'மூன்றில் ஒன்று' (one third) எனப் பொருள்படும். அதாவது, உரோம் நகரை மூவர் ஒன்று கூடி நிறுவினர் என்பதும் அதில் ஒருவரைக் குறிக்கப் 'பழங்குடி' (tribe) என்னும் சொல் வந்ததென்பதும் ஒரு வழக்கு. பழங்குடி என்னும் பொருளுடைய சொல் முதன் முதலில் எபிரேயர்களைக் குறிப்பிடப் பயன்பட்டது. எபிரேயர்கள் கி.மு.1000 ஆண்டு வரை கட்டுக்கோப்பற்ற எளிய நிலையில் 12 குழுக்களாக வாழ்ந்தனர். ஒவ்வொரு குழுவும் தங்கள் குடிவழியை ஜேக்கபின் (Jacob) 12 புதல்வர்களோடு தொடர்புபடுத்திக் கொண்டது. ஜேக்கப் அவர்கள் அனைவருக்கும் பொது மூதாதையராக விளங்கினான்.

**குறிப்பு**

அதன்பின் அக்குழுக்கள் இஸ்ரேலின் 12 பழங்குடிகள் எனவும் கூறப்பட்டன. அதன்பின்னரே ‘பழங்குடி’ என்னும் சொல் பொதுவான மூதாதையாரிடமிருந்து தோன்றிய பல குடும்பங்களைக் கொண்ட எந்த ஒரு குழுவையும் குறிக்கும் சொல்லாயிற்று.

பழங்குடி என்னும் சொல் தொடக்கக் காலங்களில் அரசியல் குழுக்கள் அல்லது பிரிவுகள் என்னும் பொருளையும் கொண்டிருந்தது. பண்டைய ரோம் அரசில் 35 பழங்குடி உயர்குலக் குழுக்கள் (patrician orders)ஒவ்வொரு வட்டாரத்தை ஆளும் உரிமையைப் பெற்றிருந்தன. ரோமானியப் பகுதியுடன் ஒன்றியிருந்த அவர்கள், கி.மு.241-க்குப் பின்னர் முடியாட்சி ஏற்பட்ட காலத்தில்கூட அரசியல் ஆலோசகர்கள் குழுவில் இடம் பெற்றிருந்தனர். அதன்பின்னர் உரோமானியர் கைப்பற்றிய பண்டைய பிரஞ்சு நாட்டின் (Galic) சில குழுவினரையும், ஜெருமனி நாட்டின் சில குழுவினரையும் இச்சொல்லைக் கொண்டே குறிப்பிட்டனர். அந்த ரோமானிய, ஜெருமானியப் பழங்குடிகள் அனைவரும், தந்தைவழிக் குழுவினராகவும், பொதுவான பெயரையும் நிலப்பரப்பையும் தலைவனையும் கொண்டவராகவும் இருந்தனர் என மானிடவியலார் குறிப்பிடுகின்றனர்.

பல ஐரோப்பிய நாட்டினர் கி.பி.1400 காலகட்டத்தில் ஆப்பிரிக்கா, ஆசியா, வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய பகுதிகளில் குடியேற்ற அரசுகளை ஏற்படுத்தினர். அப்பகுதிகளில் வாழ்ந்த மக்களை ஐரோப்பியர் அடிக்கடி ‘பழங்குடிகள்’ என்றே குறிப்பிட்டனர். சமுதாய அமைப்பு, அரசியலமைப்பு, சமயம் முதலான அனைத்திலும் மிகுந்த வேறுபாடுகளை பெற்றிருந்த அவர்களின் வாழ்க்கை முறையை வெள்ளையர்கள் காட்டுமிராண்டித்தனமானது என எண்ணினர். சில மேம்பட்ட குழுவினரையும் பழங்குடி என்றே ஐரோப்பியர்கள், குறிப்பிட்டனர். அதற்குக் காரணம் ஒருவரோடு ஒருவர் தொடர்பற்றுத் தனித்தனியாக வாழ்ந்ததால் அவர்கள் அனைவரையும் ஒரே பெயரில் குறிப்பிட வேண்டுமென்று ஐரோப்பியர்கள் விரும்பியதேயாகும்.

குடியேற்றப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தொழில்நுட்பத்தில் ஐரோப்பியர்களைக் காட்டிலும் குறைந்தவர்களாக இருந்ததால் அவர்களைத் தொன்மையானவர்கள் என்றும் கூறினர். அது முதற்கொண்டு காலத்தினூடே பழங்குடி என்னும் சொல் ‘தொன்மையான குழு’ (primitive group) என்ற பரந்த பொருளுடைய சொல்லாக மாற்றம் பெறுவதற்கு ஆங்கிலேயர்களே காரணமாவர்.

இவ்வகைக் குழப்பத்திற்கிடையில் மானிடவியலார் பழங்குடி பற்றி ஒரு தெளிவான வரையறையை வகுத்துக் கொண்டு சமுதாய முறைகளைப் பகுத்து ஆராயத் தொடங்கினர்.

‘பழங்குடி’ அமைப்பிற்கென்று சில தனித்தன்மைகள் உள்ளன. அவற்றின் அடிப்படையிலேயே ஒரு குடியைப் பழங்குடி எனக் குறிப்பிட வேண்டும் என மானிடவியலார் உறுதியாகக் கூற முற்பட்டனர். ஒரு

குறிப்பு

பழங்குடியைச் சேர்ந்த அனைவரும் குறிப்பிட்ட நிலப் பகுதிக்குள் வாழ்வர். அந்த நிலப்பகுதி துண்டு துண்டாகச் சிதறிக் காணப்படாமல் ஒரு தொடர்ச்சியைக் கொண்டிருக்கும் அந்நிலப் பகுதிக்குள வாழும் அனைவரும் ஒருபொதுவான மூதாதையரிடமிருந்து தோன்றியவர்கள் என்று எண்ணுவர். அதனால் அனைவரும் பொதுவான பெயரைக் கொண்டிருப்பர். அனைவரும் ஒரே மொழியைப் பேசுவர்; பொதுவான பண்பாட்டைக் கொண்டவர்களாய் இருப்பர். அதனால் சமுதாய, பொருளதார, சமய, அரசியல் போன்ற ஒவ்வொரு பண்பாட்டு நிறுவனமும் அனைவருக்கும் பொதுவானதாக இருக்கும். பழங்குடி என்னும் நிலையில் அனைவரும் அகமண (endogamy) முறையை கொண்டவர்கள். எனினும் சமுதாய அமைப்பில் பலபுறமணக் குழுக்களும் இடம்பெற்றிருக்கும். ஒரு பழங்குடியைச் சேர்ந்த அனைவரும் ஓரினத்தவர் என்ற உணர்வும், 'நாம்' என்ற உணர்வு (we feeling) மிகுந்தவர்களாய் இருப்பர். அதனால் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் கட்டுப்பாடும் கொண்டவர்களாய் திகழ்வர்.

பழங்குடி பற்றிய மேற்கூறிய கருத்துகளுடன் அவற்றோடு தொடர்புடைய, முது பழங்குடி (aboriginal tribe) ஆதிக்குடி அல்லது தொல் பழங்குடி (primitive tribe), தொன்மைச் சமுதாயம் (primitive society), எழுத்தறிவிற்கு முந்தைய சமுதாயம் (preliterate society) ஆகிய சொற்களின் வரையறைகளையும் உடன்காணுதல் தெளிவான கருத்திற்கு வழிகோலும்.

பழங்குடி என்பதை மஜூதார் என்ற மானிடவியல் அறிஞர் பின்வருமாறு வரையறை செய்கிறார்: "பொதுவான பெயரையும், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் தன்மையையும், ஒரே மொழியைப் பேசும் இயல்பையும், திருமணம், செய்யும் தொழில் அல்லது பணியில் சில விலங்குகளைக் கொண்டு விளங்கும் தன்மையையும் உடையவராய் பரிமாறிக் கொண்டும் வாழும் பல குடும்பங்களின் தொகுதியே பழங்குடியாகும். (D.N.Majumdar, *Races and Cultures of India* (Bombay : Asia Publishing House, 1958) p.355).

பழங்குடியின் அனைத்துப் பண்புகளையும் ஏற்கும் ஒரு பழங்குடியினர், மிகத் தொடக்கக் காலம் முதல், அவ்விடத்திலேயே காணப்படின் அப்பழங்குடி 'முதுபழங்குடி' என்று கூறப்படும். இவர்கள் வாழும் நிலப்பரப்பிற்கு முதன்முதலில் குடியேறியவர்களாக இருப்பதால் இவர்களின் பழைமை பல நூற்றாண்டுகளைக் குறிப்பிடும்படியாக இருக்கும். இதனால் இவர்கள் மண்ணின் மைந்தர்கள் (autochlthon) என்றும் கூறப்படுவர். ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னரே இடம் பெயர்ந்து தங்கள் வாழிடத்தை அமைத்துக் கொண்டிருக்கும் பழங்குடியினர் 'தொல் பழங்குடியினர்' ஆவர். அதாவது, இப்பழங்குடியினர் தாம் வாழும் நிலப்பரப்பிலேயே தோன்றியவர்களாக இருக்கமாட்டார்கள். முதுபழங்குடியினர், தொல் பழங்குடியினர், பழங்குடியினர் ஆகியோர்

எழுத்தறிவு இவர்கள் ‘எழுத்தறிவிற்கு முந்தைய சமூகத்தினர்’ என்றும் சொல்லப்படுவர்.

குறிப்பு

மேலும், குற்றம் செய்வதை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்தவர்களைக் குற்றவாளிப் பழங்குடி (criminal tribe) எனவும், இத்தொழிலை விடுத்து வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள இன்றைய நிலையில் இவர்களை ‘முன்னால் குற்றவாளிப் பழங்குடி’ (ex – criminal tribe) எனவும், குற்றத்தொழிலிலிருந்து விடுபட்டவர்களைக் குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி (denotified tirbe) எனவும் குறிப்பிடுவர். இன்று பின்தங்கிய நிலையில் வாழும் பிற்பட்ட மக்களைத் தனியாகப் பிரித்து அவர்களுக்குத் தனிச் சலுகைகளையும் நல்வாழ்வுத் திட்டங்களையும் செயற்படுத்த இந்திய அரசியலார், நிருவாக வசதிக்காக வகைப்படுத்தும் பழங்குடிப் பிரிவினர் வரையறுக்கப்பட்டப் பழங்குடி (scheduled tribe) எனக் குறிப்பிட்டுள்ளனர்.

## 13.5. சொல் வழக்கில் உள்ள சிக்கல்கள் :

பொதுவழக்கில் ‘பழங்குடி’ என்னும் சொல் தொன்மை நிலையினையும், குன்றிய பண்பாட்டையும் கொண்டுள்ள மக்கள் குழுவைக் குறிக்கிறது. பொருத்தம் பெறாத கூற்றுகளை மிகைப்படுத்தியும், ஒரு குழுவினரின் சொந்தக் கருத்துகளைத் தேவைக்கு மேல் திணித்துக்கொண்டும் கூறப்படும். இந்த வழக்கைக் கைவிட்டு அல்லது குறைத்துக் கொண்டு, ‘பழங்குடிச் சமுதாயம்’ என மாற்றிக்கொள்ளலாம் என்பர் சில மானிடவியலறிஞர்கள். இம்மொழித் தொடர் தொன்மைச் சமுதாயம் (primitive society) எழுத்தறிவிற்கு முந்தைய சமுதாயம் (pre – literate society) போன்ற மொழித் தொடர்களுக்கு இணையாக இருக்குமென்பதே அதற்குக் காரணம் ஆகும். ஆனால், அதே நேரத்தில் ‘பழங்குடி’ என்னும் சொல்லைத் தட்டிக் கழிக்க இயலாத நிலையும் உள்ளது. இடம், மொழி, தோற்றம் ஆகியவற்றில் பொதுத்தன்மை பெற்றதும், தனிப்பட்ட வாழ்க்கை முறையைக் கொண்டதுமான மக்கள் குழுவைக் குறிப்பிடும் கலைச்சொல்லாக இச்சொல் மானிடவியலாரால் இன்று பயன்படுத்தப்படுகிறது.

இன்று பெரும்பான்மை ஆப்பிரிக்கர்களும் பழங்குடி என்னும் சொல்லானது. மதிப்பைக் குறைக்கும் சொல்லாக உள்ளது எனக் கருதுகின்றனர். ஆப்பிரிக்கரல்லாத பிற பழங்குடி மக்களும் இச்சொல்லின் பொருளைக் குறை கூறுகின்றனர். அவர்கள் கிராம, நகர மக்களிடமிருந்து தனித்து வாழ்வதால் தங்களைத் ‘தனிமைப்படுத்தப்பட்ட மக்கள்’ என்னும் பொருளில் குறிக்க வேண்டுமே தவிர பழங்குடி என்றோ, தொன்மை மக்கள் என்றோ கூறக்கூடாது என்பர். எடுத்துக்காட்டாக, மிகப் பெரும் இனக்குழுவான யொருபா (Yourba) மக்கள் சில வேளையில் பழங்குடி

என்றே வெளியாரால் கூறப்படுகின்றனர். அதனை யொபாவினர் விரும்புவதில்லை.

குறிப்பு

பழங்குடி என்னும் சொல், தகுதியைக் குறைக்கின்றது என்ற கூற்று ஒரு புறமிருக்கச் சில அமெரிக்க இந்தியப் பழங்குடிகள் தங்களைப் பழங்குடி என்ற தகுதியிலிருந்து அமெரிக்க அரசு மாற்றிவிட்டதால் தாங்கள் பல நிலைகளில் பாதிக்கப்பட்டுள்ளதாக எண்ணுகின்றனர். அதனால், அவர்கள் பழங்குடித் தகுதியை மீண்டும் பெற 1900-ஆம் ஆண்டியிலிருந்தே போராடி வருகின்றனர். அமெரிக்க அரசு தங்களிடம் செய்த உடன்பாட்டின்படி தேவையான சலுகைகளையும், உதவிகளையும், பாதுகாப்பையும் பெற வேண்டுமானால் ‘பழங்குடி’ என்ற தகுதியை மீண்டும் பெற்றால்தான் முடியும் என நம்புகின்றனர்; அதற்காகப் பேராடியும் வருகின்றனர். இதே வகையில் தமிழகத்தில் அண்மையில் நரிக்குறவர்கள் பழங்குடித் தகுதியைப் பெற முயற்சி செய்கின்றனர்.

மானிடவியலைப் பொறுத்தவரை ‘பழங்குடி’ என்னும் வழக்கு, 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து அதன் பொருளை ஓரளவு இழந்து வருகிறது எனலாம். சில மானிடவியலார் இச்சொல்லிற்கான பொருளை மிகத் துல்லியமாக வரையறை செய்ய இயலாததால் இந்தச் சொல்லை ஒதுக்கிவிட்டனர். வேறு சிலர் இச்சொல்லிற்குக் குடியேற்றக் காலத்தில் வெள்ளையர்கள் போர்த்திய மாயைப் பொருளை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். குறிப்பாக ஆப்பரிக்க வல்லுநர்கள் இச்சொல் தகுதியைக் குறைத்துக் காட்டுகிறதென்றும், சரியான பொருளைச் சுட்டவில்லை என்றும், வேற்றுமையுணர்வுடன் கூறப்பட்டதென்றும் கருதினர். அதனாலேயே மானிடவியலார் சிலர் ‘பழங்குடி’ என்னும் சொல்லிற்கு மாறாக இனக்குழு (ethnic group) என்னும் வழக்கைப் பரிந்துரை செய்தனர். இனக்குழு என்பதற்கான பொருள், பொதுவான மூதாதையரையும், மொழியையும். நிலப்பரப்பையும் ஒத்த பண்பாட்டையும், வரலாற்றையும் கொண்ட மக்கள் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. நவீனமயமாகும் நாடுகளில் ஒருவன் தன் உறவுக் கூட்டத்தைக் குறிப்பிடுவதைக் காட்டிலும் தன் ஊர், வாழுமிடம், தான் சார்ந்த கூட்டம் முதலான வழக்குகளையே விரும்பிப் பயன்படுத்துவதால் ‘இனக்குழு’ என்னும் சொல் பொருத்தமானது என்பர்.

‘இனக்குழு’ என்னும் சொல் வேறொரு பொருளை உணர்த்தவும் ஏற்பட்டது என்பதையும் இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும். முதல், இரண்டாம் உலகப் போர்களுக்கு முன்னரும் பின்னரும் ‘race’ (இனம்) என்னும் சொல் மனித குலத்திற்கு மிகப் பெரும் அழிவைத் தேடித்தருவதாக அமைந்தது. எப்போதுமில்லா அளவிற்கு நிறவேற்றுமைகளின் அடிப்படையில் இன உணர்வுகள் உச்சக்கட்டத்தையடைந்தன. இன ஒதுக்கல் கொள்கை (apartheid policy) மூலம் வெள்ளையர் அல்லாத இனத்தவர்கள், சமுதாய, பொருளாதார நிலைகள் முதற்கொண்டு பல வழிகளில்

குறிப்பு

வெள்ளையர்களால் கொடுமைப்படுத்தப்பட்டனர். இப்போக்கு மனித குலத்திற்கே பெரும் அச்சுறுத்தலாக அமைந்ததால் மனிதநேயத்தில் பற்றுடைய உலக அறிஞர்கள் அதனை எதிர்த்து அறைகூவல் விடுத்தனர். அதன் ஒரு பகுதியாக ஐக்கிய நாடுகள் சபை அவ்வறிஞர்களை அழைத்து ஒரு மாநாட்டை நடத்தியது. அந்த மாநாட்டின் அறிக்கையில் 6-ஆம் பத்தியில் ஒரு தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது பின்வருமாறு :

"National, religious, geographic. Linguistic and cultural groups do not necessarily with racial groups; and the cultural traits of such groups have not demonstrated genetic connection with racial traits. Because serious errors of this kind are habitually committed with the term 'race' is used in popular parlance, it would be better when speaking of races to drop the term 'race' altogether and sepal of "ethnic groups" (Quoted in Ashley Man's Most Dangerous Myth : *The Fallacy of Race* (London : Oxford University Press, 1974, P.435).

மேற்கூறிய தீர்மானியத்தின்மூலம் 'இனம்' என்னும் சொல்லுக்கு ஈடாக 'இனக்குழு' என்னும் சொல் வழக்கில் வரவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. அதன்மூலம் மக்கள் மத்தியில் ஒரு புதிய கருத்தாக்கமும் மனித நேய உணர்வும் வளர வேண்டும் என நம்பப்பட்டது. இச்சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்ற குழுவினரின் கருத்துகளையும், இச்சொல்லைப் பயன்படுத்தக கூடாதெனக் கூறியோரின் கருத்துகளையும் ஆஸ்லி மாண்டகுவின் நூலில் (1974) அறியலாம்.

ஆகவே மேற்கூறிய கருத்துக்களை இணைத்துப் பார்க்கும் போது ஒருபுறம் 'பழங்குடி' என்னும் எளிய சமுதாய நிலையை 'இனக்குழு' என்னும் நிலைக்கு உயர்த்தவும், 'இனம்' என்னும் பரந்த நிலையை 'இனக்குழு' என்னும் பொது நிலைக்குக் கொண்டுவரவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பது புலனாகும். மானிடவியலாரின் இம்முயற்சி, தனிப்பட்ட பண்புகளைப் கொண்ட எந்த ஒரு மக்கள் குழுவினரையும், அவர்களின் எளிய பண்பாட்டு நிலையையோ (பழங்குடி) நிறவேறுபாடுடைய பரந்த மக்களினத்தையோ (இனம்) கணக்கில் கொள்ளாமல் அனைவரையும் 'இனக்குழு' என்ற பொதுச் சொல் கொண்டு குறிப்பிடுவது என்ற இலக்கை மையமாகக் கொண்டதாகும். ஆனால், இம்முயற்சி பெரும் வெற்றியைத் தரவில்லை. இன்று மானிடவியலிலும்கூட 'பழங்குடி', 'இனம்' ஆகிய சொற்களின் பயன்பாடு தேவைப்படுகிறது. இச்சொற்கள் எந்த ஒரு பின்னணியையும் கொள்ளாமல் வெறும் கலைச் சொற்களாகவே பயன்படுகின்றன.

## 13.6. தமிழகப் பழங்குடியின் பண்பாட்டு மாற்றம்

சாதி என்பது சமுதாய அமைப்பில் இயங்கும் ஒரு தனிப்பட்ட குழுவைக் குறிக்கும். இக் குழுவில் இடம்பெறும் தகுதி பிறப்பால்

குறிப்பு

அமைகிறது. அதனால் ஒரு சாதியில் பிறந்தவர் வேறு சாதிக்கு மாற இயலாது; ஒன்றுக்கு மேற்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்று கூறிக்கொள்ளவும் இயலாது. அவ்வாறே ஒரு சாதியினர் வேற்றுச் சாதியினரை மணந்து கொள்ளுதலும் இயலாது. எனவே சாதி என்பது அகமண (endogamous) முறையைக் கொண்ட ஓர் அமைப்பாகும். பெரும்பாலும் ஒவ்வொரு சாதிக்குமெனச் செய்யும் தொழில்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன. சமுதாயத்தில் ஒவ்வொரு சாதிக்குமெனத் தனித் தகுதிநிலை நிருணயிக்கப்பட்டுப் பின் அனைத்துச் சாதிகளும் ஒரு படிநிலையில் உயர்ந்ததென்றும் அதற்கடுத்துள்ள சாதி தாழ்ந்ததென்றும் அதற்கடுத்தது மேலும் தாழ்ந்ததென்றும் படிநிலை அமைக்கப்பட்டது. இப்படி நிலையின்படி ஒவ்வொரு சாதியினரும் மற்றச் சாதியினரோடு எவ்வகையான செயலுறவு கொள்ள வேண்டுமென்பதும் ஒருவருக்கொருவர் எவ்வகையான இடைவினை புரிய வேண்டுமென்பதும் மரபுவழி வழக்கத்தால் மிகவும் உறுதியோடு செயற்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட சாதியினர் மற்றச் சாதியினரிடமிருந்து பருகுதற்கு நீரையோ உண்ணுதற்கு உணவையோ பெற மாட்டார்கள். சமய நிகழ்ச்சிகளிலும் சடங்குமுறைகளிலும் இறைப்பணிகளிலும் இவ்வாறான வேறுபாடுகள் நிலவுகின்றன. இதற்குக் காரணம் மேல் சாதியினர் ‘தூய்மை’ (purity), ‘தீட்டு’ (pollution) ஆகிய கோட்பாடுகளை (தடுப்புச் சுவர்களை) ஏற்படுத்திக் கொண்டு அதன்மூலம் சமுதாயப் பொருளாதார ஆதாயத்தை உறுதியாக நிலைப்படுத்திக் கொள்ள முயன்றதேயாகும்.

சாதி முறை என்பது இந்தியச் சமுதாயத்தில் மட்டும் காணப்படுவதன்று. பல உலக சமுதாயங்களிலும் இம்முறை காணப்படுகின்றது. ஆனால், அது பல நிலைகளில் மாறுபட்டுள்ளது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

## 13.7. சாதிமுறையின் வகைகள்

சாதி முறையின் தன்மைக்கேற்ப அதனை எளிய சாதிமுறை (simple caste system) என்றும், சிக்கல்வாய்ந்த கலப்புச் சாதிமுறை (complex caste system) என்றும், இருவகையாகப் பிரித்துக் கூறுவர் மானிடவியலார். எளிய சாதிமுறை என்பது இரண்டு அல்லது மூன்று சாதிகளைக் கொண்ட சமுதாய முறையாகும். சிக்கல்வாய்ந்த சாதிமுறையில் மிகுந்த எண்ணிக்கையுடைய சாதிகள் இடம்பெறும். முதல்வகைச் சாதிமுறையைச் சேர்ந்த சாதிகள் மேலும் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை தீண்டாமைச் சாதிகள் (pariah castes) (சாதிமுறைக்குச் சிறப்பு பெற்ற இந்தியச் சமுதாயத்தில் ‘பறையர்கள்’ தீண்டத் தகாதவர் என ஒதுக்கப் படுவதால் அவர்கள் பெயரையே பல மானிடவியலார் தீண்டத்தகாத சாதி வகைக்குப்பெயர் சூட்டியுள்ளனர். ஆனால் அப்பெயரைப் பயன்படுத்தாமல் அதன் உட்பொருள் வெளிப்படும் வகையில் வேறு மொழித்தொடர் இங்குக்

கையாளப்படுகிறது.) என்றும் இனக்குழுச் சாதிகள் (ethnic castes) என்றும் சொல்லப்படும் என்கிறார் பக்தவச்சல பாரதி (பண்பாட்டு மானிடவியல், ப.307).

குறிப்பு

## 13.8. தீண்டாமைச் சாதிகள்

சில சமுதாயங்களில் பெரும்பான்மை மக்கள்தொகை கொண்ட தேசிய மக்களினம் தவிர ஒன்று அல்லது இரண்டு மரபுவழி இனத்தவர். அவர்கள் செய்யும் தொழில்களால் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படுகின்றனர். அவர்கள் பெரும்பாலும் சக்கிலித் தொழில், கருமான் தொழில் போன்ற தொழில்களைச் செய்பவர்களாக உள்ளனர்.

வர்க்க அமைப்புடைய ஜப்பானியச் சமுதாயத்தில் ‘எட்டா’(Eta) எனப்படும் தீண்டாமைச் சாதி உள்ளது. இச்சாதியைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் உள்ள கறுப்பர்களைப் போலன்றி, ஜப்பானிய உயர் வர்க்க மக்களிடமிருந்து உருவத்தாலோ நிறவேறுபாட்டாலோ தனிப்பிரிவாக வேறுபடவில்லை. அவர்களைப் போன்ற உடலமைப்பையே பெற்றுள்ளனர். ஆயினும், கடந்த காலங்களில் 400,000க்கும் மேற்பட்ட எட்டாவினர் வாழுமிடங்களால் தனிமைப்படுத்தப்பட்டனர்; குடியுரிமை பெற மறுக்கப்பட்டனர்; தேசிய இனத்தோடு கலந்து வாழ இயலாமல் ஒதுக்கப்பட்டனர். இவர்கள் ஓர் அகமணக் குழுவாகச் சமுதாய அடுக்கமைப்பில் அடிநிலையில் வைக்கப்பட்டனர். இன்றும் இவர்கள் சக்கிலித் தொழில் செய்தும், இறந்த கால்நடைகளை அப்புறப்படுத்தும் பணியைச் செய்தும், கூடை வேய்ந்தும், கூலிவேலை செய்தும் மிகவும் இழிவான நிலையில் வாழ்ந்து வருகின்றனர். மக்கள் தொகையும் இன்று ஏறக்குறைய 3 மில்லியன் அளவிற்குப் பெருகியுள்ளது என்று காரோல் எம்பர் குறிப்பிடுகின்றார் (Carol R. Ember & Melvin Ember, *Anthropology*, *PP*. 268-69).

கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளுள் ஒன்றான சோமாலியாவில் பெரும்பான்மை மக்களினத்தவரிலிருந்து கருமான் தொழில் செய்வோர் தனியாகப் பிரிக்கப்பட்டுத் தனி அகமணக் குழுவாக வாழ்கின்றனர். (Adamson E. Hoebel & E.L. Frost, *Cultural and Social Anthropology* (New Delhi : Tata McGraw – Hill, 1976, p.277), பெரும்பான்மை மக்களினத்தவர் கொடுக்கும் இரும்பு வேலைகளை நம்பி வாழ்வதால் இவர்களின் நிலை மிகவும் கீழ்நிலையிலேயே உள்ளது. இவ்விரு சாதியினரும் சமுதாயத்தில் ஒன்று சேர முடியாத வகையில் இரு துருவ முனைகளில் உள்ளனர்.

## 13.9. இனக்குழுவும் - இனக்குழுச் சாதிகளும்

மத்திய ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியிலுள்ள ரிவாண்டா (Rwanda) நாட்டில் 1960களுக்கு முன் மூன்று சாதிகளையுடைய சமுதாய முறை இருந்தது. (இவ்வகை சாதிமுறையை விவரிக்கப் பயன்படுத்தும் எடுத்துக்காட்டுகள் இன்று இல்லாதவையாக உள்ளன. இவ்வாறான

எடுத்துக்காட்டுகளை இங்குப் பயன்படுத்துவதற்குக் காரணம் இவ்வகை முறை எவ்வாறு அந்தந்த இடங்களில் அற்றுப்போயிற்று என்பதைச் சுட்டிக்காட்டவேயாகும்.) இச்சாதி முறை முதலில் தேர்தலினாலும் பின்னர் 1959-60களில் நடந்த ஒரு புரட்சியினாலும் தூக்கியெறியப்பட்டது. 1960களுக்கு முன்னர் இம்மூன்று சாதியினரும் உடல்தோற்றத்தாலும் செய்யும் தொழிலாலும வேறுபட்டிருந்தனர். துட்சி (Tutsi) எனப்படும் ஆளும் சாதியினர் மிக உயரமாகவும் மெலிந்தும் இருந்தனர். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 15 விழுக்காட்டினராவர். இவர்கள் பெரும் நிலக்கிழார்கள். இவர்கள் சமுதாயத்தில் மிகவும் உயரிய தொழில் எனச் சொல்லப்பட்ட ஆயர் தொழிலைச் செய்து வந்தனர்.

துட்சியினருக்கு அடுத்த நிலையிலிருந்து ஹூட்டுச் (Hutu) சாதியினர் ஓரளவு உயரம் குறைந்தவர்களாகவும் பருமனாகவும் இருந்தனர். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 85 விழுக்காட்டினர்; குத்தகைக் காரர்களாக வேளாண் தொழிலைச் செய்து வந்தனர். நாட்டின் மொத்த உணவுத் தேவைக்கு உற்பத்தி செய்வோர் இவர்களே. மூன்றாவதும், சாதிப் படிநிலையில் கீழ்நிலையில் இருந்தவர்களுமான துவாவினர் (Twa) மொத்த மக்கள்தொகையில் 1 விழுக்காட்டிற்கும் குறைவானவர்கள். இவர்கள் குள்ளர்கள் (Pygmies) இனத்தைச் சேர்ந்தவர்கள்; காட்டுப் பகுதிகளில் வேட்டையாடியும் உணவு சேகரித்தும் வாழ்ந்து வந்தனர்.

இம்மூன்று சாதியினரும் வெவ்வேறு மொழிப் பிரிவைச் சேர்ந்தவர்களென்றும், இடர்பெயர்வாலும் நில ஆக்கிரமிப்பாலும் மூவரும் ஒன்று கூடினர் என்றும் கருதப்படுகிறது. பின்னர்ப் பொதுவான மொழியை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். வேளாண் தொழில் செய்து வந்த ஹூட்டுச் சாதியினர் அவர்களின் உழைப்பிற்கு ஈடான ஊதியம் கிடைக்க நடத்திய போராட்டத்தினால் ஆளும் துட்சிச் சாதியைச் சேர்ந்த அரசர்கள் நாட்டைவிட்டு விரட்டப்பட்டனர். அதன் பின்னர் வேளாண் சாதியினர் குடியரசு அமைப்புடைய அரசாங்கத்தை நிறுவினர். ஆயினும் காட்டுவாசிகளாக வாழும் துவாவினருள் பெரும்பாலோர் முழுக் குடியுரிமை பெற்றவர்களாக இல்லை. (Carol Ember & Melvin Ember, op.cit., pp.269-70)

ஆப்பிரிக்காவில் 19-ஆம் நூற்றாண்டில் உகாண்டாவில் அங்கோல் அரசர்களின் முடியாட்சிப் (Ankole kingdom) பகுதியில் நிலவிய சமுதாய முறை இனக்குழுச் சாதிகளுக்கு மற்றுமொரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இவர்கள் சமுதாயத்தில் இரண்டு இனக்குழச் சாதியினரும் நான்கு வர்க்கத்தினரும் (class) ஒன்றாக வாழ்ந்தனர். அங்கோலில் இரண்டு முக்கிய இனக்குழுச் சாதிகள் இருந்தன. புகிமா (Bahima) எனப்படுவோர் ஆயர்குடியினர். இவர்கள் ஹமிட்டிக் (Hamitic) இனத்தவர்; ஆளும் சாதியினர். இவர்கள் போரிடும் திறமையாலும் படைப்பலத்தாலும் ஆதிக்கச் சாதியாக விளங்கினர். பெய்ரு (Bairu) எனப்படும் மற்றொரு சாதியினர் பண்டு மொழி பேசுபவர்கள். இவர்கள்

தோட்டப்பயிர் செய்வோராவர். இவர்கள் விளைவிப்பனவற்றை பகிமாக்களிடம் கொடுத்துவிட வேண்டும். அவர்கள் மீண்டும் அவற்றை மறுபங்கீடு செய்வர்.

**குறிப்பு**

மகிமாக்களும் பெய்ருக்களும் திருமணம் செய்து கொள்ளமாட்டார்கள். ஆனால் பகிமாக்களில் சிலர் (குறிப்பாகத் தலைவர்கள்) இளம் பெய்ரு பெண்களைக் காமக்கிழத்திகளாக வைத்துக் கொள்வர். அதே வேளையில் பெய்ரு ஆடவர்கள் பகிமாப் பெண்களைக் காமகிழத்தியர்களாக வைத்துக் கொள்ள முடியாது. பெய்ருக்கள் மிகவும் தகுதி வாய்ந்த பணிகளிலும் அமர்த்தப்பட மாட்டார்கள். அவர்கள் அதிக அளவாக வரி வசூலிக்கும் மாவட்ட அலுவலராகப் (district tax collector) பணி புரிய முடியும். அதுவும் முகிமா (Muhima) என்பவரின் (நான்கு வர்க்கங்களில் ஒன்று) கீழ் மட்டுமே பணிபுரிய முடியும். முகிமாக்கள் பெய்ருக்கள் மீது எவ்வித செல்வாக்கையும் பயன்படுத்த முடியாது. அவர்கள் பெய்ரு பெண்களை மணந்துகொள்ளவோ காமக் கிழத்தியர்களாக வைத்துக் கொள்ளவோ இயலாது. பொருளாதார நிலையில் ஒரு முகிமா ஒரு பெய்ருவினை ஏமாற்றினால்கூட அதற்கான தண்டனையைப் பகிமாத் தலைவன் வழங்குவான்.

பெய்ருக்கள் மிகவும் அரிதாகக் கால்நடைகள் வளர்ப்பர். அதுவும் இனவிருத்தி செய்ய இயலாத பசுக்களையும், இளங்காளைக் கன்றுகளையும் மட்டுமே வளர்க்க அனுமதிக்கப்படுவர். இக்கால்நடைகள் பெய்ருக்கள் முகிமாக்களுக்கு உதவுவதற்காகத் தரப்படுவதாகும். முகிமாக்களுக்கு உதவியாக முவிரு (Mwiru) என்றொரு வர்க்கமும் உண்டு. இவர்களும் கால்நடைகளை வளர்க்க முடியாது.

பகிமா அரசாட்சியில் நிலவிய இவ்விரண்டு இனக்குழுச் சாதியமைப்பு நாளடைவில் விரிவடையத் தொடங்கியது. இவர்களின் அண்டைய பகுதிகளில் வாழ்ந்த மக்களையும் இவர்கள் பகுதியில் சேர்த்துக் கொள்ள முற்பட்டனர். அவ்வாறு சேர்த்துக் கொண்டபோது அபத்தோரோ (Abatoro) எனப்படும் பழங்குடிப் பிரிவையும் இணைத்துக் கொண்டனர். ஆனால் இம்மக்களுடன் பகிமாக்கள் மணஉறவு கொள்ளும் தகுதியை வழங்கினர்.

நான்காம் வர்க்கமாக அபம்பாரி (Abambari) தோன்றியது. முகிமாத் தலைவர்களுக்கும் பெய்ரு இனப் பெண்களுக்கும் ஏற்பட்ட கலப்பினமாக அபம்பாரிப் பிரிவு தோன்றியது. ஆனால் இப்பரிவினர் பெய்ருக்களுக்குச் சமமாகவே மதிக்கப்பட்டனர். அங்கோல் சமுதாய அமைப்பில் இறுதியாக இடம்பெறும் அபகுக்குப் (Abahuku) பிரிவினர் அடிமைகளாவர். அடிமைகளாகப் பிடிக்கப்பட்ட இவர்கள் செல்வந்தர்களின் வேலையாட்களாகப் பணி புரிந்தனர். அடிமைகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. அடிமைகள் தப்பித்துக் கொண்டு வெளியேறித் தங்களைப் பெய்ரு எனக் கூறிக்

குறிப்பு

கொள்ளாமலிருக்க அவர்களின் காதுகள் அறுக்கப்படும். அதற்குக் காரணம் அண்டைய ஆப்பிரிக்க முடியாட்சி அரசுகளில் சில வறுமையான பெய்ருக்கள் அடிமைகளாக அவ்வப்போது சிக்கிக்கொண்டனர். அங்கோலில் பெய்ருக்கள் அடிமைகளாக இல்லை என்ற குறிப்பு இங்கு நோக்கத்தக்கது (K.Oberg, "The Kingdom of Ankole in Uganda" in E.E.Evand – Pritchard and M.Fortes (eds), *African Politica Systems* (New York : Oxford University Press, 1940, pp.121-62).

இனக்குழுச் சாதிகள் இன்றும் பல ஆப்பிரிக்கச் சமுதாயங்களில் உள்ளன. இச் சாதிகளுள் சில ஆளும் நில ஆக்கிரமிப்புச் சாதிகளாகவும், சில அவர்களை எதிர்க்க வியலாத, கீழ்ப்பணியும் சாதிகளாகவும் அல்லது அப்பகுதிகளுக்கு வந்து குடியேறும் சிறுபான்மை இனத்தவர்களாகவும் உள்ளன. இன்று அமெரிக்காவில் உள்ள வெள்ளை கறுப்பு இனத்தவர்களின் கலப்பினைக் கூட இனக்குழுச் சாதிகளின் எச்சமென்று சிலர் கூறுவர்.

## 13.10. சாதிக்கொள்கைகள்

இந்தியச் சமுதாயம் சாதிக் குழுக்கள் என்ற ஓர் அடுக்கமைப்பினால் கட்டப்பட்டுள்ளது. இந்த அடுக்கமைப்பு நீண்ட வரலாற்றுக் காலத்தில் தோன்றியதாகும். மிகத் தொடக்கக் காலத்தில் அதாவது கி.மு.1500-ஆம் ஆண்டு அளவில் ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தபோது இங்கு வாழ்ந்த மக்களிடையே உடல் அமைப்பாலோ நிற வேறுபாட்டாலோ எவ்விதக் குழுக்களும் செயல்முறையில் இல்லை. ஆனால் இங்கு வந்தேறிய ஆரியர்கள் உடலாலும் நிறத்தாலும் மொழியாலும் சமயத்தாலும் இந்நாட்டு மக்களிடமிருந்து வேறுபட்டனர். அவ்வேறு பாடுகளைப் பயன்படுத்தி இங்கு வாழ்ந்தோரைத் தஸ்யூக்கள் அல்லது தாசர்கள் என்று வேறுபடுத்திக் குறிப்பிடத் தொடங்கினர்.

ஆரியர்களுக்கும் இந்நாட்டு மக்களுக்குமிடையே நாளடைவில் செயற்பாடுகள் மிகுதியானதால் ஆரியர்கள் அவர்கள் அளவில் ஒரு தொழிற்பிரிவை ஏற்படுத்திக் கொண்டனர். இது வேதகாலத்தின் தொடக்கத்தில் (ஏறத்தாழ கி.மு.1200இல்) நிகழ்ந்தது. அதன்படி அவர்கள் சமயத்தோடு தொடர்புடைய புரோகிதத் தொழிலை ஏற்றுக் கொண்டனர். அவர்களின் தனித் தன்மையைக் காத்துச் சமுதாய ஆதாயம் தேட வேண்டி ரிக் வேத காலத்தின் பிற்பகுதியில் (கி.மு. 100ஆம் ஆண்டளவில்) சமுதாயத்தின் பல்வேறு செயல்களைத் தனித்தனியே கவனிக்கும் பொருட்டு வருண அடிப்படையில் நான்கு பிரிவுகளை ஏற்படுத்தினர். (J.H.Hutton, caste in India (Bombay : Oxford University Press, 1983, p.54) அப்பிரிவுகளே பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் எனப்பட்டன.

அந்நான்கு வகை வருண அமைப்பில் தொடக்கத்தில் கட்டுப்பாடுகள் இல்லை. செய்யும் தொழிலிலும், மணஉறவிலும்

குறிப்பு

அப்பிரிவுகள் கட்டுப்பாட்டை விதிக்கவில்லை. ஒருவா் மற்றொருவரின் தொழிலை மேற்கொள்ளவும் பிற வருணத்தாரோடு மணஉறவு கொள்ளவும் முடிந்தது. ஆனால் ஒருவா் தம்மினும் கீழான ஒருவருடன் மட்டுமே பெண் எடுக்கும் முறை (அனுலோம –Anuloma – கீழ்க்குடி மணம்) வழக்கிலிருந்தது ஒருவருடைய வருணத்திற்கும் மேலானவரிடம் பெண் எடுக்கும் முறை (பிரதிலோம –Pratiloma – உயர்குடி மணம்) அனுமத்திக்கவில்லை. தொழில், மண உறவு ஆகியவற்றில் காணப்பட்ட கட்டுப் பாட்டின்மை கி.மு.600 வாக்கில், அதாவது வேத காலத்திற்குப் பிற்காலத்தில் கட்டுப்படுத்தப்பட்டு விலக்குக்குள்ளாயிற்று. ஸ்மிருதிகளின் காலத்தில் இந்நான்கு வகை வருண அமைப்பு மறைந்து அகமணப் பகுப்புடைய சாதிப் பிரிவுகள் தோன்றின.

பல்வேறு சாதிக் குழுக்கள் தோன்றியதற்குக் காரணம் வருணங்களுக்கிடையே நிகழ்ந்த கலப்புத்தான் என மனுஸ்மிருதி கூறுகிறது. அக்கலப்பினால் பிறந்தவர்கள் வருணக் கலப்பிற்கேற்பத் தனித்தனிப் பிரிவுகளாய் அமைந்தனா். அப்பிரிவுகளுக்குள் மேலும் நிகழ்ந்த கலப்பானது எண்ணிக்கையற்ற உட்பிரிவுகளைத் தோற்றுவித்தது. அக்கலப்புப் பிரிவுகள் பின்னா் அகமண விதியைப் பின்பற்றத் தொடங்கியவுடன் ஒவ்வொன்றும் ஒரு சாதியாயய் உருவானது என மனுஸ்மிருதி கூறுகிறது. அவ்வாறு தோன்றிய சாதிகளின் எண்ணிக்கை இன்று ஏறக்குறைய 3000 ஆகும். இன்று இந்தியாவில் ஒவ்வொரு மொழிப்பகுதியிலும் குறைந்தது 200 – 250 சாதிகள் வரை உள்ளதென மக்கிம் மாரியட் கூறுகிறாா். சாதிகள் தோன்றிய வரலாறு குறித்து வேத இதிகாசங்கள் கூறுவன ஒருபுறமிருக்க அறிஞா்கள் பலா் அவா்களின் கொள்கைகளை விளக்கியுள்ளனா். அவை வருமாறு :

## 13.11. மரபுக் கொள்கை

இக் கொள்கையை இந்து சமயத்தின் புராண, இதிகாசங்கள் மட்டுமே விவரிக்கின்றன. சாதி அமைப்பானது மனிதா்களால் தோற்றுவிக்கப்பட்டதன்று : இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்பதே இக்கொள்கையின் மையக் கருத்தாகும். சாதியின் தோற்றமானது வருண அமைப்பிற்குட்பட்டது. அதன்படி, பிரமனின் வாய், கை, தொடை, காலடி ஆகிய பகுதிகளிலிருந்து முறையே பிராமணா்கள், சத்தியா்கள், வைசியா்கள், சூத்திரா்கள் தோன்றினா். இவா்களுள் பிராமணா்களே உயா்ந்தவா்கள். வேதங்களைக் கற்பதும், அவற்றைக் கற்பிப்பதும், இறைவனுக்கு வழிபாடு செய்வதும், சமுதாயத்தில் சில பிரிவினருக்குச் சமயச் சடங்குகள் செய்வதும், அவா்களின் அன்பளிப்பைப் பெற்று வாழ்வதும் இவா்களின் தொழிலாகும். சத்திரியா்கள் அவா்தம் மறப்பண்புகளால் அனைத்துப் பிரிவினரின் உயிரையும் உடைமைகளையும் காப்பதும், நாட்டை ஆளுவதும், வீரா்களாகப் பணிபுரிந்து அதனைக் காப்பதும் தொழிலாகும். வைசியா்கள் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தத் தொழில் செய்வதும் வாணிகம் செய்வதும் தொழிலாகும். சமுதாயத்தில் இழிவான வேலைகளைச்

செய்வதும் தொழிலாகும் என மரபுக் கொள்கை (traditional theory) கூறுகிறது.

குறிப்பு

இக்கொள்கையானது, மேற்கூறிய நான்கு பிரிவினரும் மிகவும் இணக்கமாகச் செயற்பட்டுச் சமுதாயத்தின் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்யும் தன்மையில் பணிப் பிரிவுகளைச் செய்து கொண்டுள்ளனர் எனக் கூறுகிறது. இக் கொள்கையைப் பற்றி மஜூம்தார் குறிப்பிடும்போது, "வருணங்களின் தோற்றம் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது என்றும் அவை சமுதாயத்தைச் செயல் அடிப்படையில் பிரிக்கின்றன என்றும் கொள்ளும்போது, இந்த உவமான விளக்கம் செயல் முறையில் சார்புடைய கருத்தாக உள்ளது" என்பார். மரபுக் கொள்கையானது வேத இதிகாசங்களின் நம்பிக்கையில் ஏற்பட்டதாகும். (வேதங்களில் வருண வகைப்பாடு பற்றிக் கூறப்படுவது பிற்காலத்தவர்களால் புகுத்தப்பட்டது என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது) இக்கொள்கையானது சாதி முறையைப் பகுத்தறிவு வாத அடிப்படையில் விளக்க முற்படவில்லை.

## 13.12. தொழிற் கொள்கை

சாதி முறையின் தோற்றத்திற்குத் தொழிற் கொள்கை (occupational theory) மூலம் புதிய விளக்கம் கொடுக்க நெஸ்பீல்டு முற்பட்டார். இவரது கருத்துப்படி சாதிகள் மக்கள் அவரவர் செய்யும் தொழில்களில் காணப்பட்ட வேறுபாட்டினால் ஏற்பட்டன. அத்தொழில் வேறுபாடுகளின் தன்மை 'தூய்மை' (purity), 'தீட்டு' (pollution) ஆகிய கரத்தாக்கங்களால் மதிப்பிடப்பட்டன. நான்கு வருணப் பிரிவினரும் ஏற்றுக் கொண்ட தொழில் வேறுபாடுகள், அவரவரின் தகுதியை அல்லது சமுதாயத்தில் அவர்களுக்குள்ள நிலையைச் சுட்டிக்காட்டுகின்றன. எனவே, சாதி அமைப்பையும் அதன் செயற்பாட்டையும் அறுதியிடும் காரணியாக தொழில்கள் அமைந்தன. பிராமணர்கள் தூய்மையனவர்கள் என்றும், அவர்களுக்கு அடுத்து முறையே சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் சாதிப் படிநிலையில் உள்ளனர் என்றும், இறுதியில் கூறப்பட்ட சூத்திரர்களே மிகவும் கீழ் நிலையானவர்கள் என்றும் கருதப்பட்டன. செய்யும் தொழிலில் ஏற்பட்ட வேறுபாட்டினால் சாதிமுறை தோற்றம் பெற்றது எனக் கூறும் தொழிற் கொள்கை முழுமை பெற்றதன்று. சாதிகளைப் பற்றி ஹட்டன் கூறும்போது கூடச் சாதிகளின் படிமலர்ச்சியில் தொழிற்பிரிவுகள் ஒரு காரணியாகத்தான் செயல்பட்டதே தவிர அவை முழுமையான விளைவை ஏற்படுத்தவில்லை என்று கூறுகிறார். (J.H.Hutton, *Caste in India*, op. cit., pp.190-93)

## 13.13. சமயக் கொள்கை

இக்கொள்கையை வகுத்தவர் ஹோகார்ட் இவரும் இக்கொள்கையை ஆதரிக்கும் வேறு சில சிந்தனையாளர்களும் சாதிமுறைக்கு அடிப்படை சமயமே என்று கூறுகின்றனர். அவர்களின்

குறிப்பு

கருத்துப்படி இந்து சமயக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே சமுதாயத்தில் நான்கு பிரிவுகள் ஏற்பட்டன. அதற்கு முக்கிய காரணம் இந்து சமயத்தின் கட்டுப்பாடுகளையும் கடமைகளையும் தவறாமல் செய்வதற்கு இந்நான்கு பிரிவுகள் தேவைப்பட்டதேயாகும். இந்துக்களின் வாழ்வில் சமயம் உயிர்மூச்சாக இருப்பதால் சமயக் கோட்பாடுகளே நான்கு வகை வருணங்களை ஏற்படுத்தி ஒவ்வொன்றின் செயற்பாடுகளையும் வகுத்துக் கொடுத்துள்ளன. இந்நான்கு பிரிவுகளுக்கிடையே ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகள் அவை சமயச் செயல்களை நிறைவேற்றுவதில் ஏற்றுக்கொண்ட பங்கினைப் பொறுத்து அமைந்தன. அதில் பிராமணர்கள் உயர்ந்த நிலையிலும் சூத்திரர்கள் கீழ்நிலையிலும் வைக்கப்பட்டனர். மற்றவர்கள் இடைநிலையில் வைக்கப்பட்டனர். சமயக் கொள்கையும் (religious theory) சாதிகளின் தோற்றங் குறித்து முழு நிறைவான கருத்தினை அளிக்கவில்லை. இது சமுதாய வாழ்வின் பெரும்பகுதியைக் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறியதே அதற்குக் காரணமாகும்.

## 13.14. அரசியற் கொள்கை

இக்கொள்கையை வகுத்தவர் குர்ரே. பிராமணர்களே சாதிமுறையின் தோற்றத்திற்குக் காரணமென இக்கொள்கை விவரிக்கிறது. இக் கொள்கையின் மையக் கருத்து வருமாறு : பிராமணர்கள் சமுதாயத்தில் உயர்ந்த தகுதியைப் பெற்று அதன்மூலம் பல்வேறு சலுகைகளை அனுபவிக்கும் பொருட்டு அவர்கள் செய்த சூழ்ச்சியால் சாதிகள் தோன்றின. பாகு பாடற்ற சமுதாயம் நிலவியபோது பிராமணர்கள் மற்றவர்களைக் காட்டிலும் உடலாலும், செய்யும் தொழிலாலும் வேறுபட்டிருந்ததால் அத்தனித் தன்மையைக் காத்து மேல்நிலையை அடையச் சமயக் குருக்களாகச் செயற்படும் உரிமைக்குச் சொந்தம் கொண்டாடத் தொடங்கினர். சமயச் செயல்களையும் சடங்குகளையும் செய்யும் பொருட்டு உணவு, குடிநீர், திருமணம் போன்றவற்றின் மீது சில கட்டுப்பாடான விலக்குகளை ஏற்படுத்திக் கொண்டு ஓர் அகமணக் குழுவாயினர். இவையனைத்தும் மற்றப் பிரிவினரை அவர்தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உதவின. அதன்பின்னர் பிராமணர்கள் மற்றவர்கள் மீது அதிகாரம் செய்யத் தொடங்கினர். பிராமணர்களுக்கும் சாதிகளின் தோற்றத்திற்கும் உள்ள தொடர்பை குர்ரே பின்வருமாறு குறிப்பிடுகிறார். “சாதி என்பது இந்திய – ஆரியப் பண்பாட்டில் ஏற்பட்ட பிராமணக் குழந்தை சாதி என்னும் குழந்தை முதலில் கங்கைப் படுகையில் தவழ்ந்து வளர்ந்து பின்னர் அவர்களால் இந்தியாவின் பிற பகுதிகளிலும் வேரூன்றியது”. (G.S. Ghurye, *Caste and Class in India*, Chapter VI, “Origins of the Caste System” (Bombay : The popular Book Depot, 1950, pp.141-60)

சாதிகள் தொழிற்பிரிவு அடிப்படையிலோ பிறப்பு அல்லது வேறு எந்த ஓர் அடிப்படையிலோ தோன்றியது என்பதை அரசியற் கொள்கை (political theory) கடுமையாக எதிர்க்கிறது. சாதி என்பது ஒரே

பிரிவுதான். இதில் தனிமைப்படுத்தப்பட்ட பல பிரிவுகள் இல்லை. இக்கருத்தையே ரிக் வேதமும் குறிப்பிடுகிறது. பிராமணிய உயர்வுவாதம் என்பது போலியானது; பிற்காலத்தில் வேதங்களில் வேண்டுமென்றே இடைச் செருகல் கருத்துகள் ஏற்படுத்தப்பட்டன என இக் கொள்கையாளர்கள் கூறுவர்.

## 13.15. இனக் கொள்கை

இனக் கொள்கையை (racial theory) வகுத்தவர் ரிஸ்லி. இக்கொள்கையை மஜூம்தார், குர்ரே ஆகியோரும் ஆதரித்தனர். ரிஸ்லியின் கருத்துப்படி ஆரியர்கள் இந்திய மண்ணில் குடியேறிய பின்னரே இனவேற்றுமை குறித்த கருத்துக்கள் ஏற்பட்டன. குடியேறிய ஆரியர்கள் இங்கிருந்தவர்களைக் காட்டிலும் உடல் தோற்றத்தில் பொலிவானவர்களாகத் திகழ்ந்ததால் அதனைப் பயன்படுத்தி அவர்கள் திராவிடர்களைக் கட்டுப்படுத்தத் தொடங்கினர்.

இனக்கொள்கையை விளக்கும்போது குர்ரே பின்வருமாறு குறிப்பிடுகிறார். “சாதி அமைப்புடைய சமுதாயம் தோன்றியதற்குப் பல காரணிகள் செயற்பட்டிருந்தாலும் அவை அனைத்தும் பிராமணர்கள் முதன்முதலில் முதுகுடிகளைச் சமயச் செயல்களிலிருந்து நீக்க மேற்கொண்ட முயற்சிகளிலிருந்தும், சமுதாயத்தில் அவர்களோடு (பிராமணர்கள்) மற்றவர்கள் சேர்ந்து செயற்படுவதைத் தடுக்க மேற்கொண்ட முயற்சிகளிலிருந்தும் ஏற்பட்ட விரிவாக்கங்களே ஆகும். ஆரியர்கள் தங்களை உயர்ந்த இனத்தினர் என அவர்களாக எண்ணிக் கொண்டதுடன் திராவிடர்களைத் தஸ்யூக்கள் என்றும், கீழினமென்றும், அதனால் அவர்கள் தாழ்வான பணிகளையே செய்ய வேண்டும் என்றும் கூறிக் கொண்டனர். ஆரியர்களின் இவ்வாறான இன-பண்பாட்டு உயர்வு வாதங்கள் சாதி வேறுபாடுகளைத் தோற்றுவித்தன; தீண்டாமைச் சாதிகள் என்னும் மற்றொரு பிரிவையும் தோற்றுவித்தன” என்கிறார்(D.N.Majumdar, *Race and Cultures of Inida*, op. cit., p.326) .

## 13.16. படிமலர்ச்சிக் கொள்கை

இக்கொள்கையை வகுத்தவர் டென்சில் இபட்சன். இவர், “சாதிகள் திடீரென்று தோன்றியவையல்ல; இவை நீண்டகாலப் படிமலர்ச்சியின் விளைவால் தோன்றியவை” எனக் கூறுகிறார். இந்த நீண்ட காலப் படிமலர்ச்சியில் பல காரணிகள் பங்கு பெற்றிருந்தன. இன்று சாதியமைப்பில் காணக்கூடிய நான்கு வருணங்களும் நீண்டகாலப் படிமலர்ச்சிக்குப் பின்னரே நான்கு படிநிலைக் குழுக்களாக மாறின. அவ்வாறு மாறும்போது ஒவ்வொரு குழுவும் சமயத்தோடு ஏற்படுத்திக் கொண்ட பிணைப்பு மாறுபட்டது. அம்மாறுபட்ட பிணைப்பால் நான்கு வருணங்களுக்கும் செய்யும் தொழில் மரபு வழி அமைந்தது. உணவு, நீர், திருமணம் போன்ற அடிப்படைக் கூறுகள் விலக்குக்குள்ளாயின. இவ்வகையான வருண வேறுபாடுகளுக்குக் கருமம் (karma) என்னும்

குறிப்பு

கொள்கையும் துணை நின்றது. அக்கொள்கையின் அடிப்படையிலேயே உயர்வும் தாழ்வும் செய்யப்பட்டன. அதனோடு பல்வேறு குழுக்களிடையே இரத்தக் கலப்பு ஏற்படக்கூடாது என்ற எண்ணம், தனிப்பட்ட தொழில்களையே பற்றி நிற்க வேண்டுமென்ற எண்ணம், கருமக் கோட்பாடு, மூதாதையர் வழிபாடு, நிற வேறுபாட்டுணர்வு, பொருளாதார வேற்றுமைகள், வெவ்வேறு இயல்புடைய புவிப்பரப்புகள். பண்பாட்டு மரபுகளில் காணப்பட்ட பல்வேறு வேற்றுமைகள் ஆகிய முதன்மையான காரணிகள் ஒரு நீண்ட படிமலர்ச்சிக் காலத்தில் இந்திய மண்ணில் செயற்பட்டதன் விளைவாகச் சாதியமைப்புத் தோன்றியது எனப் படிமலர்ச்சிக் கொள்கை (evolutionary theory) உறுதிப்படுத்துகிறது.

சாதிகளின் தோற்றம் குறித்து நிலவும் கொள்கைகள் அனைத்தும் ஓரியல்பான கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லை. இக்கொள்கைகள் சாதியமைப்பின் தன்மைகளை விளக்குவதில் கொண்டிருக்கும் ஈடுபாடு அதன் தோற்றத்தைக் காண்பதில் காணப்படவில்லை. இந்தியாவைப் பொறுத்தவரை சாதியமைப்பு ஒரு சிக்கலான சமுதாய நிகழ்வாகும். அதனைத் தெய்விகப் படைப்பு என்றோ மனித படைப்பு என்றோ கூறிக் கொண்டு ஆராய்வது ஒருபுறமிருக்க, இன்றைய நிலையில் அது சமுதாய இயக்கத்தில் கொண்டிருக்கும் பங்கினை ஆராய்வது பல விவாதத்திற்குரிய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வழிவகுக்கும். குறிப்பாக, சமுதாய ஆதாயம் தேடி வேதகாலத்தில் பிராமணர்கள் ஏற்படுத்திய சாதிமுறை இன்றைய சூழலில் ஏற்படுத்தும் விளைவுகளை உரிய முறையில் அணுகாவிட்டால், சாதி என்னும் மாயக்கருத்தே இந்தியாவின் மிகக் கொடிய நம்பிக்கையாகி கடும் விளைவுகளை ஏற்படுத்தி விடும் என்கிறார்கள் அறிஞர் பெருமக்கள். (India's Most Dangerous Myth : The Fallacy of Caste, 19ஆம் நூற்றாண்டில் இனவெறி தலைவிரித்தாடிய போது மானிடவியலறிஞர் ஆஸ்லி மாண்டகு "Man's Most Dangerous Myth : The Fallacy of Race" என அறிவுறுத்தி அத்தலைப்பில் ஒரு நூலும் எழுதினர்).

## 13.17. தொகுத்துக் காண்போம்:

பழங்குடி என்னும் தொன்மை மக்களைப் பற்றியும், அவர்கள் உலகளாவிய நிலையில் எத்தகைய வாழ்வியலைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார்கள் என்பதையும் மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

பழங்குடி மக்களுக்கிடையேயான சாதிகள், சாதிக்கொள்கைகள், இனக்குழுச் சாதிகள் என்னென்ன என்பதையும் மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

## 13.18. சோதித்தறியும் வினாக்கள்

பழங்குடி அமைப்பு முறை பற்றி விளக்குக.

மரபுக்கொள்கை என்றால் என்ன? விவரி.

அரசியற்கொள்கை என்றால் என்ன? விவரி.

இனக்குழுவும் இனக்குழுச்சாதிகளும் பற்றி நீவிர் அறிவன யாவை,

குறிப்பு

## 13.19. பயிற்சி வினாக்கள்

தமிழகப் பழங்குடியினரின் பண்பாட்டு மாற்றங்களைப் பற்றிக் கட்டுரை வரைக.

பழங்குடியினரின் சாதிக்கொள்கைகளைக் குறித்து விளக்குக.

## 13.20. மேலும் பயில்வதற்கான நூல்கள்

பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
பக்தவச்சலபாரதி, வரலாற்று மானிடவியல், அடையாளம் பதிப்பகம், திருச்சி.

## கூறு- 14 : சாதியம் பற்றிய நவீன கோட்பாடுகள்

குறிப்பு

### 14.1. அறிமுகம்

பழங்குடி இனக்குழுக்களுக்கிடையே நிலவக்கூடிய சாதியம், அது தொடர்பான நடவடிக்கைகளை இப்பகுதி எடுத்துரைக்கின்றது.

### 14.2. குறிக்கோள்கள்

வேறுபட்ட பூகோளச் சூழல்களில் தனித்தன்மை வாய்ந்த பல திணைப் பண்பாடுகள் எவ்வாறு சாதியம் என்ற படிநிலைச் சமூகத்தன்மையோடு தங்களை இணைத்துக் கொண்டது என்பதை மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

சாதியம் குறித்த மானிடவியல் அறிஞர்கள் எடுத்துரைக்கும் பல்வேறு கோட்பாடுகளை மாணவர்கள் அறிந்து கொள்வீர்கள்.

### 14.3. சாதியம்

இந்தியத் தீபகற்பத்தில் சாதியத்தின் நிலைப்பாடு பல நூற்றாண்டுகளைக் கடந்து வந்தாலும் இது பற்றிய வரலாற்றில், இனவியல் (ethnographic) வகையிலான புரிதல்கள் 18ஆம் நூற்றாண்டில்தான் துவங்கின. காலனியவாதிகளாலும் இவர்கள் வழி வந்த பிற ஐரோப்பியர்களாலும் இததகைய தொடக்கம் ஏற்பட்டது. ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டுக்கால காலனிய கண்டத்தின் ஒட்டு மொத்தப் பண்பாகவே (Pan – Indian) கணக்கிலெடுத்துக் கொண்டு அணுகியது.

இந்தியத் துணைக் கண்டத்தின் புவியியற் பரப்பில் எந்த ஒரு கால கட்டத்திலும் “ஒன்றுபட்ட”(unified) பொதுப் பண்பாட்டுப் பின்புலம் அமைந்தது கிடையாது. மாறுபட்ட பூகோள, மொழி, இன, அரசியல் பரப்பில் தனித்தன்மை வாய்ந்த பல “திணைப் பண்பாடுகள்” (பழங்குடிச் சமூகங்கள் முதல் ஊரகச் சமூகங்கள் வரை) அவற்றிற்கேயான சமூக அமைப்புக்களோடும் அடையாளங்களோடும் நிலைபேறு கொண்டிருந்தன.

இத்தனித்த அடையாளங்களுடன் கூடிய பண்பாட்டுச் சூழலில் சாதியத்தின் இழை இத்துணைக் கண்டத்தின் எல்லாப் பகுதிகளையும் இணைத்துக் கொண்டு இது ஓர் அனைத்திந்தியப் பண்பாக (pan – Indian) வேரூன்றிவிட்டது என்ற கருத்தின் அடிப்படையில் மட்டுமே 18-ஆம் நூற்றாண்டு தொடங்கிச் சாதியச் சொல்லாடல் நிகழ்ந்து வந்துள்ளது. மாறாக வேறுபட்ட பூகோளச் சூழல்களில் தனித்தன்மை வாய்ந்த பல திணைப் பண்பாடுகள் எவ்வாறு சாதியம் என்ற படிநிலைச் சமூகத்தன்மையோடு தங்களை இணைத்துக் கொண்டன. ஐக்கியப்படுத்திக் கொண்டன என்னும் புரிதல் புறந்தள்ளப்பட்டன.

(Pandiyan, *Caste Nationalism and Ethnicity* Bombay : Popular Prakashan, 1987, p.19)

**குறிப்பு**

இன்னும் மறு நிலையில். சாதிய அடுக்கமைவின் அடித்தளத்தில் உள்ள நாயர்களின் பெண்களைத் திருமணம் செய்யும் நம்பூத்திரி பிராமணர்களின் சமூக அமைவு பற்றியோ, வட இந்தியப் பிராமணர்களின் உயர்குலத் திருமண முறையை (hypergamy) விடுத்துத் திராவிடத் திருமண முறையான "முறைப்பெண் மணத்தை" (cross – cousin marriage) ஏற்றுக் கொண்ட தென்னிந்தியப் பிராணமர்களின் சமூக அமைவு பற்றியோ, வீர சைவர்களின் சமூக அமைவு பற்றியோ. பூப்புச் சடங்கு நடத்திய பின் திருமணம் செய்யும் திராவிட முறையை முதன் முதலில் ஏற்றுக் கொண்ட மலபார் பிராமணர்களின் சமூக அமைவு பற்றியோ, இதுபோன்ற பிற "கீழ்நிலை அடுக்கமைவு" பெற்ற பிராமணர்களின் சமூக அமைவு பற்றியோ. பிராமணர்களுக்குள் நிலவிய கடுமையான. விரிவான படிநிலை பற்றியோ இன்று வரையிலான சாதியச் சொல்லாடல்கள் முன் வைக்கப் பெறவில்லை. அன்றித் திணைப் பண்பாட்டுச் சமூக அமைவுகளில் பிராமணர்கள் தங்களுக்கான "கீழ்நிலை அடுக்கமை" வினை எவ்வாறு விடுவித்துக் கொண்டு, எங்கிருந்து தங்களுக்கான அதிகாரத்தைச் செயல்படுத்தித் தங்களுக்கான மேலாண்மையை நிறுவிக் கொண்டனர் என்பன போன்ற வரைவியலும் அடையாளப்படுத்தப்படவிலலை. இவ்வாறான களங்களில் சாதியத்தின் புறந்தள்ளப்பட்ட வரைவியல்கள் கட்டவிழ்க்கப்படும் இன்றைய சூழலின் உஷ்ணத்தால் காலனியவாத சாதியத்தின் மையம் உடைந்து, மையத்தைக் கட்டமைத்தவர்களே (குறிப்பாக லூயி துய்மோன்) "மெய்யியல்வாதம்' (substantialization) போன்ற புதிய 'கருத்தியல் நீட்சிகளை' முன் வைக்கும் போக்கும் ஏற்பட்டு வருகிறது.

18ஆம் நூற்றாண்டுக் காலனிய வரலாற்றோடு தொடங்கிய சாதி பற்றிய அறிவாராய்ச்சியில் (epistemology) ஒற்றை வழி அணுகு முறையில் சாதியத்தை ஒரு அனைத்திந்தியப் பண்பாகவே பார்த்தனர் என்றாலும், அவர்களின் சொல்லாடல் கருத்தியல் (idealist), பொருள் முதல்வாதம் (materialist) என்னும் இரு தளங்களில் அமைந்தது. (D.Quigely, *The Inter[retation of Caste* Oxford : Clarendon Press, 1993, p.3)

## 14.4. துய்மோனின் கோட்பாடுகள்

சமயக் கருத்துக்களை அடித்தளமாகக் கொண்டு பண்பாடு வார்த்தெடுத்த ஒரு சட்டமாகவே சாதியத்தைக் கருத்தியல்வாதிகள் பார்த்தனர்.

கருத்தியல்வாதிகளுள் முன்னோடி இடத்தைப் பெறும் லூயி துய்மோன் (Louis Dumont) அமைப்பியல் ரீதியாகவும், வேதகாலம் தொடங்கிப் பிற்காலம் வரை தோன்றிய அனைத்து வகையான

குறிப்பு

பிராமணங்களின் (Brahmanas : அரசு ஆதரவுடன் எழுதப்பட்ட பனுவல்கள் : Tasts) கருத்துக்களை உட்செறித்துச் சாதியத்தின் வாய்பாட்டை (paradigm) விவரிக்கும் ரீதியிலும் கருத்தியல்வாதக் குழுவிற்குத் தலைமை ஏற்கிறார்.

துய்மோனின் சாதிய அமைப்பியல் தர்க்கம் பிராமணர்களுக்கான அதிகார விழைவு எங்கிருந்து தொடங்குகிறது என்பதில் ஆரம்பம் கொள்கிறது. இதில் இரண்டு தர்க்கவியல் நிலைகளை அமைத்துக் கொள்கிறார். முதல் தர்க்கம் : மரபார்ந்த இந்தியச் சமூகத்தில் வானளாவிய பொருளியல் அதிகாரத்தையும், அரசியல் அதிகாரத்தையும் கொண்டவர்கள் மன்னர்கள். இவ்வளவு சர்வ அதிகாரம் படைத்தவர்கள் இரண்டாம் தரமாகிப் பிராமணர்களைத் தங்களுக்கு மேற்பட்டவர்களாக உயர்த்திய உயர்குடிச் சிந்தனைப் போக்கு (இதனைத் "தத்துவார்த்த சிந்தனைப் போக்கு" என்று கூடத் துய்மோன் சில இடங்களில் குறிப்பிடுகிறார்) சாதிய அமைப்பிற்கு அடித்தளமிட்டது என்கிறார் துய்மோன். இவருடைய கோட்பாட்டின் சாராம்சத்தை அவருடைய சொந்த எழுத்துக்களின் வழி அறிதல் வேண்டும்.

"What makes Inida unique and therefore defies the attempt to find a comparable form of social organization elsewhere, is the introduction of the disjunction between status and power which puts the priest above the kind" (Louis Dumont, *Homo Hieratchicus* : The Caste System and its *Implications* (complete revised English edition) chicago : Chicago University Press, 1980, p.213)

மன்னர்கள் தங்களுக்கான சர்வ அரசியல், பொருளாதார வல்லமையைத் தக்க வைத்துக் கொள்ளும் பொருட்டுச் சடங்கியல் செயல்பாடுகளைப் பிராமணர்கள் வழி செய்து கொண்டார்கள். எஜமானர்களான மன்னர்களின் தெய்வீக, ஆன்மீக ஆற்றலுக்கு வழிகோலும் யாக வேள்விச் செயல்பாடுகளைச் செய்த புரோகிதர்கள் அப்பணிகளுக்காக எஜமானர்களான அரசர்களிடமிருந்து, தானங்களும், தட்சிணைகளும் பெற்று வாழ்க்கை நடத்தினர்.

பொருளியல் நிலையிலும், அரசியல் நிலையிலும் மேலாண்மை பெற்று எஜமானர்களாகத் திகழ்ந்த அரசர்களின் "அதிகாரம்"(power) என்னும் தளம் (domain), ஆன்மீக – சடங்கு வழி ஆற்றல் இவற்றைக் கொண்டு மன்னனுக்கும், அரசுக்கும், நாட்டுக்கும் மேன்மை ஏற்படுத்திய பிராமணர்கள் மன்னர்களைக் காட்டிலும் கூடுதல் சமூகத் "தகுதி"(status) பெற்றுத் தரும் தளமும் கொண்ட உறவே சாதியமைப்பின் அடித்தளம் என்பார் துய்மோன். (Ibid, p.232)

மன்னர்களின் அதிகாரத் தளம் சர்வ வல்லமை பெற்றதாயினும் அவ்வல்லமையின் தளம் தொடர்ந்து காக்கப்பட உயர்த்தப்படப் பிராமணர்களின் சடங்கியல் தளத்தை அது கோரி நிற்பதால் இங்கு

குறிப்பு

"அதிகாரம்"(power), "தகுதி"(stauts) ஆகிய இரண்டும் ஒன்றோடு ஒன்று இயைபு கொண்டு ஒருபோகு நிலையை ஏற்படுத்திக் கொள்ளாமல் தனித்தனியாகப் பிரிந்து ஒன்று மற்றொன்றை உட்செரித்துக் கொள்கினறது. இவ்வாறு "அதிகாரம்","தகுதி" ஆகிய இரண்டு தனித்தியங்கும் கூறுகள் ஒன்றோடு ஒன்று ஒத்திசைவு பெறாமல் எதிர் நிலையில் ஒன்றையொன்று மறுதலித்துக் கொண்டு தர்க்கமாக, வாய்பாடாக (paradigm) அமைந்தது. (Ibid, pp.72-77) துய்மோனின் இரண்டாவது தர்க்கவியல் நிலை : மரபார்ந்த அக்காலச் சமூகத்தில் (வேதகாலம் வேதகாலத்திற்குப் பிந்தைய) மன்னர்களின் சர்வ வல்லமைக்கும் பயன் செய்யும் பொருட்டு மக்கள் பல குழுக்களாகப் பாகுபட்டனர். இப்பாகுபாடு பொருளியல் உற்பத்தியில் பங்கேற்பு, பணிப்பகிர்வு என்பன தொடங்கிச் சடங்கு நிலை, திருமண உறவு கொள்ளும் குழுக்களின் எல்லை வரை விரிந்து ஒவ்வொரு குழுவும் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட உறவு (relation) சாதியப் படிநிலைக்கு மற்றுமோர் அடித்தளத்தை அமைத்தது என்பார் துய்மோன். (Ibid, p.56) சமூகக் குழுக்களிடம் (சாதிகள்) ஏற்பட்ட உறவில்(relation) ஒவ்வொரு குழுவினரும் எந்தெந்த நிலைகளில் "வேறுபட்டு" நின்றனர் (separation) எந்தெந்த நிலைகளில் மற்ற குழுவினர்களுடன் "பரிவர்த்தனை" கொண்டனர் (interdependence), இவ்விரண்டு உறவால் எந்தப் "படிநிலையில்" வரிசைப்பட்டனர் (hierarchy) என்று மூன்று வகையான கருத்தியல் அமைவுகள் ஏற்பட்டன என்பார். துய்மோன் Ibid, pp.40-45) இந்த மூன்று கருத்தியல் விரிவாக்க நிலைகளையும் "தூய்மை தீட்டு"(purity/pollution) என்ற ஒரே கருத்தியல் சாராம்சத்துக்குள் அடக்கிக் கொண்டு சாதியத்தின் இரண்டாம் தர்க்கத்தை வரையறுத்தக் கொள்கிறார். (ibid, p.56) இந்த இரண்டாம் தர்க்கத்தில் உயர்வு நிலையும் (superiority) உயர்வான தூய்மையும் (superior purity) ஒன்றோடு ஒன்று இயைபு கொள்கின்றன. இந்நிலையில் சமூகத்தில் தூய்மை நிலையின் மீதே "தகுதி"(status) கட்டுமானம் பெறுகிறத என்றும் இத் "தகுதியே" சாதிப் படிநிலைக்கு அடித்தளமிடுகிறது என்றும் தூய்மை தீட்டு தர்க்கத்தின் நீட்சியைச் சுட்டிக்காட்டுகிறார்.

## 14.5. பொருள் முதல் வாதத்தினரின் அணுகுமுறை

சமயம் - சடங்கு – சடங்கியல் அதிகாரம் ஆகியவற்றின் கட்டுமானமபகச் சாதியைப் பார்த்த கருத்தியல் வாதிகளின் கருத்தையே பொருள் முதல்வாதக் குழுவினர் சமூக உறவு என்ற வெளிப்பாட்டுன் சாதியத்தை விளக்க முற்பட்டனர். (D.Qugley, *The Interpretation of Caste,* op.cit., p.3) சாதியமானது. "ஏற்றத் தாழ்வினைப்"(inequality) பகுத்தறிவிற்கு ஒத்த அமைப்பாகவே மக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு அதனைத் தொடர்ந்து நிலைபேறு செய்யும் பிரக்ஞையைச் செயல்படுத்தும் பொருளியல் பொருண்மையாகவே பொருள்

முதல்வாதத்தினர் கருதுகின்றனர். இந்நிலை ஒருவகையில் பிரக்ஞை சார்ந்ததாகும் என்கின்றனர். உயர்சாதியினர், கீழ்ச்சாதியினரைக் காட்டிலும் செல்வம் மிக்கவராக இருந்து உயர்வான விழுமியங்களைக் கடைபிடிக்கும் பிரிவினராகப் படிநிலை பெறும் தன்மையானது உயர்ந்தோர் வாழ்வு உயர்வானது; தாழ்ந்தோர் வாழ்வு தாழ்வானது என்று கட்டமையும் கருத்தியல் பிரக்ஞை படிநிலையோடு இணைவு கொள்கிறது. இவ்வகையான பிரக்ஞை தூய்மை, தீட்டு ஆகிய பொருண்மைப் படிநிலை வழி ஒவ்வொரு சாதிக்குமான "வேறுபாட்டினைத்" தொடர்ந்து பிரக்ஞை படுத்திக் கொள்ளவும், சாதியத்தின் கேள்விக்குள்ளாக்கும் குணாதிசியங்களைத் தொடர்ந்து ஏற்புடையதாக்கிக் கொள்ளவும் செயற்படுகிற ஒரு சமூக, உற்பத்தி பிரக்ஞையாக உள்ளது.

ஆக, கருத்தியல்வாதிகளாகட்டும், பொருள் முதல்வாதிகளாகட்டும் இருசாராருமே சாதிப்படிநிலை எவ்வாறு தர்க்கம் கொள்கிறது என்பதையும், சாதியத்தின் இயங்கியல் வாய்பாடு (dialectical paradigm) எவ்வாறு கட்டமைந்துள்ளது என்பதையும் அணுகும் முறைகளில் மட்டுமே மாறுபடுகின்றனரே தவிர சாதியத்தின் பண்புகளை வேறுபட்ட, தனித்தன்மை வாய்ந்த இம்மண்ணுக்கான திணைப்பாடுகள் எவ்வாறு தொடக்கத்தில் ஏற்றுக் கொண்டன என்றோ, அவ்வாறு ஏற்றுக் கொண்ட பண்பாட்டுக் குழுவினரின் சாதியப் பண்புகள் எவ்வாறான தன்மைகளில் வேறுபட்டு நின்றன என்றோ, சாதியத்தின் வரலாற்றிலிருந்து வரலாற்றின் சாதியம் எவ்வாறான போக்குகளை அடையாளப்படுத்தியது என்றோ காண்கின்ற வகையில் வரலாற்று வரைவுகளை இனவரைவுகளை முன்வைக்கவில்லை.

## 14.6. ஹோகார்ட் கோட்பாடு

சாதி பற்றிய அறிவாராய்ச்சியியல் நிலையில் ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு முன் ஹோகார்ட் (Arthur Maurice Hocart) முன்வைத்த கோட்பாடு இன்று மீண்டும் ஆர்வத்துடன் பேசப்படுகிறது. பிஜி, தொங்கா, சமோவா தீவுகளின் முடியாட்சி (kingship) குறித்த ஆய்வாளராகவே இவர் நெடுநாட்கள் கருதப்பட்டார். இத்தீவுகளின் அரசு முறை குறித்த ஆழ்ந்த புரிதலை ஏற்படுத்திக் கொண்டிருந்த அவர் முதல் உலகப் போருக்குப் பின் இலங்கையில் தொல்லியல் ஆணையராகப் பொறுப்பேற்றுப் பணி செய்த காலத்தில் சாதியம் பற்றிய புரிதலையும் விரிவாக்கிக் கொண்டார். பிஜி, தொங்கா, சமோவா தீவுகளின் முடியாட்சியின் தொடர்ச்சியாகவே சாதியத்தின் நிலைப்பாடு இருப்பதாக அவர் கருதினார்.

ஹோகார்ட் 1939-ல் இறப்பதற்கு ஓராண்டுக்கு முன்னர்தான் (1918) சாதி பற்றிய அவருடைய கருத்துக்கள் நூல் வடிவில் பிரஞ்சில் வெளியாயின. பின்னர் அந்நூல் "Caste A comparative Study" என்னும் தலைப்பில் 1950-ல் ஆங்கில மொழியாக்கம் பெற்றது. துய்மோனின் Homo Hierarchicus நூலின் மீதான விமர்சனங்களுக்கும் மாற்றுக்

கோட்பாடுகளை முன்வைப்பதற்கும் ஹோகார்ட்டின் புரிதல் பின்னாளில்தான் தேவைப்பட்டது. 1980களுக்குப் பிறகு ஹோகார்ட்டியம் புதிய கோணத்தில் மறுவாசிப்பு செய்யப்படுகிறது.

சாதிய அமைப்பு இந்தியத் துணைக் கண்டத்துக்கு மட்டுமே தனித்தன்மை வாய்ந்ததல்ல என்பது ஹோகார்ட் கருத்து இவ்வாறான சமூக அமைப்பு பண்டைய உரோம், எகிப்து, கிரேக்கம், பெர்சியா, தென் பசிபிக் தீவுகள் (குறிப்பாக பிஜி) ஆகிய பகுதிகளிலும் இருந்தது என்கிறார் ஹோகார்ட் திராவிட உறவுமுறைக்கு (Dravidian kinship) நிகரான உறவுமுறைக் கோட்பாடு குறிப்பாக “முறை கோட்பாடு” பிஜித் தீவுகளில் உள்ள மவோலா (Moala) சமூகத்தில் உள்ளது என்னும் ஷாலியின் கூற்று இங்குக் குறிக்கத்தக்கது.

ஹோகார்ட்டின் சாதியம் பற்றிய கோட்பாடு மிகவும் நுண்ணியல் தன்மை கொண்டது. இன்றுள்ள சாதியக் கூறுகளைக் கொண்டு அதனைப் புரிந்து கொள்வது எளிதல்ல. அவருடைய கருத்தை ஒவ்வொரு அலகாகப் பிரித்து அதன் தர்க்கப் போக்கை விவரிப்பதெனில் அது ஒரு குறுநூலாக விரியும். ஆதலின் இங்கு மிகச் சுருக்கமான சாராம்சம் இடம் பெறுகிறது. ஹோகார்ட்டைப் பொருத்த வரையில் இந்தியச் சாதியமைப்பானது இந்திய முடியாட்சி அரசின் (kingship) அரசியல் அதிகாரத்துக்கான “சமூக வடிவம்” ஆகும். இந்திய முடியாட்சியின் அதிகார விழைவுக்கான ஆதாரங்களைப் புரிந்து கொண்டாலொழிய சாதியத்தைப் புரிந்து கொள்ள முடியாது.

இங்கு ஹோகார்ட் குறிப்பிடும் முடியாட்சி அரசு (kingship) எனப்படுவது அதன் அக, புற கட்டமைப்பையோ, நிர்வாக முறையையோ அல்ல, மாறாக முடியாட்சி அரசு அதன் இயக்கத்துக்காக, அதன் ஆற்றலுக்காக, அதன் தொடர்ச்சிக்காக ஏற்படுத்திக்கொண்ட ஆற்றல் (power) சார்ந்த தர்க்கத்தை இனங்காண்கிறார். இந்த ஆற்றல் தர்க்கத்தில் பூவுலக அரசன் ஒரு நிலையிலும், பிரபஞ்ச அரசர்களான கடவுள்கள் மறுநிலையிலும், இவர்களைச் சடங்கியல் வழி இணைக்கின்ற நான்கு வருணத்தினர் இடையிலும் உறவு பெறுகின்றனர். முடியாட்சி அரசில் எல்லாம் வல்லவர் அரசர். இவரே நாட்டில் ஒழுங்கைக் (order) கட்டமைக்கிறார். ஆனால் பூவுலகம் உள்ளிட்ட ஒட்டுமொத்த பிரபஞ்சத்தின் ஒழுங்கைக் கட்டமைப்பவர் கடவுள்கள். ஆக பிரபஞ்சக் கட்டமைப்பைக் காக்கும் கடவுள்களின் தளத்தோடு உறவு கொண்ட ஆற்றல் பெறாத எந்த ஒரு அரசனும் நீண்ட ஆயுளையோ, போரில் வெற்றியோ, நாட்டில் நீதி, நிர்வாகம், பொருள்வளம், பஞ்சமின்மை, நோய் நொடியின்மை ஆகியவற்றையோ பெற இயலாது.

இந்நிலையில் பிரபஞ்சக் கடவுள்களின் ஆற்றலைப் பெறுதல் என்பதே அரசனுக்கான தொடர் விழைவாகும். இதனால் ஏற்பட்டவையே அரசு வேள்வியும் யாகமும் ஆகும். இச்சடங்கியல் நிகழ்வில் மன்னன்

குறிப்பு

தீட்டற்ற நீண்ட புனித நிலை மேற்கொண்டாக வேண்டும். ஒவ்வொரு அரசு வேள்வி மூலமும் மன்னன் பிரபஞ்ச ஆற்றலோடு தன்னை மீண்டும் உயிர்ப்பித்துக் கொள்கிறான். இவ்வாற்றல் புதுப்பிக்கும் செயலானது ஒரு தொடர்ச்சியான விழைவாக இருந்ததால் வேதகால முடியாட்சி (kingship) என்பதே சடங்கியல் கட்டுமானம் பெற்றதாக உருவானது (kingship is a sacrificial organisation). இதனாலேயே வேதகாலத்திய நான்கு வருணக் கோட்பாடு என்பது இந்து சமூகத்தின் வேள்விக் கோட்பாட்டைப் பிரதிபலிக்கும் அமைப்பாகும் என்பார் ஹோகார்ட்.

ஹோகார்ட்டின் இதுவரையிலான தர்க்கவியல் விவரங்கள் நமக்கு துய்மோனிய வரைவியலிலிருந்து விலகுவதற்கு அடித்தளமிடவில்லை. மேற்கூறிய அடிக்கட்டுமானத்தின் மீது ஹோகார்ட் எழுப்பும் பின்வரும் கருத்தியலே நாம் துய்மோனையும் பிறரையும மறுவாசிப்பு செய்து விமர்சிக்க உதவும். இந்தியச் சிந்தனை மரபில்,“அதிகாரம்” என்பது “தகுதி” என்னும் தளத்தில் செரிக்கப் பட்டுவிடுவதால்தான் அரசர்கள் பிராமணர்களுக்கடுத்து படிநிலை பெறுகின்றனர் என்ற துய்மோனின் கோட்பாட்டை ஹோகார்ட் தலைகீழாக்குகிறார். ஹோகோர்ட்டிய மாதிரியில் பிரபஞ்சத்தின் ஒழுங்கைக் கடவுள்கள் கட்டமைக்கின்றனர் என்றால் பூவுலகின் ஒழுங்கை அரசன் கட்டமைக்கின்றான் அதனால்தான் கோயிலும் அரசபீடமும் ஒன்றாகின்றன. (கோ + இல் : கடவுளின் இடம் அரசனின் இடம்)

வேதகாலச் சமூக ஒழுங்கில் மன்னர்களே முதல் சாதியினர் இவர்களையடுத்து வரிசைப்படும் பிராமணர்களும் மற்றவர்களும் அரசனின் தூய்மை நிலையைப் பேணவும், அரசு வேள்விக்கும் அதுசார்ந்த அதிகார நிலைபேற்றினைப் பேணவும் கட்டமைந்த சமூக உறவே சாதியப் படிநிலை என்பார் ஹோகார்ட்.

சாதியைப் பற்றிய ஹோகார்ட்டின் இன்னொரு கருத்து கவனத்திற்குரியது. சாதி என்பது பல குலங்களின் (clans) தொகுப்பாலும், ஒவ்வொரு குலத்தாரும் தனி வழித்தோன்றலைக் கொண்டவர்கள். அக்குலத்தாருககான குருதி உறவு குறிப்பிட்ட சில குலத்தவர்களுடன் பொருந்தாது என்ற கருத்தமையைக் கொண்டவர்கள். இவ்வாறு ஒரு சாதிக்குள் பல குலங்களாகப் பிரிந்த குலப்பிரிவுகள் அவற்றிற்குள்ளேயே ஒரு படிநிலையாக அமைந்து,சில குலத்தவர்கள் நேரடியாக மற்றச் சாதியினரின் உட்குலத்தவரோடு ஊழியப் பரிமாற்றம் செய்து கொண்டனர். சில குலத்தவர்கள் தங்கள் சாதிக்குள்ளேயே உள்ள பிற குலத்தாருக்கு ஊழியம செய்து வந்தனர். இந்நிலையில் சாதிப் படிநிலையானது பல சாதிப் பிரிவுகளுக்கிடையில் அமைநத சமூக உறவை (செங்குத்து உறவு) வரையறை செய்தது என்பது ஒரு புறம் நிகழ, ஒவ்வொரு சாதிக்குள் அமைந்த குலப்படி நிலையானது ஒரே சாதிப் பிரிவினருக்குள் அமைந்த சமூக உறவை (கிடைநிலை உறவு) வரையறை செய்வது என்பது மறுபுறம் நிகழ்ந்தது.

முடியாட்சியின் இறையாண்மையைக் காக்க இறைமாட்சியின் அருளைப் பெற வேண்டும் என்ற வேதகால முடியாட்சிச் (kingship) சிந்தனையில் பிராமணர்கள் மன்னர்களுக்கடுத்து உயர்நிலையில் இருந்தனர். பிராமணச் சாதிக்குள்ளும் பல குலங்கள் படிநிலையில் அமைந்தன. உயர் குலத்தவர்கள் மட்டுமே மன்னனின் வேள்வி யாகச் சடங்குகளைக் கவனித்து மன்னனுக்கு ஊழியம் செய்தனர். அவர்களுக்குக் கீழான குலத்தினர் பிற உயர் சாதியினருக்குச் சடங்கு ஊழியம் செய்தனர். இவர்களுக்குள்ளேயும் மக்களைச் சடங்கு செய்வோர் சில குலத்தவர்களாகவும், இறப்புச் சடங்கு, கருமாதி போன்ற மங்களமற்ற சடங்குகள் செய்தவர்கள் அவர்களுக்குக் கீழான குலத்தவர்களாகவும் படிநிலை பெற்றனர்.

ஹோகார்ட்டிய மாதிரியில் செங்குத்து உறவுக்கும் (சாதிகளுக்கிடையிலான படிநிலை) கிடைநிலை உறவுக்கும் (ஒரே சாதிக்குள் அமையும் பல குலங்களுக்கிடையிலான படிநிலை) ஒரு தொடர்பம் (continuum) அமையும். அதாவது பிராமணச் சாதியின் கீழ்நிலைக்குலமானது பிராமணச் சாதிக்குக் கீழுள்ள சாதியின் உயர்குலத்தோடு ஒத்திசைவு கொள்ளும். இதனை இலங்கையின் அற்புதமான தரவுகள் வழி பசிபிக் கடல் தீவுகளின் சமூகப் படிநிலைகளோடு இவர் ஒப்பிடுகிறார். இலங்கையின் வேளாண் குடியின் உயர்குலத்தவர் பூசாரியாகப் பணியாற்றிய முறை இவ்வாறான செங்குத்து கிடைநிலை உறவின் ஒத்திசைவால் நிகழ்ந்ததாகும் என்பார் ஹோகார்ட். (A.M.Hocart, *Caste : A Comparative Study* London : Methuen, 1950)

## 14.7. பிற அறிஞர்களின் நிலைப்பாடுகள்

ஹோகார்ட்டின் மாதிரியை ஒத்த தரவுகளை இந்தியச் சூழலில் வேறு நிலையில் இனங்காணுகின்றனர். வட இந்திய குஜ்ஜார்களின் பண்பாட்டுப் பகுதியில் பிராமணர்களும் மற்ற உயர்சாதியினரும் சம தகுதியுடன் விளங்கும் ரஹேஜாவின் ஆய்வுகளும்,(G.Raheja, *The poision in the Gift : Ritual, Prestation and the Dominant Caste in a North Village* (Chicago : University of Chicago Press, 1988) ஹீஸ்டர்மேனின் பிராமணப் படிநிலை குறித்த ஆய்வும்,(J.C.Heesteran, *The Inner Conflict of Traditon : Essays on Indian Ritual, Kingship and Society, Chicago : University of Chicago Prees, 1985)*பேரியின் "மகாபிராமணன்" பற்றிய ஆய்வும்,(J.P.Parry, "Ghosts, Greed and Sin : The Occupational Identity of the Banaras Funerd Priests, *Man* (N.S.,) 1980, 15:88-111)சடங்குப் பிராமணர்களின் தகுநிலைகள் பற்றிய ஆய்வும் குறிப்பிடத்தக்கன.

இவ்வாய்வுகள் வழி ஹோகார்ட்டிய மாதிரியை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பிராமணர்களுள் உயர்குலத்தைவர்கள் மட்டுமே மன்னனின் வேள்வி யாகச் சடங்குகளைக் கவனித்து மன்னனுக்கு ஊழியம் செய்தனர். அவர்களுக்குக் கீழான குலத்தவர்கள் பிற

உயர்சாதியினர்களுக்குச் (எஜமானர்கள்) சடங்கு ஊழியம் செய்தனர். இந்நிலையில் பிராமணர்களின் தகுதி செங்குத்து நிலையிலும் கிடைநிலையிலும் செல்வதை அவதானிக்க வேண்டும்.

குறிப்பு

இந்தியப் பண்பாட்டுப் பரப்பில் பிராமணர்களுக்குள் நிலவும் விரிவான படிநிலைகளைப் பின்வருமாறு சுருக்கி பொதுமைப் படுத்தலாம்.

1. **துறவி (renouncer)** : சமூக வாழ்விலிருந்து ஒதுங்கியவர்கள்; பிராமணப் பிரிவினர்களுள் உயர் தகுதியினர்.

2. **மதகுரு (spiritual preceptor)** : சமூக வாழ்வுடன் குறைந்த அளவு பிணைப்புக் கொண்டவர்கள்.

3. **பிராமணத் தொழில் செய்யாத பிராமணர்** : குருக்களாகவோ சடங்குத் தொழில் புரிந்தோ வாழாதவர்கள்.

4. **தனிநபர்களுக்கான (எஜமானர்கள்) பூசாரிகள் (personal priests)** : கடவுளர்களுக்கும் எஜமானர்களாகத் திகழும் தனிநபர்களுக்கும் இடையே சடங்குவழி தொடர்பு கொண்டு ஊழியம் செய்பவர்கள்.

5. **கோயில் பூசாரிகள் (temple priests)** :கடவுளர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஊடகமாகத் திகழ்பவர்கள்.

6. **இறப்புச் சடங்கு செய்வோர் (death priests)** : இம்மை உலகத்தோடும் மறுமை உலகத்தோடும் தொடர்பு கொள்பவர்; இறப்புச் சடங்கு செய்பவர்கள்.

பிராமணச் சாதிக்குள் நிலவும் இவ்வாறான கிடைநிலைப் படிநிலையானது (horizontal stratificaction)மற்ற எல்லா சாதியினரிடமும் உள்ளதற்கான தர்க்கத்தை ஹோகார்ட் எவ்வாறு விளக்குகிறார் என்பதைக் காணும்போது, தலித்துக்களிடம் காணப்படும் கிடைநிலைப் படிநிலைகளை மிஷல் மொபாத் விளக்கும் நிலையிலிருந்து மறுதலித்துக் கொள்ளலாம். (M.Moffatt, *An Untouchable community in South India* :*Structure and Concensus* Princeton : Princeton University Press, 1979)மேல் சாதிகளுக்குள் காணப்படும் படிநிலைகளும் அமைந்துள்ளன என்பது மொபாத்தின் கருத்தாக்கம். ஒரு சாதிக்குள்ளேயே உள்ள உயர்குலத்தவர் மேற்சாதியினருக்கும் பிற குலத்தவர் பிற சாதிகளுக்கும் ஊழியம் செய்யும செங்குத்து – கிடைநிலை உறவை அவதானிக்கும்போது துய்மோனிய, மொபாத்திய மரபார்ந்த சமூகச் சட்டகத்துக்குள் இதனைப் பொருத்திப் பார்க்க இயலாது. இன்னும் ஒரு கூடுதல் பரிமாணத்தில் நாம் இக்கருததினை உள்வாங்கிக் கொள்ள வேண்டுமாயின், சாதியத்தின் வரலாற்றை எழுதும்போது சமகாலத்தில் சாதியப் படிநிலைப் பண்பானது துய்மோனிய கருத்தை ஆதரிக்கும் நிலையும் வரலாற்றின் சாதியமானது ஹோகார்ட்டின் கருத்தை ஆதரிக்கும் நிலையும் வெளிப்படுகிறது.

குறிப்பு

இந்நிலையில் இன்றைய சாதிய அரசியலை நாம் எந்தத் தளத்திலிருந்து முன்வைக்கிறோம் என்பதிலிருந்துதான் மேற்கூறிய சாதிய அரசியலை நாம் இன்று மாற்றியமைக்க முடியும். இன்று வரையிலான சாதியத் தொன்மங்கள், சாதி பற்றிய சமயம் சார்ந்த கருத்துக்கள் அனைத்துமே பிரதியாக்கப்பட்ட வரலாறு கூறும் ஒற்றைவழி வரலாறாகும். முடியாட்சி அரசு முறைக்காகத் (Kingship)தோன்றிய சாதியச் சமூக அமைப்பில் பிரதிகளை ஆக்கியோர் பிராமணர்களும் மற்ற உயர் சாதியினரும் ஆவர். பல கிளைமொழிகள் (சாதிகளுக்கான மொழிகள் : மக்கள் மொழிகள்) இருந்த அச்சூழலில் அடித்தள மக்கள் மொழியிலிருந்து விலகி மேல்சாதியினர் மொழி வடிவத்தின் இவை பிரதியாக்கப்பட்டன. பிரதியாக்கப்படாத வரலாறு என்பது முடியாட்சி எனக்கூடிய பேரரசுச் சூழலில் ஏற்பட்ட பேரிலக்கியம், பெருங்கலாச்சாரம் ஆகிய உருவாகத்தில் தடம் பதியாத கூறுகளாகும். இப்பேரிலிக்கிய, பெருங்கலாச்சார வரலாற்றுப் பிரதியின் (பண்பாட்டுப் பிரதி என்றும் கொள்ளலாம்) வழியாகவே அழகியல், அறிவியல் இவை போன்ற பிற உருவாக்கப்பட்டன. ஆகவே பிரதிகள் வழிப்பட்ட சாதியத்தின் வரலாறு என்பது பிரதியாக்கப்படாத சாதியம் என்ற திணைப்பண்பாட்டுக் கூறுகளைத் (பிரதிகளை) தடம் பதிய வைக்கவில்லை. இன்று பல இனக்குழுவியல் அறிஞர்கள் திரட்டிவரும் வாய்வழித் தொன்மங்களும், பிற பிரதியாக்கம் பெறாத நாட்டார் (folk)வழக்காறுகளும் பிரதிகள் வழியிலான சாதிய வரலாற்றைக் கேள்விக்குள்ளாக்குகின்றன.

பிரதிகளைக் கேள்விக்குள்ளாக்கும் தரவுகள் சிலவற்றை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு சாதியத்தின் வரலாற்றை எழுதிய பிரதிகளை மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டும். இதற்காக சுஷ்ருத் ஜாதவ் மகாராட்டிர மாநிலத்தில் தொகுத்த தீண்டத்தகாத சாதியின் தொன்மத்தை (S.Jadhav, Comment on “The Myths of Origin of the Inidan Untouhable”, *Man N.S.*, 1994, 29(3) : 712 – 13) இங்கு மறுவாசிப்புக்கு உட்படுத்த வேண்டும்.

மகாராட்டிரத்தில் குந்தால் கிராமத்தில் வாழும் சக்கிலியர்களின் தொன்மக் கதை கடவுளால் தோற்றுவிக்கப் பட்டதாகக் கூறப்படும் சாதிகளின் வரலாற்றை உடைத்தெறிகிறது. அன்றைய மராட்டிய அரசின் வீரசாதியைச் சேர்ந்த மூன்று சகோதாரர்கள் கர்நாடகத்தின் ஹுப்ளி ஆற்றங்கரையோரம் வசித்து வந்தனர். இவர்கள் மராட்டிய மன்னனான சிவாஜியின் தர்பாரில் பணிசெய்து வந்தனர். அப்போது ஆங்கிலேயருக்கு எதிரான ஒரு கிளர்ச்சியில் பங்கு கொண்ட இவர்கள் அக்கிளர்ச்சி வெற்றியடையாததால் ஆங்கிலேயப் படையினரிடமிருந்து தப்பிக்க நிலபுலங்களையெல்லாம் விட்டுவிட்டு ஆற்றைக் கடந்து தப்பியோடி குந்தால் கிராமத்திற்குச் சென்றடைந்தனர். பணம், பொருள ஏதுமில்லாத அந்நிலையில் ஆங்கிலேய அடக்குமுறை பொருள் ஏதுமில்லாத அந்நிலையில் ஆங்கிலேய அடக்குமுறை அட்டூழியங்களுக்கு மீண்டும் ஆளாகாமல் இருக்கவும், தங்களின் இன

அடையாளம் தெரியாமல் இருக்கவும் உடனடியாக அவர்கள் கண்முன் தெரிந்த சக்கிலியத் தொழிலை மேற்கொண்டனர்.

**குறிப்பு**

இத்தொன்மத்தின் சித்தரிப்பு பல பொருண்மைகளைத் தன்னுள் கொண்டுள்ளது. இத்தொன்மமானது சாதியப் படிநிலையில் சக்கிலியர்களின் தகுதி மிகத் தாழ்வானது என்ற மேலோட்டமான பொருண்மையைச் சுட்டிக்காட்டினாலும், இத்தொன்மம் அக்குடும்பத்தவரின் பழையத் தகுதியை மீண்டும் உணர்த்தும் (transforms)ஒரு சங்கேத மொழியின் (மொ.ஃ.பாத் சுட்டிக்காட்டும் சங்கேத மாற்றம் (Code switching)போன்றது) பெருண்மையையும் சுட்டிக்காட்டுகிறது. அதாவது இவர்கள் தாழ்ந்த சாதியினர் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. பல தொன்மங்கள் தீண்டத்தகாத சாதிகள் கடவுளால் படைக்கப்பட்டன என்று கூறும் நிலையில் இத்தொன்மம் காலனிய ஆங்கிலேயர்களின் அடக்கு முறையிலிருந்து காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு எழுந்த சாதிய மாற்றத்தைக் கூறுகிறது. இதுபோன்ற பல தொன்மங்களும், இனவரைவுகளும் உரிய இனவரலாற்று ஆய்வு முறைகளுடன் (ethnohistorical methods)பதிவு செய்யப்படாமலேயே உள்ளன.

இன்று இந்தியா முழுவதும் பண்பாட்டுச் சிறுபான்மையினராகப் பல சமூகங்கள் வேற்று பண்பாட்டுப் பரப்பில் இழிகுடிகளாகவும், தீண்டத்தகாத சாதிகளாகவும், விளிம்புக்குத் தள்ளப்பட்ட சமூகத்தினராகவும் வாழ்ந்து கொண்டுள்ளனர். குஜராத்தைத் தயாகமாகக் கொண்ட இன்றைய நரிகுறவப் பழங்குடியினர் குஜராத்தில் அன்று வேளாண் குடியினராக வாழ்ந்தவர்கள். (Edgar Thurston, *Castes and Tribes of Sothern India* (Madras) : Government Press 1909)ஏழு கம்பளத்தில் ஒரு கம்பளமாக விளங்கும் நித்ரவார் கம்பளத்தைச் சேர்ந்த கம்பளத்து நாயக்கர்கள் குடுகுடுப்பை அடித்துக் குறிசொல்லும் நாடோடிப் பிரிவினராக விளிம்புக்குத் தள்ளப்பட்டனர். இவர்கள் தமிழகத்துக்குப் புலம் பெயரும் முன் ஆந்திராவில் வேளாண் குடியினராக வாழ்ந்தவர்கள். (S.Bhaktharvatsala Bharathi, *Study of a Nomadic Community in Tamilnadu : Kambalatu Nayakkar*, unpublished decotral dissertation Mysore : Univesity of Mysore, 1994)இன்று தமிழகத்தில் மிகப் பெரும் எண்ணிக்கையில் வாழும் மலையாளிப் பழங்குடிகள் தென்னிந்தியாவில் முகமதியர் ஆட்சி ஓங்கியிருந்த போது காஞ்சிபுரப் பகுதியிலிருந்து குழயேறிய காரளா வெள்ளாளர்கள் ஆவர். இவர்களின் சகோதரர்கள் ஏலகிரி, பச்சைமலை, கொல்லிமலை, கல்வராயன் மலை ஆகிய மலைப்பகுதிகளுக்குப் புலம் பெயர்ந்து இன்று பழங்குடியினராக அடையாளம் பெறுகின்றனர். (Edgar Thruston, *Castes and Tribes of Southern India*, op. cit., and *A.Aiyappan, Report on the Socio-Economic Conditions of the Abroiginal Tribes of the Province of Madras* Madras : Government Press, 1948)

தென்னிந்திய இனவியல் வரலாற்றை உற்று நோக்கும் போது அந்நியப் படையெடுப்புகளால் (குறிப்பாக முஸ்லிம், ஆங்கிலேயப் படையெடுப்புகள்) பல திணைக் குடியினா் தங்கள் இன அடையாளங்களைக் காத்துக் கொள்ளும் பொருட்டு வேற்று பண்பாட்டுப் பரப்பிற்குள் குடியேறி தங்களின் பூர்வீகத் தொழில்களைக் கூட மாற்றிக் கொண்டுள்ளனா். (Edgar Thurston, *Castes and Tribes of Southren India*, op. cit., and L.A.K.Iyer, *The Cochin Tribes and Castes* (Cochin : Government Institure of Linguistics and Culture, 1999)

## 14.8. தமிழகப் பழங்குடிகளின் நிலை

இன்றைய தமிழகப் பகுதிகளில் வாழும் சாதியினரின் வாய்வழித் தொன்மங்கள் சாதியத்தின் வரலாற்றில் இதுவரை இடம் பெறாதவையாகும் கடற்கரைப் பட்டணவா்களின் (மீனவா்; நெய்தல் நிலத்திணைக் குடியினா்) தொன்மமானது அவா்கள் பருதவராஜ குல மன்னனின் வழித் தோன்றல்கள் எனக் கூறுகின்றது. (S.Bhakthavasala Bharathi, *Cornomadel Fishermen : An Ethnography of pattanavar Subaste* Pondicherry : Pondicherry Institute of Linguistics and Culture, 1999)வன்னியா்களின் தொன்மமானது அவா்கள் அக்னிகுலச் சத்திரியா் வழித்தோன்றல்கள் எனக் கூறுகின்றது. இதுபோன்று மல்லா், பள்ளா் ஆகிய சாதியத் தொன்மங்கள் அவா்களின் வழித்தோன்றல்கள் குறுநில மன்னா்களின் வம்சத்தோடு தொடா்பு கொண்டவா்களாகக் கூறுகின்றன. இவ்வகைத் தொன்மங்களும் பிற சாதியினரின் தொன்மங்களும் இதுவரையிலான சாதிய வரலாற்றுக்குப் புத்தொளிகளை வழங்கவல்ல “எதிா் பிரதி” களாகும். இத்தரவுகள் அனைத்தும் அக்காலத்தில் ஒவ்வொரு சமூகக் குழுவும் (திணைக் குடியினா்) தன்னாட்சி பெற்ற அரசா் அல்லது குறுநில மன்னனைக் கொண்டிருந்தது; அதன் பின்னா் பேரரசு விரிவாக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட வரலாற்றைத் தாங்கி நிற்கின்றன. வேதகாலத்தியப் பேரரசு சாா்ந்த முடியாட்சி அமைப்பில்தான் முதன்முதலாக பிராமணா் உள்ளிட்ட சாதிய சமூக அமைப்பில் செங்குத்து – கிடைநிலை உறவு ஏற்பட்டது என்ற ஹேகாா்ட்டின் கோட்பாடு உறுதி பெறுகிறது.

ஹேகாா்ட் கருத்துப்படி வேதகாலத்திய முடியாட்சி அமைப்பில் பிராணமா்கள் மன்னா்களுக்கு அடுத்த பிரிவினராகவும், உயா்சதியினருக்கு இணையாகவும், சடங்கு ஊழியம் செய்பவராகவும் காணப்பட்டனா். முடியாட்சி அமைப்பின் நீண்ட வரலாற்றில் சாதியத்தின் அரசியலானது பிராமணா்களின் மேலாதிக்கத்தை வலுவூட்டிவிட்டது. இதற்கு முடியாட்சி அரசா்களின் பெருங்கொடையும் தானங்களும் அவா்களை எஜமானா்களிடமிருந்து தானங்கள் பெற்று வாழும் நிலையிலிருந்து விடுவித்துக் கொண்டு (வேதகாலத்தில் தானப் பொருள்கள் எஜமானா்களின் அங்கக் குறியீடுகள் என்பதால் எஜமானா்களின் தீட்டை நீக்கும் இப்பொருள்களைத் தானம் பெறும் பிராணமா்கள் தீட்டு பெற்று

குறிப்பு

தகுதி குறைந்தவர்கள் என்ற நிலையை ஏற்றவர்கள்) ஊழியம் செய்யும் பிற சாதியினருக்குப் பொருள் தானம் கொடுக்கும் நிலைக்கு மாறிவிட்டனர். இவ்வாறான மாற்றங்களைப பிராமணர்கள் ஏற்படுத்திக் கொண்டனா் என்றாலும் வேதகாலத்திற்குப் பிந்தைய காலத்தில் துணைக் கண்டத்தின் பல பகுதிகளிலும் குடியேறிய பிராணமர்கள் அந்தந்தப் பண்பாட்டுப் பகுதியின் தன்மைகளுக்கு ஏற்ப மாறிக் கொண்டனர். குறிப்பாக, திராவிடப் பண்பாட்டுப் பகுதிக்கு வந்த பிராமணர்கள் இப்பகுதிக்கான மொழிகளையும், திராவிடப் பண்பாட்டின் பல மூலப்படிவ குணாதிசயங்களையும் அப்படியே ஏற்றுக் கொண்டனா் (விரிவான செய்திகளுக்குக் காண்க : பாரதி) (பக்தவத்சல பாரதி,“இந்தியப் பண்பாட்டுப் பரப்பில் வடக்கும் தெற்கும் - யாணர் 1997, 1 : 47-69. “இந்தியாவில் சமூக – பண்பாட்டு மாற்றமும் எம்.என்.சீனுவாசின் சமற்கிருதவயமாதல் கோட்பாடும் : சில விவாதங்கள்” புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் மாறிவரும் பண்பாடு என்னும் தலைப்பில் நடத்திய கருத்தரங்கத் தொகுப்பு. 1995)

முடியாட்சிப் பேரரசு சார்புடைய அரசு முறைக்கு (kingship)உகந்த சமூக அமைப்பின் உருவாகத்தில் தொடங்கிய பிராமணர்களின் சடங்கியல் வழியிான “தகுதி” உயர்வு அந்த முடியாட்சி அமைப்புடைய அரசு வீழ்ந்த நிலையில் அவர்களின் “தகுதி” உயர்வு வீழாததுதான் இன்றைய நவீன சாதியத்தின் அரசியல்.

ஐரோப்பாவில் புரட்சிகளின் வழி மன்னராட்சி வீழ்த்தப்பட்ட காலத்தில் மதகுருமார்களும், மதப்பிரச்சாரமும், மதமும் அரசியலிலிருந்து விலக்கப்பட்டு தனித்த ஒரு சமூக நிறுவனமாக விடப்பட்டது. இன்றும் கூட தேவாலயம் (Church)என்பதும் அதன் செயல்பாடுகளும் அரசியலிலிருந்து பிரிக்கப்பட்டதாகவே உள்ளது.

மனித நாகரிகத்தில் அறிவியல் தன்மை (scientism)வளர வளர “பணபாட்டில் எல்லமே புனிதம்” என்றஒரு மதச்சார்புடைய வட்டத்தில் மதச்சார்பற்ற வட்டம் என்ற ஒன்று தலைதூக்க முற்பட்டது. அதனால்தான் சமயம் சார்ந்த புனிதமான இசையிலிருந்து சமயம் சாராத, புனிதம் சாராத இசை (secular music)என்ற ஒன்று தோன்றியது. இசையைப் போன்று பண்பாட்டின் பிற தளங்களிலும் மதச்சார்பற்ற வட்டங்கள் தலைதூக்கின; தொடர்ந்து அவற்றின் பரப்புகள் பெரிதாயின. இதன் நீட்சியாகத்தான் ஐரோப்பாவில் முடியாட்சி வீழ்ந்த பின் அரசியலிலிருந்து மதம் முற்றிலுமாக ஒதுக்கப்பட்டு அது ஒரு தனித்த சமூக நிறுவனமாகச் செயல்படத் தொடங்கியது. ஆனால் இந்திய முடியாட்சியின் வீழ்ச்சிக்குக் காரணமான ஆங்கிலேயர்கள் சாதிகளின் சமூக உறவுகளையோ கோயில் சார்ந்த செயல்பாடுகளையோ மாற்றம் செய்யவில்லை. அவ்வாறு செய்வதால் ஏற்படும் சமூக முரண்பாடுகளைச் சமாளிப்பது தேவையற்ற வேலை என எண்ணினர். ஐரோப்பாவில் ஏற்பட்டது போன்று அரசியல் - மதம் இடைவெளி இங்கு ஏற்படவில்லை. சாதியச் சண்டைகளுக்கும் சமூக முரண்பாடுகளுக்கும்

வித்திட விரும்பாத ஆங்கிலேயர்களின் அணுகுமுறையானது முடியாட்சி அமைப்புக்காக ஏற்பட்ட சாதியச் சமூகத்தை, நவீன தொழில்துறை சார்ந்த உற்பத்தி உறவுக்குள் தொடர வழிவகுத்தது.

குறிப்பு

எனினும், முழுக்க முழுக்க ஊழியங்களைப் பரிமாறிக் கொள்ளும் சமூக – உற்பத்தி உறவுக்கான ஒரு அமைப்போடு வேர்விட்ட சாதியமானது இன்றைய நவீன தொழில் - பணப் பொருளாதார உற்பத்தி உறவுக்குள் நுழைந்துவிட்ட நிலையில் அதன் கட்டமைப்பு சிதையத் தொடங்கிவிட்டது. இதனால் சாதி, சாதியம் இரண்டிலும் பல உடைப்புகள் நிகழ்ந்து வருகின்றன. மாறாக, புதிய மரிமாணங்களில் அவை மாற்று வடிவம் பெற்று நீட்சி பெறுகின்றன.

உடைப்புகளும், நீட்சிகளும் காணப்படும் இச்சூழலில் குறிப்பிடத்தக்க தர்க்கவியல் இயங்கியல் மாற்றம் ஏற்பட்டிருப்பதை தலித்தியாவதிகள் இனங்கண்டாக வேண்டும். துய்மோன் தனது சாதியம் பற்றிய புரிதலை பிரஞ்சு அறிவுப் பாராம்பரியத்துக்கேயுரிய அமைப்பியல் அணுகுமுறையில் விளக்கிய பின் தன் கோட்பாட்டுக்கு எழுந்த விமரிசனங்களைக் கருத்தில் கொண்டு சாதியத்தின் மற்றுமொரு பரிமாணத்தை விளக்கும் நிலையில் சாதியத்தின் இன்றைய நீட்சியை “மெய்யியல்”(xubstantialization)கோட்பாடு மூலம் பின்வருமாறு விளக்குகிறார். ‘‘a transition from structure to substance, ‘competition’ substitutes for ‘interdependence’ between hierarchically randed castes, and ‘the caste seems to aceept equlity’ which menas that ‘from the ideological point of view, structure seems to yield to substance, each caste becoming an individual confronting other individuals.’’

துய்மோனின் “மெய்யியல்” கோட்பாட்டுக்கு முன்னர் வகுத்த கோட்பாடானது மரபார்ந்த சாதியச் சமூகத்தின் “அமைப்பினை”(structure)விளக்கும் கோட்பாடு என்ற நிலையில் மட்டுமே அதன் பொருத்தப்பாடு அமைகிறது. குாலனிய காலம் தொடங்கி விடுதலைக்குப் பிந்தைய காலகட்டத்தில் சாதியமைப்பு “அமைப்பியல் மாறுதலுக்கு” உட்பட்டுள்ளது என்பதை அறியும் துய்மோன், இம்மாற்றத்தைத் தன்னுடைய பழைய அமைப்பியல் ˙கோட்பாட்டின் தொடர்ச்சியாக மேலுமொரு அழைப்பியல் தர்க்கத்தை முன்வைப்பது அவர் மிகப்பெரும் அமைப்பியல்வாதி என்பதைக் காட்டுகிறது.

மரபார்நத சாதியப் படிநிலையின் “அமைப்பானது”(structure)இன்றைய நவீனத்துவத் தளத்தில் தன் இருப்பை “பொருளுக்கு” நகர்த்திக் கொண்டுள்ளது (a transition from ‘stucture’ to ‘substance’) அது போன்று பரஸ்பர ஊழியப் பரிமாற்றமானது நேரடியான போட்டியாகத் தளம் மாற்றப்பட்டிருக்கிறது. (‘competition’ substitutesfor ‘interdependence’) இன்னும் சொல்லப் போனால். ஒரே சாதியின் தனிநபர் அதே சாதியைச் சேர்ந்த மற்றொரு தனிநபருடன் போட்டியிடும் அளவுக்கு சாதிய ஒன்றியத்திலும், பரஸ்பர

பரிமாற்றத்திலும் பிடிப்பின்றி பொருள்சார்ந்த தளத்துக்கு நகர்ந்துவிட்டனர். இவ்வகையான இயங்கியல் தர்க்கத்தில் சாதிகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் குறைந்து சமத்துவம் அதிகரித்து வருகிறது.

குறிப்பு

சாதியம் சமத்துவத்தை நோக்கி நகர்கிறது என்ற இன்றைய துய்மோனின் சொல்லாடலை ஆதரிப்பது என்பது தலித்தியத்திற்கான நிலைப்பாடாக இருக்க முடியாது. சாதியத்தின் நுண்விழைவுகள் மாற்று நிலைகளில் வடிவம் பெற்று புதிய பரிமாணங்களில் நிலைபேறு கொள்கின்றன. இதனை மிக விரிவாக ஆராய வேண்டிய தேவை இங்கு ஏற்படவில்லை. ஆகவே, இந்நிலையில் தலித்தியச் சொல்லாடல் என்பது பின்வரும் தளங்களில் நிகழ்த்தப்பட்டாக வேண்டும். ஒற்றை வழியில் எழுதப்பட்ட சாதிய வரலாறு மறு பிரதியாக்கம் செய்யப்பட வேண்டும். சாதிகள் கடவுளால் படைக்கப்பட்டன; இன்ன இன்ன உறுப்புகளிலிருந்து இந்த இந்த சாதிகள் தோற்றம் பெறலாயின போன்ற பல தொன்மங்கள் உடைக்கப்பட்டு குந்தால் கிராமத்தில் தோன்றிய தீண்டத்தகாத சாதிகளின் தோற்றம் போன்ற பல வரலாற்றுக் கூறுகளை உள்ளடங்கிய தொன்மங்களைப் பதிவு செய்து மாற்று முனையிலிருந்தும் சாதிய வரலாறு எழுதப்பட்டாக வேண்டும் இதில் இனவரைவியலில் பதிவு பெறாத பிரதிகளையே முழுமையாக சேர்க்கப்பட வேண்டும். இதன்வழி திணைக்குடிகளின் சமூக அமைப்புக்கள் எவ்வாறான வேரினைக் கொண்டிருந்தன. அவை முடியாட்சி காலத்தில் பெற்ற மாற்றங்கள் என்ன என்ன பொன்ற மறு பிரதிகள் எழுத முயலுவது என்பது இன்றைய அடித்தள சாதிகளின் இருப்பையும் பெறுமானத்தையும் பொறுமானத்தையும் மாற்றியமைக்கும்.

தமிழ்ச் சூழலில் இது குறித்த ஆய்வுகள் மிகக் குறைவாகவே நிகழ்ந்துள்ளன. சாதியச் சட்டகத்துக்குள் உள்ளார்ந்த நிலைகளில் இறுகாறும் நாம் பேசி வரும் சாதிய அமைப்பினை நிலைநிறுத்தும் கருத்தமைவுகள் எவ்வாறு செயலிழந்து மாற்றங்களைக் கோரி நிற்கின்றன என்பதை சிறுதொண்டர் நாடகப் பனுவலை எடுத்துக்கொண்டு மிகச்சிறப்பாக கா.சுந்தர் ஆராய்கிறார். (கா.சுந்தர்,“அன்னங்கறி இன்னதிது :சடங்கார்த்த உணவும் சமூகமும் பற்றிய சில குறிப்புகள்”, பரல்கள் மதுரை காமராசர் பல்கலைக் கழகம்: தமிழ் ஆய்வாளர் மன்றம், 1994, பக்.133-43) இதே போன்று செல்லதம்மன் வழிபாட்டு முறையில் மதுரை மீனாட்சியம்மனின் கணவரை தொடர்புபடுத்தி பெண் தெய்வ வழிபாட்டுச் சடங்குக் களத்தையும் சாதிய அரசியலையும், மிகச் சிறப்பாக ஆராய்ந்துள்ளார் இ.முத்தையா. (இ.முத்தையா, நாட்டுப்புறச் சடங்குகளும் மனித உறவுகளும் மதுரை, அரசு பதிப்பகம், 1996, பக்.93-119) இவ்வாறான நடாக சடங்குப் பனுவல்கள் பலவற்றை ஆய்வுக்குட்படுத்துவதன் மூலம் சாதிய அமைப்புக்குள் புதைந்து கிடக்கும் மாற்று முறைகளையும் குறியியல் எதிர்ப்புகளையும் இனங்காண இயலும்.

## 14.9. தொகுத்துக் காண்போம்

வேறுபட்ட பூகோளச் சூழல்களில் தனித்தன்மை வாய்ந்த பல திணைப் பண்பாடுகள் எவ்வாறு சாதியம் என்ற படிநிலைச் சமூகத்தன்மையோடு தங்களை இணைத்துக் கொண்டது என்பதை மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

சாதியம் குறித்த மானிடவியல் அறிஞர்கள் எடுத்துரைக்கும் பல்வேறு கோட்பாடுகளை மாணவர்கள் அறிந்து கொண்டீர்கள்.

குறிப்பு

## 14.10. சோதித்தறியும் வினாக்கள்

பொருள் முதல் வாதத்தினரின் அணுகுமுறையை விளக்குக.

ஹோகார்ட் கோட்பாட்டின் சிறப்புகள் யாவை?

சாதியம் குறித்து பிற அறிஞர்களின் நிலைப்பாடுகள் யாவை?

## 14.11. பயிற்சி வினாக்கள்

தமிழகப் பழங்குடியினரின் சாதியம் குறித்த நிலைப்பாடுகளை விவரி.

துய்மோனின் சாதியம் பற்றிய கோட்பாடுகளை விளக்குக.

## 14.12. மேலும் பயில்வதற்கான நூல்கள்

பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

பக்தவச்சலபாரதி, வரலாற்று மானிடவியல், அடையாளம் பதிப்பகம், திருச்சி.

குறிப்பு

**மாதிரி வினாத்தாள்**

# தாள் 31942 – பண்பாட்டு மானிடவியல்

**முதுகலை - தமிழ்**

நேரம்:3மணி மதிப்பெண்:75

**பிரிவு-அ**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி (10x2=20)**

1. மானிடவியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
2. மாலினோஸ்கியின் உற்றுநோக்கல் என்றால் என்ன?
3. பண்பாட்டின் மூன்று வகையான உட்கூறுகளைக் குறிப்பிடுக.
4. மனிதனை முழுக்க முழுக்க உயிரியல்சார் நிலையில் ஆராயக்கூடிய மானிடவியல் பிரிவு எது?
5. டாரஷ் நீர்ச்சந்தி ஆய்வுப்பயணத்தை மேற்கொண்டவர்கள் யார் யார்?
6. நால்வகை வருண அமைப்பினை எழுதுக.
7. உலகிலுள்ள அனைத்துப் பண்பாடுகளையும் பொதுவான முறையில் எச்சொல்லால் குறிப்பிடலாம்?
8. இனக்குழுச் சாதிமுறைக்கு எடுத்துக்காட்டு தருக.
9. பண்பாட்டு விழுமியங்கள் என்றால் என்ன?
10. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் என்னும் நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தவர் யார்?

**பிரிவு-2**

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி (5x5=25)**

11. அ) மானிடவியலில் சாக்ரடீஸின் பங்களிப்பை விவரி.

(அல்லது)

ஆ) புத்தாய்வுக்காலம் என்றால் என்ன? விளக்குக.

12. அ) “இனவியல் என்பது மானிடவியலின் படிநிலை”- இக்கூற்றை மெய்ப்பிக்க.

(அல்லது)

ஆ) களப்பணிகளில் தரவுகளைப் பெறும் வழிமுறைகளை எடுத்துரைக்க.

குறிப்பு

13. அ) பண்பாட்டின் உட்கூறுகளின் தன்மைகளை எழுதுக.

(அல்லது)

14. அ) பழங்குடி மக்களின் பண்பாட்டு மாற்றத்திற்கான காரணிகளை ஆராய்க.

(அல்லது)

ஆ) பண்பாட்டின் அமைப்புமுறை வளர்ச்சியை விளக்குக.

15. அ) படிமலர்ச்சிக் கொள்கை என்றால் என்ன? விவரி.

(அல்லது)

ஆ) பண்பாடு ஒரு நடத்தைசார் முறை - இக்கூற்றை மெய்ப்பிக்க.

## பிரிவு-3

**எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளி (3x10=30)**

16. மானிடவியலின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை வரைக.

17. உடல்சார் மானிடவியல் பற்றி நீவிர் அறிவனவற்றைத் தொகுத்துரைக்க.

18. மொழியியல் பண்பாட்டு மானிடவியல் குறித்த அறிஞர்களின் கருத்துக்களை எழுதுக.

19. தமிழகப் பழங்குடிகளின் இனக்குழு மற்றும் சாதிக்கொள்கைகள் பற்றிக் கட்டுரை வரைக.

20. சாதியம் பற்றிய நவீனக் கோட்பாடுகளை விவரி.

--------